விஜய்குமார் ஜெயராஜ்
சஞ்சனா

சஞ்சனா

ஆத்மார்த்தமான காதல் மட்டுமல்ல, இது ஆத்மாக்களின் காதல்

விஜய்குமார் ஜெயராஜ்

பொறுப்புத் துறப்பு:
இந்த நாவல் ஆசிரியரின் வாழ்வில் நடந்த சில உண்மைச் சம்பவங்களை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட புனைவு ஆகும். ஆனால் இதில் சித்தரிக்கப்பட்ட பல கதாபாத்திரங்கள் மற்றும் நிகழ்வுகள் முற்றிலும் கற்பனையானவை. உண்மையான நபர்கள், வாழும் அல்லது இறந்தவர்கள், அல்லது உண்மையான நிகழ்வுகள் அல்லது இடங்களுடனான எந்தவொரு ஒற்றுமையும் முற்றிலும் தற்செயலானது. இந்த படைப்பில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் மற்றும் கருத்துக்கள் ஆசிரியரின் கருத்துக்கள் மற்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தனிநபர் அல்லது நிறுவனங்களின் கருத்துக்களையும் பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையான சூழ்நிலைகள் அல்லது சம்பவங்களுடன் ஏதேனும் ஒற்றுமை இருப்பது முற்றிலும் தற்செயலானது.

எச்சரிக்கை:
ஆசிரியரின் எழுத்துபூர்வமான அனுமதியின்றி, இந்த நாவலை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ, ஒரு திரைப்படமாகவோ, வெப் சிரிஸாகவோ அல்லது வேறு எந்த வடிவமாகவோ அங்கீகரிக்கப்படாத மறு உருவாக்கம், தழுவல் அல்லது விநியோகம் செய்வது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அது பதிப்புரிமைச் சட்டத்தை மீறுவதாகும். இந்த எச்சரிக்கையை மீறும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம். இந்த நாவலின் அனைத்து உரிமையும் அதன் ஆசிரியருக்கே உரியது.

கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; **ஆணும் பெண்ணுமாக** அவர்களைப் படைத்தார் (விவிலியம் - தொடக்க நூல் 1:27)

அத்தியாயம் 1 - பரந்த ஆன்மவெளியில் தனிமை

"The wound is the place where the Light enters you." - Rumi

ஒளியைக்கூட இதில் மூழ்கடித்து, கரைத்து அழித்துவிட முடியும் என்னுமளவுக்கு கறுத்த கும்மிருட்டு அது. அந்த காரிருளை விரலில் கொஞ்சம் தடவி நெற்றியில் பொட்டு கூட வைத்துக்கொள்ளலாம். கண்ணெட்டும் அளவுக்கு கண்ணில் எந்த ஒளிப்புள்ளியும் தென்படவில்லை. கால் நிற்க எங்குமே தரையும் தென்படவில்லை. சங்கினுள் புகுந்த மெல்லிய காற்று எழுப்பும் ஒலி போல ஒரு சத்தம் மட்டும் எங்கிருந்தோ கேட்கிறது.. அவள் இதயம் அடைக்கிறது, மூச்சு முட்டுகிறது…உடல் அந்தரத்தில் நிற்கிறது

அது என்ன இடமென்று அவளுக்குத் தெரியவில்லை… வானமா? ஆழமா? கருந்துளையின் மையமா?

அண்ணாந்து பார்த்தால் நட்சத்திரங்களோ, நிலவோகூட கண்ணுக்குப் புலப்படவில்லை

இப்ப நான் எங்க இருக்கேன்?...

…..

பாட்டி….

நிரஞ்சு.. எங்க இருக்க?...

அம்மீ….

டாடீ…

எல்லாம் எங்க இருக்கீங்க?... யாருமே பக்கத்துல இல்லையா?

இங்க ஒரே இருட்டா இருக்கு.. எனக்கு ரொம்ப பயமா இருக்கு… யாராச்சும் வாங்க ப்ளீஸ்…

ஏன் யாருமே வரமாட்டீங்கிறாங்க? நான் கத்துறது கேக்கலையா?

ஒருவேளை நான் செத்துப் போயி இங்க வந்துட்டேனா?...

நான் என்ன செய்றது, இந்த இருட்டிலிருந்து எப்படி வெளியேறுவது? அவள் அழுதாள் அழுதாள் அழுதுகொண்டே இருந்தாள்...

அத்தியாயம் 2 - திரும்பவே முடியாத தடங்களில் திருப்பங்கள்

"Life is a roller coaster, and you never know when it's going to take a turn." - Ty Pennington

அக்டோபர் 2023
42 மில்டன் ஸ்டிரீட், லண்டன்

“சாரி, அரைமணி நேரம் உங்களை வெயிட் பண்ண வச்சிட்டேன்”…

தனக்காகக் காத்துக்கொண்டிருந்த அந்த நபரை நோக்கி தன் வலது கையை நீட்டியபடியே புயல்போல தன் அறைக்குள் நுழைந்தார் இஸ்மாயில் குரேஷி..

சட்டென்று எழுந்து அவரது வலது கையை தன் இரு கைகளாலும் பற்றிய அவன்..”ஐய்யோ சார், உங்களைப் பார்க்க வாய்ப்பு கிடைச்சதெல்லாம் என் பூர்வ ஜென்ம புண்ணியம்” என்றான்…

கலகலவென சிரித்தபடி, அவனை உட்கார வைத்துவிட்டு அவனுக்கு எதிரே தன் இருக்கையில் அமர்ந்தார் குரேஷி..

புகழ்பெற்ற லண்டன் ஃபிலிம் இன்ஸ்ட்டியூட்டின் முதல்வர்தான் இஸ்மாயில் குரேஷி. வயது 58 இருக்கும். 90-களில் ஏராளமான சர்வதேச விருதுகளை வாங்கிக் குவித்த பல இரானியப் படங்களை இயக்கியவர். உலகசினிமா ரசிகர்களின் ஆதர்ஷ நாயகன் அவர். மிகச்சிறந்த திரை ஆளுமைகளை உருவாக்கவேண்டும் என்பது அவரது கனவு. அந்தக் கனவுக்கு உயிர்கொடுக்க லண்டன் ஃபிலிம் இன்ஸ்ட்டியூட்டில் இருந்து அவருக்கு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்று லண்டனுக்கு வந்து 12 ஆண்டுகள் ஆகிவிட்டிருந்தது. இப்போது அவர் பிரிட்டிஷ் குடிமகனாகவே ஆகிவிட்டிருந்தார்.

“நான் நேரா விஷயத்துக்கு வந்திடுறேன்…இன்னும் ரெண்டு வருஷத்துல ரிட்டயர்ட் ஆகப்போறேன். அடுத்த வருஷம் எங்க ஃபிலிம் இன்ஸ்ட்டியூட்டோட சில்வர் ஜூப்ளி இயர். அதை செலிபிரேட் பண்றதுக்கு எங்க இன்ஸ்ட்டியூட் சார்பா ஒரு பிரம்மாண்டமான படம் தயாரிக்கணுங்கிறது எங்க மேனேஜ்னெண்ட்டோட விருப்பம். பட்ஜெட்டைப் பத்தி கவலையில்ல..

என்ன ஜெர்னர்னு யோசிச்சப்ப சமீபத்துல இறந்துபோன என்னோட காதல் மனைவி மெஹர் நினைவா ஒரு காதல் படம் பண்ணலான்னு தோணுச்சு. ஆனா இதுவரைக்கும் இப்படியொரு காதல் கதையை யாருமே சொன்னதில்லங்கிற மாதிரி அது இருக்கணும். அதுக்காக ரொம்பவே யோசிச்சு தலைய பிச்சுட்டு இருந்தேன்..

காதல் எல்லா உயிர்களுக்கும் பொதுவானதுதான் ஆனாலும் ஒவ்வொரு மண்ணுக்கும் காதலோட வண்ணம் மாறும், தன்மை மாறும், ஆனா புனிதம் மாறாது. மேற்கத்திய கலாச்சாரத்தை சொல்ற டைட்டானிக், லா லா லேண்ட் மாதிரி நிறைய காதல் படங்களை மக்கள் பார்த்துட்டாங்க. வித்தியாசமான கலாச்சாரப் பின்னனியைக் கொண்ட ஒரு காதல்கதையை, அந்த மண் மனம்

மாறாம இங்கிலீஷ்ல எடுக்கணும்னு ஆசைப்பட்டேன். அரேபியா, சீனா, ஆப்ரிக்கா, இந்தியான்னு நிறைய யோசிச்சேன்.

நான் எப்பவுமே என்னோட உள்ளுணர்வு சொல்றத ரொம்ப மதிக்கிறவன். பெரிய முடிவுகள் எடுக்கும்போதெல்லாம் என்னை வழிநடத்துற பொறுப்பை என்னுடைய உள்ளுணர்வுகிட்ட விட்டுடுவேன். இந்த விஷயத்திலேயும் முடிவு எடுக்க முடியாம கடைசில வழக்கம்போல அந்தப் பொறுப்பை என் உள்ளுணர்வுகிட்டயே விட்டுட்டேன்.

அந்த நேரம்பார்த்து என்னோட முன்னாள் மாணவர்கள் என்னை சந்திக்க வந்திருந்தாங்க. எனக்கு நினைவுப் பரிசா ஒரு கிஃப்டைக் கொடுத்துட்டுப் போனாங்க. பிரிச்சுப் பார்த்தா அது வெள்ளியால ஆன ஒரு அழகான தாஜ்மகால்…

அதை என்னோட கேள்விக்கு உள்ளுணர்வு தந்த பதிலா எடுத்துக்கிட்டேன், இந்தியாவை மையமாக்கொண்ட ஒரு உன்னதமான காதல் கதையை உலகத் தரத்துல சொல்லணும். அதுவும் அந்த மண்ணைச் சேர்ந்த ஒரு இயக்குனரை வச்சே அந்தப் படத்தைப் பண்ணனும்னு ஆசைப்பட்டேன்.

அந்த நேரத்துலதான் கேன்ஸ் படவிழாவுல உங்க படத்தைப் பார்த்தேன். இந்தியாவுல நடந்த ஒரு உண்மை சம்பவத்தை வச்சு அந்தப் படத்தைப் பண்ணதா சொல்லியிருந்தீங்க. அந்தப் படம் என் மனசை என்னவோ பண்ணுச்சு. அன்னிக்கு நைட் முழுக்க என்னால தூங்கவே முடியல. நாங்க எடுக்கப்போற படத்துக்கு நீங்கதான் இயக்குனர்னு நான் அன்னிக்கே முடிவு பண்ணிட்டேன்.

எதிரே இருந்தவனால் பேச முடியவில்லை.. நடப்பது கனவா நனவா என வாயடைத்துப்போய் உட்காந்திருந்தான்… சில வினாடிகள் கழித்து தழுதழுக்கும் குரலில் பேசினான்…

“என் காதுகளையே என்னால நம்ப முடியல சார், உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல”.

“அதெல்லாம் இருக்கட்டும், அந்தப் படத்தை ரிலீஸ் பண்ணிட்டீங்களா?”

“இன்னும் இல்ல சார், பிப்ரவரில நடக்கப்போற பெர்லின் படவிழாவுல ஸ்கிரீன் பண்ணிட்டு அதுக்கப்புறம் OTT-க்கு கொடுக்கலாம்னு பண்ணலான்னு ப்ரடியூசர் சொல்லிட்டாரு”

“அதுவும் நல்லதுதான், நம்ம படத்தை ஆரம்பிக்க இன்னும் ஆறு மாசம் இருக்கு. உங்களுக்கு தேவையான கேமராமேன், எடிட்டர், ஆர்ட் டைரக்டர், மியூஸிக் டைரக்டர் எல்லாம் நீங்க முடிவு பண்ணிட்டு எனக்குச் சொல்லுங்க.

“ஆனா இதுல ஒரு கண்டிஷன்…” கொஞ்சம் உறுதியான குரலில் சொன்னார் குரேஷி.

என்ன கண்டிஷன் சார்?...

உங்களுக்கும் சரி, கேமராமேனுக்கும் சரி அஸிஸ்ட்டண்ட்ஸா எங்களோட மாணவர்கள் மட்டும்தான் இருப்பாங்க, இருக்கணும்..

அவரை ஆச்சரியமாகப் பார்த்தான் அவன்…

குரேஷி தொடர்ந்தார், “அதுக்காக தகுதியில்லாத மாணவர்களை சேத்துக்கச்சொல்லி உங்களைக் கட்டாயப்படுத்த மாட்டேன். உங்ககூட ஒர்க் பண்ணப்போற மாணவர்கள் யாருங்கிறதை நீங்கதான் தேர்ந்தெடுக்கணும். அதுக்காக அவங்களுக்கு ஒரு குறும்படப் போட்டி அறிவிச்சிருக்கோம். அதுல சிறந்த படத்தையும், இயக்குனரையும், கேமராமேனையும் நீங்களே தெரிந்தெடுத்து அவங்கள உங்க அஸிஸ்டண்ட்டா வச்சுக்கோங்க. அது அவங்க கேரியர்க்கும் ரொம்ப யூஸ்ஃபுல்லா இருக்கும்ல. என்ன சொல்றீங்க?

“ரொம்ப அருமையான விஷயம் சார்.. எனக்கு முழு சம்மதம்..”

சரி, உங்க நாட்டை சேர்ந்த ஒரு ப்ரஃபசர் இங்க இருக்காரு. அவரை இப்போ வரச் சொல்லிருக்கேன். அவர் உங்களுக்கு எங்க கேம்ப்பஸை சுத்திக் காட்டுவாரு. நாம் மறுபடியும் லஞ்சுக்கு மீட் பண்ணலாம்..

விடைபெற்றுவிட்டுக் கிளம்பினார் இஸ்மாயில் குரேஷி..

அந்த இயக்குனரின் மனதில் பொங்கிய மகிழ்ச்சி வெள்ளம் அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீராக வழிந்தோடியது.. இஸ்மாயில் குரேஷியின் இந்த முயற்சி சிலருடைய வாழ்க்கையில் மாபெரும் பிரளயத்தைக் உண்டாக்கப் போகிறது என்பதை அறியாமல்…

அத்தியாயம் 3 - உனக்குக் கேட்கிறதா? நான் இங்கே அழுதுகொண்டிருக்கிறேன்...

"Some of the most painful scars we carry are the ones nobody can see." - Unknown

அக்டோபர் 2023
மேரிலெபோன், லண்டன்

Manzilein ruswa hain Khoya hai rasta… ஷ்ரேயா கோஷலின் குரலுக்கு ஷ்ரத்தா கபூர் நடித்துக் கொண்டிருந்தார். ஹாலில் சோஃபாவில் அமர்ந்து டிவியில் அந்தப் பாடலைப் பார்த்துக் கொண்டிருந்த சஞ்சனாவுக்கு அவ்வரிகள் என்னவோ செய்தன.. நினைவுகள் பல ஆண்டுகள் அவளை பின்னோக்கி இழுத்துச் சென்றன…

“பாதை தொலைந்துபோனபடியால் இலக்குகள் கலக்கமடைந்திருக்கின்றன…”

ஆண்டுக்கணக்கில் இருந்த மனக்காயங்களை அந்த வரிகள் போகிற போக்கில் குத்தி கிழித்துவிட்டுச் சென்றிருந்தன… அவள் இருதயத்தில் இரத்தமும், அவள் கண்களில் கண்ணீரும் அவளையும் மீறி வடிந்துகொண்டிருந்தது.

சோஃபாவில் உணர்வின்றி ஜடம் போல அமர்ந்திருந்தாள்.. இமைகள் இமைப்பதை நிறுத்தியிருந்தன, கண்கள் டிவியைக் குத்திட்டு நின்று கொண்டிருந்தது. அவள் உயிரோடுதான் உட்காந்திருக்கிறாள் என்பதற்கு அவள் கண்களிலிருந்து வழியும் கண்ணீர் மட்டுமே அடையாளமாய் இருந்தது. இது அவளுக்கு முதல் முறையல்ல, ஆனால் அவளை இந்தக் கோலத்தில் மகள் தியா பார்த்தது இதுதான் முதல் முறை…

ஒரு சந்தோஷமான செய்தியைச் சொல்ல ஓடோடி வந்தவள் அம்மாவைப் பார்த்து அசைவற்று நின்றுவிட்டாள்.

“மம்மீ வாட் ஹேப்பண்ட்?”

சட்டென உணர்வுக்கு திரும்பிய சஞ்சனா, “நத்திங் டா” என்று சொன்னபடி கண்களைத் துடைத்துக் கொண்டு டிவியை ஆஃப் செய்துவிட்டு, எழுந்துபோய் முகத்தை தண்ணீரில் அலம்பிக் கொண்டிருந்தாள்.

குழப்பத்தோடும், கவலையோடும் எதுவும் பேசாமல் தன் அறைக்குச் சென்ற தியா சிறிதுநேரம் யோசித்தபடி அமர்ந்திருந்தாள். மீண்டும் எழுந்து ஹாலுக்கு வந்தாள்.

“மம்மி, பார்க்குக்கு போலாமா? நாம ரெண்டுபேரும் சேர்ந்து வாக்கிங் போய் ரொம்ப நாளாச்சு”

“ம்ம்” என்றாள் சஞ்சனா…

****

வீட்டிலிருந்து சில நிமிடங்கள் நடக்கும் தொலைவில் இருந்த பேடிங்டன் ஸ்டிரீட் கார்டனில் இருக்கும் ஒரு மரச்சேரில் சஞ்சனா அமர்ந்திருந்தாள். பூங்காவில் சிமெண்ட்டில் போடப்பட்டிருந்த சாலைகளெங்கும் இலைகள் உதிர்ந்து கிடந்தன. அங்கு வீசிக்கொண்டிருந்த இனிய மாலைநேரத் தென்றல் உதிர்ந்து காய்ந்து கிடந்த இலைகளை அங்குலம் அங்குலமாக நகர்த்தி விளையாடிக் கொண்டிருந்தது.

பகல் முழுவதும் மாடிவீட்டுச் சிறைகளில் அடைபட்டிருந்த நாய்கள் தங்கள் செல்ல மனிதர்களை சங்கிலியில் கட்டி இழுத்தபடி வாக்கிங் சென்றுகொண்டிருந்தன. சிறுவர்கள் ஸ்கேட்போர்டுகளில் சாகசம் பழகிக் கொண்டிருந்தார்கள். மரச்சேரில் அமர்ந்தபடியே சஞ்சனா இலைகளை உதிர்த்திருந்த மரங்களை அண்ணாந்து பார்த்தாள். அவை புதிய இலைகளை அணிந்து, இளமையோடு தென்றலைத் தழுவி நடனமாடிக் கொண்டிருந்தன.

“முதுமையைக் களைந்து மீண்டும் இளமையை அணிந்துகொள்ளும் இந்த வரத்தை எனக்கும் தரமாட்டாயா…” என்று அவள் ஏக்கத்தோடு மனதால் மரங்களுடன் பேசிக்கொண்டிக்க…

“மம்மி, யுவர் ஃபேவரைட் லைட் காஃபி” அவள் முகத்துக்கு நேரே காஃபியை நீட்டினாள் தியா… கவனம் கலைந்து காஃபியை கையில் பெற்றாள் சஞ்சனா.. அருகே உட்காந்தாள் தியா.
“மம்மீ, நான் ஒரு குட்நியூஸ் சொல்லத்தான் உங்கிட்ட வந்தேன். ஆனா உன்னைப் பார்த்தவுடனே …” வாக்கியத்தை முடிக்கத் தெரியாமல் மென்று விழுங்கினாள்…

“சொல்லு என்ன குட்நியூஸ்”

“அடுத்த வருஷம் எங்க காலேஜோட சில்வர் ஜூப்ளி இயர். அதுக்காக ஹாலிவுட்டுக்கு இணையா ஒரு பிரம்மாண்டமான சினிமா தயாரிக்கப் போறாங்க. யாரோ ஒரு பிரபலமான இயக்குநர் அந்தப் படத்தை டைரக்ட் பண்ணப்போறாரு… அவரோட டீம்ல யார் யாரெல்லாம் ஒர்க் பண்றதுன்னு தேர்ந்தெடுக்குறதுக்காக எங்க காலேஜ்ல ஒரு ஷார்ட் ஃபிலிம் போட்டி அறிவிச்சிருக்காங்க. ஆனா அதுல ஃபைனல் இயர் ஸ்டுடண்ட்ஸ் மட்டும்தான் கலந்துக்க முடியும்.

“ம்ம்…”

“அதுல கலந்துக்கப்போற ஒரே ஒரு ஃபர்ஸ்ட் இயர் ஸ்டுடண்ட் நான்தான்”

“வாவ், கங்கிராட்ஸ்…” மகிழ்ச்சியோடு சஞ்சனா தியாவை ஆரத் தழுவிக்கொண்டாள்..

“எப்படி சாத்தியமாச்சு, உன்னை மட்டும் எப்படி அனுமதிச்சாங்க?”

“எங்க பிரின்ஸிபல் குரேஷிதான், அவருக்கு எப்பவுமே என் திறமைமேல நம்பிக்கை உண்டு. என் ரைட்டிங் அவருக்கு ரொம்பப் பிடிக்கும். அதனாலதான் எனக்கு மட்டும் ஸ்பெஷல் பெர்மிஷன். அதுனால என் சீனியர்ஸ்க்கும், என்னோட கிளாஸ்மேட்ஸ்க்கும் என்மேல பயங்கர காண்டு”

“இருக்காதா பின்னே? சரி கிடைச்ச வாய்ப்பை நல்லா பயன்படுத்திக்கோ...”

“அதுக்குத்தான் எனக்கு உன் உதவி வேணும் மம்மி”

“என் உதவியா? எதுக்கு? புரியல...”

“நாங்க ஒரு மணி நேரம் ஓடக்கூடிய ஷார்ட் ஃபில்ம் ஒண்ணு பண்ணனும். அதோட ஜெர்னர் ரொமாண்டிக் டிராமா”

“அதுக்கு??”

“நான் உன்னோட லவ் ஸ்டோரியத்தான் படமாக்கப் போறேன், எனக்கு உன் ஸ்டோரிய ஆரம்பத்துல இருந்து முழுசா சொல்லு”

பொற்காசுகளை சிதறவிட்டதுபோல சிரித்த சஞ்சனா, “அடிப்போடி, இதுக்குத்தான் என்னை பார்க்குக்கு கூட்டிட்டு வந்து, காஃபிலாம் வாங்கிக் கொடுத்து ஐஸ் வச்சியா? என் லவ் ஸ்டோரிலாம் ஒண்ணும் வேணாம், வேற ஏதாவது யோசி…”

“வேற ஏதாவதா? ஏன் மம்மி நீயும் டாடியும் காதலிச்சு கல்யாணம் பண்ணி, 23 வருஷம் ஒண்ணா வாழ்ந்திருக்கீங்க, இதச் சொன்னாலே என் ஃப்ரண்ட்ஸெல்லாம் அவ்வளோ ஆச்சரியப்படுறாங்க. உங்க கல்யாணம் ஏகப்பட்ட பிரச்சனைகளுக்கு நடுவுல நடந்ததா நீயும், டாடியும் எங்கிட்ட சொன்ன ஞாபகம்கூட இருக்கு. ரெண்டு பேரும் திகட்ட திகட்ட லவ் பண்ணிருக்கீங்க, அப்படி இருக்கும்போது நான் ஏன் வேற கதைய யோசிக்கணும்…உங்க கதைதான் பெஸ்ட்…”

“சரி அப்ப கதைய உங்கப்பாகிட்ட கேட்டுக்கோடா, நீ அப்பா செல்லம்தானே.. என்னை விட்டுடேன் ப்ளீஸ்” சொன்னபடியே குடித்து முடித்த காஃபி கப்பை அருகே இருந்த குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு, சேரிலிருந்து எழுந்து தன் வாக்கிங்கைத் தொடங்கினாள் சஞ்சனா.. அவளைக் கெஞ்சியபடியே தியாவும் அவளோடு நடக்கத் தொடங்கினாள்.

“என்னது டாடிக்கிட்டேயா? அவரு உன்னை மாதிரியெல்லாம் பிகு பண்ண மாட்டாரு. நான் கேட்ட உடனே அவர் கதை சொல்ல ஆரம்பிச்சிருவாரு. ஆனா நான் தூங்கணும்னு நெனச்சாத்தான் டாடிகிட்டதான் கதை கேட்பேன். ஏன்னா அவரு சொல்ல ஆரம்பிச்ச அஞ்சே நிமிஷத்துல எனக்கு தூக்கம் வந்திரும். நான் ஃபிலிம் பண்ணனும் மம்மி… அதான் உங்கிட்டக் கேட்குறேன்.. நீ என்னமோ ஓவராத்தான் அலட்டிக்கிற”

தியா எவ்வளவோ கேட்டும் சஞ்சனா பிடிகொடுக்கவில்லை. அம்மாவிடம் இப்படியொரு பிடிவாதத்தை தியா இதுவரை பார்த்ததில்லை. கெஞ்சியும், மிஞ்சியும் பார்த்துவிட்டு அமைதியாகிவிட்டாள். இருவரும் கனத்த இதயத்துடன் பூங்காவை விட்டு வெளியேறினர். அதன் பிறகு தியா ஒருவாரம் சஞ்சனாவிடம் முகம் கொடுத்துப் பேசவேயில்லை.

****

சஞ்சனா…

வயது 47, ஒல்லியான தேகம், ஐரோப்பியர்களை ஒத்த வெள்ளை நிறம், தலைமுடியை குட்டையாக பிக்ஸி கட் ஸ்டைலில் வெட்டி, தலைமுடிக்கு அடர்ந்த பிரவுன் நிறம் பூசியிருந்தாள், சிறிய கண்கள் அதில் நீந்தும் பெரிய கருவிழிகள், கூர்மையான பார்வை, அளவெடுத்து

செதுக்கியது போன்ற நீளமான கூர்மையான நாசி, லிப்ஸ்டிக் தீட்டாமலும் சிவந்திருக்கும் மெல்லிய ரோஜாநிற இதழ்கள், அடுக்கி வைத்தது போன்ற அழகான பல்வரிசை, அவள் சிரிக்கும்பொழுதெல்லாம் விளக்கு ஒளிர்வது போன்ற ஒரு உணர்வு பார்ப்பவருக்கு ஏற்படும். இடது காதோரத்தில் தாடைக்கு மேல் ஒரு சிறிய மச்சம்…நடுத்தர வயதை எட்டியிருந்தாலும் சீனத்து பொம்மை போல, காஷ்மீரத்து ஆப்பிள் போல அழகான ரூபத்தில் இருந்தாள்.

தியா…

வயது 19, எப்போதும் சிரித்த முகம், அம்மாவை அப்படியே உரித்து வைத்தது போன்ற தோற்றம், ஆனால் சற்று பெரிய கண்கள், துறுதுறு பார்வை, நீண்ட கறுத்த கேசத்தை வாரி இழுத்து குதிரை வால் போட்டிருந்தாள். எப்போதும் சுறுசுறுப்போடு உலவும், இறக்கைகள் இல்லாத அழகான குட்டி தேவதை அவள்.

சஞ்சனா கிளாஸ்கோவில் இருந்த ஒரு பிரபல மென்பொருள் நிறுவனத்தில் டீம் லீடராக லண்டனிலிருந்த தன் வீட்டிலிருந்தபடியே வேலை செய்து கொண்டிருந்தாள்.

அன்று ஒரு வியாழக்கிழமை..

தலையில் ஹெட்போனை மாட்டியபடி சஞ்சனா தன்னுடைய அலுவலக ஆன்லைன் மீட்டிங்கில் கலந்து கொண்டிருந்தாள். கீவ்வில் இருந்து zoom-இல் பேசிய புது கிளையண்ட் ஒருவன் உக்ரேனியன் ஸ்லாங்கில் ஆங்கிலத்தை உருட்டிக் கொண்டிருந்தான். சஞ்சனா zoom வீடியோ கேமராவை ஆஃப் பண்ணிவிட்டு, ஆர்வமே இல்லாமல் அந்த வார்த்தைகளை மட்டும் காதில் வாங்கிக்கொண்டு வேறு ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்தாள்.

அப்போது தியா வீட்டுக்குள் நுழைந்து, அம்மாவைத் திரும்பிப் பார்க்கக்கூட விருப்பமில்லாமல் அவளைக் கடந்து தன் அறைக்குள் சென்றாள். அவள் முகம் மிகவும் சோர்ந்திருப்பதை சஞ்சனா கவனித்தாள். ஏதோ காரணம் சொல்லி மீட்டிங்கிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, கிச்சனுக்குள் சென்று சாக்லேட் காஃபி கலந்து எடுத்துக்கொண்டு தியாவின் அறைக்குள் போய் அவளிடம் காஃபியை நீட்ட…

தியா அதைக் கண்டும் காணாமல் உர்ரென்று முகத்தை வைத்துக்கொண்டு தனது லேப்டாப்பில் மூழ்கியிருந்தாள். சஞ்சனா காஃபியை தியாவின் டேபிளில் வைத்துவிட்டு அவளுக்குப் பின்னால் இருந்து தனது வலது முழங்கையால் அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவளது உச்சந்தலையில் தன் முகம் புதைத்தாள். அதை சற்றும் எதிர்பாராத தியா, எந்த எதிர்வினையுமின்றி தன் வேலையைத் தொடர்ந்து கொண்டிருக்க..

சஞ்சனாவின் கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த்துளிகள் தியாவின் உச்சந்தலையில் விழுந்து, இழுத்து வாரப்பட்டிருந்த அவள் முடிகளைக் கடந்து, அவளது தலையின் மேற்பரப்பில் சூடாக இறங்க அவள் திடுக்கிட்டாள்.. கோபம் கலைந்து சேரிலிருந்து எழுந்து, பின்னால் திரும்பி அம்மாவை இறுக அணைத்துக் கொண்டாள்.

“நீ இப்படி இருந்து நான் பார்த்ததே இல்ல மம்மி… நீ உன் மனசைத் திறந்து உன் கதையை என்கிட்ட சொல்லாம இருக்கேன்னா அதுக்கு நியாயமான காரணம் ஏதாவது இருக்கும்.

நான்தான் அதைப் புரிஞ்சுக்காம உன்மேல ரொம்ப கோபப்பட்டுட்டேன். சாரி மம்மி.. உன் மனச நான் ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன்…”

சஞ்சனா அவளைத் தேற்றினாள், “பரவால்லடா செல்லம், அழாத... இன்னிக்கு நீ ஏன் இவ்வளோ சோர்வா இருக்க? உன் ஷார்ட் ஃபிலிம் ப்ராஜக்ட் என்ன ஆச்சு?”

தியா பெருமூச்சு விட்டாள்…

“நீ உன் கதைய சொல்லாததால, நானே கற்பனையா ஒரு கதைய எழுதிட்டுப் போனேன், அதை குரேஷி ரிஜக்ட் பண்ணிட்டார். அதுக்கப்புறம் இன்னும் ரெண்டு கதை எழுதிட்டுப் போனேன், அதுவும் அவருக்குப் பிடிக்கல. இன்னும் ரெண்டு நாளைக்குள்ள ஒரு நல்ல கதையை எழுதிக் கொண்டுவர முடியலைன்னா நீயே போட்டியில இருந்து விலகிக்கன்னு சொல்லிட்டாரு.

நானும் எவ்வளவோ முயற்சி பண்ணேன், முடியல.. உன்னையும் தொந்தரவு செய்ய விருப்பமில்ல. அதுனால நானே போட்டில இருந்து விலக முடிவெடுத்திட்டு, அதுக்கான லெட்டரைத்தான் இப்ப டைப் பண்ணிட்டு இருக்கேன்”

சஞ்சனா தியாவின் லேப்டாப்பைப் பார்த்தாள், அதில் தான் போட்டியிலிருந்து விலகுவதாக இரு பத்திகளில் டைப் பண்ணி, இன்னும் முடிக்காமல் அரைகுறையாக வைத்திருந்த கடிதம் இருந்தது. அதை படித்துவிட்டு தியாவின் முகத்தைப் பார்த்து…

“உனக்குக் கிடைச்ச இவ்வளவு பெரிய ஆப்பர்ச்சூனிட்டிய தவறவிட உனக்கு எப்படி மனசு வந்துச்சு… அதுமட்டுமில்லாம, இதுனால உன் கிளாஸ்மேட்ஸும், சீனியர்ஸும் உன்மேல பொறாமையா இருக்காங்கன்னு வேற சொன்னேயில்ல, இந்த சூழ்நிலையில போட்டில இருந்து விலகுறது உனக்கு அவமானமில்லையா?” என்று கேட்க தியா அமைதியாக இருந்தாள்.

சஞ்சனா அந்த விண்டோவைக் குளோஸ் செய்து, அவளது டாக்குமெண்ட் ஃபோல்டரில் இருந்த அந்த ஃபைலை ஷிஃப்ட் டெலிட் செய்ய.. தியாவின் முகத்தில் நம்பிக்கை ரேகை படர்ந்தது. ஒரு ஆர்வம் கலந்த புன்னகையுடன் அம்மாவின் முகத்தைப் பார்த்தாள்.

அத்தியாயம் 4 - பரந்த ஆன்மவெளியில் முதல் சந்திப்பு

"Two souls are sometimes created together and in love before they're born." — F. Scott Fitzgerald

இது காரிருளா, கருங்கடலா…?

யாருமே, அல்லது எதுவுமே இல்லாத என்ன பரப்பு இது?

இல்லை, ஒன்றே ஒன்று மட்டும் இங்கு இருக்கிறது… 'இருள்'….. ம்ம்..அப்புறம் இன்னொன்றும் இங்கே இருக்கிறது,.. நிறையவே இருக்கிறது…'பயம்'…

எவ்வளவு அலறினாலும், யாரைக் கூப்பிட்டாலும், யாரும் இங்கு உதவிக்கு வரப்போவதில்லை. அழுது, அரற்றி, இங்கேயே செத்துப்போவதைத் தவிர வேறு வழியில்லை…

தேம்பித் தேம்பி அழுதுகொண்டே இருந்தாள்… அவளுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை…

திடீரென…

ஒரு கை அவள் வலது கரத்தை இறுகப் பற்றியது… பலங்கொண்ட மட்டும் அவளை வலுவாக வெளியே இழுக்க முயற்சித்தது…. அவளுக்கு பயத்தில் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது…

வெளியே வந்து விழுந்தாள்… அந்தக் கரம் தன் பிடியை இன்னும் விலக்கவில்லை..

யார் என்னைப் பிடித்து வெளியே இழுத்தது? குழப்பத்தோடு அண்ணாந்து பார்த்தாள்.. அவன் அவளது கையைப் பற்றியபடி அவள் கண்களைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனது முகத்தில் அத்தனை மகிழ்ச்சி! வாய் நிறைய புன்னகை… அழகாக சிரித்தான், எதுவும் பேசாமல் சந்தோஷத்தில் அவள் முகத்தைப் பார்த்துப் பார்த்து ஏதோ காணாததைக் கண்டதுபோல சிரித்துக் கொண்டே இருந்தான்.

அவளுக்கு நம்பவே முடியவில்லை. அவளையே வார்த்தெடுத்து செய்தது போல இருந்தான். ஆனால் ஆண் உருவத்தில், கிட்டத்தட்ட அதே வயதில்…

அவன் முகத்தைப் பார்த்த அந்த வினாடியில் அவளுக்குள் அதுவரை இருந்த பயம், பதட்டம், கவலை மற்றும் அவள் கண்களில் வழிந்திருந்த கண்ணீர் துளிகள்கூட காணாமல் போனது. அவனை இதற்கு முன் எங்கேயோ பார்த்திருக்கிறாள். பற்பல யுகங்கள் பார்த்துப் பழகிய முகம் அது. அவன் அவளைப் பார்த்து சந்தோஷத்தில் சிரித்ததுபோலவே அவளும் அவனைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினாள்.

அப்போதுதான் அந்த இடத்தை அவள் கவனித்தாள். இளஞ்சூரியன் உதயமாகி இருந்தது. அது ஒரு செழிப்பான வயல்வெளி, சுற்றிலும் சோளக்கதிர்கள் முற்றிய நிலையில் அறுவடைக்குத் தயாராக இருந்தன. மெலிதாக வீசிய ஈரக்காற்றோடு கலந்து வந்த அந்த சோள வாசனை கூட நாசிக்கு இதமாக இருந்தது.

பக்கத்தில் எங்கும் மரங்கள், அந்த மரங்களின் இலைகளுக்குள் மறைந்துகொண்டு சங்கீதம் பாடும் பறவைகள்.. ஆங்காங்கே பூத்து குலுங்கி மணம் பரப்பிக் கொண்டிருக்கும் வண்ண மலர்கள், அந்த மலர்களின்மீது அமர்ந்து சிறகடிக்கும் வண்ணத்துப்பூச்சிகள், அவர்கள் நின்றுகொண்டிருந்த வரப்புக்கு அருகாமையில் ஓடிய தெளிந்த நீரோடை.. ஒரு கிழங்கை வாயில் கவ்விக்கொண்டு சற்றுமுன் அவள் காலருகே ஓடி சோளக் காட்டுக்குள் மறைந்த பஞ்சுபோன்ற வெண்ணிற முயல்…

இது என்ன இடம்?... இது என்ன உணர்வு?… நான் இதற்கு முன்னே இப்படி சந்தோஷமாக இருந்ததே இல்லையே… சில நிமிடங்களுக்கு முன்னர் நான் இருந்த நரகக் காரிருளும், இந்த சொர்க்கபுரியும் அவ்வளவு அருகருகேவா இருக்கிறது. அங்கிருந்த என்னை இவன் கையைப் பிடித்து இழுத்தவுடன் நான் இங்கே வந்து விழுந்துவிட்டேனே!

அது சரி, இவன் யார்?...

அவள் சிந்தித்தபடி அவனைப் பார்க்க, அருகே இருந்த நீரோடையில் கால் நனைத்து விளையாடிக் கொண்டிருந்தவன் அவளை வா வா என கையசைத்து அழைத்தான். எதிர்பேச்சு எதுவும் பேசாமல் குடுகுடுவென ஓடிப்போய் அவன் முன்னே நின்றாள். நீரோடையில் ஓடிய தெளிந்த தண்ணீரை கொஞ்சம் கைகளில் அள்ளி அவள் மீது இறைத்தான். அந்த தண்ணீர் மேலே விழுந்த குளிர்ச்சியில் அவள் சிலிர்த்துப்போனாள். அவன் சத்தமிட்டு சிரித்தான்.

அவள் அவனைத் துரத்தினாள், அவன் பிடிகொடுக்காமல் ஓட, கொஞ்ச நேரத்தில் இருவரும் ஆடி ஓடி ஓய்ந்துபோய் ஆற்றங்கரையருகே மணல்பரப்பில் அமர்ந்தார்கள். அவன் அவளிடம் ஏதேதோ பேசினான். அவன் பேசியது அவளுக்குப் புரிந்தது. இருவரும் பல ஆயிரம் யுகங்கள் சேர்ந்து பழகியவர்களைப்போல பேசிக்கொண்டார்கள், சிரித்து மகிழ்ந்தார்கள். மணல்வீடு கட்டி விளையாடிக் களித்தார்கள்.

அந்த இடத்திலிருந்து சற்று தூரத்தில் ஒரு பழத்தோட்டம் இருந்தது. அங்கிருந்த மரங்களில் கொத்துக் கொத்தாகத் தொங்கிய சிவப்பு மற்றும் ஆரஞ்சு நிறப்பழங்கள் கண்ணைப் பறித்தன. அந்தப் பழத்தோட்டத்தைக் காட்டி, அங்கே வா போகலாம் என்று அவன் அவள் கைகளைப் பிடித்து அழைக்க, தனக்கு கால் வலிக்கிறது என்றாள் அவள். அவன் அவளை அலேக்காக தூக்கி தோளில் போட்டுக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

அவள் அவன் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு, தோளில் சாய்ந்து கொண்டாள், கண்களை மூடிக்கொண்டாள், மிகவும் பாதுகாப்பாக உணர்ந்தாள். அவன் அவளைத் தூக்கிக்கொண்டு அந்தப் பழத்தோட்டத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான்…

“மகேஷ்வரி…”

ஃபாதர் லாரன்ஸ் சத்தமிட்டு அழைக்க…

இதோ வந்துட்டேண்ணே…

சஞ்சனாவின் அம்மா மகேஷ்வரி தாகூர் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தார்.

“பாப்பா சர்ச்சுலயே தூங்கிட்டா…” என்று சொல்ல மகேஷ்வரி, ஃபாதரின் தோளில் தூங்கிக் கொண்டிருந்த சஞ்சனாவை தன்னுடைய தோளுக்கு மாற்றிக்கொண்டார்.

“உள்ள வாங்கண்ணே இஞ்சி டீ சாப்பிட்டுட்டு போலாம்…”

“இல்லம்மா.. வீட்டுக்கு யாரோ விருந்தாளி வந்திருக்காங்க போல..நீ அவங்களைக் கவனி, எனக்கு சர்ச்சுல கொஞ்சம் வேலை இருக்கு, நான் அப்புறம் வர்றேன். ..”

“அது வேற ஒண்ணும் இல்லண்ணே, ஜோசியரை வரச் சொல்லிருந்தோம் அவர்தான் வந்திருக்காரு..”

அதற்குள் ஹாலில் இருந்து மகேஷ்வரியின் கணவர் ஜெயராம் தாகூரின் சத்தம், “மகேஷ்வரி, சஞ்சனா ஜாதகத்தை கொஞ்சம் எடுத்துட்டு வாயேன்…”

“சரி சரி நீ மொதல்ல அவங்களைக் கவனி, நான் அப்புறம் வர்றேன், ஜெயராம் கிட்ட சொல்லிரு..” விடைபெற்றுவிட்டுக் கிளம்பினார் ஃபாதர் லாரன்ஸ்.

மகேஷ்வரி சஞ்சனாவைக் கொண்டுபோய் படுக்கையில் படுக்க வைத்துவிட்டு. பூஜையறையில் வைக்கப்பட்டிருந்த அவளுடைய ஜாதகத்தை எடுத்துக்கொண்டு, ஹாலுக்குச் சென்று, கணவர் கையில் கொடுக்க, அதை அவர் வாங்கி, ஜோதிடரின் காலடியில் பணிவாக வைத்தார்.

அந்த ஜோதிடர் வாயில் ஏதோ மந்திரப் பாடலை முணுமுணுத்தபடிஅந்த ஜாதகத்தை அலட்சியமாக கையில் எடுத்து பக்கங்களைப் புரட்டத் தொடங்கினார், இதுவரை தன் வாழ்நாளில் பார்த்திராத ஒரு தனித்துவமான, வித்தியாசமான ஜாதகத்தைப் பார்க்கப்போகிறோம் என்பதை அறியாமல்…

அத்தியாயம் 5 - தெய்வமகள்

"Smooth seas do not make skillful sailors." - African Proverb

மந்திரப்பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்த ஜோசியரின் உதடுகள் சட்டென அசைவை நிறுத்தின, அவரது முகம் மாறியது, புருவங்கள் சுருங்கின.. தன்னிடமிருந்த ஒரு நோட்டை எடுத்து கட்டம் போட்டார், ஏதேதோ எழுதினார், விரல்களால் கணக்குப் போட்டார், அவரிடமிருந்த சில பழைய ஏடுகளைப் புரட்டி வாசித்தார்..

வழக்கமாக ஒரு ஜாதகத்தைப் பார்த்த ஐந்தாம் நிமிடத்திலிருந்து மடைதிறந்த வெள்ளம்போல பலன் சொல்ல ஆரம்பித்துவிடுவார். ஜாதகத்தைக் கையில் வாங்கி அரை மணி நேரமாகியும் அவர் எதுவுமே சொல்லாமல் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தது அவருடன் வந்திருந்த அவரது மாணவனுக்கே சற்று ஆச்சரியமாக இருந்தது.

“ஏதாவது சொல்லுங்க ஸ்வாமிஜி, இப்படி ஒண்ணுமே சொல்லாம இருந்தா நாங்க என்ன நினைக்கிறது!” சற்று பயத்துடன் கேட்டார் சஞ்சனாவின் தாய்வழிப் பாட்டி. சற்றுப் பொறுங்கள் என்று கையைக் காட்டி அமர்த்திவிட்டு தன் ஆராய்ச்சியைத் தொடர்ந்தார் ஜோதிடர்…

மேலும் ஒரு 20 நிமிட ஆராய்ச்சிக்குப் பின் தொண்டையைச் செருமியபடியே மௌனம் கலைத்தார்…

“ம்ம்ம்… கடகராசிக்காரி.. ஆயில்ய நட்சத்திரம்….

மீனத்துல கேது உட்காந்திருக்கார், கடகத்துல சனி சந்திரன் ஒரு டிகிரில சேர்ந்திருக்கு. பொண்ணு ஜாதகத்துல புனர்பூ தோஷம் ரொம்ப வீரியமா இருக்கு, கால சர்ப்ப தோஷமும் இருக்கு, பத்தாததுக்கு இப்ப ஏழரைச் சனி வேற நடக்குது” சொல்லிவிட்டு மகேஷ்வரியை நிமிர்ந்து பார்த்து, “உங்க பொண்ணு அடிக்கடி சித்தபிரம்மை புடிச்ச மாதிரி ஆகிருவாளா?..” ஜோதிடர் கேட்க, மகேஷ்வரி சேலை முந்தானையை எடுத்து வாயைப் பொத்திக்கொண்டு அழத் தொடங்கினார். ஜெயராம் தாகூர் மனைவியின் தோளில் ஆறுதலாகக் கைவைத்து, “ஆமாங் ஸ்வாமிஜி, அதப் பத்தி தெரிஞ்சுக்கத்தான் உங்கள இங்க வரச் சொன்னோம்..”

ஜோதிடர் சில வினாடிகள் அமைதியாக இருந்துவிட்டு…

“ஜாதகத்துல பிரச்சனை இருக்கு, ஆனா அதுக்காக நீங்க ஒண்ணும் பயப்படத் தேவையில்லை. மத்தபடி இது நல்ல ஜாதகம்தான். வெளிநாட்டு வாழ்க்கை, நல்ல குடும்பம், புத்திர பாக்கியம், சொத்து சுகம் எல்லாமே இருக்கு. ஆனா என்ன, வாழ்க்கை ரொம்ப போராட்டமா இருக்கும். முடிவுகள் எடுக்க ரொம்பவே தடுமாறுவா. மனசுல எப்பவுமே ஏதோ ஒரு பயங்கரமான குழப்பமும், விரக்தியும் இருந்த்துக்கிட்டே இருக்கும். மன அழுத்தம் ரொம்ப இருக்கும். 36 வயசுக்குப் பிறகுதான் அது கொஞ்ச கொஞ்சமா குறைய ஆரம்பிக்கும்.

நான் 40 வருஷமா ஜாதகம் பார்க்குறேன், என் அனுபவத்துல இப்படிப்பட்ட ஒரு ஆன்மீக ஜாதகத்தை நான் பார்த்ததே இல்லை. ஆனா 50 வயசு வரைக்கும் படாத கஷ்டமெல்லாம் படுவா,

வீடு மனை, வெளிநாட்டு வாழ்க்கை, வேலை, சொத்து சுகம் எல்லாம் இருந்தும் எதுவுமே இல்லாதது போலத்தான் இருக்கும். எல்லாத்தையும் விட்டுட்டு சந்நியாசம் போயிரலாமாண்ணு அடிக்கடி தோணும். எல்லாத்தையும் அனுபவிச்சி பாத்துட்டு வெந்து, நொந்து 50 வயசுக்கு மேல ஆன்மீகத்துக்குள்ள வருவா, அதுக்கப்புறம்தான் இவளோட வாழ்க்கையில மிகப்பெரிய திருப்புமுனை இருக்கும்... ஒண்ணு சொல்றேன் குறிச்சு வச்சுக்கோங்க, இவ இந்த உலகத்தை விட்டுப் போகும்போது கோடிக்கணக்கான மக்களுக்கு வழிகாட்டியா, குருவா வாழ்ந்து முடிச்சிருப்பா. இந்த உலகம் இவள ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மறக்காது... இதுக்கு மேல நான் சொல்ல எதுவுமில்ல! ஜாதக நோட்டை மூடி, ஜெயராம் தாகூரிடம் கொடுத்து, “இந்த ஜாதகத்தை நான் பார்த்தது எனக்குக் கிடைச்ச புண்ணியம்” என்று சொல்லிவிட்டு, ஜாதகத்தை தொட்டு கும்பிட்டுவிட்டு பையை எடுத்துக்கொண்டு எழுந்தார்.

சஞ்சனாவின் பெற்றோருக்கு உடலெல்லாம் புல்லரித்தது... ஒருவரையொருவர் ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டனர். பாட்டி கேட்டார், “ஆனா ஸ்வாமிஜி, ஏதோ தோஷம்னு சொன்னீங்களே!”

ஜோசியர், “தோஷம்தான், ஆனா இவளை ஒரு உன்னத ஆத்துமாவா உருவாக்கணும்னுதான் பகவான் இவளுக்கு இந்த தோஷத்தையே கொடுத்திருக்கான். என்னைப் பொருத்தவரைக்கும் இது தோஷமில்ல, யோகம்! ஸ்வாமி விவேகாநந்தர், ரிஷி அரபிந்தோ இவங்க ஜாதகத்திலேயும்கூட இந்த புனர்ப்பூ தோஷம் இருந்திருக்கு, அதுனால கவலைப்படாதீங்க! அவளுக்கு ஒண்ணும் ஆகாது! நான் சில பரிகாரங்கள் சொல்றேன், அதை டெய்லி பண்ணுங்க, தோஷத்தோட வீரியத்தைக் கொஞ்சம் குறைக்கலாம்...

.....

ஜோதிடர் சொன்ன சில பரிகாரங்களை கவனமாகக் கேட்டுவிட்டு, ஜெயராம் தாகூர் அவரிடம் ஒரு கட்டு பணத்தை தட்சணையாக நீட்ட, அவர் அதைப் பெற்றுக்கொள்ளாமல் ஒரு நமஸ்காரம் மட்டும் வைத்துவிட்டு கிளம்பினார். பாட்டி அதற்குள் சஞ்சனா தூங்கிக் கொண்டிருந்த அறைக்குச் சென்று, அவளது பிஞ்சுப் பாதத்தை எடுத்து தன்னுடைய நெற்றியில் ஒற்றிக்கொண்டு, பாதத்தில் நடுவில் முத்தமிட்டார். அந்தக் காட்சியை மகேஷ்வரி கண்களில் கண்ணீர் பொங்க பார்த்துக்கொண்டிருந்தார். சஞ்சனா சஞ்சலமின்றி நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

****

1983, டார்ஜிலிங், மேற்கு வங்காளம்...

ஜெயராம் தாகூர் மேற்குவங்க மாநிலம் முழுவதுக்கும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான புத்தகங்களை அச்சடித்து, விநியோகம் செய்யும் தொழிலைச் செய்துவந்தார். அவரது மனைவி மகேஷ்வரி தாகூர் முதுகலை ஆங்கிலம் பயின்றவர். ஆனால் வேலைக்குச் செல்லவில்லை.

மூத்தமகள் நிரஞ்சனா தாகூர், கொல்கொத்தாவில் அத்தை வீட்டில் தங்கி, ஒரு புகழ்பெற்ற கான்வெண்ட்டில் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். படிப்பில் கெட்டிக்காரி, மருத்துவராக வேண்டுமென்பது அவளது வாழ்க்கையின் இலட்சியமாக இருந்தது. நிரஞ்சனாவுக்கும், சஞ்சனாவுக்கும் இடையே 6 வயது வித்தியாசம்.

சஞ்சனாவின் பாட்டி, அதாவது மகேஷ்வரியின் தாயாருக்கு 67 வயது இருக்கும், கணவர் இறந்தபின்னர் மகள் வீட்டிலேயே தங்கிவிட்டார். மருமகன் அவரை பெற்ற மகன் ஸ்தானத்தில் இருந்து கவனித்துக் கொண்டார். சஞ்சனாவுக்கு அம்மாவைவிட பாட்டி மீதுதான் பாசம் அதிகம், பள்ளி விட்டு வரும்பொழுதே “பாட்டீ..” என்று கத்திக்கொண்டுதான் வீடு நுழைவாள்… பாட்டி சொல்லும் Fairy tales அவளுக்கு அவ்வளவு பிரியம்! பாட்டியிடம் அரட்டை அடித்துக்கொண்டு, அவர் சொல்லும் கதைகளைக் கேட்டுக்கொண்டே இரவு உணவு சாப்பிட்டால்தான் அன்றிரவு அவளுக்கு தூக்கமே வரும்.

சஞ்சனாவுக்கு அப்போது 6 வயது, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு கடுமையான மனோவியாதி அவளை ஆட்டிப்படைத்து வந்தது. எதையாவது தீவிரமாக யோசித்துக்கொண்டே இருப்பாள், பயங்கரமான மனக் குழப்பங்கள் தோன்றும். அப்போதெல்லாம் அவளது மனம் கொடூரமான புயலின் சீற்றத்தால் அல்லல்படும் கடல்போல் ஆகிவிடும். தன் மூளைக்குள் என்ன நடக்கிறதென்றே அந்த மழலைப் பிஞ்சுக்குப் புரியவில்லை. தன் மனநிலையை பெற்றோரிடம் விளக்கிச் சொல்லி உதவிகேட்கவும் அவளுக்குத் தெரியவில்லை. பெரும்பாலும் பயமும், குழப்பமும் வந்து ஓரிரு மணி நேரங்களில் தானாக விலகிவிடும், வேறு சில நேரங்களில் அது அதிகரித்து, மனப்போராட்டத்தின் உச்சியில் மயக்க நிலைக்குச் சென்றுவிடுவாள். அப்போது அவளுக்குத் தோன்றுவதுதான் அந்த இருள் கனவு… விழிப்பு நிலையில் அனுபவிக்கும் துன்பத்தைவிட அந்த கனவுநிலை இன்னும் பயங்கரமானது…

அந்த இரண்டு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 15 முறையாவது அந்த பயங்கரக் கனவு அவளுக்கு வந்திருக்கும். தன் மனதில் அந்தக் குழப்பங்கள் ஆரம்பிக்கும் பொழுதெல்லாம் தம் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் அந்த சிற்றாலயத்துக்குச் சென்றுவிடுவாள். ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் அங்கு ஃபாதர் லாரன்ஸ் மட்டுமே அங்கு இருப்பார். யாராவது அவ்வப்போது வந்து மெழுகுவர்த்தி கொளுத்தி, பிராத்தனை செய்து கொண்டிருப்பார்கள். சிற்றாலயத்துக்கு முன் குழந்தைகள் விளையாடுவதற்கு நல்ல விசாலமான இடம் இருந்தது. எனவே அது அந்தப் பகுதி குழந்தைகளின் புகலிடமாக இருந்தது. சில நேரங்களில் ஃபாதர் லாரன்ஸ் அந்தக் குழந்தைகளை அழைத்து, அவர்களுக்கு தின்பண்டங்கள் கொடுத்து, பைபிள் கதைகள் சொல்லித்தருவார், பாட்டு, டான்ஸ் என்று குழந்தைகளோடு குழந்தையாக மாறிவிடுவார்.

சஞ்சனாவுக்கு ஆலயத்தின் பீடத்தில், இரத்தம் வழிய சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் அமைதியே உருவான இயேசுநாதர் முகத்தையும், அவரது பாதத்தருகே எரிந்துகொண்டிருக்கும் மெழுகுவர்த்தி சுடர்களையும் பார்த்துக்கொண்டே இருப்பது ரொம்பவும் பிடிக்கும். அது மனதுக்கு சற்று அமைதியைத் தந்தபடியால் மனக்குழப்பம் ஏற்படும்பொழுதெல்லாம் அந்த சிற்றாலயத்துக்கு ஓடி வந்துவிடுவாள். சில நேரங்களில் அங்கிருக்கும் பெஞ்சில் படுத்து தூங்கியும் விடுவாள். அவளை எழுப்பி தொந்தரவு செய்யாமல் தோளில் சுமந்து வந்து வீட்டில் கொடுத்துவிட்டுப் போவது ஃபாதர் லாரன்ஸின் வழக்கம்.

48 வயதான ஃபாதர் லாரன்ஸ் ஹஜோங் மேகாலயாவைச் சேர்ந்தவர். ஜெயராம் தாகூருக்கு நெருங்கிய நண்பர். மகேஷ்வரி தனது உடன் பிறந்த அண்ணன் போலவே அவரை நினைத்தார். தாகூர் குடும்பம் மட்டுமல்ல, அந்தப் பகுதி மக்கள் அனைவருமே ஃபாதர் லாரன்ஸை ஒரு

மதகுருவாகப் பார்க்காமல் ஒரு குடும்ப நண்பராகவே பாவித்தனர். அவரும் அந்த மரியாதைக்கு தகுதியானவராகவே எப்போதும் நடந்து கொண்டார்.

சஞ்சனாவின் பெற்றோர் அவளுக்கு என்ன பிரச்சனை என்று புரியாமல் அவளை ஒரு மனநல மருத்துவரிடம்(Psychiatrist) அழைத்துச் சென்றனர். அவர் அவளைப் பரிசோதித்துவிட்டு சில மருந்துகளைப் பரிந்துரைக்க, அதை சாப்பிடத் தொடங்கியவுடன் அவள் அதிகமாக தூங்கிக்கொண்டே இருந்தாள். அது தற்காலிகத் தீர்வாக இருந்தாலும், அதுவும் அவளது பெற்றோருக்கு கவலையைத் தந்தது. பின்னர் அந்த மருந்துகளை நிறுத்திவிட்டு ஜோதிடப் பரிகாரத்தை நாடலாம் என்று முடிவு செய்திருந்தனர். இன்னொரு பக்கம் ஃபாதர் லாரன்ஸும் அவளுக்காக உருக்கமாக பிரார்த்தனை செய்துகொண்டு வந்தார்.

அதுபோன்ற சூழ்நிலையில்தான், ஜோதிடர் வீட்டுக்கு வந்திருந்த அந்த நாளில் சிற்றாலயத்தில் தூங்கிக்கொண்டிருந்த சஞ்சனாவுக்கு அந்த பயங்கர இருள் கனவும், அந்தக் கனவின் தொடர்ச்சியாக அதிசயமான அந்த அனுபவமும் நடந்திருந்தது.

அத்தியாயம் 6 - மூன்றரை அடியில் ஒரு மருந்து பாட்டில்

"Destiny grants us our wishes, but in its own way, in order to give us something beyond our wishes." — Johann Wolfgang von Goethe

ஜோதிடர் போனபின்பு அவரோடு சேர்ந்து ஜெயராம் தாகூரும் வெளியே சென்றுவிட்டார். பாட்டியும், மகேஷ்வரியும் அடுப்படியில் சமையலில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஹாலில் கிரீச் கிரீச்சென்று வேகமாக ஆடிக்கொண்டிருக்கும் ஊஞ்சலின் சத்தம் கேட்க, மகேஷ்வரி போய் எட்டிப் பார்த்தார்.

தூங்கி எழுந்த சஞ்சனா உற்சாகமாக விளையாடிக்கொண்டிருந்தாள். பெரும்பாலும் அவள் ஊஞ்சலில் சுருண்டு படுத்திருப்பாள் அல்லது சோர்வுடன் உட்காந்து எதையாவது யோசித்துக் கொண்டிருப்பாள். யாராவது ஊஞ்சலை ஆட்டி விட்டாலன்றி அவளாக ஆடுவதில்லை.

ஆனால் அன்று படு உற்சாகமாகவும், வேகமாகவும் அவள் ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்த அம்மாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஊஞ்சலை நிறுத்திவிட்டு, அவளை வாரி அணைத்து தூக்கி இடுப்பில் வைத்தபடி அவளோடு பேசிக்கொண்டே அம்மா அடுப்படிக்கு வந்தார்.

“இன்னிக்கு சஞ்சு குட்டி எப்படி இவ்வளோ குஷியா இருக்கீங்க?...”

“உனக்கு தெரியுமா அம்மீ…” என்று ஆரம்பித்து தன் கனவில் கண்ட காரியங்களை சஞ்சனா மழலை மாறாத மொழியில் சொல்லி முடிக்க, அவள் ஏதோ நல்ல கனவு கண்டிருக்கிறாள் என்பதை மட்டும் அம்மாவும் பாட்டியும் புரிந்துகொண்டனர். ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக்கொண்டனர். சஞ்சனா மேற்கொண்டு பேசிக்கொண்டிருக்க பொறுமையின்றி குடுகுடுவென விளையாட வெளியே ஓடிவிட்டாள்.

அந்த கனவு ஏற்படுத்திய தாக்கம் அடுத்த இரண்டு நாட்களுக்கு சஞ்சனாவுக்கு இருந்தது. அந்த இரண்டு நாட்களும் நன்றாக சாப்பிட்டாள், சந்தோஷமாக விளையாடினாள், உற்சாகமாகப் படித்தாள், நிம்மதியாகத் தூங்கினாள். அவளிடம் ஏற்பட்டிருந்த மாற்றத்தை அம்மா, அப்பா, பாட்டி மூவரும் கவனித்தனர். டெலிபோனில் அம்மாவுடன் பேசிய நிரஞ்சனாவும் கேள்விப்பட்டு ரொம்பவே சந்தோஷப்பட்டாள்.

மூன்றாம் நாள் மீண்டும் பழைய நிலை திரும்பியது. மறுபடியும் சோர்வு, மனக்குழப்பம், பயம் என அவளை ஆட்கொள்ள, அவளிடம் கடந்த இரு நாட்களாகக் கண்ட மாற்றத்தால் நிம்மதியடைந்திருந்த குடும்பத்தினர் மீண்டும் கவலையில் மூழ்கினர்.

ஜோதிடரின் ஆலோசனைக்கு இணங்க சஞ்சனாவின் வீட்டில் டேப் ரெக்கார்டரில் அனுமன் சாலிசாவும், மிருத்துஞ்சய மந்திரமும் மாறி மாறி ஒலித்துக்கொண்டே இருந்தது. வீட்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த சிவன் கோவிலுக்கு தினமும் காலை 7 மணிக்கு சஞ்சனாவை அழைத்துச் சென்று அவளது பெயரில் அர்ச்சனையும், சிவலிங்கத்துக்கு பாலாபிஷேகமும் செய்யப்பட்டது. அந்த டார்ஜிலிங் குளிரில் அப்பா ஜெயராம் தாகூர் தனது

ராஜ்தூத் பைக்கில் மகேஷ்வரியையும், சஞ்சனாவையும் அழைத்துச் செல்வது வழக்கம். அவர் வியாபார விஷயமாக வெளியூர் செல்லும் நாட்களில் ஃபாதர் லாரன்ஸ் தனது பச்சை நிற லாம்ப்ரெட்டா ஸ்கூட்டரில் அவர்களை கோவிலுக்கு அழைத்துச் சென்று, மீண்டும் அழைத்து வருவார்.

சஞ்சனாவுக்கு இது ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தாலும் பின்னர் பிடித்துவிட்டது. அதற்குக் காரணம் கோவிலிலிருந்து திரும்பி வரும்போது அப்பா அங்குள்ள ஒரு பிரபலமான கடையில் நேபாளி செல் ரொட்டி வாங்கித்தருவார். அதன் ருசியே அலாதியாக இருக்கும். சஞ்சனா இதே பழக்கத்தை ஃபாதர் லாரன்ஸுக்கும் ஏற்படுத்திவிட்டாள். அவரும்கூட காலப்போக்கில் செல் ரொட்டியின் சுவைக்கு அடிமையாகிப் போனார், அதுவே பல நேரங்களில் அவருடைய காலை சிற்றுண்டியாகிப் போனது.

இரண்டு வாரங்கள் கழித்து சஞ்சனாவுக்கு மறுபடியும் அந்த இருள் கனவு வந்தது. ஆபத்பாந்தவன் போல அவனும் வந்துவிட்டான். இந்த முறை ஒரு அழகான கோடை வாசஸ்தலத்தில் அவர்கள் சந்திப்பு நேர்ந்தது. விண்ணை முட்டும் மலைகள், அதன் முகடுகளை மறைக்கும் முகில் கூட்டங்கள். மலைகளை பச்சைப் போர்வை போட்டு போர்த்தியது போல தேயிலைத் தோட்டங்கள், ஆப்பிள் மரங்கள் என்று அவள் வாழும் டார்ஜிலிங்கை விட அந்த இடம் இன்னும் பல மடங்கு அழகாக இருந்தது. அந்தக் கனவில் அவனோடு கழிக்கும் அந்த சில நிமிடங்கள் சஞ்சனாவுக்கு சொர்க்கம் போல இருந்தது. இருவரும் சந்தோஷமாக பேசி சிரித்துக் கொண்டிருப்பார்கள். உறக்கம் கலைந்து எழுந்தவுடன் அந்தக் கனவு தந்த மகிழ்ச்சி மாத்திரமே அவள் மனதில் நிறைந்து இருக்கும். கனவில் அவனோடு என்ன பேசினாள் என்பது அவளுக்கு சுத்தமாக நினைவிருக்காது.

மறுபடியும் அதே போல கனவு கண்ட அடுத்த இரண்டு நாட்களுக்கு மகிழ்ச்சி, மூன்றாம் நாள் பழைய நிலைக்குத் திரும்புதல் என்பது தொடர்ந்தது. ஆனால் மாதத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறையாவது அவள் மனப்போராட்டம் தீவிரமடைந்து அவள் மயக்கத்தில் ஆழ்வதும், அப்போது கனவில் அவனைச் சந்திப்பதும் வழக்கமாக நிகழ ஆரம்பித்தது. ஒவ்வொரு முறை கனவில் நிகழ்வதையும் சஞ்சனா பாட்டியிடம் சொல்ல, பாட்டிக்கும், பெற்றோருக்கும் கொஞ்சகொஞ்சமாக நடப்பது புரிய ஆரம்பித்தது. அவளை மறுபடியும் அதே மனநல மருத்துவரிடம்(Psychiatrist) கொண்டு போனார்கள். “ஏன் மாத்திரைகளை நிறுத்தினீர்கள்?” என்று அவர் அவர்களைத் திட்டினார்.

அந்த மனநல மருத்துவர் சஞ்சனாவின் இந்த கனவுகளுக்குப் பின்னால் இருக்கும் காரணம் ‘ஹாலுசினேஷன்’ என்றார். “அவளது மனப்போராட்டம் உச்சத்தைத் தொடும் வேளைகளில் அவளை விடுவிக்க இது அவளது மூளையே செய்யும் ஒருவித முயற்சிதான், ஆரம்பத்தில் இது நல்ல விஷயம்போல தோன்றினாலும் சரியான சிகிச்சை எடுத்துக்கொள்ளாவிட்டால் இந்த ஹாலுசினேஷனே அவள் மனநிலையை இன்னும் மோசமாக்கிவிடும். எனவே நான் கொடுக்கும் மருந்துகளை அவளுக்கு ஒழுங்காகக் கொடுங்கள்” என்று அறிவுறுத்தினார்.

அதற்குள் பாட்டி சஞ்சனாவிடம், “உன் கனவில் வரும் பையன் உன்னைக் காப்பாற்ற கடவுள் அனுப்பிய இளவரசன்” என்று சொல்லியிருந்தார். சஞ்சனாவையும், அந்தப் பையனையும் கதாபாத்திரங்களாக்கி நிறைய Cinderella டைப் கதைகளையும் சொல்லி வைக்க, சஞ்சனா

அவனை நினைத்து ஒரு fantasy உலகில் மூழ்கியிருந்தாள். “அவளுக்கு அந்தப் பையனை வைத்து கதை சொல்லாதீர்கள், அது அவளை இன்னும் அதிகமாக ஹாலுசினேஷனுக்குள் இழுத்துச் செல்லும்” என்று அம்மா சொல்ல, “இல்லை, இல்லை அவனைப் பற்றி பேசியவுடன் அவள் எவ்வளவு மனப்போராட்டத்தில் இருந்தாலும் உடனே விடுபட்டு உற்சாகமாகி விடுகிறாள், எனவே அவளுக்கு அவன்தான் உடனடி மருந்து!” என்று பாட்டி சொல்ல இருவருக்கும் வாக்குவாதமே வந்துவிட்டது.

உண்மையில் சஞ்சனாவைப் பொறுத்தவரை அவளது உலகமே அவனாக மாறிப்போயிருந்தான். அவளது புத்தகங்கள் நோட்டுகள் அனைத்திலும் அவள் அவனது படத்தைக் கிறுக்கியிருந்தாள். அவன் நிஜமல்ல, ஒரு மாயபிம்பம் என்று வீட்டில் உள்ளவர்கள் பேசிக்கொள்வது அவளுக்கு கவலையை அளித்தது. அவனை நேரில் பார்க்க வேண்டும் என்று அவள் அடிக்கடி பாட்டியிடம் அழுவது பாட்டிக்கே அதிகம் கவலையைத் தந்திருந்தது. இப்போதெல்லாம் கோவிலுக்குப் போனாலும் சரி, சர்ச்சுக்குப் போனாலும் சரி அவளது ஒரே பிரார்த்தனை அவனை நேரில் சந்திக்க வேண்டும் என்பதுதான்.

இப்படியே இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டிருந்தன…

1985, டிசம்பர்…

இப்போது சஞ்சனாவுக்கு வயது எட்டு… அக்கா நிரஞ்சனா இரண்டு வாரங்கள் அரைப்பரீட்சை லீவுக்கு வீட்டுக்கு வந்திருந்தாள். பெற்றோரும், உறவினர்களும் அவளுக்குக் கொடுத்த பணத்தை ஒரு ஆண்டாக செலவு செய்யாமல் சேர்த்து வைத்து, ஊருக்கு வரும்போது கல்கத்தாவின் புகழ்பெற்ற மார்டன் டாய்ஸ் ஷாப்பில் இருந்து தங்கைக்கு ஒரு டெடிபியர் வாங்கி வந்தாள். சஞ்சனாவுக்கு டெடி பியர் என்றால் உயிர். 24 மணி நேரமும் அது அவள் கையில் இருந்தது. தூக்கத்தில்கூட டெடிபியரைக் கட்டிப்பிடித்துத்தான் தூங்கிக் கொண்டிருந்தாள்.

நிரஞ்சனாவுக்கு அம்மா கொடுத்த முக்கியமான அசைன்மெண்ட் என்னவென்றால், சஞ்சனாவின் மனதில் இருந்து அந்தப் பையனை எப்படியாவது அழிப்பது. “சஞ்சு, நீ கனவுல பாக்குறேல்ல அந்தப் பையன், அது உண்மையான பையன் இல்ல, அது உன்னை குணமாக்க சாமிதான் அந்தப் பையன் ரூபத்துல வந்திருக்கு” என்று நிரஞ்சனா சொல்ல, கையில் வைத்திருந்த டெடிபியரைத் தூக்கி அவள் முகத்தின் மீது ஓங்கி வீசி எறிந்துவிட்டு, கோபமாகப் போய் ஊஞ்சலில் உம்மென உட்காந்து கொண்டாள் சஞ்சனா…

அத்தியாயம் 7 - வராது வந்த நாயகன்…

"Some people come into our lives and quickly go. Some stay for a while, leave footprints on our hearts, and we are never, ever the same." - Flavia Weedn

1986, பிப்ரவரி…

ஆண்ட்டீ…

சஞ்சனா…

வெளியே வாசலில் நின்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு ஓடோடிச் சென்று பார்த்தாள் சஞ்சனா..

மெழுகில் வார்க்கப்பட்ட சிலை போல Gate-இன் முன் அவன் நின்றிருந்தான். வயது 10 இருக்கும். வெள்ளை வெளெர் நிறம், ஊதா நிறக் கண்கள், முடி ஸ்டைலாக வளர்த்திருந்தான். அது அவன் நெற்றியில் தொங்கி நீலக் கண்கள் வரை நீண்டிருந்தது. ஊதா நிற கட்டம் போட்ட சட்டையும், ஜீன்ஸும், தூய்மையான வெண்ணிற ஷூவும் அணிந்திருந்தான்.

சஞ்சனா அவனைப் பார்த்துவிட்டு, வீட்டுக்குள் ஓடிச் சென்று அம்மாவிடம், “அம்மீ நம்ம வீட்டு வாசல்ல யாரோ ஒரு ஃபாரின்காரன் நிக்கிறான், என் பேரச் சொல்லி கூப்புடுறான், அவனுக்கு எப்படி என் பேர் தெரிஞ்சுச்சு?…”

அம்மா வெளியே எட்டிப் பார்த்து, ஆச்சரியத்தில் கண்கள் விரிய…”யாருப்பா, என்ன வேணும்?”

அவன் எதுவும் பேசாமல் அந்தத் தெருவை நோக்கி கை நீட்டி சுட்டிக்காட்ட.. அம்மா படிகளில் இறங்கிப் போய் அவன் கை காட்டிய திசையை நோக்கிப் பார்க்க, அங்கே ஐந்து வீடுகள் தள்ளி ஜெயராம் தாகூர் நின்று கொண்டிருந்தார். அவருக்கு அருகே பொருட்கள் ஏற்றிய பெரிய லாரி நின்றுகொண்டிருந்தது.. ஆட்கள் அதிலிருந்து பொருட்களை இறக்கி வீட்டுக்குள் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள்.

ஜெயராம் தாகூர், “மகேஷ்வரி, அந்தப் பையன்கிட்ட சுத்தியலும், கொஞ்சம் ஆணியும் கொடுத்தனுப்புமா..”

மகேஷ்வரி புரிந்துகொண்டார்…“இந்தத் தெருவில் யாரோ ஒரு குடும்பம் புதிதாக குடி வந்திருக்கிறது போல..” தெரியாத நபர்களுக்குக்கூட தானாகப் போய் உதவி செய்வது ஜெயராம் தாகூரின் சுபாவம். அதன் காரணமாகவே அவருக்கு ஏகப்பட்ட நண்பர்கள் இருந்தார்கள். அந்த வார்டில் அவர் பஞ்சாயத்துத் தேர்தலில் நின்றால்கூட எளிதாக வென்றுவிடுவார்.

தன் கையிலிருந்த சுத்தியலையும் ஆணிகளையும் தூரத்தில் நின்ற கணவரிடம் காட்டிவிட்டு, அவைகளை அந்த மெழுகு பொம்மை கையில் கொடுத்தனுப்ப.. ஜெயராம் தாகூர் அங்கிருந்தபடியே கத்தினார்..

“மகேஷ்வரி, அப்படியே ஃப்ளாஸ்கில் டீ போட்டு கொஞ்சம் எடுத்துட்டு வாயேன்..” சரியென தலையாட்டிவிட்டு மகேஷ்வரி தனக்குள் சிரித்துகொண்டே விட்டுக்குள் போனார்.

ஒரு ஃபிளாஸ்க் நிறைய மசாலா டீ போட்டு எடுத்துக்கொண்டு மகேஷ்வரி சஞ்சனாவையும் கூட்டிக்கொண்டு அந்த வீட்டுக்குச் செல்ல.. வீட்டு வாசலில் அந்த மெழுகு பொம்மை ஒரு விமான பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான்.

வீட்டுக்குள் அந்தக் குடும்பத்தலைவரும், ஜெயராம் தாகூரும் பொருட்களை அடுக்கி வைக்கும் வேலையில் மும்மரமாக இருந்தனர். மகேஷ்வரி வீட்டுக்குள் நுழைவதைப் பார்த்த அந்த குடும்பத்தலைவி வேகமாக வாசலுக்கு வந்து மகேஷ்வரியை கைகுலுக்கி வரவேற்றார்..

“வாங்க, வாங்க… ஐ யாம் செலின் ராவ்…”

மகேஷ்வரிக்கு அந்தப் பையன் ஏன் மெழுகு பொம்மை போல இருக்கிறான் என்ற இரகசியம் விளங்கிவிட்டது, பதிலுக்கு புன்னைகைத்தபடி, ”..மகேஷ்வரி தாகூர்” என்றார்…

அதற்குள் சஞ்சனா செலினின் காலைத் தொட்டு வணங்க, அவர் நெகிழ்ந்து விட்டார். “வாவ், குழந்தைய அற்புதமா வளர்த்து இருக்கீங்க…” சஞ்சனாவின் உச்சி முகர்ந்து முத்தமிட்டார். “வாங்க சிஸ்டர்..” என்று அவரை அன்புடன் வரவேற்றார் செலினின் கணவர் ஹரிகோவிந்த் ராவ். சஞ்சனா கீ கொடுத்த பொம்மை போல அவருடைய காலையும் தொட்டு வணங்க, அவர் சஞ்சனாவின் தலையில் கை வைத்து அவளை ஆசீர்வத்தபடி மகேஷ்வரியைப் பார்த்து, “எங்களை முன்னப் பின்ன தெரியாமலே எங்களுக்கு இவ்வளோ உதவி செய்யிறீங்க..” என்று சொல்ல…” முன்னப் பின்ன தெரியாட்டி என்ன, எங்க தெருவுக்கு இப்ப நீங்க குடி வந்துட்டீங்கள்ல, இனி நீங்களும் எங்க குடும்பம்தான்” என்றபடி நெற்றியில் வழிந்த வியர்வையைத் கர்ச்சிப்பால் துடைத்துக்கொண்டே பக்கத்து அறையிலிருந்து அங்கு வந்தார் ஜெயராம் தாகூர்.

சஞ்சனா ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல அம்மாவை சுரண்டிக்கொண்டே இருந்தாள். அம்மா குனிந்து என்னவென்று கேட்க, “பாருங்க அம்மி, அந்தப் பையனுக்கு இருக்க மாதிரியே ஆண்ட்டிக்கும் கண்ணு புளூ கலர்ல இருக்கு” என்று சொல்ல. அது செலின் காதில் விழ, அவர் சிரித்துக்கொண்டே, “அவன மாதிரி எனக்கு இல்லடி ஸ்வீட்டி, என்ன மாதிரிதான் அவனுக்கு இருக்கு” என்றார். பின்னர் மகேஷ்வரியைப் பார்த்து, “கிரீஸ் நாட்டுல இருக்க ஏதேன்ஸ் என்னோட பூர்வீகம். அவருக்கு விசாகபட்டிணம், ஆந்திரா. ரெண்டு பேரும் மும்பைல ஒண்ணா படிச்சோம், லவ் மேரேஜ்…” என்றார்…

அந்தத் தெருவிலேயே பெரிய வீடு அது, அதன் ஓனர் வெளிநாடு சென்றுவிட்டதால் இரண்டு ஆண்டுகளாகப் பூட்டியே கிடந்தது. ஆனால் கடந்த இரு மாதங்களாக புதுப்பிப்பு பணிகள் நடந்து கொண்டிருந்தன. ஆனால் யார் குடிவரப்போகிறார்கள் என்று அப்பகுதி மக்களுக்கு தெரியாமல் இருந்தது. அந்த வீட்டை ஹரிகோவிந்த் ராவ் விலைக்கு வாங்கி தற்பொழுது குடும்பத்துடன் குடி வந்திருக்கிறார். ஹரிகோவிந்த் ராவின் அப்பா அமர்பிரசாத் ராவ் விசாகபட்டிணத்தில் மிகப்பெரிய டீ பிசினஸின் முதலாளி. டார்ஜிலிங்கில் அவருக்கு இருந்த பெரிய தேயிலைத் தோட்டத்தை பராமரிக்கும் பொறுப்பை அவரது இளைய மகன் ஹரிகோவிந்த் ராவிடம் கொடுக்க, அவர் தற்பொழுது குடும்பத்துடன் டார்ஜிலிங் குடி வந்திருக்கிறார். ஒரு புதிய

பிராண்ட் டீயை உருவாக்கி, சந்தைப் படுத்தி, ஜெயிக்க வேண்டும் என்பது அப்பா அவருக்குக் கொடுத்த டார்கெட்.

ஹரிகோவிந்த் ராவுக்கும், செலின் ராவுக்கும் பிறந்த அந்த நீலக்கண்ணனுக்குப் பெயர் கைலாஷ் ராவ். டார்ஜிலிங்கில் அவனை ஐந்தாம் வகுப்பு சேர்க்க ஒரு நல்ல ஸ்கூலைத் தேடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவன் கண்களோ அம்மாவுக்குப் பின் மறைந்திருந்த சஞ்சனாவைத் தேடிக்கொண்டிருந்தது. அவன் நேராகப் போய் மகேஷ்வரியிடம் கேட்டான்.

“ஆண்ட்டீ, சஞ்சனா எந்த ஸ்கூல்ல படிக்கிறா?”

****

சில நாட்களுக்குள்ளேயே கைலாஷுக்கும் சஞ்சனாவுக்கும் நல்ல நட்பு துளிர் விட்டிருந்தது. இப்போது சஞ்சனா ஐந்தாம் வகுப்பும், கைலாஷ் ஆறாம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தார்கள். சஞ்சனாவுக்கு நிறைய தோழிகள் இருந்தாலும் முதல் உற்ற நண்பன் கைலாஷ்தான். ஸ்கூல் பஸ்ஸில் கைலாஷோடு ஒன்றாகப் போவதும், திரும்பி வருவதும் சஞ்சனாவுக்குப் பிடித்திருந்தது.

சஞ்சனாவின் அம்மா முதுகலை ஆங்கிலம் பயின்றவராதலால் நிரஞ்சனாவும், சஞ்சனாவும் சரளமாக ஆங்கிலம் பேசக் கற்றுக்கொண்டிருந்தனர். சஞ்சனாவின் பாட்டியும் சரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவர்தான். எனவே அவர்களது வீட்டில் ஆங்கிலத்தில் அதிகம் பேசிக்கொள்வது வழக்கம். கைலாஷுக்கு பெங்காலி தெரியாததால் அவனுக்கும் ஆங்கிலத்தில் பேசிப் பழகி விளையாட சஞ்சனாவைத் தவிர வேறு யாரும் இல்லை.

சஞ்சனா மனப்போராட்டங்களில் அல்லல்படும் நேரங்களிலெல்லாம் கைலாஷ் தன்னிடம் இருக்கும் ஏதாவது ஒரு புது பொம்மையை அவளுக்குக் கொடுத்து, அவளை மகிழ்ச்சிப்படுத்த முயற்சி செய்வான். கைலாஷ் சஞ்சனாவின் பாட்டிக்கு செல்லமாகிப் போனான். அவனும் சஞ்சனாவோடு அமர்ந்து பாட்டியிடம் நிறைய கதை கேட்பான். பாட்டி ‘சஞ்சனா-இளவரசன்’ கதை சொல்லும்போது கைலாஷ் அந்த இளவரசனாக தன்னைக் கற்பனை செய்துகொள்வான்.

****

சஞ்சனாவுக்கு அந்தக் கனவு இன்னும் வந்துகொண்டுதான் இருந்தது. ஆனால் முன்புபோல அவள் இருளில் அழுவதும், அவன் தன் கரங்களால் பற்றி வெளியே இழுத்து காப்பாற்றுவதும் இல்லை. இப்போதெல்லாம் அவன் நேரடியாகவே கனவுகளில் வந்துவிடுவான்.

ஒருமுறை வயல்வெளி, இன்னொருமுறை கடற்கரை, வேறொருமுறை பூங்கா, பனிமலை, பழத்தோட்டம் என அவர்கள் சந்திக்கும் இடங்கள் மாறிக்கொண்டே இருந்தது. சஞ்சனா அந்தப் பையனிடம் முற்றிலும் தன் மனதைப் பறிகொடுத்திருந்தாள். அவனிடம் நிறைய பேசினாலும் கனவு கலைந்தவுடன் அவனுடன் பேசியது என்னவென்பதே அவளுக்கு நினைவில் இருக்காது. அதை மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவர அவள் மறுநாள் முழுவதும் போராடிக்கொண்டிருப்பாள்.

ஒருமுறை கனவில் சஞ்சனா இருக்கும் ஏரியாவுக்கு அருகிலேயே அவர்கள் சந்திப்பு நிகழ்ந்தது. அவர்கள் வீடு இருக்கும் மலைக்கு சற்று அடிவாரத்தில் அவனும் அவளும் நின்று கொண்டிருந்தார்கள். சஞ்சனா அவனிடம் “நீ எங்கிருந்து வருகிறாய்?” என்று கேட்டாள்.

அவன் தன் கையை நீட்டி தூரத்தில் தெரிந்த ஃபாதர் லாரன்ஸ் இறைப்பணி செய்யும், சஞ்சனாவின் வீட்டுக்கு அருகில் இருந்த அந்த சிற்றாலயத்தைக் காண்பித்தான். கனவு கலைந்து எழுந்த பின்னும் அதுமட்டும் அவள் நினைவில் பசுமையாக இருந்தது.

அத்தியாயம் 8 - காலங்கள் கனியும்வரை காத்திரு....

"This revelation is for a future time. It describes the end, and it will be fulfilled. If it seems slow in coming, wait patiently, for it will surely take place. It will not be delayed." - Habakkuk 2:3 (Holy Bible)

தியா தன் அம்மாவை இடைநிறுத்தி…

“அப்ப, அந்த சர்ச்சுல அப்படியொரு பையன் இருந்தானா?...”

சஞ்சனா விரக்தியாக ஒரு புன்னகையை உதிர்த்து, “எனக்கு விபரம் தெரிஞ்ச நாள்ல இருந்து அந்த சர்ச்சுலயோ அல்லது டார்ஜிலிங்லயோ கூட அந்தப் பையனை நான் பார்த்ததில்ல. அதான் எல்லாம் சொல்லிட்டாங்களே அது ஹாலுசினேஷன்னு… கொஞ்சம் வளர்ந்தவுடனே நானே அந்தப் புரிதலுக்கு வந்துட்டேன்…”

தியாவும் சஞ்சனாவும் ஹாலில் டைனிங் டேபிளில் உட்காந்திருந்தனர். தியா தன் கன்னத்தில் கைவைத்து முட்டுக்கொடுத்தபடி, அம்மா சொல்லும் கதையில் மூழ்கியிருந்தாள்.

ஆழங்களில் பதிந்து கிடக்கும் நினைவுகளைத் தோண்டத் தோண்ட சஞ்சனாவின் மனதுக்குள் அதுவரை மௌனமாக கனன்று கொண்டிருந்த நெருப்பு உள்ளூர பற்றி எரிய ஆரம்பித்தது, அவளது குரல் நடுங்கியது.. ஆனாலும் மகளிடம் கொட்டித் தீர்த்தபின் கொஞ்சமாவது மனம் ஆறுதலடையாதா என்ற நம்பிக்கையில் தழுதழுத்த குரலில் தன் கதையைத் தொடர்ந்தாள்…

****

1988 ஜெயராம் தாகூருக்கு மறக்க முடியாத ஆண்டு. அவர் தனது தொழிலில் மிகப்பெரிய சரிவையும், சவாலையும் சந்தித்த ஆண்டு அது. அவருக்கும் அவரது பார்ட்னருக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் அவரது பிஸினஸ் இரண்டாக உடைந்தது. திடீரென்று மீளமுடியாத கடன் சுமை ஏற்பட, அந்த நேரத்தில் அவருக்கு ஒரு தேவதூதனைப்போல வந்து உதவி செய்தது கைலாஷின் அப்பா ஹரிகோவிந்த் ராவ்தான். கிட்டத்தட்ட 15 லட்சம் ரூபாயை வட்டியில்லாக் கடனாக ராவ் தாகூருக்குக் கொடுத்திருந்தார். சரியான நேரத்தில் ராவ் அந்த உதவியைச் செய்திருக்காவிட்டால் தாகூரின் குடும்பம் அன்றே நடுத்தெருவுக்கு வந்திருக்கும்.

அப்போது நிரஞ்சனா பிளஸ் டூ படித்துக் கொண்டிருந்தாள். அவள் நிச்சயமாக அதிக மதிப்பெண்கள் பெறுவாள் என்று எதிர்பார்க்கப்பட்டது. நிரஞ்சனாவின் இலட்சியம் டாக்டர் ஆவது அல்லவா?. ஆனால் அப்போதிருந்த பொருளாதாரச் சூழலில் அவளை ஒரு கலைக்கல்லூரியில் சேர்த்து பி.ஏ படிக்க வைப்பதே சிரமம் என்ற நிலைதான் ஜெயராம் தாகூருக்கு இருந்தது.

யாரும் எதிர்பாராத விதத்தில் நிரஞ்சனா கல்கத்தா மாவட்டத்திலேயே முதல் மாணவியாக தேர்ச்சி பெற்றிருந்தாள். பிரிட்டனில் போய் மருத்துவம் படிக்க வேண்டும் என்று தன் ஆசையை அவள் சொல்ல, தாகூர் உடைந்து போனார். அந்த சூழ்நிலையிலும் அந்தக் குடும்பத்துக்கு உதவி செய்தது ஹரிகோவிந்த் ராவின் குடும்பம்தான்...

கைலாஷின் அம்மா செலின் லண்டனில் உள்ள தனது உறவினர் ஒருவரின் மூலம் அங்கிருந்த ஒரு மருத்துவக் கல்லூரியில் நிரஞ்சனாவுக்கு சீட் வாங்கி, தாமே அவளுக்கான ஒரு வருட படிப்புக்கான கட்டணத்தையும் கட்டி, தனது சொந்த செலவில் அவளை லண்டனுக்கு அனுப்பி வைத்தார். இக்கட்டான சூழலில் ராவின் குடும்பம் தங்களுக்கு செய்த உதவிகளுக்கு கைமாறாக என்ன செய்யப்போகிறோம் என்று தாகூரும் மகேஷ்வரியும் அடிக்கடி பேசிக்கொள்வதுண்டு.

அடுத்த ஒரு வருடத்தில் ஜெயராம் தாகூர் தனது கடின உழைப்பின் விளைவாக தனது தொழிலில் மீடேறி இருந்தார். நிரஞ்சனாவின் அடுத்தடுத்த வருட படிப்புச் செலவுகளையும் அவரே சந்திக்கும் அளவுக்கு அவருடைய பொருளாதாரமும் மேம்பட்டிருந்தது. தாகூர் மிகவும் நேர்மையாக ராவிடம் பட்டிருந்த கடனை சிறிது சிறிதாக அடைக்க ஆரம்பிக்க, தாகூரின் குடும்பத்துக்கும் ராவின் குடும்பத்துக்கும் இருந்த நெருக்கம் இன்னும் அதிகமாகி விட்டிருந்தது.

1992 ஆம் ஆண்டு... சஞ்சனா பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு இருக்கும் மனப்பிரச்சனைக்கு அவள் பாஸ் பண்ணால் மட்டுமே போதும் என்ற மனநிலையில் பெற்றோர் இருந்தனர். சஞ்சனாவிடம் எந்த பெரிய முன்னேற்றமும் இல்லாமல் இருந்தது. தூக்கத்தை வரவழைக்கும் மாத்திரைகள் வேண்டாம் என்று பலரும் பரிந்துரைத்ததால் மருந்து மாத்திரைகள் தராமல் கவுன்சிலிங் மற்றும் தெரபி வழியாக சிகிச்சையளிக்கும் வேறு ஒரு மனோதத்துவ நிபுணரின் (Psychologist) உதவியை அவளது பெற்றோர் நாடியிருந்தார்கள்.

சஞ்சனா அப்போது அழகான டீன் ஏஜ் பெண்ணாக வளர்ந்திருந்தாள். தங்க விக்கிரகம் போல இருந்த அவளை அவள் படிக்கும் பள்ளியிலும், அவள் ஏரியாவிலும் இருந்த ஏகப்பட்ட கழுகுகள் வட்டமிட்டன. அவள் கைலாஷோடு நெருங்கிப் பழகியதால் அவளும் அவனும் காதலிப்பதாக பலர் நினைத்து அவளிடம் தங்கள் காதலை வெளிப்படுத்தத் தயங்கினர். போதாதற்கு கைலாஷுக்கு பெரிய நண்பர்கள் வட்டாரம் இருந்தது. சஞ்சனாவிடம் ஏதாவது வம்பு செய்தால் கைலாஷும் அவர் நண்பர்களும் போட்டுப் பொளந்துவிடுவார்கள் என்கிற பயம் வேறு. கைலாஷ் பலவிதத்திலும் சஞ்சனாவுக்கு பாதுகாப்பாகவே இருந்தான்.

வாரம் ஒருமுறை சஞ்சனாவுக்கு மனோதத்துவ நிபுணரிடம் (Psychologist) கவுன்சிலிங் அமர்வு இருந்தது. அந்த சைக்காலஜிஸ்ட் ஒரு பெண்ணாக இருந்ததால் சஞ்சனாவுக்கு அவரிடம் தனியாக மனம் திறந்து பேசுவது எளிதாக இருந்தது. கவுன்சிலிங் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கு குறையாமல் இருக்கும். அப்பா ஜெயராம் அதுவரை ரிஷப்ஷனில் பொறுமையாகக் காத்திருப்பார்.

பழைய மனநல மருத்துவர் சொன்ன அதே விஷயத்தைத்தான் அந்த மனோதத்துவ நிபுணரும் சொன்னார்.

“சஞ்சனா, உனக்கு ஏற்படும் கனவு ஒரு ஹாலுசினேஷன்...”

சஞ்சனா, “ஆனா மேடம், அந்தக் கனவுதான் எனக்கு மருந்தாவும் இருக்கு, அது எனக்கு ரொம்பப் பிடிச்சும் இருக்கு...”

அவள் சொன்னதை அந்த சைக்காலஜிஸ்ட் ஏற்றுக்கொள்ளவில்லை, “எது எப்படியிருந்தாலும் அது இயல்புநிலைக்கு முரணானது சஞ்சனா, மொதல்ல நீ அதைப் புரிஞ்சுக்கணும். நீ உனக்கு அடிக்கடி வர்ற குழப்பத்திலிருந்து மட்டுமில்ல, அந்தக் குழப்பத்துக்கு மருந்துன்னு நீ நினைக்கிற அந்தக் கனவிலிருந்தும் விடுபடணும், அதுதான் உண்மையான தீர்வு…”

சைக்காலஜிஸ்ட் சொன்னது சஞ்சனாவின் மனதுக்கு ஒரு வலியைத் தந்தாலும் அதுதான் சரியானது என்பது அவளுக்கும் புரிந்தது. ஆறு வயதில் முதன் முதலாக அந்தக் கனவு வந்தது. இப்போது அவளுக்கு வயது 16, பத்து வருடங்கள் அவள் அந்தக் கனவோடு வாழ்ந்திருந்தாள். கனவில் வரும் அந்த நிழல் இளவரசன் முதல் முறையாக வரும்பொழுது சஞ்சனாவை வைத்து ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட ஆண் உருவம் போல இருந்தான். ஆனால் இப்போது அவன் முகம் கூட அவள் கனவில் கொஞ்சம் மாறியிருந்தது.

“உண்மையிலேயே மேடம், ஒருவேளை நான் அவனை கனவுல பார்க்கலைன்னாலும்கூட, உலகத்துல இருக்கிற அத்தனை முகங்களையும் வைத்து அதில் எனக்கு பிடித்த முகம் எதுன்னு கேட்டால் நான் அந்த முகத்தைத்தான் தேர்ந்தெடுப்பேன்…”

அந்த சைக்காலஜிஸ்ட் கலகலவென சிரித்தார், “அட சின்னப் பெண்ணே, உனக்கு எது பிடிக்கும் என்று உன் மூளைக்கு தெரியாதா? உன் விருப்பத்துக்கு ஏற்றதுபோல அதுவே உருவாக்கிய மாயபிம்பம்தானே அந்த முகம், பின்னே அது உனக்குப் பிடிக்காமல் எப்படி இருக்கும்?...”

“அட ஆமால்ல…” சைக்காலஜிஸ்ட் சொன்னதை சஞ்சனா மனதுக்குள் ஆமோதித்தாள்.

“அதுனாலதான் சஞ்சனா சொல்றேன், நீ அந்த மாய உலகத்தை உண்மையினு நெனச்சு, அதை நேசிக்க ஆரம்பிச்சிட்டா அப்புறம் உன்னால இந்த நிஜ உலகத்துல வாழவே முடியாது..”

சைக்காலஜிஸ்ட் சொன்ன விஷயத்தில் இருக்கும் உண்மை சஞ்சனாவுக்குப் புரிந்தது. கடந்த பத்து ஆண்டுகளில் முதல் முறையாக அந்தக் கனவு இனி தனக்கு வேண்டாம் எனவும், அந்த நிழல் இளவரசனை தான் இனி பார்க்கவே வேண்டாம் எனவும் அவள் விரும்பினாள்.

****

“ஒருவேளை நீ முதல் முறையா அந்தக் கனவை நம்ம சர்ச்சுல படுத்திருக்கும்போது கண்டதால, உன் கனவுல வர்ற அந்தப் பையன் இந்த சர்ச்சுல இருந்துதான் வர்றான்னு உன் ஆழ்மனசுல பதிஞ்சிருக்கலாம், அப்புறம் அதுவே உனக்கு கனவாவும் வந்திருக்கலாம் இல்லையா?”

ஃபாதர் லாரன்ஸ் சொன்ன லாஜிக் சஞ்சனாவுக்கு நியாயமாகப்பட்டது. அம்மா வீட்டில் செய்த கொச்சூரியை ஃபாதருக்கு ஒரு டிஃபன் பாக்ஸில் போட்டு கொண்டு வந்திருந்தாள். இருவரும் சர்ச்சில் அமர்ந்து கொச்சூரியை சாப்பிட்டுக்கொண்டே பேசிக்கொண்டிருந்தனர்.

“இருக்கலாம் மாமா…” என்றாள் சஞ்சனா யோசித்தபடி..

“எனக்கென்னமோ அந்த சைக்காலஜிஸ்ட் சொல்றதுதான் சரியா இருக்கும்னு தோணுது சஞ்சு.. நீ அந்தக் கனவுல இருந்து விடுபடணும், என்னோட ப்ரேயரும் அதுதான். உங்கப்பா உன்

ஜாதகத்துல ஏதோ புனர்ப்பூ தோஷம் இருக்குன்னு சொன்னான். அதுல எனக்கு பெருசா நம்பிக்கையில்ல, ஆனாலும் அது என்னன்னுதான் தெரிஞ்சுக்கலாமேன்னு சொல்லி நேத்து போயி லைப்ரைரில சில புத்தகங்களை refer பண்ணிப் பார்த்தேன்...

அது வேற ஒண்ணுமில்ல, நீ பிறந்த நேரத்துல சந்திரனும், சனி கிரகமும் ஜாதகத்துல ஒரே கட்டத்துல இருந்திருக்கு. அதுனால சனியோட இருள் தன்மை, நம்ம மனதைக் குறிக்கிற சந்திரனை பாதிக்குமாம். அதுதான் புனர்ப்பூ தோஷம். அந்த தோஷத்தால பாதிக்கப்பட்டவங்க மனசு அடிக்கடி குழப்பத்துல ஆழ்றதும், கடுமையான மனஅழுத்தத்துக்குள்ள போறதும் இந்த சனி சந்திரன் சேர்க்கையாலதான் நடக்குதுன்னு சொல்றாங்க. அது உன் விஷயத்துல கரெக்ட்டாவும் இருக்கு.

அது அறிவியல்படி கரெக்ட்டா இல்லையாங்கிற தள்ளி வச்சிரலாம், ஆனா ஒரு காரியத்த நாம முக்கியமா கவனிக்கணும். என்னன்னா இந்த தோஷம் இருக்குறவுங்க வாழ்க்கைல முடிவுகள் எடுக்கிறதுல ரொம்ப அவசரப்படுவாங்க, நிறைய தப்பு பண்ணுவாங்கன்னு போட்டிருந்துச்சு. அத மட்டும் உன் வாழ்க்கையில நீ பண்ணிடாத... அப்புறம் வாழ்க்கை முழுக்க கஷ்டப்படணும்...

பைபிள்ல ஒரு அழகான வசனம் இருக்கு, “கர்த்தருக்கு காத்திரு....”

உன்னால ஒரு விஷயத்தில முடிவு எடுக்க முடியாத பட்சத்தில உன்னை guide பண்ற பொறுப்ப கடவுள்கிட்ட விட்டுட்டு நீ பொறுமையா இரு... அவசரப்படாத, அந்த guidance வர்றதுக்கு லேட்டானாலும் காத்திரு... தான்கிட்ட guidance கேட்குறவங்களுக்கு கடவுள் நிச்சயம் உதவி செய்யாம இருக்க மாட்டாரு, இது என்னோட தனிப்பட்ட அனுபவம்...

எதுக்கும் மனசைப் போட்டு ரொம்ப அலட்டிக்காத, இந்த வருஷம் பப்ளிக் எக்சாம் இல்லையா, படிப்புல மட்டும் கவனம் செலுத்து...

ஃபாதரின் அறிவுரைகள் சஞ்சனாவின் காதுகளை மட்டும் முட்டி திரும்பிக்கொண்டிருந்தது... அவளது கண்களும் மனமும் இரண்டு வரிசைகள் தள்ளி முன்னால் இருந்த பெஞ்சின் மீது இருந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் அந்த பெஞ்சில் படுத்திருந்தபோதுதான் முதல் முறையாக கனவில் அவனை சந்தித்திருந்தாள்...

அத்தியாயம் 9 - நீயே அவன்…

"Truth is not something outside to be discovered, it is something inside to be realized." - Osho

1993, பிப்ரவரி 1…

“சஞ்சனா உனக்கு ஒரு பார்சல் வந்திருக்கு… “ சரியாக காலை பெங்காலி வகுப்பின்போது ப்யூன் துக்காராம் வந்து கூப்பிட்டார்…

சிடுமூஞ்சி பெங்காலி டீச்சரிடம் பெர்மிஷன் கேட்டுவிட்டு சஞ்சனா ஓடிப்போய் ஒரு பார்சலுடன் திரும்பி வந்தாள். கிளாஸ் முடிந்தவுடன் ஆர்வமாய் பிரித்துப் பார்க்க, ஒரு பெரிய பாக்ஸின் உள்ளே வெள்ளை நிறத்தில் பிளாஸ்டிக்கில் கனசதுரவடிவப் பொருள் இருந்தது. அதன் நான்கு புறமும் ஓட்டைகள் மட்டும் இருந்தன. அதன் உள்ளே ஒன்றும் இல்லை, அதைத் திறக்கவும் முடியாது.

அதைப் பார்த்த சஞ்சனாவுக்கு இது என்ன எழவு, யார் அனுப்பியது என்று ஒன்றுமே புரியவில்லை. அன்று மாலை பஸ்ஸில் கூட வந்த கைலாஷிடம் காட்டினாள். “இப்படி பார்சல் வருதுன்னு கண்டதையும் வாங்கி வைக்காத, எவனாவது வெடிகுண்ட வச்சி அனுப்பிச்சிருக்கப்போறான்…,” என்று பயமுறுத்தினான்.

சஞ்சனா அப்போது 11-வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். கைலாஷ் அதே பள்ளியில் 12-ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். சஞ்சனா 10-ஆம் வகுப்பில் ஒரளவு டீசண்ட்டான மதிப்பெண்கள் பெற்று பாஸ் பண்ணவே அதே ஸ்கூலில் அவள் கேட்ட குரூப் அவளுக்கு கிடைத்திருந்தது.

மறுநாள்…

“சஞ்சனா உனக்கு ஒரு பார்சல் வந்திருக்கு… “ இன்றும் அதே காலை பெங்காலி வகுப்பின்போது ப்யூன் வந்து கூப்பிட, பெங்காலி மிஸ் சஞ்சனாவை முறைத்தார்…

சஞ்சனாவுக்கு பயமும் குழப்பமும் மேலிட, மறுபடியும்போய் அதே மாதிரி ஒரு பார்சலுடன் வந்தாள். இன்றும் அதே போல இன்னொரு கனசதுர வடிவப் பொருள். சஞ்சனாவுக்கு கோபம் வந்தது, “எந்தப் பன்னாடை இதை அனுப்புறது?”… தோழிகளிடம் புலம்பிக் கொண்டிருந்தாள்.

மூன்றாவது நாள்…

“சஞ்சனா இன்னிக்கும் உனக்கு பார்சல் வந்திருக்கு… “ அதே நேரம், அதே பெங்காலி வகுப்பு..

“அந்த பார்சலை வாங்கிட்டு அப்படியே வீட்டுக்கு ஓடிரு…” பெங்காலி மிஸ் கோபத்தில் கத்த… சஞ்சனா நடுங்கிப் போனாள்..

“ஏ..துக்காராம் உனக்கு வேற நேரமே கிடையாதா? டெய்லி என் கிளாஸ்லயே வந்து அவளைக் கூப்புடுற?” மிஸ் கோபத்தில் பியூனை திட்ட...

“டெய்லி இந்த நேரத்துலதான் போஸ்ட்மேன் வர்றான் மிஸ்.. நான் என்ன பண்றது...” துக்காராம் நொந்துபோனவராக பதிலளித்தார்.

“இல்ல மிஸ் நான் போகல...” என்றாள் சஞ்சனா...

“சரி, சரி நானே வாங்கி வைக்கிறேன், ஸ்கூல் முடிஞ்சு வந்து வாங்கிக்க...” என்று சொல்லிவிட்டு, “எல்லாத்துக்கும் என் தலைதான் உருளுது...” என்று புலம்பிக்கொண்டே கிளம்பினார் துக்காராம்.

சாயங்காலம் போய் பார்த்தபோது அதே பார்சல், அதே கன சதுரம்... சஞ்சனாவுக்கு எரிச்சலாக இருந்தது. பஸ்ஸில் அதை வாங்கிப் பார்த்த கைலாஷ் “வாலண்டைன்ஸ் டே வருதுல்ல, யாரோ உனக்கு ப்ரப்போஸ் பண்ண டிரைப் பண்றாங்க போல, பாவம் உங்கிட்ட மாட்டிக்கிட்டு அவன் என்னா பாடு படப்போறானோ?” என்றான் கிண்டலாக

“யாருன்னு மட்டும் தெரியட்டும், அன்னிக்கு இருக்கு அவனுக்கு...” கோபத்தில் பல்லைக் கடித்தாள் சஞ்சனா.

அந்த மூன்று கன சதுரங்களையும் ஒன்றோடொன்று பொருத்த முடிந்தது. அந்த வெள்ளை நிற கனசதுரத்துக்குள் ஏதாவது எழுத்துக்கள் தெரிகிறதா என்று சூரிய வெளிச்சத்தில் வைத்துப் பார்த்தாள் ஒன்றுமே தெரியவில்லை. ஒருபக்கம் கோபம் இருந்தாலும், இன்னொரு பக்கம் இதைச் செய்வது யார் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வமும் அவளுக்கு அதிகரித்தது...

இப்படி தினமும் அவளுக்கு பார்சல் வர, விஷயம் பிரின்சிபல் வரை போய்விட்டது. பிரின்சிபல் சஞ்சனாவை அழைத்து விசாரிக்க, “அது யாருன்னே தெரியல மேம்...ஃப்ரம் அட்ரஸ் போடாம வருது” என்று சொல்லி சஞ்சனா அழுதாள். சஞ்சனா நல்ல பெண் என்று பிரின்சிபலுக்கு தெரிந்திருந்ததால். “சரி இனிமே அந்த பார்சல் வந்தா வாங்காத” என்றார். சரியென்று தலையாட்டிவிட்டு வந்துவிட்டாள் சஞ்சனா. நேராக துக்காராமிடம் போய், “அண்ணா, இனிமேல் எனக்கு அந்தப் பார்சல் வந்தா வாங்காதீங்க” என்று சொல்லிவிட்டு நிம்மதியாக அன்று வீட்டுக்குப் போனாள்.

ஆனால் அன்றிரவு அவளுக்கு தூக்கமே வரவில்லை. “ஒருவேளை தினமும் பார்சலை அனுப்புவது அவனாக இருந்தால்.... சேச்சே! அவன்தான் என் மூளை உருவாக்கிய மனப்பிரம்மை ஆயிற்றே! இல்லாத அவனிடமிருந்து எப்படி எனக்கு காதலர் தின ப்ரப்போசல் வரும்?”

“ஒருவேளை உண்மையிலேயே அவன் உலகில் இருந்து, தன்னை எனக்கு வெளிப்படுத்த இந்த வருட காதலர் தினத்தை தேர்ந்தெடுத்து இருந்தால்??? ஐயோ பார்சலை வாங்க வேண்டாம் என்று வேறு சொல்லிவிட்டோமே! ஒருவேளை அனுப்பியது அவனாக இருந்தால் அவனை எப்படி கண்டுபிடிப்பது?” சஞ்சனா அன்றைய இரவுத் தூக்கத்தை முற்றிலும் தொலைத்துவிட்டாள்.

மறுநாள் காலையில் பஸ்ஸில் அவள் அருகே உட்காந்த கைலாஷ் அவளிடம் நேற்று வந்திருந்த பார்சலை எடுத்து, “நீ வேணான்னு சொன்னாலும் அவன் யாருன்னு நான் கண்டுபிடிக்காம விடமாட்டேன்…அந்த பார்சல் வந்தா எங்கிட்ட கொடுக்கச்சொல்லி நான் துக்காராம்கிட்ட சொல்லிட்டேன். இனி நீ கவலைப்படாத, அத நான் வாங்கிட்டு வர்றேன்..” என்று சொல்ல சஞ்சனாவுக்கு உயிரே வந்தது போல இருந்தது. ஒவ்வொரு நாளும் கைலாஷிடமிருந்து அதை வாங்கி பொருத்திக்கொண்டே வந்தாள்.

1993, பிப்ரவரி 13…

இணைக்கப்பட்ட அந்த கன சதுரங்கள் கிட்டத்தட்ட இரண்டு அடி நீளம் இரண்டு அடி உயரத்தில் இருந்தது. நடுவில் கீழே இன்னும் ஒரே ஒரு கனசதுரம் மட்டும் இணைக்கப்பட வேண்டியிருந்தது. அந்த இடம் மட்டும் காலியாக இருந்தது. சஞ்சனா அந்த கனசதுரத்துக்காக ஆவலோடு காத்திருந்தாள்…

1993, பிப்ரவரி 14…வாலண்டைன்ஸ் டே…

அன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமையாக இருந்தாலும், முழு ஆண்டுத் தேர்வுகள் நெருங்கி வந்ததால் 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளுக்கு பள்ளி வழக்கம் போல செயல்பட்டது. மற்ற எந்த நாட்களையும்விட அன்று மாலை பஸ்ஸில் கைலாஷின் வருகைக்காக சஞ்சனா பதட்டத்தோடும், ஆர்வத்தோடும் காத்திருந்தாள். தொங்கிய முகத்தோடு வந்து பஸ்ஸில் ஏறிய கைலாஷ், அன்று அவளுக்கு எந்த பார்சலும் வரவில்லை என்று ஏமாற்றத்தோடு சொன்னான். சஞ்சனாவுக்கு ஏமாற்றமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. எதுவுமே பேசாமல் சஞ்சனா பஸ்ஸில் வந்தாள். அவளிடம் இருந்த ஏமாற்றத்தை கைலாஷ் கவனித்தான். அவளைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று வீடு வந்து சேரும்வரை அவனும் அவளிடம் எதுவும் பேசவில்லை.

வீட்டுக்கு வந்த சஞ்சனாவுக்கு எல்லாமே வெறுமையாகக் காட்சியளித்தது. தனது கனவுத் தோழன் தன்னை நெருங்கி வந்துவிட்டதாக அவள் கட்டின கற்பனைக் கோட்டைகள் இடிந்து தரைமட்டமானதை நினைத்து தனியாக அழுதாள். பின்னர் தன்னைத் தேற்றிக்கொண்டு அடுப்படிக்குப் போய் அம்மாவுக்கு உதவி செய்தாள், பாட்டியிடம் கொஞ்ச நேரம் அரட்டை அடித்தாள். இரவு உணவு முடித்துவிட்டு தூங்க ஆயத்தமானாள். அப்போது அம்மா சொன்னார்கள், “ஏ சஞ்சனா சொல்லவே மறந்துட்டேன். இன்னிக்கு உனக்கு ஒரு பார்சல் வந்துச்சு.. வாங்கி பீரோல வச்சிருக்கேன் பாரு” என்று சொல்ல சஞ்சனா பத்தாயிரம் வாட்ஸ் பல்பு போட்டதுபோல பிரகாசமானாள்..

புயல் வேகத்தில் ஓடிப்போய் பீரோவிலிருந்து எடுத்து பார்சலைப் பிரிக்க, அந்த 14-வது மிஸ்ஸிங் கனசதுரம் ஒரு பவர் கார்டோடு இணைக்கப்பட்டு வந்திருந்தது. அதை எடுத்து மற்ற கனசதுரங்களோடு பொருத்தி பவர் கார்ட் பிளக்கை சுவிட்ச் போர்டில் சொருகி ஸ்விட்சைப் போட…

“Would you share the rest of your life with me?” என்ற எழுத்துக்கள் ஒளிர்ந்தன. பேக்ரவுண்ட்டில் ஒரு பனிமலையின் பின்னனி ஓவியமாக வரையப்பட்டிருந்தது. அதைக் கூர்ந்து

பார்த்தாள்.. அது கைலாச மலை.. இதை அனுப்பியது யார் என்பது சஞ்சனாவுக்குப் புரிந்துவிட்டது.

ஏதோ சத்தம் கேட்டு அவள் திரும்பிப் பார்க்க, அம்மா கோபப் பார்வை வீசியபடி அங்கு நின்று கொண்டிருந்தார், “வாலண்டைன்ஸ் டே அன்னிக்கு ஃப்ரம் அட்ரஸ் இல்லாம உனக்கு ஒரு பார்சல் வந்திருக்குதே, அனுப்புனது யாரா இருக்கும்னு யோசிச்சேன்.. யார் செஞ்ச வேல இது?” சற்று கண்டிப்பான குரலில் கேட்க..

நடுங்கிய குரலில் சஞ்சனா சொன்னாள், “கைலாஷ்…”

அம்மா முகம் இருண்டது, “அவனை நல்ல பையன்னு நெனச்சேன், உங்கப்பா வரட்டும் இன்னிக்கு…” என்றபடியே மீண்டும் அடுப்படிக்குச் சென்றுவிட்டார். சஞ்சனா ஒரு இனம்புரியாத உணர்வில் சிக்கித் தவித்தாள். கைலாஷை அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும். அவளுக்கு மட்டுமல்ல, அந்த ஏரியாவின் மற்றும் அந்தப் பள்ளியின் சாக்லேட் பாய் அவன்தான், எனவே பல பெண்களுக்கு அவன்மீது ஒரு கிரஷ் இருந்தது. அப்படியொரு அழகன் அவன், அதுமட்டுமல்ல மிகவும் நல்லவனும்கூட. சஞ்சனாவோடு இத்தனை ஆண்டுகள் நெருங்கிப் பழகியும் ஒருமுறைகூட அவன் அவளிடம் கண்ணியம் தவறியதில்லை. சஞ்சனாவைப் பொருத்தவரை தன் கனவுகளில் அந்த நிழல் இளவரசனைச் சந்திக்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக கைலாஷுக்கு உடனே ஓகே சொல்லியிருப்பாள்.

அன்று இரவு சஞ்சனாவைப் பல்வேறு குழப்பங்களும், பயங்களும் ஆட்கொண்டன. இத்தனை வருடங்கள் ஒற்றுமையாக இருந்த இரண்டு குடும்பங்களும் கைலாஷ் செய்த இந்த வேலையால் சண்டை போட்டுக்கொள்ளப்போகின்றன. அப்பாவுக்குத் தெரிந்தால் என்னவாகும்? நாளை எப்படி கைலாஷை ஸ்கூல் பஸ்ஸில் எதிர்கொள்வது? அவனிடம் என்ன பதில் சொல்வது?...

அடுத்த இரண்டு நாட்கள் சஞ்சனா ஸ்கூலுக்கு லீவு போட்டுவிட்டாள். தன் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள். யாராவது தெருவில் சத்தமாகப் பேசினால்கூட “ஐய்யய்யோ சண்டை ஆரம்பிச்சிருச்சு போல…” என ஓடிப்போய் ஜன்னலில் எட்டிப்பார்த்தாள். ஆனால் அவள் நினைத்ததற்கு மாறாக இரு குடும்பத்து பெற்றோர்களும் வழக்கமான அன்போடுதான் பேசிக்கொண்டிருந்தார்கள், ஜோக்கடித்து சிரித்துக் கொண்டிருந்தார்கள். சஞ்சனாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

பிப்ரவரி 16 அன்று மாலை லண்டனிலிருந்து நிரஞ்சனா வீட்டுக்கு போன் செய்தாள். அப்போது பாட்டியும் சஞ்சனாவும் மட்டுமே வீட்டில் இருந்தனர். அம்மாவும், அப்பாவும் வெளியே சென்றிருந்தார்கள். போனை எடுத்தவுடன் நிரஞ்சனா நேரடியாகவே கேட்டாள். “ஏ சஞ்சனா, கைலாஷை பிடிச்சிருந்தா பிடிச்சிருக்குன்னு சொல்லு, இல்லைன்னா இல்லைன்னு சொல்லு, நீ என்ன சொல்லுவியோங்கிற பயத்துல அவனுக்கு காய்ச்சலே வந்திருச்சு. எனக்கு போன் பண்ணி, உன் பதிலைக் கேட்டுச் சொல்லச் சொல்லி உயிரை வாங்குறான்”

சஞ்சனா, “என்னது அவன் உனக்கு போன் பண்ணானா? அவன் என்ன காரியம் பண்ணான் பார்த்தியா நிரஞ்சு? நம்ம ரெண்டு குடும்பத்துக்கும் இடைல எப்படிப்பட்ட ரிலேஷன்ஷிப் இருந்துட்டு இருக்கு, parents-க்கு தெரிஞ்சா என்ன ஆகுறது?”

நிரஞ்சனா கேஷுவலாகச் சொன்னாள். “அதெல்லாம் அவங்க ஏற்கனவே டிஸ்கஸ் பண்ணி முடிச்சிட்டாங்கடி….”

சஞ்சனா அதிர்ச்சியுடன், “என்னது டிஸ்கஸ் பண்ணி முடிச்சிட்டாங்களா? எங்கிட்ட யாரும் எதுவுமே சொல்லலையே?”

நிரஞ்சனா, “நீயெல்லாம் ஒரு ஆளு, உங்கிட்ட எல்லாத்தையும் சொல்லுவாங்களா? உனக்கு அவனைப் பிடிச்சிருந்தா பிடிச்சிருக்குன்னு சொல்லு, இல்லைன்னா இல்லைன்னு சொல்லு. உன் பதிலை தெரிஞ்சுக்கிற அவன் துடிச்சிக்கிட்டு இருக்கான்”

“நாளைக்கு நானே அவன்கிட்ட பேசிக்கிறேன்…” என்று சொல்லிவிட்டு போனைக் கட் செய்தாள் சஞ்சனா…

இப்போது சஞ்சனாவுக்கும், கைலாஷுக்கும் இடையில் நிற்பது அந்த நிழல் இளவரசன்தான். அவன் ஒரு மாயபிம்பம்தான் என்பது சஞ்சனாவுக்கே தெரிந்திருந்தாலும், அவளைப் பொறுத்தவரை அவனுக்கு ஒரு முகம் உண்டு, உருவம் உண்டு, உணர்ச்சிகள் உண்டு. “அவனை வைத்த இடத்தில் கைலாஷை எப்படி வைத்துப் பார்ப்பது? கைலாஷுக்கு ஓகே சொல்லிவிட்டு மறுபடி கனவில் எப்படி அவனைச் சந்திப்பது? என் வாழ்வில் மருந்தாகவும், வசந்தமாகவும் வந்தவன் அவன்தான். அவன் ஒரு மாயபிம்பமாகவே இருந்துவிட்டுப் போகட்டும். நான் என் கனவில் மட்டும் அவனோடு வாழ்ந்து கொள்கிறேன். என் மனமும், என் உயிரும் அவனுக்கு மட்டும்தான்… இந்த உலகம் என்னைப் பைத்தியம் என்று சொன்னாலும் எனக்குக் கவலையில்லை” மனதுக்குள் உறுதியான முடிவெடுத்துக்கொண்டாள்…

பாட்டி ஏதோ புத்தகம் படித்துக்கொண்டிருந்தார், சஞ்சனா நேராகப்போய் பாட்டியின் மடியில் படுத்து, பாட்டியின் சேலை முந்தானையை எடுத்து தன் கண்களில் வடியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அவள் அழுவதை அறிந்த பாட்டி புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, “சஞ்சு குட்டி, ஏம்மா அழுகுற? கைலாஷ் பையனுக்கு என்னா பதில் சொல்றதுன்னு தெரியலையா?..” என்று கேட்டவுடன் சஞ்சனா எழுந்து உட்காந்தாள்..

“பாட்டி உனக்கும் தெரிஞ்சு போச்சா?..”

பாட்டி சிரித்தார், “எனக்கு முந்தாநாளே தெரியும். இப்பத்தான் செலின்கிட்ட பேசிட்டு இருந்தேன், என் மருமகளை எப்ப என் வீட்டுக்கு அனுப்பப்போறீங்கன்னு கேட்டா…”

“எல்லாரும் சேர்ந்து முடிவே பண்ணிட்டீங்களா பாட்டி?”

பாட்டி அவள் தலையை அன்பாய் தடவியபடி, “உன்னைக் கேட்காம எப்படி முடிவு பண்ணுவோம்.. இது ரெண்டு குடும்பமும் ஏற்கனவே பேசி வச்சிருந்ததுதான். ஸ்கூல் படிக்கிற வயசுல நீங்க இதெல்லாம் யோசிக்கக்கூடாது. ஆனா எங்களுக்கே தெரியாம அந்த கைலாஷ் பய அவசரப்பட்டுட்டான்… இப்ப சொல்லு உனக்கு அவனைப் பிடிச்சிருக்கா இல்லையா?”

சஞ்சனா கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, “எனக்குப் பிடிச்சிருக்கா, இல்லையாங்கிறது வேறு விஷயம் பாட்டி.. உனக்கே தெரியும்ல நான் என் கனவுல பார்க்குற அந்த பையனைத்தான் லவ் பண்றேன்…”

பாட்டி சத்தம்போட்டு சிரித்தார், “அடி பைத்தியகாரி.. இதுதானா உன் பிரச்சனை…”

எதிரில் சுவற்றில் மாட்டியிருந்த சாமி போட்டோவைக் காட்டி, “அது யாரு?” என்று பாட்டி கேட்க,

சஞ்சனா, “சிவபெருமான்”

பாட்டி, “நேர்ல பார்த்தா சிவன் இப்படித்தான் இருப்பாருன்னு உனக்குத் தெரியுமா?”

சஞ்சனா சற்று யோசித்தாள்..”இல்லயே பாட்டி, நான் அவரு முகத்தை வேற வேற போட்டோக்கள்ல வேற வேற மாதிரி பார்த்திருக்கேனே, அவர் நேர்ல எப்படி இருப்பாருன்னு யாருக்குத் தெரியும்? படத்தை வரைஞ்ச அந்த ஆர்ட்டிஸ்ட் மனசுல சிவன் எப்படி இருப்பாருன்னு தோணுதோ அப்படித்தான் வரைஞ்சிருப்பாரு…"

பாட்டி, “அதே மாதிரிதான், உனக்குன்னு ஒருத்தனை கடவுள் படைச்சு வச்சிருக்காரு. அவன் இப்படித்தான் இருப்பான்னு உன் மனசுல உனக்கு தோணுன மாதிரி நீ கற்பனை பண்ணிக்கிட்டே, ஆனா அவன் அதே மாதிரிதான் இருக்கணும்னு அவசியம் இல்லையே! ஆனாலும் எங்கோ பிறந்த அவன் நீ இருக்கிற தெருவுக்கே உன்னைத் தேடி குடும்பத்தோடு குடி வந்தானா? நீ படிக்கிற ஸ்கூலுக்கே அவனும் வந்து சேர்ந்தானா? அவனே உன்னை விரும்பி உன் பின்னால வந்தானா? உனக்கும் அவனைப் பிடிச்சிருக்கா? அப்ப அவன்தான் அந்த இளவரசன்… நிஜ வாழ்க்கையில இப்படிதான் நடக்கும்..

சஞ்சனாவின் முகம் பிரகாசமனது, “என்ன பாட்டி சொல்ற, அப்ப நான் கனவுல பார்க்குற பையன் கைலாஷ்தானா?”

பாட்டி, “சாட்சாத் அவனேதான்…இது சில வருஷங்களுக்கு முன்னால நீயும் அவனும் உட்காந்து இளவசன் கதை கேட்கும்போதே என் மனசுல பட்டுருச்சு. பாட்டி சொல்றத நம்பு, கடவுள் ப்ராப்தம் இல்லாமையா உங்க ரெண்டுபேரையும் வச்சு நான் சொன்ன கதையை நீங்க ரெண்டுபேருமே சேர்ந்து கேட்குற மாதிரி அமைஞ்சிருக்கும்? எல்லாம் அவன் செயல்தான்…”

சஞ்சனா மகிழ்ச்சியில் சிரித்தாள்… அவள் மனம் இனம்புரியாத சந்தோஷத்தால் நிறைந்திருந்தது, “ஆட ஆமா பாட்டி…” என்று சொல்லி பாட்டியை கட்டிப்பிடித்து, முத்தமிட்டு மகிழ்ச்சியில் சிரித்துக்கொண்டே இருந்தாள். அவளால் சிரிப்பை நிறுத்த முடியவில்லை…

****

1993, பிப்ரவரி 17…

காலையில் சஞ்சனா பள்ளிப் பேருந்தில் அமர்ந்திருந்தாள். கைலாஷ் நேராக வந்து வழக்கம் போல சஞ்சனா அமர்ந்திருக்கும் இருக்கையில் அவள் பக்கத்தில் தயக்கத்துடன் வந்து அமர,

அவள் சற்றுத் தள்ளி உட்காருவது போல பாவனை செய்து முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டாள்.

கைலாஷ் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான்…

“உனக்கு என்ன ரொம்ப கிரியேட்டிவ்வா ப்ரப்போஸ் பண்ணதா நெனப்பா? இந்த பதினாலு நாளும் நான் எவ்வளோ மெண்டல் ப்ரஷர்க்குள்ள போனேன் தெரியுமா? பண்றதெல்லாம் பண்ணிட்டு உனக்கு எதுவுமே தெரியாத மாதிரி நீயும் சேர்ந்து ஆக்ட் பண்ணேல?...” கோபமாக வார்த்தைகள் வந்து விழுந்தன சஞ்சனாவிடமிருந்து, கைலாஷ்க்கு மனம் திக் திக் என்று இருந்தது.

“சாரி சஞ்சனா இப்படியெல்லாம் பண்ணா உனக்குப் பிடிக்கும்னு நெனச்சு பண்ணிட்டேன்”

“எது, வீட்டுக்குத் தெரிஞ்சு, பிரின்சுபாலுக்குத் தெரிஞ்சு, ஸ்கூலுக்கே தெரிஞ்சு, பெரிய பிரச்சனையை கிளப்பிவிட்டு ப்ரப்போஸ் பண்றதா? லூசுப் பயலே...”

“அதான் சாரி கேட்டுட்டேன்ல, உன் விருப்பத்தை இன்னும் சொல்லவே இல்ல”

“அதை வேற சொல்லணுமா? என்னை 14 நாள் பதற வச்சேல, நீயும் ஒரு 14 நாள் வெய்ட் பண்ணு..” கோபமாக சொன்னாள் சஞ்சனா..

“உனக்காக 14 நாள் என்ன, 14 வருஷம்கூட வெய்ட் பண்ணுவேன் சஞ்சனா”

“சரி அப்போ 14 வருஷம் வெய்ட் பண்ணு, நான் சாவகாசமா யோசிச்சு சொல்றேன்…”. சஞ்சனா சொல்ல அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தான் கைலாஷ்

பஸ்ஸின் ஜன்னலோரத்தில் உட்காந்திருந்த சஞ்சனா முகத்தை ஜன்னல் பக்கம் திருப்பி தனக்குள் சிரித்துக்கொண்டாள், டார்ஜிலிங்கின் குளிர் காற்று அவள் முகத்தில் தொங்கிக் கொண்டிருந்த கூந்தல் கற்றைகளை கலைத்து விளையாடியது. அந்த குளிர்காற்று மழைச்சாரலோடு சேர்ந்து அவள் மனதுக்குள்ளும் வீச ஆரம்பித்தது…

அத்தியாயம் 10 - புதிய உறவுகள்…

"Sometimes the universe will send someone into your life just so that they can help you with the next part of your journey." - Mimi Novic

1994, மே 13…

கைலாஷ்-சஞ்சனாவின் காதல் மேலும் பலப்பட்டு இருந்தது. மூன்று மாதங்களுக்கு முன் இருவரும் தங்களது காதலின் முதல் வயதைக் கொண்டாடினார்கள். இந்த ஒரு ஆண்டுக்குள் இருவருக்கும் இடையில் ஏராளமான அன்பின் வார்த்தைகள், முத்தங்கள், பரிசுகள், உறுதிமொழிகள் பரிமாறப்பட்டிருந்தன.

கைலாஷ் டார்ஜிலிங்கில் உள்ள செயிண்ட் ஆண்டனீஸ் கல்லூரியில் பிபிஏ முதலாம் ஆண்டு முடித்திருந்தான். சஞ்சனா இப்போது 12-ஆம் வகுப்பு முடித்திருந்தாள். கடந்த ஆறு மாதங்களாக அவளுக்கு மனப்பிரச்சனை உக்கிரமாகி இருந்தது. முன் எப்போதையும்விட அவள் மிகுந்த போராட்டத்துக்கு உள்ளாகிக் கொண்டிருந்தாள். அது 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு குறித்த பயமாக இருக்கலாம் என்று பெற்றோர்கள் நினைத்தார்கள். ஆனால் ஜோதிடரோ அவளுடைய ஜாதகத்தில் அஷ்டமச்சனி நடந்து கொண்டிருப்பதாகக் கூறினார்.

12-ஆம் வகுப்பு முடித்தவுடன் அவள் படிப்பை இரண்டு ஆண்டுகள் நிறுத்தி வையுங்கள். அவளுக்கு முழு ஓய்வு தேவை, இந்த சூழ்நிலையில் அவளைக் கல்லூரியில் சேர்த்தால் மன அழுத்தம் அதிகமாகி, நிலைமை மேலும் மோசமடையலாம் என்று ஜோதிடர் கூறியது அவளது பெற்றோரையும், கைலாஷின் பெற்றோரையும் துக்கத்தில் ஆழ்த்தியிருந்தது. எவ்வளவோ போராடிப் பார்த்து சஞ்சனாவும்கூட ஒரு கட்டத்தில் தனக்கு ஒரு பிரேக் தேவை என்று கூறியதால் தாகூர் சரி நீ வீட்டிலேயே ஓய்வெடு. அஷ்டமச்சனி முடிந்தபின் 1996-இல் மீண்டும் படிப்பைத் தொடரலாம் என்று கூறிவிட்டார்.

ஜூன் மாதத்தில் பிளஸ் டூ தேர்வு முடிவுகள் வெளிவந்தது, சஞ்சனா மிக சுமாரான மதிப்பெண்கள் பெற்று பாஸ் பண்ணியிருந்தாள். குடும்பத்தினர் அனைவரும் அவள் பாஸ் செய்ததே பெரிது என கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். இந்த சூழ்நிலையிலும் அவள் கடினமாக உழைத்து வெற்றி பெற்றிருக்கிறாள் என அவளை வெகுவாகப் பாராட்டினர். ஆனால் அவள் எடுத்த குறைந்த மதிப்பெண்கள் மற்றும் இரண்டு ஆண்டுகள் இடைவெளி, இதற்குப் பின் எந்தக் கல்லூரியில் அவளுக்கு சீட் கிடைக்கும் என்ற கவலை எல்லோருக்கும் இருந்தது.

ஹரிகோவிந்த் ராவ் சஞ்சனாவிடம், “மருமகளே, நீ மேற்கொண்டு என்ன படிக்க ஆசைப்படுற?” என்று கேட்க, சஞ்சனா தயங்கித் தயங்கி, “கம்பியூட்டர் சயன்ஸ் மாமா” என்றாள். “அவ்வளவுதானே கவலைப்படாதே, உனக்கு நல்ல காலேஜ்ல சீட் வாங்கித்தர்றது என் பொறுப்பு, எங்கேயுமே சீட் கிடைக்கலைன்னா இதே டார்ஜிலிங்கில் நானே ஒரு இஞ்சினியரிங் காலேஜ் தொடங்கி அதுல உன்னைப் படிக்க வைக்கிறேன்.” என்றார். சஞ்சனாவுக்கு அது ஆறுதலாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

கைலாஷை காதலிக்கத் தொடங்கிய பிறகும், அஷ்டமச்சனி காலங்களிலும்கூட சஞ்சனாவுக்கு அதிகரித்த மனப்போராட்டங்களில் அவளது நிழல் இளவரசனே அவளுக்கு மருந்தாக வந்தான். நிழலாக இருக்கும் அவனுடைய நிஜவடிவம்தான் கைலாஷ் என்று சஞ்சனா உறுதியாக நம்பியதால் அவளுக்கு அந்த விஷயத்தில் எந்த மனக்குழப்பங்களும் ஏற்படவில்லை. தன்னைத் தெளிவுபடுத்தி ஒரு வழி காட்டியதற்காக அவள் அடிக்கடி பாட்டிக்கு நன்றி சொல்வாள். ஒவ்வொரு முறை கனவில் அவனைக் காணும்போதும் மறுநாள் அவள் அதை கைலாஷிடம் சொல்லி சந்தோஷப்படுவாள். “நேத்து நீ என்னை கனவுல ஒரு அழகான படகுல கூட்டிட்டுப் போனே, அந்த நதியில் கலர் கலரான மீன்கள் இருந்துச்சு, அந்த மீன்களோட நாம ரெண்டு பேரும் விளையாடினோம்…” இப்படி ஒவ்வொரு முறையும் அவள் தன் கனவுகளை அணு அணுவாக வர்ணிக்க அவனும் அதில் மூழ்கிப்போவான்.

இந்த சூழலில் நிரஞ்சனா லண்டனில் எம்.பி.பி.எஸ் முடித்துவிட்டு, மாஸ்டர் ஆஃப் சர்ஜரி இரண்டாம் ஆண்டு படித்து முடித்திருந்தாள். இன்னும் ஒரு மாதத்தில் அவள் லீவுக்கு இந்தியா வருவதாக இருந்தது. அக்காவைப் பார்க்கப்போகும் மகிழ்ச்சியில் சஞ்சனா திளைத்திருந்தாள். ஆனால் கதையில் அக்கா வைக்கப்போகும் ட்விஸ்ட்டை அவள் அறிந்திருக்கவில்லை.

1994, ஆகஸ்ட் 20…

தான் ஊருக்கு வருவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் இருக்கையில் நிரஞ்சனா அம்மாவுக்கு போன் பண்ணி ஒரு பெரிய குண்டைத் தூக்கி தலையில் போட்டாள். தான் தன்னோடு படிக்கும் சுரேஷ் என்பவனை கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காதலிப்பதாகவும், அவன் தமிழ்நாட்டில் உள்ள மதுரையைச் சேர்ந்தவன் என்றும், அப்பாவிடம் தன் திருமணத்துக்கு அனுமதி பெற அவனையும் தன்னுடன் டார்ஜிலிங்குக்கு அழைத்து வரப்போவதாகவும் சொன்னாள்.

தாகூருக்கோ, மகேஷ்வரிக்கோ இதில் துளியும் விருப்பமில்லை. அதே நேரத்தில் அவர்கள் தங்கள் மகளுக்கு எதிர்ப்பையும் காட்டவில்லை. சஞ்சனாவை கைலாஷ் காதலித்தபோது காட்டிய பச்சைக்கொடியை நிரஞ்சனா விஷயத்தில் தாகூர், மகேஷ்வரி இருவருமே உடனடியாகக் காட்டவில்லை. காரணம் அவர்களுக்கு சிறு வயதிலிருந்து கைலாஷைத் தெரியும், அவன் குடும்பத்தையும் தெரியும். ராவின் குடும்பத்தைவிட தன் மகள் வாழ்க்கைப்பட வேறு சிறந்த இடம் இருக்க முடியாது என அவர்கள் நம்பினர். ஆனால் நிரஞ்சனாவின் விஷயம் அப்படியில்லை. அந்த சுரேஷ், யாரோ எப்படிப்பட்டவனோ தெரியாது…

எனவே தாகூர் உடனடியாக ஒரு யோசனை செய்தார். நிரஞ்சனா சுரேஷை அழைத்து வருவதற்கு முன்பாகவே தானும் மகேஷ்வரியும் மதுரையில் உள்ள சுரேஷின் வீட்டுக்குச் சென்று, அவன் குடும்பத்தாரை சந்தித்துவிட்டு வந்து, அதன் பிறகு நிரஞ்சனா சுரேஷை அழைத்து வரலாமா வேண்டாமா என்பதை அவளிடம் சொல்லிக்கொள்ளலாம் என்று நினைத்தார்கள்.

சுரேஷின் அப்பா அர்ஜூனன் மதுரையில் ஒரு தனியார் கல்லூரியின் பிரின்சிபலாக இருந்தார். அவரது மனைவி சுகந்தி. சுரேஷுக்கு சதீஷ் என்ற ஒரு தம்பி இருந்தான். அவன் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முதலாண்டு படித்துக்கொண்டு இருந்தான்.

தாகூர் சுரேஷோடு போனில் பேசினார், அவனோடு முதன் முதலில் பேசியபோதே அவருக்கு அவன் மீது நல்ல அபிப்ராயம் வந்துவிட்டிருந்தது. பிறகு சுரேஷின் அப்பா அர்ஜுனனோடு பேசினார். மறுநாளே அவரும் மகேஷ்வரியும் விமானத்தில் மதுரைக்குச் சென்று சுரேஷ் குடும்பத்தினரைச் சந்தித்துவிட்டு திருப்தியோடும் மகிழ்ச்சியோடும் வீடு திரும்பினர்.

சஞ்சனாவின் வீடு கல்யாணக் களை கட்டத் தொடங்கியது...

****

கைலாஷும் சஞ்சனாவும் நிரஞ்சனாவையும், சுரேஷையும் அழைத்துச் செல்ல பக்டோக்ரா(Bagdogra) விமான நிலையத்தில் காத்திருந்தனர். தூரத்தில் வந்து கொண்டிருந்த நிரஞ்சனாவைப் பார்த்து சஞ்சனா மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். பயணக் களைப்பில் இருந்த நிரஞ்சனாவுக்கு தன் தங்கையைப் பார்த்ததும் களைப்பெல்லாம் பறந்து போனது...ஓடி வந்தாள்... இருவரும் ஆரத்தழுவிக் கொண்டனர்.

நிரஞ்சனா சுரேஷிடம் தன் தங்கையையும், தங்கையின் வருங்காலக் கணவனையும் அறிமுகப்படுத்தினாள். கைலாஷ் தன்னுடைய வெள்ளை நிற காண்டசா காரை எடுத்து வந்திருந்தான். அவன் காரை ஓட்ட, முன்சீட்டில் சுரேஷும், பின்சீட்டில் நிரஞ்சனாவும் சஞ்சனாவும் அமர்ந்துகொண்டனர்.

பக்டோக்ராவிலிருந்து டார்ஜிலிங் செல்லும் பயணம் மிக மிக இனிமையாக இருந்தது. கண்ணைக் கவரும் இயற்கை அழகு, ஆங்காங்கே காஃபி, லோக்கல் தின்பண்டங்கள், ஃபோட்டோ ஷூட் என எஞ்சய் செய்தனர். கைலாஷ் ஒரு ஃபோட்டோகிராஃபி பைத்தியம். அவன் எங்கே வெளியே சென்றாலும் தனது Canon EOS 5 கேமராவை கையோடு எடுத்துச் செல்லுவது அவனது வழக்கம்.

ஆங்காங்கே கண்ணில் தென்படும் அழகான இடங்களிலெல்லாம் காரை நிறுத்தி நான்குபேரும் ஃபோட்டோக்களை விதவிதமாக சுட்டுத் தள்ளினர். சுரேஷும் கைலாஷும் பல ஆண்டுகள் பழகிய நண்பர்கள் போல அந்நியோனியமாகப் பேசிக்கொண்டிருந்ததை பின்சீட்டிலிருந்து சஞ்சனாவும் நிரஞ்சனாவும் ரசித்துக் கொண்டிருந்தனர். அவ்வப்போது சுரேஷுக்கும், நிரஞ்சனாவுக்கும் செல்லச் சண்டைகள் வரும். அதைக் கேட்டு கைலாஷும் சஞ்சனாவும் சிரித்துக் கொண்டிருந்தனர்.

கைலாஷுக்கும் சஞ்சனாவுக்குமான உறவு அப்படியில்லை. அவர்கள் உறவில் சஞ்சனாவின் கைதான் ஓங்கியிருந்தது. அவள் என்ன சொன்னாலும் கைலாஷ் “ஓகே மேடம்” என்று தலையாட்டிவிடுவான். சஞ்சனாவுக்கு மனரீதியான பிரச்சனை இருந்ததால் அவள் மனதை எப்போதும் காயப்படுத்தாதே என்று அவனது பெற்றோர்கள் அவனுக்குச் சொல்லியிருந்தனர். ஆனால் சுரேஷ் அப்படியில்லை, நிரஞ்சனாவை அவன் அவ்வப்போது வாருவதும், அதற்கு அவள் கவுண்ட்டர் கொடுப்பதுமாக அதில் ஒரு அழகு இருந்தது. எக்கச்சக்கமான காதலும் இருந்தது.

சுரேஷ் நிரஞ்சனாவின் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு பின்னர் மதுரை செல்லப்போவதாக திட்டமிட்டிருந்தான். மற்ற மூவரும் அவனைக் கட்டாயப்படுத்தி ஒரு வாரம் டார்ஜிலிங்கிலேயே இருக்க சம்மதிக்க வைத்துவிட்டனர். அதற்குள் கைலாஷ் காரை ஓட்டியபடியே அடுத்த ஒரு வார

ஊர் சுற்றலுக்கான பிளானை தயாரித்துவிட்டான். இப்படியாக பக்டோக்ராவிலிருந்து வெறும் இரண்டரை மணி நேரத்தில் வந்து சேர வேண்டிய அவர்கள் வீடு வந்து சேர நாலு மணி நேரம் ஆனது.

****

1994, டிசம்பர் 24…

சுரேஷ் - நிரஞ்சனாவின் திருமணத்தை நல்ல சுபயோக சுபதினமான டிசம்பர் 27-ஆம் தேதி மதுரை ராஜா முத்தையா ஹாலில் நடத்துவதாக பெரியவர்களால் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக டிசம்பர் 24-ஆம் தேதியே தாகூர் மற்றும் ராவ் குடும்பம் ஒன்றாக மதுரை வந்து சேர்ந்திருந்தது. அது கிறிஸ்துமஸ் காலமாதலால் திருச்சபைப் பணிகளை விட்டு நீண்டதூர பயணம் வர இயலாத ஃபாதர் லாரன்ஸ் நிரஞ்சனாவை சர்ச்சுக்கு அழைத்து அவளை ஆசீர்வதித்து அவளது திருமணத்துக்கு தன் சார்பில் ஒரு பரிசைக் கொடுத்திருந்தார். டிசம்பர் 25-ஆம் தேதி அதிகாலை அந்த சிற்றாலயத்தில் நடந்த கிறிஸ்துமஸ் ஆராதனையில் மதுரையில் நடக்கவிருக்கும் சுரேஷ்-நிரஞ்சனா திருமணத்துக்காக சிறப்பு பிரார்த்தனையும் ஏறெடுக்கப்பட்டது.

சஞ்சனா தென்னிந்தியா வருவது இதுவே முதல் முறை. விமானத்தில் செல்லலாம் என்று தாகூர் திட்டமிட்டிருக்க கைலாஷும் சஞ்சனாவும் ரெயிலில்தான் செல்ல வேண்டும் என்று அடம் பிடித்ததால் தாகூர் தனக்கும் சேர்த்து, மகேஷ்வரி, மணப்பெண் நிரஞ்சனா, சஞ்சனா, பாட்டி, ராவ், செலின் மற்றும் கைலாஷ் ஆகிய எட்டுப் பேருக்கும் மதுரைக்கு முதல் வகுப்பு இரயில் டிக்கெட் புக் செய்தார்.

ஜாலியாக பாட்டு, கூத்து, கும்மாளம், சேட்டைகள் என பயணத்தை அனுபவித்து டிசம்பர் 24 அன்று காலை 7:30 மணிக்கு மதுரை ஜங்ஷனில் வந்து இறங்கினர்.

இளம் வயசுப் பொண்ண
வசியம் பண்ணும் வளவிக்காரன்
நல்ல மனசத் தொட்டு
மயங்க வைக்கும் மதுரைக் காரன்…

மதுரை இரயில் நிலையத்தில் மணப்பெண் வீட்டாரை ஏற்றிச்செல்ல காத்திருந்த ஏசி வேனில் பாண்டி நாட்டுத் தங்கம் பாடல் சத்தமாக ஒலித்துக் கொண்டிருந்தது. சுரேஷும் அவன் தம்பி சதீஷும் மணப்பெண் வீட்டாரை அழைத்துச் செல்ல அதில் வந்திருந்தனர். மதுரை இரயில் நிலையத்தில் பெயர் பலகைகளில் இருந்த “மதுரை ஜங்க்ஷன்” என்ற இந்தி எழுத்து தார்பூசி அழிக்கப்பட்டிருந்ததைப் பார்த்த சஞ்சனா அதை நிரஞ்சனாவிடம் காட்ட, “இங்க அப்படித்தானாம், சுரேஷ் சொல்லிருக்கான்”, என்றாள். அனைவரும் வேனில் ஏற, டிரைவர் பாடலின் வால்யூமை சற்று குறைத்தான், வேன் மதுரை ஜங்க்ஷனில் இருந்து சுரேஷின் வீடு இருந்த ஆரப்பாளையம் நோக்கி பயணிக்க ஆரம்பித்தது.

சஞ்சனாவுக்கு எல்லாம் புதிதாக இருந்தது. டிசம்பர் மாதத்திலும் காலை 7:30 மணிக்கே வறுத்தெடுக்கும் வெயில், எங்குமே பாலிவுட் பட போஸ்டர்கள் இல்லை, இந்திப் பாடல்கள்

இல்லை, கடைகளின் போர்டுகளில் பாலிவுட் நட்சத்திரங்கள் இல்லை, வட இந்திய உடைகள் இல்லை, வேட்டி, சேலை, லுங்கி… வித்தியாசமான மக்கள், வித்தியாசமான வாழ்க்கை முறைகள், முற்றிலும் வேறுபட்ட சூழல்…

சஞ்சனா சுரேஷிடம் கேட்டாள், "ஏன் மாமா இந்த ஊரு இந்தியாவுலதானே இருக்கு?" சுரேஷ் சிரித்தான், "நீ என்ன விசா எடுத்துட்டா இங்க வந்தே? உங்க ஊருக்கு வந்தப்ப எனக்கும் அப்படித்தான் தோணுச்சு.. இதுதான் நம்ம நாட்டோட ஸ்பெஷாலிட்டி..." என்றான்.

அரசரடி வந்ததும் சுரேஷ் கௌரி ஹோட்டலில் நிறுத்தி அனைவருக்கும் காஃபி வாங்கிக் கொடுத்தான். "அங்கிள், நம்ம வீடு பக்கத்துலதான் இருக்கு, ஆனா இந்த ஹோட்டல்ல காஃபி சாப்பிட்டுப் பாருங்க.." என்றான். சஞ்சனா உட்பட அனைவரும் வேனைவிட்டு இறங்கினர். பக்கத்தில் சோலைமலை தியேட்டரில் 'பெரியமருது' படத்துக்காக கேப்டன் விஜயகாந்த்துக்கு மிகப் பிரம்மாண்டமான கட்அவுட் வைக்கப்பட்டு விதவிதமான மாலைகள் போடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்த கட்டவுட்டில் கேப்டன் வேட்டி சட்டையில் முறுக்கு மீசையோடும், கையில் அரிவாளோடும், சிவந்த கண்களுடன் ஆக்ரோஷமாக நின்று கொண்டிருந்தார். சஞ்சனா அந்த பிரம்மாண்ட கட்டவுட்டை ஆச்சரியமாக அண்ணாந்து பார்த்தபடி சதீஷிடம், "வாட் இஸ் த நேம் ஆஃப் திஸ் ஹீரோ?" என்று விசாரித்துக் கொண்டிருந்தாள்.

****

சுரேஷ் - நிரஞ்சனா திருமணம் இனிதே நிறைவுற்றிருந்தது. அர்ஜூனன் மதுரையில் செல்வாக்கு மிக்க நபராக இருந்தபடியால் திருமணத்துக்காக மதுரையையே ஒரு கலக்கு கலக்கி இருந்தார்கள். நகரில் எங்கு பார்த்தாலும் சுரேஷ்-நிரஞ்சனா வாழ்த்துப் பதாகைகள் நிறைந்திருந்தன. திருமணத்துக்கு பல வி.ஐ.பிக்கள் வந்திருந்தனர். தாகூருக்கும், மகேஷ்வரிக்கும் மிகவும் சந்தோஷமாக இருந்தது.

உண்மையில் ராவ் குடும்பம் அர்ஜூனன் குடும்பத்தைவிட பெரும் பணக்காரர்கள். சுரேஷ் - நிரஞ்சனா கல்யாணத்தைப் பார்த்து பிரம்மித்த கைலாஷ் தங்கள் கல்யாணத்தை இதைவிட பிரம்மாண்டமாக நடத்த வேண்டும் என்று சஞ்சனாவிடம் கூறினான். அவளுக்கு அது பிடிக்கவில்லை, "இவ்வளவு ஆரம்பரம் நமக்குத் தேவையே இல்லை. சிம்பிளா கல்யாணத்தை நடத்துனா போதும். கல்யாணத்துக்கு அப்புறம் நாம் எப்படி வாழப்போறோம்கிறதுதான் முக்கியம். எப்படி கல்யாணம் பண்றோங்கிறது இல்லை…" என்றாள். கைலாஷ் வழக்கம் போல "ஓகே மேடம்" என்று அமைதியாகிவிட்டான்.

சஞ்சனாவும் கைலாஷும் சேர்ந்து மதுரையைச் சுற்றினார்கள். சுசீயம், வடை, புரோட்டா, ஜிகர்தண்டா, பருத்திப்பால் என புதிது புதிதான உணவுகளை முயற்சித்துப் பார்த்தார்கள். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலும், திருமலை நாயக்கர் மகாலிலும், ராஜாஜி பார்க்கிலும் மணிக்கணக்காக நேரம் செலவிட்டார்கள். இருவருக்கும் மதுரை ஒரு புதுவிதமான vibe-ஐத் தந்தது. மதுரைக்கு வந்த இனிய நினைவுகளை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள கைலாஷ் தனது கேமராவில் ஏகப்பட்ட புகைப்படங்களைக் கிளிக்கி இருந்தான்.

திருமண கொண்டாட்டங்கள் முடிந்து அனைவரும் ஊருக்குத் திரும்ப வேண்டிய நாள் வந்தது. டிசம்பர் 30 அன்று அனைவரும் மதுரை ஏர்போர்ட்டில் பக்டோக்ரா செல்லும் விமானத்தில் உட்காந்திருந்தனர். மதுரைக்கு வரும்போது ரெயிலில் நிரஞ்சனா உடன் இருந்தாள், ஒரே கூத்தும் கும்மாளமுமாக இருந்தது. திரும்பும்போது அவள் இல்லை என்பது குடும்பத்தினருக்கு கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. புதுமணத் தம்பதிகளான சுரேஷும் நிரஞ்சனாவும் மேலும் ஒரு வாரம் மட்டும் மதுரையில் இருந்துவிட்டு மறுபடியும் லண்டனுக்குச் சென்று எம்.எஸ் மூன்றாம் ஆண்டு படிப்பை தொடர இருந்தார்கள்.

கைலாஷும், சஞ்சனாவும் விமானத்தில் அருகருகே உட்காந்து இருந்தனர். சஞ்சனா கைலாஷின் தோளில் சாய்ந்து கண் அயர்ந்திருந்தாள். கடந்த ஒரு வாரமாக மதுரை தந்த இனிய நினைவுகளை அவர்கள் இருவரது மனங்களும் அசைபோட்டுக் கொண்டிருந்தன.

அத்தியாயம் 11 - நீண்ட பிரிவை நோக்கி…

"Fate leads the willing and drags along the reluctant." — Seneca

1996, மார்ச்…

கைலாஷும் சஞ்சனாவும் காதலிக்கத் தொடங்கி மூன்று ஆண்டுகள் ஆகியிருந்தது. சஞ்சனா தன் படிப்பை தற்காலிகமாக நிறுத்தி இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தது. கைலாஷும் தனது பி.பி.ஏ படிப்பை முடித்திருந்தான். ஆஸ்திரேலியாவில் இருக்கும் ஒரு புகழ்பெற்ற கல்லூரியில் எம்.பி.ஏவுக்கு விண்ணப்பித்திருந்தான். சர்பிரைஸாக அங்கு அவனுக்கு சீட் கிடைத்துவிட்டது. சஞ்சனா கைலாஷ் இருவருக்குமே இது மிகப்பெரிய மகிழ்ச்சிதான் என்றாலும் அடுத்த இரண்டு ஆண்டுகள் நீண்ட பிரிவை எண்ணி இருவருமே கலங்கினர்.

சஞ்சனாவின் ஜாதகத்தில் அஷ்டமச்சனி முடிந்திருந்ததால் அவளும் தனது படிப்பைத் தொடர திட்டமிட்டிருந்தாள். பல இடங்களில் முயற்சித்தும் எங்குமே அவளுக்கு அவள் விரும்பிய பி.எஸ்.சி கம்பியூட்டர் சயின்ஸ் சீட் கிடைக்கவில்லை. டார்ஜிலிங்கில் சில கல்லூரிகளில் லட்சக் கணக்கில் டொனேஷன் கேட்டனர். அவர்கள் எத்தனை லட்சம் கேட்டாலும் கொடுத்து அவளை அந்தக் கல்லூரியில் சேர்க்க அவளது அப்பாவும், வருங்கால மாமனாரும் தயாராகத்தான் இருந்தனர்.

ஆனால் சஞ்சனா யாருக்கும் கஷ்டத்தைக் கொடுக்க விரும்பாதவள். அவளுடைய இயல்பு அது. அந்த நேரத்தில் சுரேஷ் ஆபத்பாந்தவன் போல உதவிக்கு வந்தான். எங்குமே சீட் கிடைக்காத பட்சத்தில் மதுரையில் தனது அப்பா பிரின்சிபலாகப் பணியாற்றும் “Tamilnadu College Of Arts And Science For Women” கல்லூரியில் அவள் விரும்பிய பி.எஸ்.சி கம்பியூட்டர் சயின்ஸ் சீட்டே கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியிருந்தான். சுரேஷின் அப்பா அர்ஜுனனும், “என் மருமகளுக்கு இல்லாத சீட்டா, வந்து ஜாயிண் பண்ணச் சொல்லுங்க, நான் பார்த்துக்கிறேன்…” என்று தாகூரிடம் சொல்லிருந்தாள்.

ஆனால் மனநோயாளியான தங்கள் மகளை அவ்வளவு தூரம் அனுப்ப தாகூர் தம்பதியினர் விரும்பவில்லை. இருப்பினும் அதை கடைசி ஆப்ஷனாக வைத்திருந்தனர். வேறு எங்கும் சீட் கிடைக்கவில்லை என்ற சூழலில் மதுரைக்கே போய் படிப்பது என்று சஞ்சனா முடிவு செய்தாள். பெற்றோர் வேண்டாமென்று எவ்வளவோ தடுத்துப்பார்த்தார்கள், பாட்டி மதுரைக்குப் போகாதே என்று ரொம்பவும் அழுதார், ஆனாலும் சஞ்சனா தன் முடிவில் பிடிவாதமாக இருந்தாள்.

லண்டனில் இருந்து போனில் பேசிய நிரஞ்சனாவும் சுரேஷும் சஞ்சனாவுக்காக பரிந்து பேசினர். “அவளை தைரியமாக மதுரைக்கு அனுப்பி வைங்க… என் மாமனார் குடும்பம் அவளை நல்லா பாத்துக்குவாங்க…” என்றாள் நிரஞ்சனா. அதற்கு மகேஷ்வரி, “அந்த வீட்டில் சஞ்சனாவின் வயதிலேயே திருமணமாகாத சதீஷ் இருக்கிறான், அப்படியிருக்கும்போது அதே வீட்டில் சஞ்சனாவைத் தங்க வைப்பது சரியாக இருக்காது” என்றார்.

அப்போது லைனில் இடைப்பட்ட சுரேஷ், “அதெல்லாம் ஒண்ணும் பிரச்சனையில்லை அத்தே, இருந்தாலும் நீங்க ஃபீல் பண்றதுக்காக சொல்றேன். மதுரையில அப்பாவோட காலேஜுக்கு 5 பஸ்டாப் தூரத்தில் அழகரடின்னு ஒரு இடம் இருக்கு. அங்க ஒரு கிறிஸ்ட்டியன் தியாலஜிக்கல் காலேஜ் இருக்கு. அந்த கேம்பஸ்க்கு உள்ளேயே ஒரு womens hostel இருக்கு. அது ரொம்ப வசதியாவும், பாதுகாப்பாவும் இருக்கும். அப்பாவுக்கு தெரிஞ்சவங்க அங்க இருக்காங்க. சஞ்சனா வேணா அந்த ஹாஸ்டல்ல கூட தங்கி படிக்கட்டும்” என்றான்.

ஒரு வழியாக சஞ்சனா போராடி வெற்றி பெற்றாள். தாகூர் கொஞ்சம் பிசியாக இருந்ததால் மதுரைக்கு அட்மிஷனுக்கு சஞ்சனாவோடு, மகேஷ்வரியும், கைலாஷும் செல்லட்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பாட்டி கோபத்தில் சஞ்சனாவோடு இரண்டு நாட்கள் பேசாமல் இருந்தார். சஞ்சனா பாட்டியிடம் போய் “எங்கூட பேசு பாட்டி…” என்று அழவும். அவளைக் கட்டிப்பிடித்து பாட்டி அழுது, “சரி நல்லபடியா போய் படிச்சிட்டு வா.. மூணு வருஷம் கழிச்சு நான் உன்னை மறுபடி பார்க்குற வரைக்கும் என் உயிரை கையில பிடிச்சிட்டு இருப்பேன்…” என்றார். “கவலைப்படாத பாட்டி, நான் அப்பப்ப லீவுக்கு வருவேன்..” என சஞ்சனா ஆறுதல் படுத்தினாள். பாட்டி அப்போது 80 வயதை எட்டியிருந்தார்…

1996, ஜூன்…

மகேஷ்வரி, சஞ்சனா, கைலாஷ் மூவரும் மதுரைக்குச் செல்ல பக்டோக்ரா விமான நிலையத்துக்கு காரில் கிளம்பினார்கள். சஞ்சனா சர்ச்சுக்குப் போய் ஃபாதர் லாரன்ஸிடம் ஆசீர்வாதம் வாங்கிவிட்டு காரில் வந்து உட்கார, கார் பக்டோக்ரா நோக்கி பயணத்தை துவங்கியது…

கடந்த முறை நிரஞ்சனாவின் கல்யாணத்துக்காக மதுரை சென்ற போது இருந்த குதூகலமும் உற்சாகமும் இந்த முறை மொத்தமாக மிஸ் ஆகியிருந்தது. கைலாஷ், சஞ்சனா, மற்றும் மகேஷ்வரி மூவர் மனதையும் ஏதோ ஒரு இனம்புரியாத பாரம் போட்டு அழுத்திக்கொண்டிருந்தது. சஞ்சனா இந்த மனப் பிரச்சனையோடு மதுரைக்குப் போய் எப்படி சமாளிக்கப்போகிறாள் என்று கைலாஷ் ரொம்பவே கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். தன்னை மீறி வரும் அழுகையைக் கட்டுப்படுத்தி சஞ்சனாவிடமும், மகேஷ்வரியிடமும் இயல்பாகப் பேச முயன்று கொண்டிருந்தான்.

மகேஷ்வரி பக்டோக்ரா செல்லும் வழி முழுவதும் அழுதுகொண்டே தன் கண்ணீரை சேலை முந்தானையில் துடைத்துக்கொண்டு வந்தார். கார் விமான நிலையத்தை அடைவதற்குள் “கண்டிப்பா நீ போய்த்தான் ஆகணுமா?” என்று இரண்டு முறை கேட்டுவிட்டார்.

சஞ்சனாவுக்கும்கூட உண்மையில் மதுரைக்குச் செல்வதில் விருப்பம் இல்லை. ஒருவேளை கைலாஷ் டார்ஜிலிங்கிலேயே இருப்பதாக இருந்திருந்தால் தனக்கு பி.எஸ்.சி கம்பியூட்டர் சயின்ஸே கூட வேண்டாம்… என்று சொல்லிவிட்டு, கிடைத்த கோர்ஸில் சேர்ந்து படித்து, டார்ஜிலிங்கிலேயே இருந்திருப்பாள். கைலாஷ் இன்னும் சில நாட்களில் ஆஸ்திரேலியா கிளம்பிவிடுவான். அவன் இல்லாத டார்ஜிலிங் அவளுக்கு நரகம்தான்… அதற்குப் பதிலாக மதுரைக்காவது சென்று தனது கனவுப் படிப்பை தொடங்கலாம் என அவள் நினைத்ததால்தான் தன் முடிவில் அவ்வளவு பிடிவாதமாக இருந்தாள்.

தன் உயிர் காதலனையும், குடும்பத்தையும் பிரிந்து புரியாத மொழியும், வேறான கலாச்சாரமும் கொண்ட அந்த வித்தியாசமான இந்தியாவில் எப்படி வாழப்போகிறோம் என்ற பயம் அவள் மனதை அறுத்துக் கொண்டிருந்தது. தன்னையும் மீறி தன்னுடைய விதிதான் தன்னை அங்கு இழுத்துச் செல்லுகிறது என்பதை மட்டும் அவள் ஆழ்மனதுக்குப் புலப்பட்டது.

பக்டோக்ராவிலிருந்து சென்னை வழியாக மதுரை செல்லும் அந்த ஏர்-இந்தியா விமானம் தென் திசை நோக்கி பறக்க ஆரம்பித்தது… சஞ்சனா தன் அருகில் அமர்ந்திருந்த கைலாஷின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள். அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். அவள் காதில் கேட்ட அவனது இதயத்துடிப்பு அவனும் அதே போன்றதொடு பதபதைப்பில்தான் இருக்கிறான் என்பதை அவளுக்கு உணர்த்தியது.

****

சஞ்சனா ஒரு பூக்கள் நிறைந்த சோலையில் நின்று கொண்டிருந்தாள். அப்படியொரு அழகான பூக்களை அவள் பூமியில் எங்குமே பார்த்ததில்லை. அவள் உயரத்துக்கு அந்தப் பூச்செடிகள் வளர்ந்திருந்தன. அம்மலர்களின் நறுமணத்தை விவரிக்க எந்த மொழியிலும் வார்த்தை இல்லை…

சஞ்சனா அந்தப் பூச்செடிகளுக்குள் அவனைத் தேடினாள்…. அவனைக் காணவில்லை… சத்தமிட்டு அழைத்தாள்… அப்போதும் அவன் வரவில்லை.. அவளது முகம் வாடியது. திடீரென்று அவள் எதிர்பாராத வேளையில் அருகே இருந்த செடிகளை விலக்கிக் கொண்டு மலர்ந்த முகத்தோடு அவன் வந்து நின்றான். கைநிறைய தங்க நிறப்பூக்களை வைத்திருந்தான். அவளை நோக்கி அந்தப் பூக்களை நீட்ட அவள் பொய்க்கோபத்தோடு அங்கிருந்து கிளம்பி ஒரு குளிர்ந்த பாறையில் போய் உட்காந்தாள். அந்தப் பாறையை தழுவி ஒரு நீரோடை ஓடிக்கொண்டிருந்தது.

அங்கும் அவன் வந்து மாணிக்கத்தைப் போல ஒளிவீசும் செந்நிறப் பூக்களை அவளிடம் நீட்ட, அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அவனைக் காணவில்லை… திடீரென்று மாயமானான்.

நிச்சயம் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையில் சஞ்சனா அந்தப் பாறையிலேயே உட்காந்தபடி ஏதோ ஒரு இனிமையான பாடலை சந்தோஷமாகப் பாடிக்கொண்டிருந்தாள். திடீரென்று அவள்மீது பூக்களின் மழை பொழிந்தது. அவள் திரும்பிப் பார்க்க பல கூடைகள் நிறைய வண்ண வண்ணப் பூக்களை எடுத்து வந்து அவன் அவள் மீது கொட்ட.. அவள் சத்தம் போட்டு சிரித்தாள்..

****

“சஞ்சு… வாட் ஹேப்பண்ட்?”

கைலாஷ் அவனை உலுக்கினான். சஞ்சனா திடுக்கிட்டு எழுந்தாள்…அது நள்ளிரவு, நடுவானில் விமானம் அமைதியாகப் பறந்து கொண்டிருந்தது. விமானத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டு இருந்தன. பயணிகள் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள்.

சஞ்சனாவின் சிரிப்புச் சத்தம் அருகில் இருந்த பயணிகள் அனைவரையும் எழுப்பி விட்டிருந்தது. “என்ன ஆச்சு சஞ்சு?” என அம்மா கேட்க, “ஒண்ணுமில்லம்மா” என்றாள். சஞ்சனாவுக்கு தர்ம சங்கடமாகிப்போக தன்னைத் தானே நொந்துகொண்டாள்…

மறுபடியும் அம்மா உட்பட அனைவரும் தூக்க நிலைக்குத் திரும்பினார்கள். கைலாஷ் சஞ்சனாவின் காதுகளில் கிசுகிசுதான், “ஏண்டி நடுச்சாமத்துல திடீர்னு பேய் மாதிரி சிரிச்சு எல்லாரையும் பயமுறுத்துன?”

சஞ்சனா அவன் காதுக்கு அருகில் வந்து அவள் கண்ட கனவை கிசுகிசுக்க, கைலாஷ் அதைக் கேட்டு ரசித்தபடியே அவளது தாடையைப் பிடித்து அவளது உதட்டில் அழுத்தமாக ஒரு முத்தம் வைத்தான்.

அத்தியாயம் 12 - உயிரை வேரோடு பற்றி இழுத்தாய்...

An invisible red thread connects those who are destined to meet regardless of time, place or circumstance. The thread may stretch or tangle, but it will never break.
- Chinese Proverb

தமிழ்நாடு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (Tamilnadu College Of Arts And Science For Women)…

மதுரை கே.கே நகரில் அமைந்திருக்கும் அந்த கல்லூரி வளாகம் சஞ்சனாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. கல்லூரி முதல்வரின் உறவினர்கள் என்பதால் கல்லூரியின் ஊழியர்கள் அட்மிஷன் நடைமுறைகளை அவளுக்கு வெகு எளிதாக்கினார்கள். தனது கல்லூரியின் பெண்கள் விடுதியை விட சுரேஷ் சொன்ன அந்த கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்குள் இருக்கும் பெண்கள் விடுதி மிகவும் வசதியாக இருக்கும் என்பதை அர்ஜூனனும் ஆமோதித்தார்.

காலை பத்து மணிக்கே அட்மிஷனை முடித்துவிட்டு தன்னுடைய காரிலேயே அர்ஜூனன் சஞ்சனா, கைலாஷ் மற்றும் மகேஷ்வரி மூவரையும் அந்த இறையியல் கல்லூரிக்கு அழைத்துச் சென்றார். வெறும் 15 நிமிடங்களில் கார் அந்த இறையியல் கல்லூரி இருக்கும் அழகரடிக்குள் நுழைந்தது. இறையியல் கல்லூரியை ஒட்டி இருக்கும் இந்த பஸ்டாப்பில் பஸ் ஏறினால் வெறும் 20 நிமிடங்களில் நம் கல்லூரியை அடைந்துவிடலாம் என்று அர்ஜூனன் சஞ்சனாவிடம் விளக்கிக் கொண்டிருந்தார்.

அன்னை பாத்திமா இறையியல் கல்லூரி (Annai Fatima Theological Seminary)

‘செமினரி’ என்று அழைக்கப்படும் அந்த இறையியல் கல்லூரி மரங்கள் அடர்ந்த ஒரு அழகான சோலைவனம் போல இருந்தது. அழகரடி மெயின் ரோடு அருகில் இருந்தாலும், செமினரி வளாகத்துக்குள் நுழைந்து விட்டால் வெளியே செல்லும் வாகனங்களில் இரைச்சல் மறைந்து, மரங்களிலிருந்து பாடும் பறவைகள் மற்றும் பூச்சிகளின் சத்தம் மட்டுமே கேட்கும். அப்படியொரு இனிமையான பேரமைதி வளாகத்துக்குள் நிலவியது. நுழைவாயிலில் இருக்கும் செக்போஸ்ட்டைத் தாண்டி வாகனங்கள் உள்ளே செல்லக்கூடாது என்பதால் காரை வெளியே பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு அர்ஜூனன் உட்பட நால்வரும் வளாகத்துக்குள் நடந்து சென்றனர். நுழைவாயிலிலேயே செக்போஸ்டுக்கு வலது புறம் “அன்னை தெரேசா மகளிர் விடுதி” என்று எழுதப்பட்ட பெரிய கட்டிடம் முதலாவதாக அவர்களை வரவேற்றது. அடுத்த மூன்று ஆண்டுகள் தான் தங்கப்போகும் விடுதியை ஆர்வத்துடன் பார்த்தபடி சஞ்சனா கடந்து சென்றாள்.

சற்று தூரத்தில் இருந்த அக்கல்லூரியின் சிற்றாலயத்தில் தவில், நாதசுரம் போன்ற தமிழ்நாட்டின் பாரம்பரிய இசைக்கருவிகள் இசைக்கப்பட்டு, தூய தமிழில் காலை வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த ஹாஸ்டலின் வார்டன் சிஸ்டர் நேசமணியின் வருகைக்காக அர்ஜூனன் உட்பட நால்வரும் அருகில் இருந்த கல்லூரியின் அலுவலகத்தில் காத்திருந்தனர்.

வழிபாடு முடிந்து வந்த சிஸ்டர் நேசமணி அவர்கள் நால்வரையும் வரவேற்று தன் அறைக்கு அழைத்துச் சென்றார். சஞ்சனாவுக்கு ஹாஸ்டல் விதிமுறைகளைச் சொல்லி அவளிடமும்,

மகேஷ்வரியிடமும், அவளது கார்டியனாகிய அர்ஜுனனிடமும் கையெழுத்துப் பெற்றுக்கொண்டு, அட்வான்ஸ் பணத்தைப் பெற்றபின், அங்கு வேலைசெய்யும் பணிப்பெண் விக்டோரியாவை அழைத்து சஞ்சனாவுக்கு ஹாஸ்டல் ரூம் எண் 21-ஐ திறந்து காட்டச் சொன்னார்.

சஞ்சனாவும் மகேஷ்வரியும் விக்டோரியாவைப் பின்தொடர்ந்து ஹாஸ்டலுக்குச் சென்றனர். தியாஜராஜா இஞ்சினியரிங் கல்லூரியில் படித்துவரும் கேரளாவைச் சேர்ந்த பாபி ஜார்ஜ் என்ற பெண் ஏற்கனவே அந்த அறையில் இருப்பதாகவும், அவளோடு சேர்ந்துதான் சஞ்சனா அந்த அறையில் தங்க வேண்டும் எனவும் விக்டோரியா கூறினார். பாபி அப்போது கல்லூரிக்குச் சென்றிருந்ததால் அந்த அறை பூட்டப்பட்டிருந்தது. இன்னொரு சாவி போட்டு விக்டோரியா கதவைத் திறந்தார். உள்ளே சென்று பார்த்த சஞ்சனாவுக்கும் மகேஷ்வரிக்கும் அந்த அறை பிடித்திருந்தது.

நாளை மாலையிலிருந்து தங்கிக்கொள்வதாக வார்டன் நேசமணியிடம் சொல்லிவிட்டு நால்வரும் விடைபெற்றுக் கிளம்பினர். அர்ஜுனன் அவர்கள் மூவரையும் தனது வீட்டில் விட்டுவிட்டு கல்லூரிக்குக் கிளம்பிச் சென்றுவிட்டார்.

கைலாஷும் மகேஷ்வரியும் அன்று இரவு விமானத்தில் டார்ஜிலிங் திரும்ப வேண்டியதாய் இருந்தது. சஞ்சனா தன் குடும்பத்தைப் பிரிந்து இதுவரை வெளியே தங்கியதில்லை. வாழ்க்கையில் முதல் முறையாக அன்று இரவு தனது புதிய உறவினர்களின் வீட்டில் தங்கப் போகிறாள். அதை நினைக்கும்பொழுதே அவளுக்குள் ஒரு பயம் தொற்றிக்கொண்டது. நாளைக் காலை முதல் கல்லூரிக்குச் செல்ல வேண்டும். வாழ்க்கை ஒரு புதிய திசையில் பயணிக்கப் போகிறது. எனவே இன்று மாலை வரைக்குமாவது கைலாஷோடு பொழுதை இனிமையாகக் கழிக்கலாம் என்று நினைத்தாள். இருவரும் தங்களுக்குப் பிடித்த மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் செல்லத் திட்டமிட்டனர்.

கைலாஷ் சுரேஷின் தம்பி சதீஷை அழைத்து, “நானும் சஞ்சனாவும் மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போறோம், சாயங்காலம் சரியா 7:00 மணிக்கு ரெண்டு பேரும் ஏர்போர்ட் வந்துவிடுகிறோம். மகேஷ்வரி அத்தையை ஏர்போர்ட் கூட்டிட்டு வரும்போது எனது லக்கேஜையும் சேர்த்து எடுத்திட்டு வந்திரு…” என்று சொல்லியிருந்தான். மகேஷ்வரியையும், கைலாஷையும் வழியனுப்பி வைத்துவிட்டு, விமான நிலையத்திலிருந்து சதீஷ் மற்றும் அவன் அம்மா சுகந்தியுடன் சேர்ந்து சஞ்சனா வீட்டுக்கு திரும்பிவிடுவதாக திட்டமிடப்பட்டிருந்தது.

சஞ்சனாவும் கைலாஷும் ஒரு டாக்ஸி பிடித்து, ஆரியபவன் ஹோட்டல் போய் மதிய உணவை முடித்துவிட்டு, மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போய் இறங்கினர். முறையாக வழிபாடுகளை முடிக்க மதியம் 2.30 மணியாகிவிட்டது. அதன் பிறகு ஒரு மணி நேரம் உட்காந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் உட்காந்திருந்த இடத்திலிருந்து சுந்தரேஸ்வரர் சந்நிதி இருக்கும் கோபுரம் தெரிந்தது.

கைலாஷ் சஞ்சனாவிடம் சுந்தரேஸ்வரர் சந்நிதியை சுட்டிக்காட்டி, “நாம ரெண்டு பேரும், அந்த கோபுரத்தை 99 தடவை சுத்தி வரலாம், அப்படி சுத்தும்போது நம்ம கல்யாணத்தைப் பிளான் பண்ணலாம். ஒரு கண்டிஷன், சாமி சந்நிதில வச்சு போட்ட பிளானை அப்புறம் மாத்தவே கூடாது, என்ன சொல்ற?...”

சஞ்சனா தம்ஸ்அப் காட்டி “டீல்…” என்றாள்..

இருவரும் போய் சுந்தரேஸ்வரர் சந்நிதியின் வெளிப்புறத்தை வலமிருந்து இடமாக சுற்றத் துவங்கினர்…

முதல் சுற்று…

கைலாஷ், “பாரு சஞ்சு. நான் ஆஸ்திரேலியாவுல எம்.பி.ஏவை 1998-ல முடிச்சிட்டு அங்கேயே வேலை செய்ய ஆரம்பிச்சிருவேன். நீ 1999-ல பி,எஸ்.சி முடிப்ப. அதுக்குள்ள நான் அங்க ஒரு வருஷம் வேலை பார்த்து ஓரளவு சம்பாதிச்சு வச்சிருப்பேன். நல்ல வாடகை வீடு, கார் எல்லாம் ஏற்பாடு பண்ணி வச்சிட்டு நீ படிச்சி முடிச்சிட்டு வந்தவுடனே நாம 1999-ல கல்யாணம் பண்ணிட்டு ஆஸ்திரேலியா போயிடலாம். நீ அங்க வந்து மேற்கொண்டு படிச்சாலும் சரி, அல்லது வேலை பார்த்தாலும் சரி..

சஞ்சனா, “ஓகே.. அப்ப நமக்கு 1999-ல கல்யாணம்” என்றாள்

இரண்டாம் சுற்று…

கைலாஷ், “எங்க அப்பா விருப்பப்படி திருப்பதி வெங்கடாஜலபதி கோவில்லதான் நம்ம கல்யாணம். அப்புறம் ரிஷப்ஷன் டார்ஜிலிங்ல வச்சுக்கலாம்..”

சஞ்சனா, “ஓகே, agreed…”

மூன்றாம் சுற்று…

சஞ்சனா, “கல்யாணம் முடிஞ்சு முதல் ஆசீர்வாதத்த எங்க பாட்டிகிட்டத்தான் வாங்கணும், ஏன்னா நாம சேர்ந்ததுக்கு காரணமே அவங்கதான்…”

கைலாஷ், “கண்டிப்பா… agreed…”

இப்படியே ஒவ்வொரு சுற்றும் சுமுகமாக, இணக்கமாக கல்யாணத் திட்டங்கள் போடப்பட்டது. 30-ஆவது சுற்று வரும்போது கைலாஷ் என்ன நினைத்தானோ தேவையில்லாத ஒன்றைப் பேசிவைத்தான்…

“சஞ்சனா இவ்வளோ பேசுறோம், பிளான் பண்றோம்… நீ இங்க மதுரையில மூணு வருஷம் படிப்ப முடிச்சுட்டு வர்றதுக்குள்ள, உங்க அக்கா மாதிரி எவனாச்சும் ஒரு தமிழ் பையனைப் பார்த்து, அவன்கிட்ட மனசை பறி கொடுத்து, என்னை டீல்ல விட்டுற மாட்டியே!…”

சஞ்சனாவுக்கு கோபம் தலைக்கு ஏறியது, கைலாஷ் கன்னத்தில் பளார் என ஒரு அறை விடலாமா என யோசித்தாள். “இது கோவில், இங்க வேணாம்…ஏண்டா இந்த கேள்வியை இவகிட்ட கேட்டோம்னு இவன் நினைக்கிற மாதிரி ஒரு பதில் சொல்லணும்…”

சஞ்சனா கேஷுவலாக, “கைலாஷ் உனக்கு ஒண்ணு தெரியுமா, தமிழ் பசங்க மாதிரி அவ்வளோ சின்சியரா யாருமே லவ் பண்ண முடியாதாம். காதலுக்காக உயிரையே குடுப்பாங்களாம். எங்க அக்கா சொல்லிருக்கா. நான் டிகிரி முடிக்கிறதுக்குள்ள அப்படி ஒருத்தனையும் சந்திச்சிடக்கூடாதுன்னு சாமிகிட்ட வேண்டிக்க… அப்படி ஒருத்தனைப் பார்த்துட்டேன்னா கண்டிப்பா உன்னை கழட்டி விட்டுடுவேன்…”

சஞ்சனாவிடமிருந்து கைலாஷ் இப்படியொரு பதிலை எதிர்பார்க்கவே இல்லை. அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் விக்கித்துப் போனான். கோபம் ஒருபுறம், அழுகை ஒருபுறம் அவனுக்குப் பீறிட்டு வந்தது. கட்டுப்படுத்திக்கொண்டு அமைதியாக நடந்து வந்தான்.

அதுவரை ஜாலியாகப் பேசிக்கொண்டிருந்தவர்கள் அடுத்த 31, 32-ஆவது சுற்றுக்களில் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை. சஞ்சனாவுக்கு சற்று வேதனையாக இருந்தது. “ச்சே..நான் இப்படி பேசியிருக்கக்கூடாது…அவன் பேசுனது தப்புன்னா, நான் பேசுனதும் தப்புதான்.. பேசாம சரண்டர் ஆயிரலாம்”

33-வது சுற்று…

..ஏ.. கைலாஷ்..”

“கைலாஷ்…”

கைலாஷ், “ம்ம்ம்…சொல்லு..”

சஞ்சனா கெஞ்சும் தொனியில், “கோவிச்சுக்கிட்டயா?..”

கைலாஷ் கோபமாக, “இல்ல..”

சஞ்சனா, “சாரிடா செல்லம்.. நீ கேட்டது எனக்கு ரொம்ப hurt ஆயிருச்சு, திரும்பவும் உன்னை hurt பண்ணனும்னுதான் அப்படிப் பேசிட்டேன்…”

கைலாஷ் அமைதியாக இருந்தான்…

“பின்ன நீ மட்டும் அப்படிப் பேசலாமா? உன்னைத் தவிர வேறு ஒருத்தனை என்னால மனசால கூட நெனச்சுப் பார்க்க முடியுமா கைலாஷ்? நான் மதுரைல மூணு வருஷம் படிப்ப முடிச்சிட்டு வரும்போதும் உன் சஞ்சனாவாத்தான் வருவேன். நீ யாராவது ஆஸ்திரேலியாவுல இருந்து வெள்ளைக்காரிய இழுத்துட்டு வராம இருந்தா சரி…”

கைலாஷ் கூலாகி சிரித்தான்…

சஞ்சனா, “ஏண்டா உன்னைத் தவிர வேறு எவனாலடா என் மனச ஜெயிக்க முடியு….”

அவள் அந்த வார்த்தையை முடிப்பதற்குள்….

அந்தக் காட்சியைப் பார்த்த அவள் தலையில் ஒரே நேரத்தில் ஆயிரம் இடிகள் வந்து இறங்கியது போல இருந்தது…

ஒரு வினாடி அவள் கண்களை அவளால் நம்பவே முடியவிலை…

அவளுக்கு எதிரே தனது இரு நண்பர்களுக்கு நடுவில் பேசி சிரித்துக்கொண்டே அவன் வந்தான்… அவளது கனவு நாயகன், நிழல் இளவரசன்… அதே முகம், அதே உருவம், அதே சிரிப்பு அச்சுப் பிசகாமல் அதே பல்வரிசை, உடலின் அசைவுகள்கூட கனவில் பார்ப்பதுபோல அப்படியே இருந்தன…கனவில் வருவது போலவே கொஞ்சம் நீளமாக ஸ்டைலாக முடி வளர்த்திருந்தான். காற்றில் பறந்து முகத்தில் விழுந்த அந்த முடியை கைவிரல்களால் ஸ்டைலாக கோதியபடியே அவளை கவனிக்காமல் ஒரு சில வினாடிகளில் அவளைக் கடந்து போய்விட்டான்…

அந்த வினாடியில் சஞ்சனாவின் மூளை, “அணுவளவுகூட வித்தியாசமில்லை, அவனைப்போல இருக்கிறானே…” என நினைக்க அவள் ஆன்மா அவளுக்குள் இருந்து அலறியது…”அய்யோ… இது அவனேதான்…” அதற்குள் அவன் அவளைக் கடந்து போயிருந்தான்.

அந்த நொடியில் சஞ்சனாவின் ஆன்மா அவளைவிட்டு பிய்த்துக் கொண்டு வெளியேறி அவன் பின்னே செல்வதுபோல அவள் உணர.. வேரற்ற மரம்போல தரையில் சாய்ந்தாள்…

“சஞ்சனா…” கைலாஷ் அலறினான்…

அதற்குள் அங்கு ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது… ஆளாளுக்கு உதவி செய்ய முன்வந்தார்கள். சஞ்சனா முகத்தில் தண்ணீர் தெளிக்கப்பட்டது. யாரோ ஒரு முகம் தெரியாத நபர் ஓடிப்போய் லெமன் ஜூஸ் வாங்கி வந்து சஞ்சனாவிடம் நீட்டினார். ஒரு பெண் தனது சேலை முந்தானையால் அவளுக்கு விசிறிவிட்டார். இன்னொரு பாட்டி அவள் நெற்றியில் விபூதி வைத்துவிட்டார். சஞ்சனாவுக்கு உணர்வு வந்தது. தன்னைச் சுற்றி பெரிய கூட்டம் இருப்பதைக் கண்டு பயந்து போனாள். கீழே விழுந்ததில் அவள் தலை தரையில் மோதியிருந்தது. நல்ல வேளையாக காயம் இல்லையெனினும், தலை மோதிய இடத்தில் பயங்கர வலி இருந்தது.

இன்னொரு பக்கம், இதுவரை தன் வாழ்விலேயே அனுபவித்திராத பேரின்பத்தில் அவளது ஆன்மா அவளுக்குள் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருந்தது. நிமிர்ந்து பார்க்க கைலாஷ் பதட்டத்தோடு அவள் முன் மண்டியிட்டு அமர்ந்திருந்தான். சஞ்சனா எழுந்து “கைலாஷ்…” என்று அலறியபடி அவனைக் கட்டி அணைத்துக்கொண்டாள்…

சஞ்சனா முதல் முறையாக தனக்குள் இருவேறு நபர்களை உணர்ந்தாள். ஒன்று தனது ஆத்தும சிநேகிதனைப் பார்த்தபடியால் அவளுக்குள் சந்தோஷக் கூத்தாடும் ஒரு நபர், மறுபக்கம் கைலாஷை உயிருக்கு உயிராக நேசித்து அவனுக்காகப் பரிதபிக்கும் இன்னொரு நபர். இந்த இரண்டில் எது உண்மையான சஞ்சனா என்று அவளுக்கே புரியவில்லை.

அவள் கொஞ்சம் சுய உணர்வுக்கு வந்து, எழுந்து உட்காந்ததால் கூட்டம் கலைந்து செல்ல ஆரம்பித்தது. சஞ்சனா கைலாஷை இறுகப் பிடித்துக்கொண்டு, அவன் தோளில் சாய்ந்து, சத்தமிட்டு அழ ஆரம்பித்தாள். அவன் அவளை கூட்டத்திலிருந்து விலக்கிக் கொண்டுப்போய் தனியாக ஒரு இடத்தில் உட்கார வைத்து ஆசுவாசப் படுத்த முயற்சி செய்துகொண்டிருந்தான்.

அவளுக்கு திடீரென்று என்ன ஆயிற்று, இவள் ஏன் இப்படி அழுகிறாள் என்பது எதுவுமே அவனுக்குப் புரியவில்லை.

மாலை 5 மணியளவில் இருவரும் கோவிலை விட்டு வெளியேறினர். கைலாஷ் அவளை ஒரு டீ கடைக்கு அழைத்துச் சென்றான். சஞ்சனா தனது மூளை கிட்டத்தட்ட தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டதுபோல உணர்ந்தாள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. சற்று முன் கண்டது உண்மைதானா? அவன் உண்மைதானா? இந்த ஊரிலா இருக்கிறான்? அவனைப் பார்க்கத்தான், அல்லது அவனோடு சேர்க்கத்தான் விதி என்னை மதுரைக்கு அழைத்து வந்ததா?.. அப்படியென்றால் கைலாஷ்???

கைலாஷ் எதிரே அமர்ந்து ஏதோ அவளிடம் கேட்டுக்கொண்டிருக்க அவை எதுவுமே அவள் காதுகளில் ஏறவில்லை. தன்னை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பிரியப்போவதால் தன் காதலி மன உளைச்சலில் இருக்கிறாள் என்று நினைத்து, ஏர்போர்ட் போய் சேரும்வரை அவளை எதுவும் தொந்தரவு செய்ய வேண்டாம். அவள் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆகட்டும் என்று நினைத்து அங்கிருந்து ஒரு டாக்ஸியைப் பிடித்து ஏர்போர்ட் போகச்சொன்னான்.

கைலாஷை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பிரியப்போகிறோமே என்ற துக்கம் சஞ்சனாவை கடந்த ஒரு வாரமாகவே வாட்டி வதைத்துக் கொண்டுதான் இருந்தது. ஆனால் இன்று அவள் முழுவதுமாக நிலைகுலையக் காரணம் தான் யாரை மாயபிம்பம் என்று சொல்லி தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருந்தாளோ அவனை இரத்தமும் சதையுமாக தன் கண்களால் கண்டது… அடுத்த மூன்றாண்டுகள் தனக்கு மதுரையில் என்னென்ன நிகழக் காத்திருக்கிறது என்ற பயம் அவளை மீண்டும் மயக்க நிலைக்குள் இழுத்துக் கொண்டிருந்தது. அவள் நிலையை உணர்ந்த கைலாஷ் அவளை தன் மடியில் படுக்க வைத்து அவள் தலையை ஆறுதலாக கோதிக்கொண்டே வந்தான். “எந்த சூழ்நிலையிலும் உனக்காக நான் இருக்கிறேன்” என்று அவன் சொல்வது போல அது இருந்தது. மதுரையின் குறுகலான, புழுதி படர்ந்த சாலைகள் வழியாக மாலை நேர டிராஃபிக்கில் சிக்கியும், தப்பியும் டாக்ஸி விமான நிலையத்தை நோக்கி முன்னேறிக் சென்றுகொண்டிருந்தது.

ஏர்போர்ட்டில் ஏற்கனவே மகேஷ்வரி, சதீஷ் மற்றும் சுகந்தி ஆகியோர் இவர்களுக்காக காத்திருந்தார்கள். விமான நிலையத்தின் உள்ளேயே இரவு சிற்றுண்டி முடித்துவிட்டு கைலாஷும் மகேஷ்வரியும் உள்ளே செல்ல தயாராக, சஞ்சனா அம்மாவையும், கைலாஷையும் கட்டிப்பிடித்து ரொம்பவே அழுதாள். பாரமான மனதுடன் சஞ்சனாவை திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே உள்ளே சென்ற இருவரும் ஒரு எஸ்கலேட்டரில் ஏறி மறைந்து போனார்கள்.

அவர்கள் கண்ணுக்கு மறைந்த அடுத்த வினாடி சஞ்சனா தான் முற்றிலும் தனித்து விடப்பட்டதுபோல உணர்ந்தாள். மதுரையில் படிக்க வேண்டும் என்று தான் பிடிவாதமாக எடுத்த முடிவுக்காக மிகவும் வருந்தினாள். காரில் வீட்டுக்கு திரும்பும்போது சதீஷ் அவளிடம்… “சஞ்சனா, நீ ஃபர்ஸ்ட் இயர் ஸ்டுடண்ட்ங்கிறதால காலேஜ்ல ராகிங் இருக்கும். சீனியர்ஸ் யாரு கூப்பிட்டு உன்னை விசாரிச்சாலும் பிரின்ஸிபல் அர்ஜுனன் சாரோட ரிலேட்டிவ்னு சொல்லிரு, அதுக்கப்புறம் உன்னைப் பார்த்தே பயப்படுவாங்க…உன்னோட சீனியர்ஸ்ல எனக்கு ஒரு ஃப்ரண்ட் இருக்கா, வனிதான்னு பேரு.. நாளைக்கு அவளைப் போய் மீட் பண்ணு” என்று சொன்னான்.

சஞ்சனாவுக்கு அர்ஜூனன் வீட்டில் தனி அறை ஒதுக்கப்பட்டிருந்தது. பல்வேறு எண்ணங்கள் அவள் மனதில் வந்து மோதிக்கொண்டிருந்தன. ஒரு வினாடியில் மின்னலைப்போல அவள் கண் முன்னே வந்து மறைந்த அவன், கைலாஷின் நீண்ட பிரிவு, வீட்டின் ஞாபகம், நாளை கல்லூரியின் முதல் நாள் என்கிற எதிர்பார்ப்பு, வாழ்க்கையில் முதல் முறையாக நாளை முதல் ஹாஸ்டலில் தங்க வேண்டும் என்கிற நிர்பந்தம்.. அத்தனையும் சேர்ந்து அன்று அவளது இரவுத் தூக்கத்தைக் காவு வாங்கி இருந்தன..

அத்தனை சூழல்கள் மத்தியிலும் அவள் ஆன்மா ஆயிரம் ஆண்டுகள் தவமிருந்தால் என்ன அமைதி கிடைத்திருக்குமோ அந்த அமைதியில் மிதந்து கொண்டிருந்தது. காரணம் அதன் பல பிறவித் தேடல் அன்றோடு நிறைவு பெற்றிருந்தது.

அத்தியாயம் 13 - வங்கத்து இளவரசிக்கு பாண்டிய நாட்டின் வரவேற்பு

"We recognize our counterpart of the soul by the supreme level of comfort and security we feel with that person." - Richard Bach

சஞ்சனா மறுநாள் அர்ஜுனனோடு கல்லூரிக்குச் சென்றாள். அன்று மாலை முதல் ஹாஸ்டலில் தங்குவதற்காக தனது லக்கேஜை அர்ஜுனனின் கார் டிக்கியில் வைத்திருந்தாள். மதிய உணவு இடைவேளையில் சதீஷின் தோழி, தனது சீனியர் வனிதாவை சந்தித்தாள். மாலை அர்ஜுனன் தனது காரிலேயே அவளை ஹாஸ்டலில் கொண்டு வந்து விட்டார்.

சஞ்சனா தனது ரூம்மேட் பாபியை சந்தித்து அறிமுகப்படுத்திக் கொண்டாள். பாபி ஜார்ஜ் கேரளாவின் எர்ணாகுளத்தைச் சேர்ந்தவள். மதுரை தியாகராஜா பொறியியல் கல்லூரியில் பி.டெக் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். பாபி சஞ்சனாவுடன் முதல் நாளிலேயே இனிமையாகப் பழகினாள். தனக்கு நல்ல ரூம்மேட் கிடைத்த சந்தோஷம் இருந்தாலும் சஞ்சனாவுக்கு மனம் முழுவதும் நேற்று மீனாட்சி அம்மன் கோவிலில் நடந்த நிகழ்வைச் சுற்றியே இருந்தது.

அவனை நினைத்தவுடன் ஒருபக்கம் இனம்புரியாத மகிழ்ச்சியும், இன்னொரு பக்கம் பயங்கர குழப்பமும் அவளை ஆட்கொண்டது. கைலாஷின் நிழல்தான் அவன் என்று நினைத்துக் கொண்டிருந்தவளுக்கு, அவனை நிஜமனிதனாகக் கண்ட அந்த வினாடி முதல் அவனா? கைலாஷா? என்கிற கேள்வி மனதைப் போட்டு அறுக்க ஆரம்பித்தது. அவள் ஆன்மா அவனுக்காகவும், அவள் மனசாட்சி கைலாஷுக்காகவும் வாதாடின.

கடைசியாக அவள் மனசாட்சி வென்றது. எந்த சூழ்நிலை வந்தாலும் என் உடலும், மனமும் கைலாஷுக்கு மட்டும்தான். நேற்று நான் கண்ட அந்த இளைஞனே என் கண்முன்னே வந்து நின்று என்னை காதலிப்பதாகச் சொன்னாலும், நான் கைலாஷுக்குக் கொடுத்த வாக்கை மீற மாட்டேன். அவன் என்மீது வைத்த நம்பிக்கையை பொய்த்துப்போக விடமாட்டேன்.

ஆனால் சஞ்சனா அவனை எவ்வளவாக மறக்க நினைத்தாளோ அவ்வளவாக நினைக்கத் தொடங்கினாள். ஹாஸ்டலை விட்டு வெளியே வந்தால் அவனைப் பார்த்துவிடுவோமோ.. பஸ்ஸில் ஏறினால் அந்த பஸ்ஸில் அவன் இருப்பானோ.. சாலையில் நடக்கும்போது எதிரில் வந்துவிடுவானோ என்று பற்பல பயங்கள் அவள் மனதை முற்றிலும் ஆக்கிரமித்திருந்தன.

****

கல்லூரியில் இரண்டாம் நாள்…

“யாருடி அவ, மைதா மாவுல செஞ்ச பொம்ம மாதிரி.. நேத்துல இருந்து நம்ம கேம்பஸ்க்குள்ள சுத்திட்டு இருக்கா..” என்றாள் சீனியர் ஒருத்தி..

“நியூ அட்மிஷன் போல…” என்றாள் இன்னொருத்தி..

“கூப்பிடு அவள..”

“ஹே..ரெட் டி ஷர்ட்.. கம் ஹியர்…” சத்தமிட்டு அழைத்தாள் மூன்றாவது பெண்…

அவர்கள் அழைத்த விதமே சஞ்சனாவுக்கு அநாகரீகத்தின் உச்சமாகத் தோன்றியது. கிட்டத்தட்ட ஏழெட்டு சீனியர் மாணவிகள் ஒரு மரத்தடியில் இருந்த மேடைமீது அமர்ந்திருந்தார்கள். சஞ்சனா தனக்குள் எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு அவர்கள் முன் போய் நின்றாள்.

“யார் நீ.. இங்க என்ன பண்ற?...”

யாரோ திருட வந்தவளை விசாரிப்பது போல விசாரித்தாள் ஒருத்தி..

“நான் பிரின்சிபல் அர்ஜுனன் சார் ரிலேட்டிவ், இங்க ஃபர்ஸ்ட் இயர் ஜாயிண் பண்ணிருக்கேன்”

மிரட்டல் தொனியில் கேட்டாள் பின்னால் கருப்பு சுடிதார் அணிந்த மாணவி, “ஏன் அர்ஜுனன் சார் ரிலேட்டிவ்னா நாங்க உன்னை ராகிங் பண்ணக்கூடாதா?.. ஹேய் கேர்ள்ஸ் கம் ஹியர்.. மேடம் அர்ஜுனன் சார் ரிலேட்டிவ்வாம்…” பக்கத்தில் ஆங்காங்கே இருந்த சீனியர் மாணவிகளையும் அவள் அழைக்க சஞ்சனாவைச் சுற்றி ஒரு பெரிய சீனியர் கூட்டம் கூடியது.

அதுவரை சற்று தைரியமாக நின்று கொண்டிருந்த சஞ்சனாவுக்கு இப்போது உள்ளூர வெடவெடக்க ஆரம்பித்தது, “அடப்பாவி சதீஷ்… உன் பேச்சைக் கேட்டு உங்கப்பா பேரைச் சொல்லி இப்ப வசமா மாட்டிக்கிட்டேனே.. ” மனதுக்குள் புலம்பினாள்..

“உன் பேரு என்ன..” புதிதாக வந்து கூட்டத்தில் சேர்ந்த சீனியர் கேட்டாள்..

தன்னைக் காப்பாற்ற வனிதா எங்கிருந்தாவது வருவாளா என சஞ்சனா சுற்றும் முற்றும் பார்க்க.. இன்னொரு பெண் மிரட்டினாள், “ஏய் உன்னத்தான் கேக்குறோம், அங்க என்ன பார்க்குற… இங்கிலீஷ் புரியாதா.. உன் பேரு என்ன?”

“சஞ்..சஞ்..சஞ்சனா தாகூர்..”

“என்னது சஞ்சனா?... தாகூரா? தேசியகீதம் எழுதுனாரே அந்த வெள்ள தாடி வச்ச தாத்தா.. அவரு பேத்தியா நீயி?”

“இல்லை” என்றாள் சஞ்சனா..

“ஒரு ஹிந்தி actress இருப்பாங்களே, சிரிச்சா கன்னத்துல பெரிய குழி விழுமே.. “

“ஷர்மிளா தாகூர்” என்றாள் கண்ணாடி அணிந்த பெண்..

“ம்ம்ம்..அவங்க உன் சொந்தக்காரங்களா?”

“இல்லை” என்று தலையாட்டினாள் சஞ்சனா..

“என்ன ரபீந்திரநாத் தாகூரும் உன் சொந்தக்காரர் இல்லங்கிற, ஷர்மிளா தாகூரும் உன் சொந்தக்காரங்க இல்லைங்கிற, ஆனா எங்க ஊர் அர்ஜூனன் சார உன் சொந்தக்காரர்ங்கிற, பேரைக் கேட்டா சஞ்சனா தாகூர்ங்கிற.. எங்களைப் பார்த்தா உனக்கு என்ன நக்கலா இருக்கா?”

இந்த கிறுக்குத்தனமான கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று சஞ்சனாவுக்கு புரியவில்லை… Michelle Yeoh-வாக மாறி அத்தனை பேரையும் பந்தாடினால் நன்றாக இருக்குமே என்று தோன்றியது அவளுக்கு..

“சரி நீ எந்த ஊரு?”

“டார்ஜிலிங்..”

“என்னது டார்ஜிலிங்கா? பனிமலையில ஸ்கேட்டிங் போவாங்களே அந்த ஊரா?”

சஞ்சனா அமைதியாக நின்றிருந்தாள்..

“எங்கே… உங்க ஊருல போற மாதிரி ஸ்கேட்டிங் போய் காட்டு பார்க்கலாம்…”

“இங்க ஸ்நோ இல்லையே..” பரிதாபமாகக் கேட்டாள் சஞ்சனா..

“இந்த மதுரை காட்ல நாங்க ஸ்நோவுக்கு எங்க போறது? உனக்காக சினிமா செட்டிங்கா போட்டுத்தர முடியும்? இந்த மணலையே ஸ்நோவா நெனச்சு ஸ்கேட்டிங் பண்ணு... எங்கே சல்லுனு போய் அந்த gate-ஐ தொட்டுட்டு வா பார்க்கலாம்”

“ஏ ஸ்கேட்டிங் போறேன்னு அப்படியே ஓடிரப் போறாடி…” என்றாள் ஒருத்தி..

“போய் அந்த கேட்டை தொட்டுட்டு திரும்பி இங்க வரணும், இல்லைன்னா நாளைக்கு நீ காலேஜுக்குள்ளேயே நுழைய முடியாது…” உயரமாக இருந்த அந்தப் பெண் மிரட்ட..

சஞ்சனாவின் கால்கள் கிடுகிடுவென நடுங்க ஆரம்பித்தது… அதற்குள் பிரின்ஸிபல் அர்ஜூனனின் கார் எச்சரிக்கை ஹார்ன் அடித்தபடியே அங்கே நுழைய மரத்தடி மாணவிகள் சங்கம் அடுத்த வினாடியே கலைக்கப்பட்டது. சஞ்சனா மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தாள்…

அர்ஜூனன் நிலைமையைப் புரிந்துகொண்டு அவளருகே காரை நிறுத்தி, “என்னம்மா என்ன ஆச்சு?” என்று கேட்க சஞ்சனா ஒன்றுமே சொல்லாமல் அழ ஆரம்பித்தாள்.

அர்ஜூனன் அவளைத் தேற்றி காரில் உட்கார வைத்து, “பிரின்சிபல் ரிலேட்டிவ்னு அவங்ககிட்ட சொல்லிருக்கலாம்ல…” என்றார்…

சஞ்சனா அழுகையை நிறுத்திவிட்டு ஒரு நிமிடம் அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.. அந்தப் பார்வையின் அர்த்தம் அவருக்குப் புரியவில்லை.

****

சஞ்சனாவுக்கு மதுரையில் மூன்று மாதம் ஓடியிருந்தது… ராகிங் செய்த சீனியர்கள் எல்லோரும் இப்போது அவளுக்கு நல்ல நண்பிகள் ஆகி இருந்தனர். சஞ்சனாவின் நுனி நாக்கு ஆங்கிலம் ஒரு மாதத்துக்குள் அவளை கல்லூரிக்குள் பிரபலப்படுத்தியிருந்தது. எல்லா முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் அவளே அறிவிப்பாளர் ஆக்கப்பட்டாள்.

“இங்கிலீஷ் புரியாதா? உன் பேரு என்ன? “ என்று கேட்ட அந்த சீனியர் மாணவி ஆசிரியர் தின விழாவில் வாசிப்பதற்கு ஆங்கில கட்டுரை எழுதித் தரச்சொல்லி சஞ்சனாவிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

கைலாஷ் இப்போது மெல்பர்னில் இருந்தான். வார இறுதிகளில் சஞ்சனாவுக்கு போன் செய்வான். செமினரியின் உள்ளே ஒரு டெலிபோன் பூத் இருந்தது. அதில் அண்ணாத்துரை என்ற பையன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். சஞ்சனா அவனுக்கு பணம் கொடுத்து, எனக்கு எஸ்டிடி, ஐஎஸ்டி வந்தா உடனே வந்து கூப்பிடு என்று சொல்லி வைத்திருந்தாள். எனவே அவளுக்கு வரும் ஃபோன் எதுவும் மிஸ் ஆகாது.

அன்று மீனாட்சி அம்மன் கோவிலில் பார்த்த அவனை கடந்த மூன்று மாதங்களாக சஞ்சனா வேறு எங்குமே பார்க்கவில்லை. அது அவளுக்கு சற்று நிம்மதியாக இருந்தது. அந்த நிகழ்வின் தாக்கம் கொஞ்ச கொஞ்சமாக அவள் மனதை விட்டு மறைய ஆரம்பித்திருந்தது. அவன் தனது கனவு இளவரசனைப்போல தோற்றம் கொண்ட நபராக இருக்கலாம். நான்தான் ஏதோ பெரிதாக பயந்துவிட்டேன். இந்த உலகத்தில் ஒரே மாதிரி முகச்சாயல் கொண்ட மனிதர்களைக் காண்பது ஒன்றும் அரிது அல்லவே!

****

முதல் செமஸ்டர் முடிந்து சஞ்சனா ஊருக்குப் போய் திரும்பியிருந்தாள்… பாட்டியோடும், பெற்றோரோடும் செலவிட்ட அந்த நாட்கள் அவளுக்கு ஆறுதலாக இருந்தது. தன் கனவு இளவரசன் போலவே தோற்றம் கொண்ட ஒருவனை அவள் மதுரையில் பார்த்ததை யாரிடமும் கூறவில்லை.

சஞ்சனாவுக்கு இப்போது மதுரை நன்றாகப் பழக்கப்பட்டு இருந்தது. ஒரு சில தமிழ் வார்த்தைகள் கற்றுக்கொண்டு தேவைப்படும் இடங்களில் பேசவும் ஆரம்பித்து இருந்தாள். மதுரை சிம்மக்கல்லில் இருந்த ஒரு பிரபல கம்பியூட்டர் அகாடமியில் ஒரு ஸ்பெஷல் கோர்ஸ் சேர்ந்து படிக்கவும் ஆரம்பித்து இருந்தாள். மாதங்கள் பல ஓடியும் அவனை சஞ்சனா மீண்டும் பார்க்கவே இல்லை. அவனை எங்காவது மறுபடியும் பார்த்துவிடுவோமோ என்கிற பயமும் இப்போது அவளைவிட்டு நீங்கியிருந்தது.

****

முதல் ஆண்டு பி.எஸ்.சி படிப்பை சஞ்சனா வெற்றிகரமாக முடித்திருந்தாள். 75%-க்கு மேல் மதிப்பெண்கள் வாங்கியிருந்தாள். செமஸ்டர் லீவுக்கு ஊருக்கு சென்றபோது இந்தமுறை நிரஞ்சனாவும் சுரேஷும் டார்ஜிலிங் வந்திருந்தார்கள். அந்த விடுமுறை நாட்கள் மிகவும்

சந்தோஷமாகக் கழிந்தது. ஆனால் எல்லோருமே கைலாஷை அதிகமாக மிஸ் செய்வதை உணர்ந்தார்கள்.

சஞ்சனாவுக்கு இரண்டாம் ஆண்டு படிப்பு ஆரம்பமாகி இருந்தது. அவனைக் குறித்த பயமும் அவளைவிட்டு முற்றிலும் நீங்கியிருந்தது. ஒருவேளை அது “அவனாக” இருந்திருந்தால் விதி நிச்சயம் அவனை மறுபடி சந்திக்க வைத்திருக்கும். ஒரு ஆண்டு ஆகியும் அவனை எங்குமே பார்க்காததால் அவன் நிச்சயம் மதுரையைச் சேர்ந்தவனாக இருக்க முடியாது. அவனை கோவிலில் பார்த்ததால் எங்கிருந்தாவது மதுரைக்கு சுற்றுலா வந்தவனாக இருக்கக் கூடும் என்று சஞ்சனா முடிவு செய்து கொண்டாள்.

****

1997, ஆகஸ்டு 27, மதியம் 3:30 மணி…

சஞ்சனாவுக்கு அன்று கல்லூரி முடிந்து, அழகரடி பஸ் ஸ்டாப்பில் இறங்கி ஹாஸ்டலுக்கு வந்து கொண்டிருந்தாள். அழகான பேபி பிங்க் சுடிதார் அணிந்திருந்தாள். தனது டார்க் பிரவுன் முடியை வாரி இழுத்து குதிரைவால் அணிந்திருந்தாள். அன்று கல்லூரியில் அதிகமாக எழுத்து வேலை இருந்ததால் சற்று சோர்வாக இருந்தாள்…

ஏதோ நினைவில் ஹாஸ்டலை நோக்கி நடந்து கொண்டிருந்தவளுக்கு திடீரென்று ஒரு சில்லிடும் உணர்வு ஏற்பட்டது… கருப்பு முழுக்கை டி-ஷர்ட், கறுப்பு ஜீன்ஸ் அணிந்து ஒருவன் அவளை டேக் ஓவர் செய்து முன்னே நடந்து போனான். அவன் அவளைக் கடந்தபோது அந்த சில்லிடும் உணர்வு அவளுக்கு அதிகமானது…

ஒரு பத்தடி தூரம் முன்னே போய் அவளைத் திரும்பி அவள் கண்களை கூர்மையாகப் பார்த்தான்…

சஞ்சனாவின் உயிரைப் பிடித்து உலுக்கியதுபோல இருந்தது… அது அவன்தான்…

இந்த முறை அவனும் அவளை பார்த்துவிட்டான்..

இன்னும் கொஞ்ச தூரம் முன்னால் நடந்து போய் மீண்டும் அவளை திரும்பிப் பார்த்தான்..

சஞ்சனாவின் இதயத்துடிப்பு மடமடவென அதிகரித்தது… இன்னொரு பக்கம் அவனை கனவில் பார்த்த அடுத்த இரண்டு நாட்கள் அவள் மனதை ஒரு மகிழ்ச்சி நிறைத்திருக்குமே, அதே மகிழ்ச்சியை பத்து மடங்காக்கி அவள் மனதுக்குள் ஊற்றியதுபோல ஒரு உணர்வு இருந்தது.

இன்னும் கொஞ்ச தூரம் போய் மூன்றாவது முறையாக அவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு செமினரி வளாகத்துக்குள் நுழைந்து வேகமாக உள்ளே சென்று விட்டான்…

சஞ்சனாவுக்கு தூக்கி வாரிப் போட்டது… இவன் எப்படி நம்முடைய கேம்பஸுக்குள் நுழைகிறான்… ஏன் என்னை மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்தான்…

சப்த நாடியும் ஒடுங்கிப் போனாள்….

அத்தியாயம் 14 - உனக்கும் முன்பே என்னைத் தெரியுமா?

"Your soul knows the geography of your destiny. Your soul alone has the map of your future, therefore you can trust this indirect, oblique side of yourself. If you do, it will take you where you need to go." - John O'Donohue

அடுத்த இரண்டு நாட்களுக்குப் பிறகு மீண்டும் அதே இடத்தில், அதே நேரத்தில் அவனைப் பார்த்தாள். இந்தமுறை அவளுக்கு எதிரில் நடந்து வந்தான். அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி கடந்து போனான்.

அடுத்தடுத்த நாட்கள் அது தொடர ஆரம்பித்தது. காலை 7:50-க்கு கல்லூரிக்கு போகும்போது அவன் எதிரே வருவதும், மாலை 3:30-க்கு கல்லூரி விட்டு ஹாஸ்டலுக்கு வரும் நேரத்தில் அதே போல எதிரே வருவதும் தினமும் நிகழ ஆரம்பித்தது. கல்லூரி விட்டு வரும்போது மட்டுமல்ல, வாரத்துக்கு மூன்று முறை கம்பியூட்டர் வகுப்பு முடிந்து 6:00 மணிக்கு ஹாஸ்டல் திரும்பி வரும்பொழுதும் அதே போல அவன் எதிர்ப்படுவது சஞ்சனாவுக்கு சந்தேகத்தை வரவழைத்தது. அவன் வேண்டுமென்றே தான் வரும் நேரத்தை கணக்குப்பண்ணி தன்னைப் பார்க்க வருகிறான் என்பதைப் புரிந்துகொண்டாள்.

அந்த செமினரியிலேயே பாதிரியார் பணிக்காக படிக்கும் மாணவர்களுக்காக இரண்டு ஹாஸ்டல்கள் அந்த வளாகத்தின் உள்ளேயே இருந்தது. அதைத் தவிர வெளியே மற்ற கல்லூரிகளில் படிக்கும் பெண்களுக்கான ஹாஸ்டல்தான் சஞ்சனா தங்கியிருந்த “அன்னை தெரேசா மகளிர் விடுதி”. அதேபோல வெளியே மற்ற கல்லூரிகளில் படிக்கும் ஆண்களுக்கான ஹாஸ்டலும் அங்கு ஒன்று இருந்தது. “மகாத்மா ஜோதிராவ் பூலே ஆண்கள் விடுதி” என்பது அதன் பெயர். வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து மதுரையில் மெடிக்கல் மற்றும் இஞ்சினியரிங் படிக்கும் வசதி படைத்த மாணவர்கள் அந்த ஹாஸ்டலில் தங்கிருந்தனர். அவர்களில் பலருக்கும் சஞ்சனா மீது ஈர்ப்பு இருந்தது. எப்படியாவது அவளோடு பேச வேண்டும், அவள் மனதை வெல்ல வேண்டும் என்று காத்திருந்தனர்.

கடந்த ஒரு ஆண்டில் அந்த ஹாஸ்டலில் தங்கியிருந்த மாணவர்களில் கிட்டத்தட்ட எட்டுப்பேராவது மதுரையில் சஞ்சனாவிடம் ப்ரப்போஸ் செய்திருப்பார்கள். அதுபோக ப்ரப்போஸ் செய்யாமல் அவளை பஸ்ஸில் பின்தொடரும் உள்ளூர் இளைஞர்களும் இருந்தார்கள். யாராக இருந்தாலும் தான் committed என்பதை சஞ்சனா தைரியமாக சொல்லிவிடுவாள். தனது பர்ஸில் வைத்திருந்த கைலாஷுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட போட்டோவை அவர்களிடம் காட்டி இவன்தான் என் வருங்காலக் கணவன், நானும் இவனும் ஆறு ஆண்டுகளாக காதலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிவிடுவாள். இவ்வளவு அழகான பாய்ஃப்ரண்ட் இருக்கும்போது இவள் தன்னை எப்படி விரும்புவாள் என்று நினைத்து பலரும் விலகிவிடுவார்கள்.

சஞ்சனா கூடுமான மட்டும் தனது நிழல் இளவரசன் விஷயத்தில் மட்டும் தனக்குத்தானே ஏதாவது விளக்கம் கொடுத்து, தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள அவள் முயற்சித்துக் கொண்டிருந்தாள். அவன் மகாத்மா ஜோதிராவ் பூலே ஹாஸ்டலில் இந்த ஆண்டு வந்து புதிதாக சேர்ந்த மாணவனாக இருக்கக்கூடும் என்று நினைத்தாள். மற்ற இளைஞர்கள்போல அவனும் தன் மீது ஏதோ ஒரு கிரஷ் காரணமாக தன்னை சைட் அடிக்கும் நபராக இருக்க வாய்ப்பிருக்கிறது என்று அவள்

தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். ஆனாலும் அவள் சொல்லுவதை அவளுடைய ஆழ்மனமே நம்பவில்லை என்பது வேறுவிஷயம்.

ஒருமுறை அவன் அவன் தன்னை கிராஸ் செய்யும்முன் அவனது முகத்தை ஒருமுறை சஞ்சனா ஏறிட்டுப் பார்த்துவிட்டாள். அவனுடைய கண்களைப் பார்த்த அந்த வினாடி அவள் உயிர் உருகியே விட்டது. காரணம், தன்னுடைய பாதியைத் தொலைத்துவிட்டு அதை பல ஆயிரம் யுகங்களாக தேடித் தேடி கடைசியாக அதைக் கண்டுபிடித்தால் ஒருவன் கண்களில் எவ்வளவு சந்தோஷம் இருக்குமோ… அந்த சந்தோஷத்தை அவள் அவன் கண்களில் அப்போது பார்த்தாள்… அவன் பார்வையில் துளிகூட காமம் இல்ல…கூர்மையான அந்தப் பார்வை சஞ்சனாவின் கண்களுக்குள் ஊடுருவி அவள் உயிரை உலுக்கியது… அவளுக்கு தெளிவாகப் புரிந்துவிட்டது.. "எனக்கு எப்படி அவனை முன்னாடியே தெரியுமோ, அதே மாதிரி நிச்சயமா அவனுக்கும் என்னை முன்னாடியே தெரிஞ்சிருக்கு.. இல்லாட்டி அந்தப் பார்வை சாத்தியமேயில்ல.."

சஞ்சனா அவளையும் அறியாமல் அவனை ஒவ்வொரு நாளும் எதிர்பார்க்க ஆரம்பித்தாள். அவன் வராவிட்டால் அவள் கண்கள் அவனைத் தேட ஆரம்பித்தது. அவளது மனம் முழுவதையும் அவன் ஆக்கிரமித்து இருந்தான். அவள் திரும்பும் இடமெல்லாம் அவளுக்கு அவன் முகமே தெரிந்தது. பல நேரங்களில் தன்னைத்தானே நொந்து கொண்டாள். கடவுளிடம் கோபித்துக் கொண்டாள். மனதுக்குள் பாட்டியைத் திட்டினாள். ஒருவேளை பாட்டி என் மனதை மாற்றாமல் இருந்திருந்தால் "இந்நேரம் இந்த உலகிலேயே மகிழ்ச்சியான நபராக நான்தான் இருந்திருப்பேன்…" அப்படி நினைத்த அடுத்த வினாடியே அவள் மனசாட்சி அவளை கொடூரமாகக் குற்றம்சாட்டியது. "கைலாஷை விட்டுவிட்டு உன் மனம் அவன் பக்கம் சாயத் தொடங்கியிருக்கிறது.." என்று அவளை அது எச்சரித்தது.

மதுரைக்கு வந்த நாளில் விமானத்தில் அவனைக் கனவில் பார்த்த பிறகு சஞ்சனாவுக்கு அந்தக் கனவு கடந்த ஒரு ஆண்டில் வெறும் இரு முறைகள்தான் வந்திருந்தது. காரணம் அவள் படிப்பில் பிசியாக இருந்ததால் கண்டதையும் நினைத்து மனதைக் குழப்பிக்கொள்ள அவளுக்கு நேரம் இருந்ததில்லை. இப்போது அவனைப் பார்த்தபிறகு மறுபடியும் மனக்கிலேசங்கள் அவளை தாக்கத் தொடங்கியிருந்தன. ஆனால் முன்புபோல மயக்க நிலைக்குச் எளிதாகச் சென்றுவிடாதபடி தன் மனப்போராட்டங்களைக் கட்டுப்படுத்த அவள் ஓரளவுக்கு முதிர்ச்சி பெற்றிருந்தாள்.

அந்த நவம்பர் மாதத்தில் சஞ்சனா தனது முடியை குட்டையாக வெட்டி இளவரசி டயானாவின் சிகையலங்காரத்தைப் போல மாற்றிக்கொண்டாள். அந்த நாட்களில் மதுரையில் அந்த சிலையலங்காரத்தோடு பெண்களைப் பார்ப்பது அரிது. அந்த ஹேர்ஸ்டைலில் சஞ்சனா தனித்துவமாக மட்டுமல்ல பேரழகாகவும் தெரிந்தாள்.

****

அன்னை தெரேசா ஹாஸ்டலைத் தாண்டித்தான் செமினரியின் உள்ளே யாருமே செல்ல முடியும். ஏனெனில் செக்போஸ்டை ஒட்டித்தான் அந்த ஹாஸ்டல் இருந்தது. சஞ்சனா ஒருநாள் தன் ஹாஸ்டல் தோழிகளோடு ஹாஸ்டலின் மொட்டை மாடியில் உட்காந்து காஃபி அருந்தியபடி

அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். அப்போது அவன் செமினரியைவிட்டு வெளியே சென்று கொண்டிருந்தான். அப்போது சஞ்சனாவின் அருகே நின்ற ஹாஸ்டல் பெண்கள் பேசிக்கொண்டார்கள்.

“ஹே யாருடி அவன் செம்ம ஹேண்ட்ஸம்மா இருக்கான், டிரெஸ்ஸெல்லாம் சும்மா தாறுமாறா பண்றான்.. “

இன்னொருத்தி சொன்னாள், “அவன் பேரு விஜய், இந்த ஊருதானாம். இந்த செமினரில ஏதோ Religious studies படிக்கிறான் போல இருக்கு. Orphan- னாம்டி, சின்ன வயசுல இருந்தே சர்ச்சுல வளர்ந்தவனாம்…”

அதைக் கேட்ட சஞ்சனாவுக்கு குப்பென்று வியர்த்தது. சிறு வயதில் கனவில் ஒருமுறை “நீ எங்கேயிருந்து வருகிறாய்?” என்று கேட்டபோது அவன் கையை நீட்டி சர்ச்சைக் காட்டியது அவள் மனதில் வந்து போனது...

இனி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளமுடியாது… மனோதத்துவ நிபுணர்கள் சொன்னது தவறு, அவன் என் மூளையே உருவாக்கிய மாயபிம்பம் இல்லை. பாட்டி சொன்னதும் தவறு, அவன் கைலாஷின் நிழல் உருவமும் இல்லை. இவன் நிஜம், இவன் பெயர் விஜய், மதுரையைச் சேர்ந்தவன். அப்படியானால் எனக்கு வந்த கனவு ஹாலுசினேஷன் அல்ல. அந்தக் கனவுக்குப் பின்னால் ஏதோ மிகப்பெரிய அமானுஷ்ய உண்மை இருக்கிறது. இவனுக்கும் எனக்கும் ஏதோ இயற்கைக்கு அப்பாற்பட்ட தொடர்பு இருக்கிறது. அதை மட்டும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அந்தத் தொடர்பு என்ன? பூர்வ ஜென்ம பந்தம் என்பார்களே, இது அதுபோன்ற ஒன்றா? எனக்கு அவனை முன்பே தெரிந்திருப்பதுபோல நிச்சயம் அவனுக்கும் என்னை தெரிந்திருக்கிறது. இது எப்படி சாத்தியம்? அவனுக்கு என்னைப் பற்றி என்ன தெரியும்?... அப்படியெனில் நான் யார்? அவன் யார்?...ஒவ்வொரு முறையும் கனவில் நாங்கள் சந்திக்கும் அந்த சொர்க்கபுரி எது?

விஜய்…விஜய்…விஜய்.. அந்தப் பெயரைக் கேள்விப்பட்ட வினாடிமுதல் அவன் பெயர் அவள் இதயத்துடிப்போடு கலந்து போனது…

அத்தியாயம் 15 - கடவுளின் பாதத்தில் கண்டெடுத்த குழந்தை

"And when I (The Lord) passed by thee, and saw thee polluted in thine own blood, I said unto thee when thou wast in thy blood, Live; yea, I said unto thee when thou wast in thy blood, Live." - Ezekiel 16:6 (Holy Bible)

விஜய் கடந்த 96-ஆம் ஆண்டு மதுரை அமெரிக்கன் கல்லூரியில் B.A - Religion, Philosophy and Socialogy முடித்துவிட்டு, ஒரு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு தற்பொழுது அன்னை பாத்திமா இறையியல் கல்லூரியில் M.A - Religion and Philosophy முதல் ஆண்டு சேர்ந்திருந்தான். மதுரையிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கும் இலந்தைப்பட்டி கிராமத்திலிருந்து கல்லூரிக்கு தினமும் பேருந்தில் வந்து போனான். இலந்தைப்பட்டியில் இருக்கும் ஒரு சிறிய தேவாலயத்தில் ஆயராகப் பணிபுரியும் ஃபாதர் ஐசக் மரியானால் எடுத்து வளர்க்கப்பட்ட குழந்தைதான் விஜய்.

1976-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் ஃபாதர் ஐசக் மரியான் தன் இளம் வயதில் மதுரையில் இருந்த ஒரு பெரிய தேவாலயத்தில் உதவி ஆயராகப் பணியாற்றிக்கொண்டு வந்தார். ஒவ்வொரு நாளும் அதிகாலை 4:00 மணிக்கெல்லாம் பிரார்த்தனை செய்ய எழுந்துவிடுவது அவர் வழக்கம். ஒருநாள் அதிகாலை 4:30 மணியளவில் தேவாலயத்தின் வாசலில் ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டு அவர் ஓடிவந்து பார்த்தபோது, ஆலயத்தின் வாசலிலிருந்த சிலுவையில் தொங்கும் இயேசுநாதர் சிலையின் பாதத்தில் கிழிந்த பழைய துணியில் சுற்றப்பட்டு, குளிரில் நடுங்கியபடி சிசு ஒன்று அழுதுகொண்டிருந்தது.

ஆலய வளாகத்தின் அதிபரும், பங்குத்தந்தையும் கலந்தாலோசித்து அக்குழந்தையை அந்தப் பங்கிலுள்ள ஆதரவற்ற குழந்தைகள் விடுதியில் சேர்த்துவிட முடிவு செய்தார்கள். ஆனால் ஃபாதர் ஐசக் அந்தக் குழந்தை கர்த்தருடைய பாதத்தில் நான் கண்டெடுத்த விசேஷ குழந்தை, எனவே அவனை நானே வளர்க்கிறேன் என்று பிடிவாதமாக இருந்தார். அதனால் பல பிரச்சனைகளையும் சந்தித்தார்.

அது அவரது குழந்தையாக இருக்கலாம் என்று அவரைப் பிடிக்காதவர்கள் அவதூறு பரப்ப, அதனால் மனம் நொந்த ஃபாதர் ஐசக், தனக்கு பணி மாறுதல் வேண்டிக்கொண்டு, இலந்தைப் பட்டியில் இருந்த அந்த சிற்றாலயத்தின் ஆயராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

80-களின் முடிவில் இலங்கையில் நடைபெற்ற போரின் காரணமாக அகதிகளாக தமிழகம் வந்த ஏராளமான ஈழத்தமிழ் மக்கள் மதுரை கூடல்நகரில் இருந்த ஹவுசிங்போர்டில் தங்க வைக்கப்பட்டார்கள். ஃபாதர் ஐசக் அவர்கள் மத்தியில் அருட்பணி செய்துகொண்டு வந்தார். அம்மக்களில் நிறைய படித்த இளைஞர்கள் இங்கிலாந்தில் அகதிகளுக்கான விசா பெற்று அங்கு செட்டிலாக அவர்களுக்கு அவர் உதவி செய்தார். அவரது உதவியினால் அங்கு சென்றவர்கள் அங்கு வசதியாக செட்டில் ஆகி, இன்றளவும் ஃபாதர் ஐசக்கை மறக்காமல் அவரோடு தொடர்பில் இருக்கின்றனர்.

ஃபாதர் அதை கடவுளுக்கு செய்த பணியாகத்தான் நினைத்தாரேயன்றி யாரிடமும் எந்த பதில் உதவியும் எதிர்பார்க்கவில்லை. அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று

நினைத்தவர்களிடம் அவர் கேட்பது ஒன்றே ஒன்றுதான். எனக்கு எதுவும் வேண்டாம், விஜய் படித்து முடித்த பின்னர் இங்கிலாந்துக்கு வந்து வேலை செய்து, அங்கேயே செட்டிலாக அவனுக்கு உதவி செய்யுங்கள் என்பதே. அவரிடம் நன்மை பெற்ற அனைவரும் அதைச் செய்ய ஆயத்தமாகவே இருந்தார்கள்.

ஃபாதர் ஐசக் தன்னுடைய சம்பளத்தில் தான் சிறுக சிறுக சேர்த்து வைத்த ஐம்பதாயிரம் ரூபாயை விஜய்யிடம் கொடுத்து மதுரை ஆப்டெக்கில் சேர்ந்து கம்பியூட்டர் படி, நீ நல்ல இன்ஸ்டிடியூட்டில் படித்தால்தான் UK செல்ல முடியும் என்று அவனைக் கட்டாயப்படுத்தினார். அவ்வளவு செலவு செய்து நான் படிக்க வேண்டியதில்லை என்று சொல்லி அவன் மறுத்தான். உண்மையில் விஜய்க்கு UK சென்று செட்டிலாக விருப்பம் இருந்தாலும், தான் கடைசிவரை ஃபாதரோடு இருந்து அவரை கவனித்துக்கொள்ள வேண்டும் என்றுதான் அதிகம் ஆசைப்பட்டான். ஃபாதர் கட்டாயப்படுத்தியதால் அவரது திருப்திக்காக ஒரு மதுரை கூடல்நகரில் இருந்த ஒரு சின்ன கம்பியூட்டர் அகாடமியில் சேர்ந்து weekend course படித்துக் கொண்டிருந்தான்.

****

விஜய் தன்னுடைய பள்ளிப்படிப்பை கரட்டுப்பள்ளி என்று அழைக்கப்படும் அலங்காநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் முடித்திருந்தான். அரசுப் பள்ளியில் தமிழ் மீடியம் படித்ததால் முதன் முதலாக அவன் பி.ஏ படிக்க அமெரிக்கன் கல்லூரிக்குச் சென்றபோது அங்கு அவன் கேட்ட நுனிநாக்கு ஆங்கிலத்தையும், அங்குள்ள நகரத்து மாணவர்களின் கலாச்சாரத்தையும் கண்டு மிரண்டு போனான். ரொம்பவுமே தாழ்வு மனப்பான்மையால் பாதிக்கப்பட்டான்.

அவன் தாழ்வு மனப்பான்மையை நீக்க ஃபாதர் ஐசக் அவனை ஒரு பெரிய பியூட்டி பார்லருக்குக் கூட்டிச்சென்று ஸ்டைலாக சிகையலங்காரம் செய்ய வைத்து, அமெரிக்கன் கல்லூரி எதிரே இருந்த டிரண்ட்ஸ் ஷோரூமில் அவன் விருப்பத்துக்கேற்ப ஜீன்ஸ் டி-ஷர்ட் எடுத்துக் கொடுத்தார். அவன் டிரஸ் செலக்ட் செய்த விதம் ஃபாதரை ஆச்சரியப்படுத்தியது. விஜய் இயற்கையிலேயே நல்ல ஓவியம் வரையும் திறனும், தமிழில் கதை, கட்டுரை மற்றும் பாட்டு எழுதும் திறனும் பெற்றிருந்தான். அவன் எழுதிய பல துதிப்பாடல்களை ஃபாதர் தனது ஆலய வழிபாட்டில் பாடுவது வழக்கம். அவனது அந்த கிரியேட்டிவிட்டி அவனது ஆடை செலக்ஷனிலும் வெளிப்பட்டது. விரைவிலேயே “டிரஸ் பண்ணா நம்ம விஜய் மாதிரி டிரஸ் பண்ணனும்…” என்று அவன் கல்லூரி நண்பர்கள் பேசும் அளவுக்கு விஜய் மாறிப்போனான்.

****

1997, டிசம்பர் 18…

சஞ்சனாவின் சீனியர் வனிதா அவளுடைய காதலன் மெல்னியுடன் மகாத்மா ஜோதிராவ் பூலே ஹாஸ்டல் கேண்டீனில் விஜய்க்கு எதிரில் அமர்ந்திருந்தாள். வனிதா சொன்ன அதிர்ச்சியான செய்திகேட்டு விஜய் முற்றிலும் நிலைகுலைந்து போய் உட்காந்திருந்தான்.

“சஞ்சனாவுக்கு கைலாஷ் என்ற காதலன் இருக்கிறான். அவள் 11-ஆம் வகுப்பு படிக்கும்போதே அவனைக் காதலிக்கத் தொடங்கிவிட்டாள். அவன் இப்போது ஆஸ்திரேலியாவில்

படித்துக்கொண்டிருக்கிறான். சஞ்சனா மதுரையில் படிப்பு முடித்து டார்ஜிலிங் திரும்பியவுடன் இருவருக்கும் திருமணம் நடக்கப்போவது நிச்சயம்…”

மெல்னி கேரளாவைச் சேர்ந்தவன், மகாத்மா ஜோதிராவ் பூலே ஹாஸ்டலில் தங்கி அன்னை ஃபாத்திமா இறையியல் கல்லூரியில் எம்.எஸ்.ஸி விஷுவல் கம்யூனிகேஷன் படித்துக் கொண்டிருந்தான். அது இறையியல் கல்லூரியாக இருந்தாலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடத்தும் விஷுவல் கம்யூனிகேஷன் கோர்ஸின் வகுப்புகள் அங்கு நடந்து கொண்டிருந்தன. மெல்னியும் வனிதாவும் காதலர்கள். வனிதா மதுரையைச் சேர்ந்தத் தமிழ்பெண். மெல்னிக்கும் விஜய்க்கும் கேண்டீனில் சாப்பிட வரும்போது பழக்கம். சீக்கிரமே இருவரும் நண்பர்களானார்கள். மெல்னியிடம் விஜய் தான் சஞ்சனாவைக் காதலிக்கும் விஷயத்தை சொல்லியிருந்தான். மெல்னிக்கு ஏற்கனவே சஞ்சனா வனிதா மூலம் பழக்கம். அவள் committed என்ற விஷயமும் அவனுக்குத் தெரியும். ஆனால் விஜய் சஞ்சனாவை ரொம்ப சீரியஸாக காதலிப்பது தெரிந்ததால், வனிதா மூலமாகவே அதைச் சொன்னால் அவன் புரிந்துகொள்வான் என்று நினைத்தான்.

“சஞ்சனா தன்னோட காதல்ல ரொம்ப உறுதியா இருக்கா விஜய், அதுனால அவளை மறந்துவிடு…உனக்கு அவளைவிட வேறு நல்ல பொண்ணு கிடைப்பாள்…” என்று வனிதா விஜய்க்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாள். விஜய் அவளுக்கு எதிரே உயிரற்ற பிணம் போல உட்காந்திருந்தான்.

****

“அவன் ரொம்ப சின்சியரா இருக்கான் சஞ்சனா, ஆள் பார்க்கத்தான் ரொம்ப மார்டனா இருக்கான். ஆனா இங்கிலீஷ் சுத்தமா பேச வரல, அதான் உங்கூட பேச தயங்குறான். ஆனா ரொம்ப டீசண்ட்.. நீ அவனுக்கு இல்லைங்கிற உண்மைய அவனால தாங்கிக்கவே முடியல, பாவம் அதுல இருந்து எப்படி வெளிய வரப்போறானோ தெரியல…”

விஜய்யை சந்தித்துவிட்டு அன்று மதியமே வனிதா சஞ்சனாவை கல்லூரியில் சந்தித்து விஷயத்தைச் சொன்னாள். சஞ்சனா உணர்ச்சியற்ற மரம் போல உட்காந்திருந்தாள்.

“அவன் ஏன் என்னை லவ் பண்றாங்கிறதுக்கு ஏதாவது reason சொன்னானா?”

“லூசாடி நீயி, பசங்க லவ் பண்றதுக்கு என்ன பெருசா ரீசன் இருந்திடப் போகுது…உன்னைப் பிடிச்சிருக்கு அதுனால லவ் பண்றான்…”

சஞ்சனா அமைதியாக இருந்தாள்…

****

சஞ்சனா கைலாஷை காதலிப்பது தெரிந்த பின்னும் விஜய் சஞ்சனாவை பார்ப்பதை நிறுத்தவில்லை. அவள் கல்லூரிக்கு போகும்போதும், திரும்பி வரும்போதும் எதிரே வருவதும் அவளைப் பார்த்தபடி கடந்து போவதும் தொடர்ந்தது. சஞ்சனா அதை வனிதாவிடம் சொல்லி, மெல்னி விஜய்யை கடுமையாக திட்டினான்.

“உன்னை ரொம்ப நல்லவன்னு நெனச்சுத்தான் என் லவ்வரை வரச்சொல்லி உன்கூட சஞ்சனா பத்தி பேச வச்சேன், அவ உனக்கு இல்லைன்னு தெரிஞ்சபிறகும் நீ அவளை ஃபாலோ பண்றது கொஞ்சம் கூட நல்லா இல்ல விஜய்…”

விஜய் அமைதியாக பதில் சொன்னான், “நான் அவளை எந்த தொந்தரவும் பண்ணல மெல்னி, just அவ முகத்தைப் பார்த்துட்டு pass பண்ணி போயிடுறேன். இதுல என்ன பிரச்சனை இருக்கு? என்னால அவளை மறக்க முடியல, மறக்கவும் மாட்டேன்…காரணம் சொன்னா அதை உன்னால புரிஞ்சுக்க முடியாது”

உண்மையில் விஜய் சஞ்சனாவை எந்த தொந்தரவும் செய்யவில்லைதான். அவளைப் பின் தொடர்ந்து போய் தொந்தரவு செய்ததில்லை, தன்னோடு பேசச் சொல்லி அவளைத் தொந்தரவு செய்ததில்லை, காதல் கடிதங்கள் கொடுத்ததில்லை, அவளுக்கு போன் செய்து பேச முயன்றதில்லை. தினமும் இரண்டு முறை அவளைப் பார்த்தபடி கடந்து செல்வதைத் தவிர அவன் வேறு ஒன்றும் செய்ததில்லை.

சஞ்சனாவுக்கு விஜய்யோடு பேச வேண்டும், அவனைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும், தான் அவனைக் கனவில் பார்த்தது போல அவனுக்கு தன்னை எப்படித் தெரியும் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும் என்பது போன்ற ஆசைகள் அவள் மனதில் நிறையவே இருந்தன ஆனால் ‘கைலாஷ்’ என்ற ஒற்றை மந்திரச் சொல் அவளை முழுவதுமாக கட்டிப்போட்டுவிட்டது. கைலாஷைத் தவிர இன்னொருவனை மனதில் நினைப்பதே பாவம் என்ற மனநிலையில் அவள் இருந்தாள்.

அத்தியாயம் 16 - என்னை மறந்துவிடு கைலாஷ்…

"Love is of all passions the strongest, for it attacks simultaneously the head, the heart, and the senses." - Lao Tzu

சஞ்சனாவின் தாய்மொழி பெங்காலி என்று தெரிந்த நாளிலிருந்தே விஜய் மதுரை கிருஷ்ணாபுரம் காலணியில் இருக்கும் ஒரு டீச்சரிடன் பெங்காலி கற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்தான். இந்த விஷயம் மெல்னிக்குத் தெரிந்து ரொம்பவும் ஆச்சரியப்பட்டான். மெல்னி அப்போது மதுரையில் தனது படிப்பை முடித்துவிட்டு கேரளாவில் வேலை தேடிக் கொண்டிருந்தான். விஜய் பெங்காலி கற்றுக்கொள்ளும் விஷயம் செமினரியில் இருந்த தனது ஜூனியர் நண்பர்கள் மூலமாக மெல்னிக்குத் தெரியவந்தது. விஜய்யின் இந்த முரட்டுக் காதல் அவனுக்குப் பைத்தியகாரத்தனமாகத் தோன்றியது. விஜய் பெங்காலி படிக்கும் விஷயம் மெல்னி சொல்லி, வனிதா வழியாக சஞ்சனாவின் காதுகளுக்குப் போனது. அவள் மனம் விஜய்க்காக உள்ளூர உருகத் தொடங்கியது.

1998 நவம்பர்…

சஞ்சனா மதுரை சிம்மக்கல் ஆப்டெக்கில் மாலை 3:00 to 5:00 பேட்சில் படிப்பது விஜய்க்கு சமீபத்தில்தான் தெரிந்திருந்தது… “ச்சே..ஃபாதர் சொல்லும்போதே ஒழுங்கா ஆப்டெக்ல போய் சேர்ந்திருந்தா ஒரு வருஷத்துக்கு முன்னாலயே சஞ்சனாவைப் பார்த்திருக்கலாமே, அவளோட பேட்ச்லயே படிச்சிருக்கலாமே” என தன்னைத்தானே நொந்து கொண்டான்.

ஃபாதர் ஐசக் ஆப்டெக்கில் சேர கொடுத்த ஐம்பதாயிரம் ரூபாயை விஜய் வாங்க மறுத்ததற்குக் காரணம், ஒன்று ஃபாதருக்கு ஏதாவது உடல்நலக் கோளாறு ஏற்பட்டால் அந்தப் பணம் தேவைப்படும், அல்லது திருச்சபையின் காரியங்களுக்குத் தேவைப்படும். அவர் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்ததை நாம் செலவிட வேண்டாம் என்று நினைத்திருந்தான். ஆனால் இன்று காதல் அவன் கண்களை மறைத்தது. ஃபாதரிடம் போய் தான் ஆப்டெக்கில் சேருவதாகச் சொல்லி அந்தப் பணத்தை அவரிடமிருந்து வாங்கிச் சென்றான்.

மதுரை சிம்மக்கல்லில் ஒரு வணிக வளாகத்தின் மாடியில் ஆப்டெக் அகாடமி செயல்பட்டுக் கொண்டிருந்தது. மாடியில் ஏறி ரிஷப்ஷனுக்குப் போனதும் விஜய்யின் கண்ணில் முதலில் பட்டது lab-க்குள் உட்காந்திருந்த சஞ்சனாதான். அவள் அடிக்கடி அணியும் சிவப்பு நிற lacoste t shirt-ட்டும், புளூ ஜீன்ஸும் அணிந்திருந்தாள். lab-க்குள்ளிருந்து சஞ்சனாவும் தன்னை கவனித்துவிட்டதை விஜய் அறிந்துகொண்டான். பணத்தைக் கட்டி, தனக்கு 3:00 to 5:00 பேட்ச் வேண்டும் என்று கேட்டுப் பெற்றுக்கொண்டான். தன் உயிருக்கு உயிரானவளோடு அருகே அமர்ந்து படிக்கப்போகும் வாய்ப்பு கிடைத்துவிட்டதை எண்ணி அவன் மனம் சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருந்தது.

ஆப்டெக்கில் அந்த வார இறுதி கிளாஸ் வந்தது, சஞ்சனாவோடு முதல் முறையாக பேசப்போகும் அந்த நேரத்தை எண்ணி அவன் முந்தைய நாள் முழுவதும் தூங்கவில்லை. அவள் அருகே உட்காரும்போது வாசனையாக இருக்க வேண்டும் என்பதற்காக விலையுயர்ந்த செண்ட் எல்லாம்

வாங்கி வைத்திருந்தான். பெங்காலியில் எப்படி தன்னை அறிமுகப்படுத்திக்கொள்வது என தனக்குத் தெரிந்த பெங்காலியில் திரும்பத் திரும்ப சொல்லிப்பார்த்தான்.

தன்னிடம் இருந்த உடைகளிலேயே சிறப்பானதொன்றை எடுத்துப் போட்டுக்கொண்டு காலை எம்.ஏ கிளாசை முடித்துவிட்டு மதியம் ஆப்டெக்குக்கு ஏராளமான எதிர்பார்ப்புகளோடு கிளம்பிச் சென்றான். அதுவரை அதுபோன்றதொரு மகிழ்ச்சியில் அவன் மனம் மிதந்ததில்லை.

ஆனால் அன்று வகுப்புக்கு சஞ்சனா வரவில்லை. விஜய்க்கு அது ஏமாற்றமாக இருந்தாலும், சரி நாளை மறுநாள் அடுத்த வகுப்பில் அவளைப் பார்க்கத்தானே போகிறோம் என்று தன்னைதானே தேற்றிக்கொண்டான்.

****

“என்னடி, இன்னிக்கு கம்பியூட்டர் கிளாஸுக்கு போகல?” கல்லூரி விட்டுவந்த ரூம்மேட் பாபி சஞ்சனாவிடம் கேட்டாள்.

“இல்ல…” என்றாள் சஞ்சனா..

“ஏன் என்னாச்சு..”

“அங்கேயும் அவன் வந்துட்டான்…”

“எவன்?”

“அந்த விஜய்..”

“சரி அதுக்கு?”

“அதனால பேசாம discontinue பண்ணிடலாம்னு இருக்கேன்”

பாபி அதிர்ந்தாள்…”அடிப்பாவி, ஆப்டெக் சர்ட்டிஃபிகேட்டோட வேல்யூ தெரியுமா உனக்கு? ஒன்றரை வருஷம் முடிச்சிட்டேல, இன்னும் மூணு மாசம்தானே முடிச்சிட்டு சர்டிஃபிக்கேட் வாங்குறத விட்டுட்டு அவன் வந்துட்டான், இவன் வந்துட்டான்னு சொல்லிட்டு இருக்க?, அந்த நாய் வந்து உன்னை தொந்தரவு பண்ணா செருப்பக் கழட்டி நாலு அடி அடிக்கிறத விட்டுட்டு கோர்ஸை discontinue பண்ணிட்டேன்னு வந்து உட்காந்திருக்க… நீ செய்யுறது கொஞ்சம் கூட சரியில்ல சஞ்சனா…”

பாபி இவ்வளவு கோபமாக சஞ்சனாவிடம் பேசியதில்லை..

“உனக்கு எதுவும் புரியாது பாபி… என்னைக் கொஞ்சம் தனியா விடு ப்ளீஸ்..”

“சரி, Kuch Kuch Hota Hai சினிப்பிரியா தியேட்டர்ல ஓடுது, நம்ம ஃப்ரண்ட்ஸ் எல்லாம் ஈவினிங் ஷோ போறாங்க நானும் போறேன்.. நீ வர்றியா?” பாபி கேட்டாள்….

“இல்ல பாபி, நீ போயிட்டு வா, இன்னிக்கு நைட் 9 மணிக்கு கைலாஷ்கிட்ட இருந்து போன் வரும்… நான் இங்க இருக்கணும்…”

****

சரியாக இரவு 9:30 மணியளவில் அண்ணாத்துரை வந்து ஹாஸ்டலுக்கு கீழே நின்று கத்தினான்…

“சஞ்சனா அக்கா….”

சஞ்சனா அவசர அவசரமாக கீழே இறங்கி அண்ணாத்துரையோடு சேர்ந்து டெலிபோன் பூத்தை நோக்கி வேகமாக நடந்தாள்.

கைலாஷ் மறுமுனையில் காதலியின் குரல் கேட்க ஆவலாகக் காத்திருந்தான். சஞ்சனா ரிசீவரை எடுத்து “ஹலோ…” என்றவுடன்…

“என்னடி செல்லம் சாப்ட்டியா? என் உயிரே, புஜ்ஜி குட்டி...”

முன் எப்போதையும்விட அன்று கைலாஷ் அவளை ரொம்பவே கொஞ்சினான். சஞ்சனா ரொம்பவும் குழம்பிப் போயிருந்தாள் என்பது அவளது பேச்சிலேயே தெரிந்தது. கைலாஷ் அவளை கூல் பண்ணுவதற்காக ஜாலியாகப் பேசுவதாக நினைத்து…

“இங்க மெல்பர்ன்ல பொண்ணுங்க எல்லாம் லட்டு மாதிரி இருக்காங்க தெரியுமா சஞ்சு ? நம்ம டார்ஜிலிங்க்லாம் ஒண்ணுமே இல்ல...”

சஞ்சனாவிடமிருந்து அடுத்த வார்த்தை நெருப்பாய் வந்து விழுந்தது, “நானும் டார்ஜிலிங்காரிதானே, நான் ஒண்ணுமே இல்லைங்கிறியா, அப்ப நீ அங்க இருக்குற லட்டுல ஏதாவது ஒரு லட்டை பார்த்து செட்டில் ஆகிக்க… என்னை ஆளை விட்டுரு……”

“ஐயோ சஞ்சு நான் அப்படிச் சொல்லல..”

“நீ எப்படி வேணாலும் சொல்லிக்க…இதோட போதும்… நானே உங்கிட்ட பேசணும்னு நெனச்சேன் கைலாஷ்… You deserve a better girl than me..என்னை விட்டுடு..இன்னியோட நாம பிரேக்-அப் பண்ணிக்கலாம்…”

சஞ்சனா ரிசீவரை போனில் வைத்துவிட்டு பூத்தை விட்டு வெளியேறினாள்…

ஹாஸ்டலை நோக்கி கொஞ்ச தூரம் நடந்திருப்பாள், அதற்குள் அண்ணாதுரை அவள் பின் ஓடிவந்தான்…”அக்கா அக்கா.. அவர் உங்களுக்கு திரும்ப கால் பண்றாரு..”

சஞ்சனா அரை மனதுடன் திரும்பி வந்தாள், அதற்குள் பூத்தில் வேறு ஒரு பெண் நின்று யாருடனோ சிரித்து சிரித்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். சஞ்சனா பூத்தின் வெளியே காத்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண் போகவும், பூத்துக்குள் நுழைந்து கைலாஷுக்கு அவளே போன் செய்தாள்…

“ம்ம்ம்.சொல்லு கைலாஷ்..”

“என்ன சஞ்சு இப்படி சொல்லிட்ட.. நீ ஏதோ depression-ல இருக்கேன்னு தோணுச்சு, உன்னை கூல் பண்றதுக்காக அப்படி பேசுனேன்…”

“எது டார்ஜிலிங் பொண்ணுங்கள்லாம் வேஸ்ட்டுன்னு சொன்னதா..”

“ஐயோ சஞ்சு, நான் அதை உன்னை மனசுல வச்சுட்டு சொல்லல, நீ என் உயிர்டி…என் கண்ணுக்கு உன்னைவிட பேரழகி இந்த உலகத்துல எவளுமே இல்ல. நான் மத்த பொண்ணுங்களைச் சொன்னேன்… அதை நீ இப்படி மீன் பண்ணுவன்னு தெரியாம பேசிட்டேன், என்னை மன்னிச்சிரு சஞ்சு..”

சஞ்சனா பதில் ஏதும் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.. அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

“உன்னைத் தவிர நான் வேறு யாரையும் என்னால மனசால கூட நினைக்க முடியாது சஞ்சு, நீ இல்லாத வாழ்க்கை எனக்கு தேவையே இல்லை. அப்படியொரு வாழ்க்கையை என்னால கற்பனை பண்ணியும் பார்க்க முடியல, பிரேக்-அப்ங்கிற வார்த்தையை மட்டும் மறுபடியும் சொல்லிராத சஞ்சனா, அதுக்கு பதிலா என்னை செத்துருன்னு சொல்லு, செத்துடறேன்…”

சஞ்சனா எதுவும் பேசாமல் அழுதுகொண்டிருந்தாள், அவள் தேம்புவதும் மட்டும் மறுமுனையில் இருந்த கைலாஷுக்குத் தெரிந்தது…

“மனசப் போட்டு ரொம்ப அலட்டிக்காத சஞ்சு, நான் எப்பவும் வர்ற மாதிரி இன்னிக்கு உன் கனவுல வருவேன், நாம இதுவரைக்கும் போகாத best place-க்கு உன்னை கூட்டிட்டுப் போறேன்… சரியா?

இதற்குமேல் அவன் பேசுவதைக் கேட்டால் இதயம் வெடித்துவிடும் என்று நினைத்தாளோ என்னவோ சஞ்சனா ரிசீவரை வைத்துவிட்டு.. வெளியே வந்து அண்ணாத்துரையின் டேபிளில் ஒரு ஐநூறு ரூபாய் நோட்டை வைத்துவிட்டு அவன் தரும் மீதி சில்லரைக்காக காத்திருக்காமல் ஹாஸ்டல் நோக்கி ஓடினாள். அவள் அழுத கோலத்தில் இருப்பதைக் கண்டு அதிர்ந்த அண்ணாத்துரை அவள் ஓடுவதை மிரட்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

கைலாஷிடமிருந்து பூத்துக்கு மீண்டும் கால் வந்தது… அண்ணாத்துரை ரிசீவரை எடுத்து.. “அவங்க போய்ட்டாங்க சார்…” என்று சொல்லிவிட்டு கட் செய்தான்.

அறைக்குள் ஓடிய சஞ்சனா டேபிளில் இருந்த பழம் வெட்டும் கத்தியை எடுத்து தனது இடது கையை அறுத்துக் கொண்டாள். இரத்தம் பீறிட்டு வெளியேறி அறை முழுவதும் சிந்தியது. அவள் கண்கள் சொருகியது, அறையில் இருந்த இரு கட்டில்களுக்கும் இடையே தரையில் சரிந்து விழுந்தாள்… அறை முழுவதும் இரத்தம் கொட்டிக் கிடந்தது.

சினிமாவுக்குச் சென்றுவிட்டு உள்ளே நுழைந்து கதவைத் திறந்த பாபி.

“சஞ்சனாஆஆஆஆ….”

அந்த இறையியல் கல்லூரி வளாகமே அதிரும்படி அலறினாள்…

அத்தியாயம் 17 - ஒரு இதயம் ஒருவனுக்கே...

"She is as constant as the northern star, her love unwavering and true." - William Shakespeare

என்னை தாலாட்ட வருவாளோ..
நெஞ்சில் பூமஞ்சம் தருவாளோ…
தங்கத் தேராட்டம் வருவாளோ…
இல்லை ஏமாற்றம் தருவாளோ…

நண்பனின் ஹாஸ்டல் அறையில் தங்கிக்கொண்டு, வாக்மேனில் 25-ஆவது முறையாக அந்தப் பாட்டை ரீவைண்ட் செய்து கேட்டுக்கொண்டிருந்த விஜய்க்கு ஆம்புலன்ஸ் வந்த சைரன் சத்தம் கேட்கவில்லை. விஜய்க்கு சஞ்சனா தங்கும் கேம்பஸிலேயே தானும் தூங்க வேண்டும் என்ற ஆசை. அதனால் அவ்வப்போது நண்பர்களின் ஹாஸ்டல் அறையில் தங்கிவிடுவான்.

ஆம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்ட சஞ்சனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். பாபி அவளோடு இருந்தாள். அன்று இரவே அர்ஜுனன் குடும்பத்தினர் விஷயமறிந்து ஓடிவந்து அவளைப் பார்த்தனர். தாகூரும், மகேஷ்வரியும் அன்றிரவே விமான டிக்கெட் புக் செய்து மறுநாள் காலையில் மருத்துவமனை வந்தடைந்தனர்.

விஜய் சஞ்சனாவை எந்த விதத்திலும் தொந்தரவு செய்யக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தான். ஆனால் அவள் தற்கொலைக்கு முயன்று ஆம்புலன்சில் எடுத்துச்செல்லப்பட்டது மட்டும் அவனுக்குத் தெரிந்திருந்தால் அலறியபடி ஆம்புலன்ஸ் பின்னால் ஓடியிருந்திருப்பான். மருத்துவமனையில் போய் அவன் முதல் ஆளாக நின்றிருந்திருப்பான். அழுது கத்தி ஆர்ப்பாட்டம் செய்திருப்பான். ஒருவேளை சஞ்சாவின் உயிருக்கு ஏதாவது என்றால் அவளுக்கு முன்னரே அவன் அங்கு உயிரை விட்டிருந்திருப்பான். ஆனால் அப்படி எதுவும் நடக்காதபடி இசைஞானி இளையராஜா தனது இசையால் அவனைக் கட்டிப்போட்டு வைத்திருந்தார். அவனும் அந்தப் பாடலைக் கேட்டபடியே சஞ்சனா நினைவில் மூழ்கியிருந்தான்.

பாபி சரியான நேரத்தில் வந்து சஞ்சனவைப் பார்த்ததால் அவள் காப்பாற்றப்பட்டாள். பாபிக்கு சஞ்சனாவின் பெற்றோர் நன்றி சொல்லினர். அர்ஜுனனுக்கு தாங்கள் மிகவும் சிரமம் கொடுத்துவிட்டதாக தாகூர் வருந்தினார். இந்தக்கால இளசுகள் அப்படித்தான் இருப்பார்கள் என்று அர்ஜுனன் அவரைத் தேற்றினார். அன்று மாலையே சஞ்சனாவை டிஸ்சார்ஜ் செய்து டார்ஜிலிங் அழைத்துச் சென்றனர். ஒருமாதம் அவள் டார்ஜிலிங்கிலேயே இருந்து கொஞ்சம் உடலையும், மனதையும் தேற்றிக்கொண்டு வரட்டும் என்று அர்ஜுனனும் சொல்லிவிட்டார்.

சஞ்சனா தற்கொலைக்கு முயன்றதை அறிந்து துடித்துப்போன கைலாஷ் உடனடியாக டார்ஜிலிங் வந்துவிட்டான், இன்னொருபக்கம் நிரஞ்சனாவும் வந்துவிட்டாள். அது கிறிஸ்துமஸ் காலமாய் இருந்தபடியால் ஆஸ்திரேலியாவிலும், இங்கிலாந்திலும் நீண்ட விடுமுறை இருந்தது. நிரஞ்சனாவும், சஞ்சனாவும், கைலாஷும் தன்னுடன் ஒரு மாதம் இருக்கப்போவது பாட்டிக்கு

மிகவும் சந்தோஷமாக இருந்தாலும் சஞ்சனா தற்கொலை முயற்சி செய்த விஷயத்தை பாட்டியால் ஜீரணிக்கவே முடியவிலை.

அவளிடம் யாரும் எதுவும் கேட்காதீர்கள் என்று தாகூர் சொன்னதால் “என்ன காரணத்துக்காக தற்கொலைக்கு முயன்றாய்?” என்று யாரும் அவளிடம் கேட்கவில்லை, அவளும் யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. அவளுக்கு ஏற்கனவே மனோவியாதி இருந்ததால் மன அழுத்தம் காரணமாக அவள் அப்படியொரு முடிவு எடுத்திருக்கலாம் என்று நினைத்தார்கள்.

தன்னைச்சுற்றி கைலாஷ், பாட்டி, நிரஞ்சனா, அம்மா, அப்பா, அத்தனை பேரும் இருந்ததால் சஞ்சனா அந்த ஒரு மாதம் ரொம்பவே சந்தோஷமாக இருந்தாள். கைலாஷ் அவள்மீது திகட்டத் திகட்ட காதலைப் பொழிந்திருந்தான். சஞ்சனாவும், அவனும் டார்ஜிலிங்கில் தங்கள் காதலுக்கு நாஸ்டால்ஜியாவாக இருக்கும் பல இடங்களுக்கு திரும்பவும் பயணித்தார்கள். தாங்கள் அடிக்கடி உண்ணும் ரெஸ்டாரண்டுகளுக்குச் சென்றார்கள். இருவரும் படித்த ஸ்கூலுக்குப் போய் தங்கள் பழைய ஆசிரியர்களுடனும், பள்ளி ஊழியர்களிடமும் பேசினார்கள். பழைய வகுப்புத் தோழர்களை சந்தித்தார்கள்.

பிரின்ஸிபலிடம் கெஞ்சி கூத்தாடி ஸ்பெஷல் பெர்மிஷன் வாங்கி பள்ளிப் பேருந்தில், யூனிஃபார்ம் அணிந்து வீட்டிலிருந்து பள்ளிவரை, தாங்கள் வழக்கமாக உட்காரும் சீட்டில் உட்காந்து பயணம் செய்து மகிழ்ந்தார்கள். சஞ்சனா மனதளவில் மிகவும் தேறியிருந்தாள். ஆனால் அவள் மனம் அவ்வப்போது டார்ஜிலிங்கை விட்டு மதுரையில் சுற்றிக் கொண்டிருந்தது. விஜய் தன்னை ஆப்டெக்கில் காணாமல் எவ்வளவு ஏமாற்றமடைந்திருப்பானோ, ஒருவேளை தான் தற்கொலைக்கு முயன்றது அவனுக்கு தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பான், எப்படியெல்லாம் துடித்திருப்பான்?... இப்படி பல விஷயங்கள் அவள் மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

நல்லவேளையாக விஜய்க்கு சஞ்சனா தற்கொலைக்கு முயன்ற விஷயம் தெரியவில்லை. ஹாஸ்டலில் இருந்த ஒரு சிலருக்கு தெரிந்ததேயன்றி கல்லூரியில் யாருக்கும் தெரியாதபடி அர்ஜுனன் பார்த்துக்கொண்டார். வனிதாகூட சஞ்சனா ஏதோ லீவு எடுத்து ஊருக்குச் சென்றிருக்கிறாள் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தாள்.

****

சஞ்சனாவை ஒரு மாதமாக ஆப்டெக்கிலோ அல்லது இறையியல் கல்லூரி வளாகத்திலோ காணாமல் விஜய் துடித்துப் போயிருந்தான். ஆப்டெக்கில் அவளது பேட்ஜ்ஜைச் சேர்ந்த சக மாணவர்களிடம் விசாரித்தபோது அவள் discontinue பண்ணிவிட்டதாகவும், அதற்கான காரணம் தெரியவில்லை என்றும் கூறினர். அதைக் கேட்டு அவன் உடைந்து போனது மட்டுமல்ல, அவள் படிப்பு பாழாக தானே காரணம் என்ற குற்றமனசாட்சியும் அவனை ஆட்டிப்படைக்க ஆரம்பித்தது.

****

1999, ஜனவரி…

கைலாஷ் மெல்பர்னுக்கும், நிரஞ்சனா லண்டனுக்கும் திரும்பியிருந்தார்கள். சஞ்சனா ஓரளவுக்கு மனத்தெளிவு பெற்றவளாய் திரும்பி மதுரை வந்திருந்தாள்.

அது ஒரு சனிக்கிழமை மாலை… பாபி அவளுக்காக ஜெயராம் பேக்கரியில் நிறைய ஸ்நாக்ஸ் வாங்கி வந்திருந்தாள். இரவு உணவு முடித்துவிட்டு, ஸ்னாக்ஸை கொறித்தபடி அவ்வப்போது ஃப்ளாஸ்கிலிருந்து காஃபியை ஊற்றிக் குடித்தபடி இரவு முழுவதும் பேசிக்கொண்டிருந்தனர். சனிக்கிழமை இரவுகளில் அப்படிப் பொழுதைக் கழிப்பது அவர்களுக்குப் பிடித்தமான ஒன்று, விடிய விடிய அரட்டை அடித்துவிட்டு மறுநாள் தாமதமாக எழுந்திருப்பார்கள்.

பாபி, "நான் ஆரம்பத்துல இருந்து உன்னைப் பார்த்திருக்கேன் சஞ்சனா, உன்கிட்ட எத்தனையோ பசங்க ப்ரப்போஸ் பண்ணிருக்காங்க, நீ அத்தனை பேரையும் லெஃப்ட் ஹேண்ட்ல டீல் பண்ணுவ… ஆனா இந்த விஜய் விஷயத்துல மட்டும் ஏன் இவ்வளோ சென்சிட்டிவ்வா இருக்க?…"

சஞ்சனா சில வினாடிகள் அமைதியாக இருந்துவிட்டு பின்னர், "மத்த பசங்க மாதிரி அவனை என்னால டீல் பண்ண முடியாது பாபி.."

பாபி, "அதான் ஏன்னு கேட்குறேன்… நீயும் அவனை லவ் பண்றியா?"

சஞ்சனா, "நான் கைலாஷைத்தான் லவ் பண்றேன்… ஒருத்தி ஒருத்தனைத்தானே லவ் பண்ண முடியும்?"

"அப்டீன்னா விஜய்யை மீட் பண்ணி ஓப்பனா சொல்லிரு, அவனும் தன்னோட மனசுல ஆசையை வளர்த்துட்டு இருப்பான்ல, பாவம்தானே அவன்?"

"அவனை face பண்றதுக்கு எனக்கு தைரியம் இல்ல பாபி"

பாபி அலுத்துக்கொண்டாள், "என்ன சஞ்சனா சொல்ற, எனக்கு சத்தியமா ஒண்ணுமே புரியல"

சஞ்சனா முதல் முறையாக தன் மனதைத் திறந்தாள். ஆறு வயதில் அவனை கனவில் சந்தித்தது முதல் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அவனைப் பார்த்தது வரை சொல்லி முடித்தாள். பாபி சிலை போல உட்காந்திருந்தாள். இப்படியும் நடக்குமா என்ற ஆச்சரியம் அவளை உலுக்கியிருந்தது.

"என்னால நம்பவே முடியல சஞ்சனா, நீ சொல்றதால நம்பாம இருக்கவும் முடியல. இதெல்லாம் நான் சினிமால பார்த்திருக்கேன், கதைகள்ல படிச்சிருக்கேன்…நிஜத்துல இப்படியெல்லாம் நடக்குமா?"

சஞ்சனா நா தழுதழுக்க, "என் வாழ்க்கைல நடந்துக்கிட்டு இருக்கே, நான் என்ன செய்ய?..." சொல்லிவிட்டு தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்.

"நான் சொல்றேன்னு தப்பா எடுக்காத சஞ்சனா, இப்ப நீ எடுக்கிற முடிவுலதான் எல்லாமே இருக்கு. எனக்கென்னமோ நீ விஜய்யை கல்யாணம் பண்ணிக்கிறதுதான் நல்லதுன்னு எனக்கு தோணுது, உங்க ரெண்டு பேருக்கும் இடையில ஏதோ ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட பந்தம்

இருக்கு. எங்கயோ இருக்கிற டார்ஜிலிங்க்ல இருந்து நீ மதுரைக்கு வந்து அவனை பார்த்ததுக்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கு.."

"அப்டீன்னா கைலாஷை அம்போன்னு விட்டுடச் சொல்றியா?..." அழுது தேம்பியபடியே கேட்டாள் சஞ்சனா.

"நான் அப்படி சொல்லல சஞ்சனா, நீ இல்லைன்னா கைலாஷ்க்கு ஆயிரம் பொண்ணு கிடைக்கும். ஆனா கோடியில ஒருத்தருக்குக்கூட உனக்கு நடந்த மாதிரி சூப்பர் நேச்சுரலான விஷயங்கள் நடக்காது.. ஏதோ காரணம் இருக்கு சஞ்சனா…அதுனாலதான் சொல்றேன்.. இது சீரியஸான விஷயம், நல்லா யோசிச்சு முடிவெடு.."

"இல்ல பாபி, நான் இல்லைன்னா கைலாஷ் செத்துருவான், அது எனக்கு நல்லா தெரியும்.. அவனை கழட்டி விட்டுட்டு நான் விஜய்யை choose பண்ணேன்னா என்னை விட மோசமான துரோகி யாருமே இருக்க முடியாது…"

"அப்ப விஜய்யோட நிலைமை?.."

"அவனை லவ் பண்றதா நான் அவனுக்கு எந்த கிரீன் சிக்னலும் காட்டல, அவனுக்கு எந்த வாக்கும் கொடுக்கல, in fact நான் இதுவரைக்கும் ஒருதடவைகூட அவனை நேருக்கு நேரா சந்திச்சு பேசுனதும் இல்ல… அப்படி இருக்கும்போது அவன் நிலைமைக்கு நான் எப்படி பொறுப்பாவேன்?"

பாபி கொஞ்சம் கோபமாகவே கேட்டாள், "நீ ரொம்ப selfish-ஆ யோசிக்கிற சஞ்சனா, உனக்கு ஒண்ணு தெரியுமா? நம்ம ஹாஸ்டல்ல இருந்தே ரெண்டு பொண்ணுங்க விஜய்கிட்ட ப்ரப்போஸ் பண்ணிருக்காங்க, ரெண்டு பேருமே நல்ல அழகான, ரிச்சான பொண்ணுங்க.. அவங்க ரெண்டு பேரையுமே அவன் reject பண்ணிட்டான். அவன் உன்னை மட்டும்தான் உயிருக்கு உயிரா நேசிக்கிறான் சஞ்சனா.. நீ இல்லைன்னா கைலாஷ் செத்துருவான்னு சொல்ற, நீ இல்லைன்னா விஜய் மட்டும் நல்லா இருந்துருவானா கொஞ்சம் யோசிச்சுப் பாரு"

சஞ்சனாவும் கொஞ்சம் சத்தத்தை உயர்த்தினாள், "என்னை என்னதான் பண்ணச் சொல்ற பாபி? என்னைத்தான் உலகம்னு நெனச்சுக்கிட்டு இருக்கிற கைலாஷ்க்கு துரோகம் பண்ணச் சொல்றியா? அல்லது நான் ஒரு மனநோயாளின்னு தெரிஞ்சும் என்னை முழுமனசோட மருமகளா ஏத்துக்கிட்ட அவனோட parents முகத்துல கரிய பூசச் சொல்றியா? அவங்க மட்டும் இல்லைன்னா என் குடும்பம் எப்பவோ நடுத்தெருவுக்கு வந்திருக்கும், அல்லது எங்க அம்மா அப்பாகிட்டப் போயி நான் கைலாஷை லவ் பண்ணல, இப்ப புதுசா வேற ஒரு பையனை லவ் பண்றேன்னு சொன்னா அவங்க என்னை அசிங்கமா நெனைக்க மாட்டாங்க???"

பாபிக்கு சஞ்சனா பக்கம் இருக்கும் நியாயம் புரிந்தது, அவள் அமைதியானாள்.. அப்போது நள்ளிரவு மணி 3:00 இருக்கும்… திடீரென்று அவர்கள் அறைக்கதவு தட்டப்பட்டது…

பாபி கதவைத் திறந்தாள், வார்டன் நேசமணி நின்று கொண்டிருந்தார்…

"ஏன் உங்க ரூம்ல இவ்வளவு நேரமா லைட் எரியுது?.."

பாபி, “படிச்சிக்கிட்டு இருக்கோம் சிஸ்டர்…”

வார்டன் நேசமணி பாபி சொன்னதை சட்டை செய்யாமல் திரும்பி அழுது முகமெல்லாம் வீங்கியிருக்கும் சஞ்சனாவின் முகத்தைப் பார்த்து, “சஞ்சனா, நீ என்ன காரியம் பண்ணிருக்க தெரியும்ல… ஏதாச்சும் ஒண்ணு ஆகியிருந்தா நாங்க எத்தனை பேருக்கு பதில் சொல்றது. .. Suicide attempt பண்ற அளவுக்கு உங்களுக்கெல்லாம் எங்கருந்து தைரியம் வருது? இன்னும் ஒரு வாரம் உனக்கு டைம், அதுக்குள்ள தயவு செஞ்சு ஹாஸ்டல காலி பண்ணிரு”

வார்டன் சென்றதும், பாபி சஞ்சனாவின் தோளில் கைவைத்து, “கவலைப்படாத சஞ்சனா, நாம ரெண்டு பேரும் வேணா வேற லேடீஸ் ஹாஸ்டல் பார்த்து போயிடலாம்” என்று சொல்ல, “வேணாம் பாபி, நான் என் அங்கிள் வீட்டுலயே தங்கிக்கிறேன்… இன்னும் ரெண்டு மாசம்தானே, மார்ச் முதல் வாரத்துல இருந்து study holidays வந்துரும் நான் அப்புறம் ஊருக்குப் போயிருவேன்…” என்று துக்கம் மேலிட பதிலளித்தாள் சஞ்சனா.

அந்த நேரத்தில் விஜய் அக்கல்லூரியின் சிற்றாலயத்தில் இரவு முழுவதும் முழங்கால்படியிட்டு சஞ்சனா தனக்கு வாழ்க்கைத் துணையாக வரவேண்டும் என்று ஜெபித்துக் கொண்டிருந்தான்…

அத்தியாயம் 18 - தொலைத்துவிட்டுத்தான் தேடுகிறேன்….

"The soul's yearning for union with the beloved is its deepest, most primordial desire." - Plato

“எதையாவது தொலைச்சிட்டீங்களா?..”

ஒரு பெண்ணின் குரல் கேட்டு சட்டென நிமிர்ந்து பார்த்தான் விஜய்.. எதிரே சிரித்த முகத்துடன் தன் தோழிகளுடன் வந்து கொண்டிருந்த விஜி கேட்டாள்..

“இல்லை ஏன்?..” விஜய் கேட்டான்…

“இல்ல எப்பவுமே குனிஞ்ச தலை நிமிராமயே நடந்து வர்றீங்களே, அதான் எதையோ தொலைச்சிட்டு கீழ தேடிட்டே இருக்கீங்களோன்னு நினைச்சேன்..”

விஜய் வெட்கப்பட்டு சிரித்தபடியே கடந்து போனான்.. விஜியும் அவளோடு வந்த அவள் தோழிகளும் சத்தமாக சிரித்துக்கொண்டே சென்றனர்.

விஜி என்ற விஜயலட்சுமி அந்த ஆண்டுதான் எம்.எஸ்.சி கம்யூனிகேஷன் முதலாண்டு சேர்ந்திருந்தாள். ரொம்பவும் துறுதுறுப்பான பெண், எல்லோரிடமும் இயல்பாகப் பேசுவாள். சஞ்சனா தங்கியிருந்த அன்னை தெரேசா ஹாஸ்டலில்தான் கீழே கிரவுண்ட் ஃப்ளோரில் தங்கியிருந்தாள். அந்த வளாகத்திலேயே மிகவும் வித்தியாசமாக இருக்கும் விஜய்யுடன் பேச வேண்டும், அவனைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்று விஜி ஆசைப்பட்டாள்.

விஜியின் சொந்த ஊர் நாகபட்டிணம். ஒல்லியான தேகம், கண்ணாடி அணிந்திருப்பாள், எப்போதும் சுடிதாரில் இருப்பாள். அவள் கலகலப்பான டைப் என்பதால் எப்போதும் அவளைச் சுற்றி ஒரு தோழிகள் குழாம் இருக்கும்.

விஜய் ஆரம்பத்திலிருந்தே ஆண்கள் பள்ளி, மற்றும் ஆண்கள் கல்லூரியில் படித்தவனாதலால் பெண்களுடன் பேசிப் பழகுவதற்கு ரொம்பவே கூச்சப்படுவான். ஆனால் விஜி அவனிடம் தானாக வந்து மிகவும் இயல்பாகப் பேசியதால் அவனும் அவளோடு நல்ல நட்பாகப் பழக ஆரம்பித்துவிட்டான்.

சீக்கிரமே இருவரும் நல்ல நண்பர்களானார்கள். தான் சஞ்சனாவை காதலிப்பது பற்றி விஜியிடம் சொல்லி, அவள் மூலமாக மறுபடியும் ஒருமுறை சஞ்சனாவுடன் பேசிப்பார்க்கலாமா என்ற எண்ணம் விஜய்க்கு அதிகமாக இருந்தது. ஆனால் மறுபடியும் அவன் சஞ்சனாவை தொந்தரவு செய்ய விரும்பவில்லை. விஜய்யைப் பார்த்ததும் அவள் தனது ஆப்டெக் படிப்பை discontinue செய்ததும், சமீபகாலமாக ஹாஸ்டலுக்கு வராமல் அவளது மாமா வீட்டிலிருந்து கல்லூரிக்குச் செல்வதும் அவன் மனதை ரொம்பவே பாதித்திருந்தது.

கடந்த ஒரு மாதமாக ஃபாதர் ஐசக் உடல்நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தால் அவரை பார்த்துக்கொள்ள விஜய் அவருடனேயே இருந்தான். அதனால் அவன் மதுரைக்கு வருவது

குறைந்திருந்தது. அந்த சூழ்நிலையில் சஞ்சனாவும் ஸ்டடி லீவுக்கு டார்ஜிலிங் சென்றிருந்தாள். என் உடல்நிலை இப்போது பரவாயில்லை, நீ கல்லூரிக்குப் போ, கம்பியூட்டர் கிளாஸை மிஸ் பண்ணாதே என்று சொல்லி ஃபாதர் அவனைக் கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்ததால் “ஃபாதரை கவனித்துக் கொள்ளுங்கள்…” என்று திருச்சபையைச் சேர்ந்த சகோதரிகளிடம் சொல்லிவிட்டு விஜய் மறுபடியும் கல்லூரிக்கு வரத் தொடங்கியிருந்தான். அப்போதுதான் விஜியின் புது நட்பு அவனுக்குக் கிடைத்தது.

விஜய் தனது புது நண்பியான விஜி பற்றி ஃபாதரிடம் அதிகம் சொல்லியிருந்தான். “அவளை நம் வீட்டுக்கு அழைத்து வா…” என்று ஃபாதர் சொல்லியிருந்தார். விஜிக்கும் ஃபாதரை சந்திக்கவும், விஜய்யின் கிராமத்தைப் பார்க்கவும் விருப்பம் இருந்தது.

சில நாட்கள் கழித்து ஒரு சனிக்கிழமை விஜய் அவளை தனது ஊருக்கு அழைத்துச் சென்றான். விஜி ஃபாதரைப் பார்த்ததும் அவர் காலைத் தொட்டு வணங்கினாள், அவர் அவள் நெற்றியில் சிலுவை வரைந்து “கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கட்டும் மகளே!..” என்றார். ஃபாதர் உடல்நலக் குறைவோடு இருந்தாலும் ருசியான கேசரி நெய்யில் கிண்டி, அவளுக்கும் விஜய்க்கும் பரிமாறினார்.

“ஃபாதர் ஒரு கேசரி ஸ்பெஷலிஸ்ட்… யாரு எங்க வீட்டுக்கு வந்தாலும் கேசரிதான்..” என்றான் விஜய்..

ஃபாதர், “விஜய்… நம்ம ரூஸ்வெல்ட் லண்டன்ல இருந்து மதுரை வந்திருக்கான். நேத்து என்னைப் பார்க்க வந்திருந்தான். உனக்கு டிரஸ்ஸும், எனக்கு BP check பண்ற மிஷினும் வாங்கி வச்சுட்டு, மறந்துட்டு வந்துட்டான். உன்னை கூடல்நகருக்கு வரச்சொன்னான். இன்னிக்கு மதியம் லண்டன் கிளம்புறானாம். அதுக்கு முன்னால உன்னைப் பார்த்து, உங்கிட்ட கொடுத்தனுப்ப ஆசைப்பட்டான். நீ கொஞ்சம் போயிட்டு வந்துடுறியா?..”

விஜய் விஜியைப் பார்க்க…

“நீ போயிட்டு வா விஜய், நான் ஃபாதர்கிட்ட பேசிட்டு இருக்கேன்…” என்றாள்

விஜய் கிளம்பியவுடன்…

“நான் காரணமாத்தாம்மா விஜய்ய அனுப்பி வச்சேன்… அவனைப் பத்தி ஒரு முக்கியமான விஷயம் உங்கிட்ட சொல்லணும்மா…” என்றார் ஃபாதர்…

அத்தியாயம் 19 - தூது செல்ல ஒரு தோழி….

"It's painful to love someone who doesn't love you back. But what is more painful is to love someone and never find the courage to let that person know how you feel." - Unknown

மறுநாள் (1999, ஏப்ரல்)…

மதுரை பெரியார் நிலையம் முன்பாக இருக்கும் சங்கீதா ரெஸ்டாரண்ட்டில் விஜியும், விஜய்யும் உட்காந்திருந்தனர். இருவருக்கு எதிரிலும் அந்த ஹோட்டலில் மாலை ஸ்பெஷலான போண்டாவும் தேங்காய் சட்னியும் வைக்கப்பட்டு இருந்தது. விஜய் ஒரு போண்டாவை எடுத்து தின்ன ஆரம்பித்திருந்தான்…

“ஏன் விஜய் இப்படிப் பண்ணே… நீ சஞ்சனாவை லவ் பண்ற விஷயத்தை எங்கிட்ட சொல்லிருக்கலாம்ல?”

விஜய் திடுக்கிட்டான்…

“ஃபாதர் நேத்து எதுவும் சொன்னாரா?”

விஜி, “எல்லாத்தையும் சொல்லிட்டாரு…”

விஜய்க்கு வியர்த்தது..”எல்லாத்தையுமா?”

“ஆமா, இதெல்லாம் சஞ்சனாவுக்கு தெரியுமா?” விஜி கேட்டாள்..

“எதுவுமே தெரியாது, நான் அவளை லவ் பண்றேன்னு மட்டும்தான் அவளுக்குத் தெரியும்”

விஜி தீவிரமாக யோசித்தபடி ஒரு பெருமூச்சு விட்டாள்..

“சரி நான் ஒண்ணு செய்யுறேன், அவளுக்கு இப்ப செமஸ்டர் எக்ஸாம் போய்ட்டு இருக்குன்னு நெனைக்கிறேன். அவ இப்ப ஹாஸ்டல்ல இல்ல.. யாரோ ரிலேட்டிவ் வீட்டுல இருந்துதான் காலேஜுக்கு போய்க்கிட்டு இருக்கா…”

விஜய் கவலையோடு, “ஆமா விஜி, அவ என்னைப் பார்த்து ஆப்டெக்ல இருந்து discontinue பண்ணிட்டா, இப்ப ஹாஸ்டல விட்டும் போயிட்டா, என்னை ரொம்பவே avoide பண்றா.. என்னைப் பார்த்து பயப்படுறா, நான் என்ன பேயா, பூதமா? என் மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு விஜி…”

விஜி, “இப்ப செமஸ்டர் நடக்குறதால ஹாஸ்டல்ல இருக்க அவளோட கிளாஸ்மேட்ஸ் கூட படிக்கிறதுக்காக இப்ப அடிக்கடி ஹாஸ்டலுக்கு வர்றா விஜய்.. நேத்துக்கூட நைட் நான் அவளை ஹாஸ்டல்ல பார்த்தேன்…”

விஜய் சந்தோஷமாக, “அப்படியா?”

விஜி, “ஆமா, நாளைக்கு ஈவினிங் கரெக்ட்டா 6:00 மணிக்கு நான் அவளோட ரூமுக்குப் போயி அவளோட பேசி, அவளைக் கூட்டிட்டு கேண்டீனுக்கு வந்துடுறேன், நீ 5:00 மணிக்கே காலேஜ் வந்து கேண்ட்டீன்ல வெய்ட் பண்ணு… நீங்க ரெண்டு பேரும் தனியா பேசுனா கண்டிப்பா ஒரு முடிவு வந்துரும்… என்ன நடந்துச்சோ அதை அவகிட்ட அப்படியே மனசைத் திறந்து கொட்டிரு…. எதையுமே மறைக்காத… அதுக்கப்புறம் கடவுள் விட்ட வழியாகட்டும்…”

விஜய்க்கு மனதில் ஆயிரம் மலர்கள் மலர்ந்தது போல இருந்தது. ஒரு புதிய நம்பிக்கை துளிர்விட்டது…இந்த தருணத்துக்காகத்தான் அவன் இரண்டு ஆண்டுகளாகக் காத்திருந்தான்.

அத்தியாயம் 20 - உயிரை சுட்டெரித்த வார்த்தை..

"There is no torment greater than unrequited love." - George R.R. Martin

மறுநாள் மாலை மணி 4:30…

“I am not interested….”

கீறல் விழுந்த ரெக்கார்டு போல சஞ்சனா இதே வார்த்தையை விஜியிடம் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தாள்… அவள் தொனியில் ஒரு இறுக்கமும், பேச்சில் கடுமையும் தெரிந்தது.

“சஞ்சனா உங்ககூட கொஞ்சம் பேசணும்…” என்று விஜி அன்று மாலை அவள் அறையின் வாசலில் நின்று கேட்டபோது அவளை சிரித்த முகத்தோடு அறைக்குள் வரவேற்ற சஞ்சனா, விஜி பேச வந்திருப்பது விஜய்யைப் பற்றி என்று அறிந்த நொடியில் அவள் உதட்டிலிருந்த புன்னகை காணாமல் போய், முகம் கோபத்தில் சிவந்தது. அந்த திடீர் மாற்றத்தை எதிர்பார்க்காத விஜி கொஞ்சம் பயந்தே போனாள்.

“நான் கைலாஷை லவ் பண்றது விஜய்க்கு நல்லா தெரியும், என் ஃப்ரண்ட் வனிதா அதை போன வருஷமே அவன்கிட்ட தெளிவா சொல்லிட்டா. அதுக்கப்புறமும் இப்படி திரும்ப திரும்ப யாரையாவது தூதுவிட்டு பேசுறது கொஞ்சம் கூட நல்லா இல்ல… எனக்கு இதெல்லாம் சுத்தமா பிடிக்காது” பொரிந்து தள்ளினாள் சஞ்சனா…

விஜி பொறுமையாக, “எனக்கு புரியுது சஞ்சனா, ஆனா நான் சொல்றத ஒரே ஒரு நிமிஷம் கேளுங்க ப்ளீஸ்… மத்த பசங்களை மாதிரி விஜய் இல்ல..விஜய் மாதிரி எத்தனையோ பேர் உங்ககிட்ட ப்ரப்போஸ் பண்ணிருக்கலாம். ஆனா மத்த பசங்க லவ் பண்றதுக்கும், விஜய் உங்களை லவ் பண்றதுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கு… அந்தக் காரணத்தை மட்டும் தெரிஞ்சுக்கிட்டீங்கன்னா… “

சஞ்சனா குறுக்கிட்டு, “அது எதுவா வேணாலும் இருந்துட்டுப் போகட்டும் விஜி.. I am already committed… எங்கிட்ட இதெல்லாம் பேசி பிரயோஜனமே இல்ல. உங்களுக்கு ஒண்ணு தெரியுமா நான் இன்னிக்கு நைட் ப்ளைட்ல டார்ஜிலிங் திரும்பிப் போறேன். இன்னிக்கு நைட்டோட எனக்கும் மதுரைக்கும் இருந்த 3 வருஷ பந்தம் முடிஞ்சு போச்சு… இனிமேல் நான் மதுரைக்கு திரும்ப வரப்போறதே இல்ல..”

விஜிக்கு தூக்கிவாரிப் போட்டது, “ஓகே சஞ்சனா, நீங்க சொல்ற மாதிரியே இருக்கட்டும்.. ஆனா ஒரே ஒரு humble request… விஜய் உங்களுக்காக கேண்டீன்ல வெய்ட் பண்ணிட்டு இருக்கான்… நீங்க just அங்க வந்து, அவன்கூட ஒரு பத்தே பத்து நிமிஷம் பேசிட்டுப் போயிடுங்க. ரெண்டு வருஷமா உங்களையே உலகம்னு நெனச்சுக்கிட்டு இருந்த அவன் மனசுக்கு அது மட்டுமாவது ஒரு ஆறுதலா இருக்கும்…”

சஞ்சனா குரலை உயர்த்தினாள், “இல்ல விஜி, இதுக்கு மேல நான் இது பத்தி பேச விரும்பல, உங்க மேல நான் நல்ல மரியாதை வச்சிருக்கேன்… இதோட விட்ருங்க, நான் யாருகூடவும் பேச விரும்பல.. எனக்கு flight-க்கு டைம் ஆகிட்டு இருக்கு.. நான் கிளம்பணும் “

இருவருக்கும் நடக்கும் உரையாடல்களை பாபி அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கும் என்ன பேசுவதென்று புரியவில்லை. “அவளை விட்டுடு, அவளிடம் பேசி பிரயோஜனம் இல்லை” என்று விஜிக்கு கண்ணால் சைகை காட்டினாள். விஜி ஏமாற்றத்தோடு அந்த அறையைவிட்டு வெளியேறினாள்.

விஜய் கேண்டீனில் நான் சஞ்சனாவைக் கூட்டி வருவேன் என்று எதிர்பார்ப்போடு காத்திருப்பானே..அவனுக்கு என்ன பதில் சொல்வது. இவள் ஏன் தன்னைத் தேடி வந்த ஒரு நல்ல வாழ்க்கையை இப்படி அலட்சியமாக தூக்கி எறிகிறாள், ச்சே, இவளைப் போல ஒரு கல்நெஞ்சக்காரியை நான் பார்த்ததே இல்லை… நான் ஃபாதருக்கு என்ன பதில் சொல்வது.. அவர் உடைந்து போவாரே! மனம் நிறைய துக்கத்தோடு விஜி கேண்டீனை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்..

கேண்டீனுக்குள் நுழைந்தாள்…

அங்கே விஜய் இல்லை… கேண்டீன்கார அண்ணனிடம் கேட்டாள்..”அண்ணே விஜய் இங்க வந்தானா?”

“விஜய் வரவே இல்லையேம்மா..”

விஜிக்கு குழப்பமாய் இருந்தது… “விஜய் வரலையா..ஏன்? எப்படி?”

நேராக டெலிபோன் பூத்துக்குப் போனாள், ஃபாதரின் வீட்டுக்கு போன் செய்தாள்… மூன்று முறை போன் செய்தும் ரிங் முழுமையாகப் போய் கட் ஆனது..யாரும் போனை எடுக்கவில்லை…

அத்தியாயம் 21 - ஏலீ ஏலீ லாமா சபத்கானி

"I am the man that hath seen affliction by the rod of His wrath. He hath led me, and brought me into darkness, but not into light." - Lamentations 3:1,2 (The Holy Bible)

அன்று காலை மணி 9:30

விஜி அவனை மாலை 5:00 மணிக்குத்தான் கேண்டீனுக்கு வரச் சொல்லியிருந்தாள். விஜய் அன்று காலை 6:00 மணிக்கே ரெடியாகி விட்டான். முந்தைய நாளே தன்னிடம் இருப்பதிலேயே சிறந்த சட்டையை, ஜீன்ஸை அயர்ன் செய்து வைத்திருந்தான். அதே டிரஸ்ஸைத்தான் ஆப்டெக்கில் அவளை சந்திக்கப்போகும் முதல் நாள் அணிந்திருந்தான். ஆனால் அன்று அவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ஃபாதர் அவனை காலை சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டுப்போ என்று சொல்லி காலை 9:30 வரை இருத்தி வைத்திருந்தார். காலையில் அவர் சர்க்கரை பொங்கல் செய்துதர அதை சாப்பிட்டுவிட்டு பேருந்து நிறுத்தம் நோக்கி பறந்தான் விஜய்..

9:00 மணிக்கு வர வேண்டிய மதுரை பஸ் 9:30 ஆகியும் வரவில்லை. விஜய்க்கு வாட்ச் கட்டுவது பிடிக்காது என்பதால் பக்கத்தில் இருந்தவர்களிடம் அடிக்கடி மணி கேட்டுக் கொண்டிருந்தான்.

காலை 9:45 மணி…

தூரத்தில் மதுரை பஸ் வருவது தெரிந்தது.. காலை 9:00 மணி பஸ்ஸும், 9:45 பஸ்ஸும் போட்டி போட்டுக்கொண்டு சேர்ந்து வந்தன..”அடப்பாவிகளா, வரவே மாட்டானுங்க, வந்தா மொத்தமா வருவானுங்க..” மனதுக்குள் திட்டிக்கொண்டே பேருந்தை நிறுத்தச்சொல்லி கை நீட்ட..

சர்ச்சுக்கு பக்கத்தில் இருக்கும் வீட்டுப்பையன் மின்னல் வேகத்தில் சைக்கிளில் வந்து விஜய் முன்னே நிறுத்தினான்… பேச முடியாமல் மூச்சு வாங்கினான்..

“விஜய் அண்ணே, அம்மா உன்னை கையோட கூட்டியாரச் சொல்லுச்சு.. ஃபாதர் பேச்சு மூச்சு இல்லாம கிடக்குறாராம்…”

விஜய்க்கு ஜீவனே போனதுபோல இருந்தது.. அந்த சைக்கிளில் பையனை உட்காரவைத்து வீடு நோக்கி வேகமாகக் கிளம்ப ஒன்றாக வந்த மதுரை பெரியார் நிலையப் பேருந்துகள் இரண்டும் அவனைக் கடந்து சென்றன.

****

பக்கத்துவீட்டு சகாயமேரி அக்கா நெஞ்சில் அடித்து அழுதுகொண்டிருந்தார். விஜய் போய் கீழே கிடத்தப்பட்ட ஃபாதரைத் தூக்கி தன் மடியில் கிடத்தினான். அதற்குள் நிறையப்பேர் அங்கே கூடிவிட்டிருந்தார்கள். திருச்சபை செயலாளர் ஜெயபால் அண்ணன் பாதரை ஏற்றிச் செல்ல கார் கொண்டு வந்து வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே ஓடி வந்தார்…

“நான் கிளம்பும்போது நல்லாத்தானக்கா இருந்தாரு…” விஜய் ஃபாதரின் நெஞ்சைத் தடவிவிட்டுக்கொண்டே சகாயமேரி அக்காவிடம் கேட்டான்.. துக்கம் அவனுக்குத் தொண்டையை அடைத்திருந்தது…

“வாசக் கூட்டிட்டு இருந்தேன், டமார்னு சத்தம் கேட்டுச்சு தம்பி,… போய் பார்த்தேன், செபம் பண்ணிட்டு இருந்த மனுஷன் அப்படியே குப்பற விழுந்து கிடந்தாரு..”

அதற்குள் ஓடிவந்து ஃபாதரின் நாடித் துடிப்பைப் பார்த்த ஜெயபால் அண்ணன் “தம்பீ…” என்று சொல்லி கதறியபடி அவனைக் கட்டிப்பிடிக்க, விஜய்க்கு உயிரே போனதுபோல இருந்தது…

“அண்ணே அண்ணே தூக்குங்கன்னே, சீக்கிரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருவோம், எங்கப்பாவை பொழைக்க வச்சிரலாம் அண்ணே..” விஜய் கதறினான்..

அந்த நேரத்தில் அருகே இருந்த ஊரிலிருந்து பைக்கில் அழைத்து வரப்பட்ட டாக்டர், பரிசோதனை செய்து பார்த்துவிட்டு ஃபாதர் இறந்துவிட்டதை உறுதி செய்தார்.

விஜய், “அப்பா…அப்பா…அப்பா…அப்பா…” என ஊரே குலுங்கும்படி அலறினான்… ஃபாதர் ஐசக் மரியான் அவனைப் பெற்ற அப்பா இல்லையென்றாலும், அவரை ஃபாதர் என்று கூப்பிடுவதைவிட, அப்பா என கூப்பிடுவதைத்தான் விஜய் ரொம்பவும் விரும்பினான். ஏனென்றால் அவன் அப்பா, அம்மா, அண்ணன், தம்பி என எந்த சொந்தங்களும் இல்லாதவன். பிரம்மச்சரியம் ஏற்ற ஒரு குருவானவரை அப்பா என்று கூப்பிட்டால் அவரது பரிசுத்தத்தை யாராவது சந்தேகிக்கக்கூடும் என்பதால் அவரை ஃபாதர் என்றே அழைத்து வந்தான். ஆனால் அன்று யாராலும் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை..

பங்குத்தந்தைகள், பேராயர், மற்ற திருச்சபை ஆயர்கள், பொதுமக்கள் என வந்து குவிய ஆரம்பித்தனர். இலந்தைப்பட்டியே முற்றிலும் சோகத்தில் மூழ்கியது. அன்று மாலையே மதுரையில் ஃபாதரின் உடலை நல்லடக்கம் செய்துவிடலாம் என திருச்சபை நிர்வாகத்தால் முடிவு செய்யப்பட்டது, வளர்ப்பு மகன் என்ற அடிப்படையில் விஜய்யிடம் அனுமதி கேட்க, அவனும் ஒத்துக்கொண்டான்.

விஜய் உலகமே இருண்டது போல உணர்ந்தான். அவனுக்கு இருந்த ஒரே ஒரு சொந்தத்தையும் இறைவன் அழைத்துக்கொள்ள இனி தனக்கு எதிர்காலம் என்ற ஒன்று இருக்கிறதா என்ற கேள்வி அவனை உலுக்கிக் கொண்டிருந்தது.

பூக்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு அமரர் ஊர்தியில் ஃபாதரின் உடல் ஏற்றப்பட்டது. விஜய் அழுது அழுது துவண்டு போய் அந்த உடலின் அருகே அமர்ந்திருந்தான். அடுத்து அழக்கூட அவனுக்கு பெலன் இல்லாமல் இருந்தது. முன்னும் பின்னும் ஏராளமான வாகனங்கள் சூழ அந்த அமரர் ஊர்தி மாலை 4:30 மணியளவில் மதுரைக்குள் நுழைந்தது.

அந்த நேரத்தில்தான் விஜி சஞ்சனாவோடு பேச ஆரம்பித்திருந்தாள். விஜய் ஏன் சொன்னபடி 5:00 மணிக்கு கேண்டீனுக்கு வரவில்லை என்ற கேள்வி அவளை அழுத்தியது. குழப்பத்தோடு ஹாஸ்டலுக்குப் போய் தன் உடைகளை எடுத்துகொண்டு ஊருக்குக் கிளம்ப தயாரானாள். அவளுக்கும் செமஸ்டர் ஏற்கனவே முடிந்து இருந்தது. அவள் குடும்பத்தில் எல்லோரும் வெளியூர்

சென்றிருந்ததால் அவர்கள் வீட்டுக்குப்போய் சேரும் வரைக்கும் அவள் ஹாஸ்டலிலேயே தங்க வேண்டியிருந்தது.

நேற்று மாலையே அவள் அம்மா போன் செய்து எல்லோரும் ஊருக்கு திரும்பி வந்துவிட்டதாக சொல்ல, விஜி ஊருக்கு கிளம்ப முடிவு செய்துவிட்டாள். அழகரடியிலிருந்து ஆட்டோ எடுத்துக்கொண்டு பெரியார் பேருந்து நிலையத்துக்கு கிளம்பினாள். போகும் வழியில் ஒரு தேவாலயத்தின் காம்பவுண்ட் சுவரில் ஃபாதர் ஐசக் மரியானுக்காக ஒட்டப்பட்ட கண்ணீர் அஞ்சலி போஸ்டர் அவள் கண்ணில் பட்டது. அவள் இருதயம் அதிர்ச்சியில் உறைந்தது. விஜய் அன்று கேண்டீனுக்கு வராத காரணத்தை அறிந்து கொண்டாள்.

****

மாலை 7:30 மணி…

மதுரை பெரியார் பேருந்து நிலையம் எதிரே அன்று டிராஃபிக் கடுமையாக இருந்தது. வாகனங்கள் அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருந்தன. ஃபாதரின் நல்லடக்கத்தை முடித்துவிட்டு விஜய் ஜெயபால் அண்ணனின் காரில் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அதே நேரத்தில் சஞ்சனா அர்ஜூனனின் காரில் மதுரை விமானநிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். சதீஷ் காரை ஓட்டிக்கொண்டிருந்தான். சஞ்சனா முன் சீட்டில் அமர்ந்திருந்தாள்.

இரு கார்களும் டிராஃபிக் நெரிசலில் ஒன்றையொன்று மிக அருகில் கிராஸ் செய்தன. விஜய்யும், சஞ்சனாவும் தற்செயலாக ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். இரண்டே வினாடிகளில் இரு வாகனங்களும் ஒன்றையொன்று கிராஸ் செய்ய, அழுது, உடைந்து, உருக்குலைந்து போனநிலையில் விஜய்யை சஞ்சனா பார்த்தாள்…

விஜய்க்கு "சஞ்சனா…" என்று கத்த வேண்டும்போலிருந்தது.. ஆனால் அவன் உடலிலும், மனதிலும் பெலனில்லை.. அவன் இதயம் பைபிளிலிருந்த ஒரே ஒரு வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொல்லி கதறிக்கொண்டிருந்தது…

"என் தேவனே, என் தேவனே… ஏன் என்னைக் கைவிட்டீர்?…"

அத்தியாயம் 22 - மனதை முள்ளாகக் கிழித்தான்...

"The past beats inside me like a second heart." - John Banville

அக்டோபர் 2023
மேரிலெபோன், லண்டன்

அதிர்ச்சியில் உறைந்து சிலைபோல் அமர்ந்திருந்தாள் தியா....அவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்துகொண்டிருந்தது...

தன் கதையை சொல்லும்போதே இடைநிறுத்தி, பலமுறைகள் அழுது, இப்போது அழும் பெலனைக்கூட இழந்திருந்தாள் சஞ்சனா.

தியா கேட்டாள், “அப்ப நீங்க மதுரைல இருந்த ரெண்டு வருஷமும் ஒருத்தருக்கொருத்தர் ஒரு தடவைகூட பேசிக்கவே இல்லையா?”

சஞ்சனா இல்லையென்று தலையசைத்தாள்...

“விஜய் வந்த காரோட பானட்லயும் சரி, அதுக்கு முன்னாடி போன ரெண்டு காரோட பானட்லயும் சரி யாரோ ஒரு பாதிரியாரோட ஃபோட்டோ வைச்சு மாலை போட்டிருந்தாங்க. அது ஏதோ டெத் ஊர்வலத்துக்கு போயிட்டு வந்த கார்கள் மாதிரி இருந்தது. இறந்தது கண்டிப்பா அவனை எடுத்து வளர்த்த அந்த ஃபாதராத்தான் இருக்கும்னு நானே நெனச்சுக்கிட்டேன். ஏன்னா நான் அவனைப் பார்த்தப்ப மொத்தமா உடைஞ்சு போயிருந்தான்”.

தியா அம்மாவை பரிதாபமாகப் பார்த்தபடி அசைவின்றி அமர்ந்திருந்தாள்...

“நான் முதல் முறையா அவனை அன்னிக்கு கோவில்ல பார்த்தப்ப அவ்வளோ அழகா, சந்தோஷமா சிரிச்சுக்கிட்டு வந்தான். அவனை எப்பவுமே ரொம்ப ஸ்டைலா, நீட்டா, நல்லா டிரஸ் பண்ணிதான் பார்த்திருக்கேன். ஆனா அன்னிக்கு கடைசி முறையா அவன் இருந்த கோலத்தைப் பார்த்தப்ப நானே நொறுங்கிப் போயிட்டேன்”.

தியா, “அப்புறம் என்ன ஆச்சு...”

“அதுதான் மதுரைல என்னோட கடைசி நாள், டார்ஜிலிங்குக்கு வந்துட்டேன். அதுக்கப்புறம் அவனைப் பத்தி எந்த தகவலும் தெரியல, நானும் தெரிஞ்சுக்க எந்த முயற்சியும் பண்ணல. என்னைப் பத்தி எந்த தகவலும் அவனுக்குப் போயிடக் கூடாதுங்கிறதுக்காகவே மதுரைல எனக்கு இருந்த எல்லா friends-சோட contacts-ஐயும் வேணும்னே கட் பண்ணிட்டேன்...

நான் டார்ஜிலிங் வந்தது தெரிஞ்சதுமே கைலாஷும் ஆஸ்திரேலியாவுல பார்த்துக்கிட்டு இருந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு டார்ஜிலிங் வந்துட்டான். அந்த வேலை அவனுக்கு செட் ஆகலையாம். அவன் ஒரு மாசம் டார்ஜிலிங்ல இருந்தான், அப்புறம் மும்பைல ஒரு வேலை

கிடைச்சு அங்க போயிட்டான். மில்லினியம் பிறந்தவுடனே அந்த ஜனவரில கல்யாணம் வச்சுக்கலாம்னு வீட்ல பேசி முடிச்சிருந்தாங்க.

ஆனா அதுக்குள்ள பாட்டிக்கு ஹெல்த் கண்டிஷன் ரொம்ப மோசமானதுனாலயும், கைலாஷ் மும்பைல வேல பார்த்துக்கிட்டு இருந்த கம்பேனி அவனை நவம்பர்லயே லண்டனுக்கு அனுப்பப்போறதா சொன்னதுனாலயும் மேரேஜ் செப்டம்பர் 22-ஆம் தேதிக்கு preponed ஆயிருச்சு..

கல்யாணத்துக்கு ரெண்டு மாசம் முன்னாடி வரைக்கும் எல்லாம் நல்லாத்தான் போய்ட்டு இருந்துச்சு. அதுக்கப்புறம்தான் பிரச்சனை மேல பிரச்சனை ஸ்டார்ட் ஆச்சு. ஜூலைல எனக்கு கடுமையான மனப்போராட்டம் ஆரம்பிச்சிருச்சு, ஆனா சின்ன வயசுல மாதிரி மயக்க நிலைக்கோ, கனவு நிலைக்கோ நான் போகல. ஆனா எப்பவுமே ஒரு குழப்பம், பயம், மன அழுத்தம்…

எல்லாத்துக்கும் மேல விஜய்யைப் பத்தின கவலை ரொம்பவே என் மனசைப் போட்டு உலுக்கிட்டு இருந்துச்சு, அவனுக்கு என்ன ஆச்சோ, எப்படி இருக்கானோ, நான் இல்லாத வாழ்க்கையை அவன் எப்படி எதிர்கொள்ளப் போறானோங்கிற துக்கம், அதை கைலாஷ் உட்பட யாருகிட்டையுமே ஷேர் பண்ண முடியாத நிலை, இதெல்லாம் என்னை மனப்போராட்டத்தோட உச்சத்துக்கு கொண்டு போயிருச்சு. மாத்திரை போட்டு தூங்கிக்கிட்டே இருந்தேன்.

இந்த நேரத்துல ஃபாதர் லாரன்ஸ் என்ன நெனைச்சாரோ தெரியல எங்க அம்மா அப்பாவை மீட் பண்ணி, “சஞ்சனாவோட கல்யாணத்தை உடனே அவசரப்பட்டு நடத்தாதீங்க, குறைஞ்சது ஒரு வருஷமாவது தள்ளிப்போடுங்க” -ன்னு சொல்லிருக்காரு. எங்க அம்மா அப்பா அதிர்ச்சியாகி, “ஏன் அப்டி சொல்றீங்க?” அப்டீன்னு கேட்டதுக்கு, “என் மனசுல தோணுது”-ன்னு மட்டும் சொல்லிட்டு போயிட்டாராம். எங்க அம்மா அப்பா ரொம்ப குழம்பிப் போயிட்டாங்க, “நான் எதுவும் ஃபாதர் கிட்ட சொல்லிருப்பேனோன்னு…”

“எங்க அம்மா அப்பாகிட்ட ஏன் அப்படிசொன்னீங்க…”-ன்னு நான் ஃபாதர்கிட்ட கேட்டேன்..”நீ எனக்கு மகள் மாதிரி சஞ்சு, நான் உனக்காக உன் சின்ன வயசுல இருந்து ப்ரார்த்தனை பண்ணிட்டு இருக்கேன்… ஏதோ பயங்கர மனக்குழப்பத்துல இருக்கே, உனக்கு கொஞ்சம் அவகாசம் தேவைன்னு என மனசுக்குத் தோணுச்சு, அதான் அப்டி சொன்னேன்” -ன்னு சொன்னார்.””

“அப்பவாவது மதுரைல நடந்த விஷயங்களை நீ ஃபாதர்கிட்ட சொன்னியா?” தியா கேட்டாள்...

“இல்ல தியா, ஃபாதர் கிட்ட சொல்லிருந்தா அவர் ரெண்டு parents கிட்டேயும் பேசி, கைலாஷ்கிட்டேயும் பேசி கல்யாணத்தை நிறுத்தி, விஜய் கூட என்னை சேர்த்துவைக்க ட்ரை பண்ணிருப்பாரு.. அப்படி ஒரு சூழல் ஏற்படுறத நான் விரும்பல…”

தியா சஞ்சனாவின் கண்களை கூர்மையாகப் பார்த்து, விரக்தியாக சிரித்தபடி ஒரு பெருமூச்சு விட்டாள்…

சஞ்சனா தொடர்ந்தாள்…“அதுக்கப்புறம் ஏகப்பட்ட பிரச்சனைகள், கல்யாணம் prepone ஆனதால திருப்பதி கோவில்ல சரியான டேட் கிடைக்கல, ஒரே இடத்துல நிறைய தம்பதிகளோட சேர்ந்துதான் கல்யாணம் பண்ணனுங்கிற சூழ்நிலை வந்துச்சு. அது கைலாஷ்க்கு பிடிக்கல, அதுனால கோவிலுக்கு வெளிய மண்டபத்துல கல்யாணம் வச்சுட்டு, கோவில்ல வந்து ஸ்வாமி தரிசனம் மட்டும் பண்ணிக்கலாம்னு முடிவு செஞ்சாங்க. அப்படி ஒரு பெரிய மஹாலும் புக் பண்ணாங்க. ஆனா கல்யாணத்துக்கு நாங்க புக் பண்ணி வச்சிருந்த அந்த மஹால்காரன் கல்யாணத்துக்கு 3 வாரத்துக்கு முன்னாடி அட்வான்ஸை திருப்பிக் கொடுத்து, பில்டிங் திடீர்னு டேமேஜ் ஆகிருச்சு, ரினோவேஷன் பண்ணனும், வேற மண்டபம் பார்த்துக்கங்கன்னு சொல்லிட்டான்”.

தியா, “ஐயைய்யோ…”

“அப்புறம் கஷ்டப்பட்டு ஒரு சாதாரண சின்ன மஹாலைப் பிடிச்சாங்க, அந்தப் பிரச்சனை ஒருவழியா செட்டில் ஆச்சு... கல்யாணத்துக்கு ரெண்டு வாரம் இருக்கும்போது நான் கிட்டத்தட்ட பைத்தியம் மாதிரி ஆகிட்டேன். அவ்வளவு மனக்குழப்பங்கள்… என்னால விஜய் வாழ்க்கை பாழாயிருச்சேன்னு ஒரு குற்ற உணர்வு என்னைப் போட்டு கொன்னு எடுத்திருச்சு..”

தியா, “ஆனா நீதான் விஜய்க்கு எந்த கிரீன் சிக்னலுமே கடைசி வரை காட்டலையே…”

“உண்மைதான், ஆனா மதுரைக்கு போகாம இருந்திருந்தா, ஒருவேளை அவன் என்னைப் பார்க்காம இருந்திருந்தா, வேற யாரையாச்சும் கல்யாணம் பண்ணி வாழ்க்கைல நல்லா இருந்திருப்பான்ல…”

தியா, “நீ என்ன விஜய் மதுரைல இருக்காருன்னு தெரிஞ்சா அங்க போன?.. நீ படிக்கப்போன இடத்துல அவர் அங்க இருந்தாரு.. அது விதியோட விளையாட்டுதானே, பாவம் நீ என்ன பண்ணுவ?”

சஞ்சனா, “இல்ல தியா, அங்கதான் நான் பண்ண தப்பு இருக்கு..வருஷக் கணக்குல நான் கடவுள்கிட்ட சின்சியரா பண்ண வேண்டுதல் என்ன தெரியுமா? என் கனவுல பார்க்குற அந்த மனுஷனை என் கண்ணுல காட்டுங்கிறதுதான்.. என் பிரார்த்தனைக்கு பலனா கடவுள் அவனை என் கண்ணுல காண்பிச்சிட்டாரு. ஆனா நான் அதுக்கு முன்னாடியே என் மனசை இன்னொருத்தன்கிட்ட பறிகொடுத்துட்டேன். இந்த சந்திப்பு நேர்ந்ததுக்குக் மூலகாரணம் நானா இருந்தாலும், நான் எப்படியோ என் வாழ்க்கைய safegaurd பண்ணிக்கிட்டேன். ஆனா மொத்தமா பாதிக்கப்பட்டது அந்த அப்பாவி விஜய்தானே!…”

தியா, “அவரைப் பார்க்குறதுக்கு முன்னாடியே உனக்கு அவரைத் தெரிஞ்சிருந்த மாதிரி உன்னையும் எப்படியோ அவருக்கு தெரிஞ்சிருக்கு இல்ல?”

“ஆமா தியா, அந்த பொண்ணு விஜி அன்னிக்கு அதைத்தான் எங்கிட்ட சொல்ல ட்ரைப் பண்ணா, விஜய் மாதிரி எத்தனையோ பேர் உங்ககிட்ட ப்ரப்போஸ் பண்ணிருக்கலாம். ஆனா மத்த பசங்க லவ் பண்றதுக்கும், விஜய் உங்களை லவ் பண்றதுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கு… அந்தக் காரணத்தை மட்டும் தெரிஞ்சுக்கிட்டு அப்புறம் முடிவெடுங்கன்னு சொன்னா”

தியா, “ம்ம்ம்…”

சஞ்சனா பெருமூச்சு விட்டு, “ஆனா அந்தக் காரணம் என்னன்னுதான் இன்னிக்குவரைக்கும் எனக்குத் தெரியல…”

தியா, “சரி அப்புறம் எப்படித்தான் உன் கல்யாணம் நடந்துச்சு?”

சஞ்சனா, “ஒருபக்கம் கல்யாணத் தேதி நெருங்கிட்டு இருந்துச்சு, இன்னொரு பக்கம் என்னோட மனப்போராட்டம் உக்கிரமாச்சு. சரியா கல்யாணத்துக்கு இன்னும் நாலு நாள் இருக்கும்போது, இது மட்டும் நடந்துடவே கூடாதுன்னு நாங்க எல்லோரும் பயந்த அந்த சம்பவம் நடந்துச்சு…”

அத்தியாயம் 23 - கடவுளே கொஞ்சம் மனம் இரங்கு...

"Fate is like a strange, unpopular restaurant filled with odd little waiters who bring you things you never asked for and don't always like." — Lemony Snicket

1999, செப்டம்பர் 18, சனிக்கிழமை,

திருமணத்துக்கு இன்னும் நான்கு நாட்கள்...

சஞ்சனா மற்றும் கைலாஷ் இருக்கும் அந்தத் தெருவே விழாக்கோலம் பூண்டிருந்தது. வண்ண வண்ண தோரணங்களும், சீரியல் விளக்குகளும் அந்த தெருவை அலங்கரித்திருந்தன. எங்கு பார்த்தாலும் சஞ்சனா-கைலாஷின் பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன. இதற்காகவே முந்தைய வாரம் கைலாஷ் ஒரு ஃபோட்டோ ஷூட் நடத்தியிருந்தான்.

கைலாஷ் உட்பட அவனது குடும்பத்தினர் ஏற்கனவே திருப்பதி சென்றுவிட்டிருந்தனர். நிரஞ்சனாவும், சுரேஷும் திருமணத்துக்கு முந்தைய நாள் நேராக திருப்பதி வந்துவிடுவதாக இருந்தது. திருமணம் முடிந்து மூன்றாம் நாள் டார்ஜிலிங்கில் வரவேற்பு இருந்ததால் அதற்கு வரும் உறவினர்களுக்கு தங்குமிடம் ஏற்பாடு செய்வதில் தாகூர் பிசியாக இருந்தார். அந்த வேலைகளை முடித்துவிட்டு செப்டம்பர் 20-ஆம் தேதி மணப்பெண்ணை அழைத்துக்கொண்டு, சஞ்சனாவின் குடும்பத்தினர், வேறு சில நெருங்கிய உறவினர்களுடன் சேர்ந்து விமானத்தில் திருப்பதி செல்ல திட்டமிடப்பட்டிருந்தது.

சஞ்சனாவின் திருமணத்தை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த பாட்டி, கடந்த ஒரு வாரமாகவே உற்சாகமாக தன்னால் இயன்ற கல்யாண வேலைகளைச் செய்துகொண்டிருந்தார். “நீங்க ரெஸ்ட் எடுங்க...” என்று பலர் சொல்லியும் கேட்காமல், “என் பேத்தி கல்யாணத்துக்கு, நான் வேலை செய்வேன்...” என்று சொல்லி சந்தோஷமாக வேலை செய்துகொண்டு இருந்தார்.

பாட்டி சஞ்சனாவின் திருமணத்துக்கென்று ஒரு லட்சம் ரூபாய் சேர்த்து வைத்திருந்தார். அதைகொண்டு சஞ்சனாவுக்கு தனது திருமணப் பரிசாக தங்க நெக்லஸ் எடுக்க வேண்டும் என்பது பாட்டியின் விருப்பம். வீட்டிலிருந்த காரை தாகூர் எடுத்துச் சென்றுவிட்டதால், 18-ஆம் தேதி காலை 9:00 மணியளவில் ஒரு டாக்ஸி பிடித்து பாட்டி, மகேஷ்வரி, சஞ்சனா மேலும் ஒரு உறவினர்பெண் ஆகியோர் டார்ஜிலிங்கில் இருக்கும் ஒரு பிரபல நகைக்கடைக்குச் சென்றனர். சஞ்சனா தனக்கு பிடித்த நகையை செலக்ட் செய்தாள். நகை வாங்கிவிட்டு அனைவரும் சந்தோஷமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அந்த டாக்ஸி டிரைவர் குடித்திருந்தான். ரோட்டில் வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தவன், குறுக்கே திடீரென ஒரு பைக் நுழைய, sudden break போட்டான். டிரைவருக்கு அருகில் முன் சீட்டில், சீட் பெல்ட் அணியாமல் உட்காந்திருந்த பாட்டி தூக்கி எறியப்பட்டு டேஷ்போர்டில் மோதினார். காருக்குள் இருந்த அனைவரும் அலறினர். பாட்டியின் நெஞ்சுப்பகுதி டேஷ்போர்டில் மோதியிருந்ததால் வலியால் துடிக்க ஆரம்பித்தார்.

உடனடியாக பக்கத்திலிருந்த மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு சென்று அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தனர். பாட்டி ஏற்கனவே 80 வயதைக் கடந்திருந்ததாலும், சமீபகாலங்களாக உடல்நிலை மிகவும் மோசமடைந்திருந்ததாலும் பாட்டியைக் காப்பாற்ற மருத்துவர்கள் போராட வேண்டியதாக இருந்தது. 3 மணி நேரப் போராட்டத்துக்குப்பின் தங்கள் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்ததாக மருத்துவர்கள் கைவிரித்தனர். முகத்தைப் போர்த்திய நிலையில் பாட்டியின் உடலை வெளியே கொண்டு வந்தனர். சஞ்சனாவும், மகேஷ்வரியும் அழுது கதறினர்.

விஷயமறிந்து பதறியடித்து தாகூர் மருத்துவமனைக்கு வந்தார். அமரர் ஊர்தியில் வைத்து பாட்டியின் உடல் சஞ்சனாவின் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. கல்யாணக் களைகட்டியிருந்த அந்தத் தெருவே சோகத்தின் மூழ்கியது.

விஷயமறிந்து கைலாஷ் இடிந்து போனான். சஞ்சனாவை போனில் தொடர்புகொள்ள முயற்சித்தான். அவள் பாட்டியின் உடலைக் கட்டிப்பிடித்து அழுதவண்ணமிருந்தாள். அவளுக்கு தன்னுடைய உலகமே இருண்டு போனதுபோல இருந்தது. அவளைத் தூக்க எவ்வளவோ முயன்றும் யாராலும் முடியவில்லை. திருப்பதி விமான டிக்கெட்டை கேன்சல் செய்துவிட்டு சுரேஷும், நிரஞ்சனாவும் டார்ஜிலிங் வந்து சேர்ந்தனர். திருமணம் நின்றுவிடும் என்றே பலரும் நினைத்திருந்தனர்.

இந்நிலையில் இரு வீட்டுப் பெற்றோர்களும் போனில் பேசினர். பாட்டியின் இறுதிச் சடங்குக்கு மாப்பிளை கைலாஷை அழைத்துக்கொண்டு நானும் என் மனைவி செலினும் டார்ஜிலிங் வருகிறோம் என்று ராவ் சொன்னதை தாகூர் ஏற்கவில்லை. நீங்கள் திருப்பதியிலேயே இருங்கள். நாங்கள் நாளை மாலை இறுதிச்சடங்கை முடித்துவிட்டு நாளை மறுநாள் அங்கு வந்துவிடுகிறோம். திருமணம் திட்டமிட்டபடி நடக்கட்டும் என்றார்.

****

செப்டம்பர் 20-ஆம் தேதி நள்ளிரவு சஞ்சனாவும் அவள் குடும்பத்தினரும் திருப்பதி வந்தடைந்தனர். மதுரையில் மீனாட்சி அம்மன் கோவிலில் தன் திருமணத்துக்கான பிளான் போடும்போது திருமணம் முடிந்தவுடன் முதல் ஆசீர்வாதத்தை தன் பாட்டியிடம்தான் வாங்க வேண்டும் என்று சஞ்சனா சொல்லியிருந்தாள். அந்தப் பாட்டியே இப்போது உயிரோடு இல்லை என்பது அவள் மனதை வாட்டி வதைத்தது.

அவளுக்கு ஏற்கனவே இருந்த மனக்கவலைகளோடு சேர்த்து பாட்டி இறந்த துக்கமும் சேர்ந்துகொண்டது. விமானப்பயணம் தந்த களைப்பு ஒருபுறம். கடுமையான தலைவலியால் பாதிக்கப்பட்ட சஞ்சனா தாங்கள் தங்க வேண்டிய விடுதியை அடைந்தவுடன் இரவு உணவை முடித்துவிட்டு மாத்திரை போட்டு படுத்துக்கொண்டாள்.

அன்று நள்ளிரவு அவளுக்கு கடுமையான ஜுரம் வந்துவிட்டிருந்தது. அன்று இரவோடு இரவாகவே அவள் மருத்துவமனைக்குக் அழைத்துச் செல்லப்பட்டாள். திருமணத்துக்கு முந்தைய நாள் 21-ஆம் தேதி காலை அவள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். மறுநாள் அதிகாலை 5:00 to 6:00 முகூர்த்தம் என்பதால் முந்தைய நாள் மாலையில் இருந்தே மேக்-அப் தொடங்க வேண்டும். 21-ஆம் தேதி மாலை 4:00 மணிவரை அவளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. கைலாஷ் மருத்துவமனையில் அவள் அருகிலேயே இருந்தான். “நமக்கு மட்டும் ஏன் இப்படி

நடக்கிறது…” என்று அவன் சஞ்சனாவிடம் சொல்லி அழுதேவிட்டான். ஒருவழியாக அன்று மாலை 6:00 மணிக்கு சஞ்சனா டிஸ்சார்ஜ் செய்யப்பட்டாள்.

மணமகளுக்கு மேக்கப் போடும் குழுவினர் ஏற்கனவே வந்து மணமகளுக்காகக் காத்திருந்தனர். சோர்ந்துபோய் வந்த சஞ்சனாவைப் பார்க்க அவர்களுக்கே பாவமாக இருந்தது. தாகூர் தனது ஆஸ்தான ஜோதிடருக்கு போன் செய்தார். “ இதுபோல திருமண தடைக்கு சஞ்சனாவுக்கு இருக்கும் புனர்பூ தோஷம்தான் காரணம். அந்த தோஷமுள்ளவர்கள் திருமணம் நடக்கும்போது கடைசி நிமிடம்வரைகூட போராட்டங்கள் இருக்கும். அப்படி நின்று போன திருமணங்களும் ஏராளம். எனவே எந்த சூழ்நிலை வந்தாலும், எப்பாடுபட்டாவது திருமணத்தை நடத்திவிடுங்கள். அப்படி நடந்துவிட்டால் அதற்குப் பின்னர் அவர்களது வாழ்க்கை நன்றாக இருக்கும்” என்றார் ஜோதிடர்.

ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது என புரியாமல் கலங்கிப்போயிருந்த தாகூருக்கு, காரணங்கள் புரிந்தவுடன் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அதற்குள் மணமகள் தங்கச்சிலை போல திருமணத்துக்கு தயாராக அலங்கரிக்கப்பட்டிருந்தாள்.

அத்தியாயம் 24 - கண்ணெதிரே தோன்றினான்…

"Go find yourself first so you can also find me" -Rumi

அக்டோபர் 2023
மேரிலெபோன், லண்டன்

ஒருவழியா கல்யாணம் நடந்து முடிஞ்சது. மூணாவது நாள் டார்ஜிலிங்ல ரிஷப்ஷன் ரொம்ப நல்லா நடந்தது. நானும் கைலாஷும் உண்மையிலேயே சந்தோஷமா இருந்தது அந்த ரிசப்ஷன்லதான். கல்யாணம் முடிஞ்சு சிங்கப்பூர்க்கு ஹனிமூன் போயிருந்தோம். அதுக்கப்புறம் கைலாஷ் லண்டன் போயிட்டான்.

நான் எம்.எஸ்.ஸி முடிச்சிட்டுத்தான் லண்டன் போறதா இருந்துச்சு. டெல்லில Correspondance course படிச்சிட்டே ஹாஸ்டல்ல தங்கி வேலைக்குப் போக ஆரம்பிச்சேன். கைலாஷ் ஒரு இடத்துல, நான் ஒரு இடத்துல.. ரொம்ப கஷ்டமா இருந்துச்சு.

தியா, "அதுக்கப்புறம் விஜய் பத்தி எந்த தகவலும் தெரியலையா?..."

சஞ்சனா, "நான் 2002 பெர்த்டேக்கு ஊருக்குப் போயிருந்தேன். கைலாஷ் அப்ப லண்டன்ல இருந்தான். நான் என்னோட மாமியார் வீட்டுல இருக்கும்போது ஒரு போன்கால் வந்துச்சு. என்னோட மாமியார்தான் போன் எடுத்தாங்க.. என்னைக் கூப்பிட்டாங்க.. ரிசீவரை வாங்கி காதுல வச்சு ஹலோன்னு சொன்னேன்.. மறுமுனையில விஜய்..

தியா ஆச்சரியமானாள், "என்னது, அவர் உனக்கு கால் பண்ணாரா?"

சஞ்சனா, "சுத்தமான பெங்காலில சரளமா பேசுனான். Birthday wish பண்ணான். எனக்கு கல்யாணம் ஆகிடுச்சு தெரியுமா விஜய்னு கேட்டேன்..கேள்விப்பட்டேன்னு சொல்லிட்டு சிரிச்சான். என்னோட ஈமெயில் ஐடி கேட்டான், குடுத்துட்டேன்…"

தியா, "அப்புறம்?"

"அதுக்கப்புறம் நட்பா நாலைஞ்சு ஈமெயில் ஷேர் பண்ணிக்கிட்டோம், என்னோட படத்தை பென்சில்ல வரைஞ்சு அனுப்பிருந்தான். அப்பத்தான் அவன் ஒரு நல்ல ஓவியன் அப்டீங்கிற விஷயமே எனக்கு தெரிஞ்சுச்சு.. தினமும் என்னை சில வினாடிகள்தான் பார்த்துட்டே கடந்து போவான், எப்படி என் முகத்தை அவனால அவ்வளோ தத்ரூபமா வரைய முடிஞ்சதுன்னு எனக்கு ஆச்சரியமா இருந்துச்சு"

தியா, "அவர் மனசு முழுக்க நீதான் இருந்திருக்கே…"

சஞ்சனா பெருமூச்சுவிட்டாள்…

அதுக்கப்புறம் நான் டெல்லில வேலை செஞ்ச கம்பேனி என்னை ஒரு ப்ராஜெக்ட் விஷயமா சென்னைக்கு அனுப்புனாங்க. விஜய்யை மீட் பண்ணணும்னு தோணுச்சி…நான் விஜய்யை சென்னைக்கு வரச் சொன்னேன்.."

தியாவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "வாவ்.. நீங்க நேர்லயும் மீட் பண்ணிட்டீங்களா?..ரியலி??"

"எனக்கு அவன் ஏன் என்னை லவ் பண்ணாங்கிற காரணத்தை தெரிஞ்சாகணும், இல்லைன்னா தலையே வெடிச்சிருங்கிற மாதிரி ஒரு க்யூரியாசிட்டி…கல்யாணம்தான் ஆகிடுச்சுல்ல, இனி அவன்கூட கடைசிவரைக்கும் நல்ல கண்ணியமான ஃப்ரண்ட்ஷிப் வச்சுக்கலாம்னு நெனச்சேன்… ஆனா நான் பண்ண பெரிய தப்பு அதுதான்.."

தியா, "ஏன் மம்மி என்ன ஆச்சு?"

****

2003, ஏப்ரல்.. சென்னை

மாலை 7:00 மணி..

சென்னை மவுண்ட் ரோட்டில் இருந்த சோலாரிஸ் நிறுவன வாசலில் விஜய் சஞ்சனாவுக்காக காத்திருந்தான். சஞ்சனா பச்சை நிற சல்வாரும், mustard yellow நிறத்தில் ஷாலும் அணிந்திருந்தாள். விஜய் சைனீஸ் காலர் வைத்த பச்சை நிற கட்டம் போட்ட சட்டையும், கறுப்பு ஜீன்சும் அணிந்திருந்தான். சஞ்சனா வந்து "ஹாய் விஜய்" என்று அழகான புன்னகையுடன் அவனுக்கு கைகொடுத்தாள்..

பக்கத்தில் இருந்த ஸ்பென்சர் பிளாசாவில் ஏதாவது ஒரு காஃபி ஷாப்புக்குச் செல்லலாம் என்று இருவரும் முடிவு செய்து ஸ்பென்சர் பிளாசா நோக்கி நடந்தனர். விஜய்க்கு அது கனவா அல்லது நனவா என்று தெரியவில்லை. சஞ்சனாவைப் பார்த்து 4 ஆண்டுகள் கழித்து இப்போதுதான் முதன் முதலாக அவளோடு நேருக்கு நேராக பேசும் வாய்ப்பு கிடைத்தது.

இருவரும் தரைத்தளத்தில் இருந்த லேண்ட் மார்க் காஃபி ஷாப்புக்குச் சென்றனர். போய் உட்காந்தவுடன் சஞ்சனா சற்றும் எதிர்பாராத ஒரு கேள்வியை விஜய் கேட்டான்..

"சஞ்சனா, உனக்கு உண்மையிலேயே கல்யாணம் ஆகிடுச்சா? அல்லது என்னை avoid பண்றதுக்காக பொய் சொல்றியா?"

சஞ்சனாவுக்கு தூக்கிவாரிப் போட்டது. "என்ன பைத்தியகாரத்தனமான கேள்வி இது?, ஒருவேளை நம் கழுத்தில் தமிழர்கள் கட்டுவதுபோல தாலி இல்லாததால் இப்படிக் கேட்கிறான் போல…"

சஞ்சனா தனக்கு திருமணமாகிவிட்டதை நிரூபிக்க என்னனவோ சொல்லிப்பார்த்தாள் விஜய் அதையெல்லாம் நம்பியதுபோல தெரியவில்லை. ஒரு கட்டத்துக்கு மேல் மேலும் அவளை வருத்தப்படுத்த வேண்டாம் என்பதற்காக நம்பியதுபோல நடிக்கத் தொடங்கினான். அவன்

நடிப்பதை சஞ்சனா புரிந்துகொண்டாள். தனக்கு திருமணமானதை அவனால் ஏன் நம்பமுடியவில்லை என்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

“இவன் ஏன் எனக்குப் புதிராகவே இருக்கிறான்??...”

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு சஞ்சனாவை தான் கடந்த வருடங்களில் எவ்வளவாக நேசித்தான் என்று மனதைத் திறந்து கொட்ட ஆரம்பித்தான். அவளுக்காக பெங்காலி படித்தது, ஆப்டெக் வந்து சேர்ந்தது.. அவளை ஒவ்வொரு நாளும் பார்க்கும்போது அவள் அணிந்திருக்கும் உடைகளை டைரியில் குறித்து வைத்தது, அவளுக்கு அவன் வைத்த செல்லப்பெயர்கள் என எல்லாவற்றையும் ஒரு குழந்தைபோல அவளிடம் கொட்ட.. அவள் கண்ணிமைக்காமல் அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவன் மனதில் உள்ளதையெல்லாம் கொட்டித் தீர்க்கட்டும் என்று அமைதியாகக் காத்திருந்தாள்

உண்மையில் அவள் நினைத்ததைவிட அவன் குழந்தையாய் இருந்தான்...”ச்சே! இந்தக் குழந்தை மனதையா துடிக்க துடிக்க அறுத்துப் போட்டோம்”, அவள் மனம் உடைய ஆரம்பித்தது. கடைசியாக உப்பு சப்பு இல்லாத ஒரு ஆறுதல் வார்த்தையை அவனிடம் சொன்னாள், “கவலைப்படாதே விஜய், என்னைவிட நல்ல பெண் உனக்கு மனைவியாக வருவாள்” அதை அவன் கண்களைப் பார்த்து சொல்லும் தைரியம் அவளுக்கில்லை. காரணம் அவள் சொன்னதை அவளே நம்பவில்லை, நிச்சயம் தன்னைத்தவிர அந்த இடத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது என்பது அவளுக்கே தெரியும்.

கடைசியாக தான் கேட்க துடித்துக் கொண்டிருந்த கேள்வியை அவனிடம் கேட்டாள்... “உன் ஃப்ரண்டு விஜி எங்கிட்ட சொன்னா, நீ என்னை லவ் பண்ண ஏதோ ஒரு முக்கியமான காரணம் இருக்குன்னு.. அது என்ன காரணம்?”

அவள் கண்களைக் கூர்ந்து பார்த்தபடி விஜய் சொன்னான்..“அதான் உனக்கு கல்யாணம் ஆகிருச்சுன்னு சொல்றியே? இனிமேல் அதைப்பத்தி பேசி என்ன ஆகப்போகுது? இந்த சூழ்நிலைல அதைப் பத்தி பேசுறதும் நல்லா இருக்காது...”

சஞ்சனாவுக்கு ஏமாற்றமாக இருந்தது. விஜய் அடுத்துச் சொன்ன அந்த விஷயம் அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது..

“சஞ்சனா நீ எதிர்காலத்துல மிகப்பெரிய ஆன்மீகவாதியா ஆகப்போறே தெரியுமா?”

எனது பெற்றோருக்கும் பாட்டிக்கும் மட்டும் தெரிந்த ஜோதிடர் சொன்ன அந்தத் தகவல் இவனுக்கு எப்படித் தெரியும்?

இவனுக்கு என் கடந்தகாலம் தெரிந்திருக்கிறது, அதுதான் அவன் என்னை காதலிக்க காரணமாக இருந்திருக்கலாம், எதிர்காலமும் தெரிந்திருக்கிறது... ஆனால் என் நிகழ்காலம் மட்டும் ஏன் இவனுக்கு தெரியவில்லை. எனக்கு திருமணம் ஆனதை ஏன் நம்ப மறுக்கிறான். அவன் அதை நம்ப மறுக்கிறான் என்றால் வேறு எதையோ மிக உறுதியாக நம்பிக்கொண்டிருக்கிறான்? அது என்ன?

உண்மையில் யார்தான் இவன்???

****

சென்னையில் சந்தித்த அந்த 20 நிமிடங்கள் மட்டுமே சஞ்சனாவும் விஜய்யும் முதலும் கடைசியுமாக சந்தித்துக்கொண்ட தருணங்கள். விஜய் குறித்த தனது கேள்விகளுக்கு பதில் கிடைக்கும் என்று நினைத்த சஞ்சனாவுக்கு பதில் தெரியாத பழைய கேள்விகளோடு மேலும் பல புதிய கேள்விகள் சேர்ந்திருந்தன…

உனை சேரக் கூடாமலே
ஒரு பிறவி தீர்ந்தாலுமே
மறு ஜென்மம் பார்ததிருந்து
எனதாக்கிக் கொள்ளுவேன்..

அடுத்த நாள் காலை விஜய்யிடம் இருந்த வந்த அந்த எஸ்.எம்.எஸ் சஞ்சனாவை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.. அவள் எந்த பதிலும் அனுப்பவில்லை…

மறுநாள்…

இருவேறு பாதை சென்றாலும்
இடம் மாறி தூரம் நின்றாலும்
ஒருநாள் நம் பாதை ஒன்றாகும்
விதியால் நம் காதல் வென்றாகும்..

கோபத்தோடு சேர்ந்து பயமும் சஞ்சனாவை ஆட்கொண்டது. இவன் நிச்சயமாகப் பைத்தியம் அல்ல, ஏனென்றால் எனது எதிர்காலம்கூட இவனுக்குத் தெரிந்திருக்கிற்து. ஆனால் எனக்கு திருமணமானதை மட்டும் ஏன் இவனால் நம்ப முடியவில்லை. அதை நம்ப முடியவில்லையென்றால் இவன் வேறு எதை நம்பிக்கொண்டிருக்கிறான்.. இல்லை இல்லை.. இவனோடுள்ள பழக்கத்தை முற்றிலும் துண்டித்துக்கொள்ளுதல் நல்லது..

அடுத்தநாள் விஜய்யிடம் இருந்து அவள் கைபேசிக்கு கால் வந்தது. போனை எடுத்தவுடன் நெருப்பாகக் கொட்டத் தொடங்கினாள் சஞ்சனா..”எனக்கு ஏன் இதுபோன்ற எஸ்.எம்.எஸ்களை அனுப்புகிறாய்? நான் திருமணமானவள் என்று உனக்குத் தெரியாதா? என்ன தைரியம் உனக்கு… என்று ஆரம்பித்தவள் ஒரு ஐந்து நிமிடங்கள் அவனைத் திட்டித் தீர்த்துவிட்டாள். விஜய் மறுமுனையில் அமைதியாக இருந்தான். அவன் ஏதோ பேச முற்பட…அவனைப் பேசவிடாமல் போனைக் கட் செய்து அவன் நம்பரை பிளாக் செய்தாள்..

அத்தியாயம் 25 - அநீதி இழைக்கப்பட்ட பாத்திரம்…

"In the symphony of existence, there are those who bear the discordant notes, their hearts echoing with the pain of a thousand sorrows." - Unknown

"அதுக்கப்புறம் அவனோட எந்த contact-ம் இல்ல, இருபது வருஷமாச்சு. இப்ப அவன் எங்க இருக்கான், என்ன செய்யுறான் எதுவுமே தெரியாது. 2004-ல நானும் லண்டனுக்கு வந்துட்டேன். 2005-ல நீ பிறந்த… வாழ்க்கை இப்படியே ஓடிருச்சு…

தியா, "அவருக்கு கல்யாணம் ஆகியிருந்தா இந்நேரத்துக்கு என் வயசுல குழந்தை இருக்கும்ல?"

சஞ்சனா, "அவனுக்கு கல்யாணம் நடந்திருக்கணும், குழந்தைங்க பிறந்திருக்கணும், நல்ல சந்தோஷமான குடும்ப வாழ்க்கை இருக்கணும்.. அவன் ரொம்ப ரொம்ப ரொம்ப நல்லா இருக்கணும்… இதுதான் என்னோட தினசரி ப்ரேயர் தியா…"

"நீ இல்லாத வாழ்க்கையில அவர் சந்தோஷமா இருப்பாருன்னு நம்புறியா மம்மி?.."

சஞ்சனா பதில் ஏதும் சொல்லாமல் தலையைத் தாழ்த்தி அமைதியாக இருந்தாள்… ஒரு பெருமூச்சு மட்டுமே பதிலாக வந்தது..

தியா, "சரி அதுக்கப்புறம் உனக்கு வர்ற அந்த கனவுகள்லயாச்சும் அவர் வந்தாரா?"

சஞ்சனா, "இல்லடா, நான் மதுரைல இருக்கும்போதே அந்தக் கனவுகள்லாம் ரொம்பவே குறைஞ்சிருச்சு, நான் மனப்போராட்டத்துல இருந்தாலும் மயக்க நிலைக்குப் போறதே இல்ல. அதுனால அந்தக் கனவுகளும் வர்றதில்ல… ஆனா ஒரு அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஒரு தீபாவளி அன்னிக்கு நைட்.. அது எனக்கு ஒரு மறக்கமுடியாத பயங்கரமான இரவு..

தீபாவளி அன்னிக்கு ரொம்ப பிசியா இருந்துட்டு, அன்னிக்கு நைட்டு அசந்து தூங்கிட்டேன்…

இப்ப நெனச்சாலும் எனக்கு ஈரக்கொலையெல்லாம் நடுங்குது.. ஒரு பயங்கரமான கனவு…

****

மீண்டும் அதே கொடுமையான காரிருள் பரப்பு…

அதே மெல்லிய சங்கொலி..

ஒரு பிறவி முழுவதும் சேர்த்து வைத்த துக்கத்தை ஒரே நேரத்தில் அழுகையாகக் கொட்டினால் எப்படியிருக்குமோ அப்படியொரு அழுகைச் சத்தம்..

இந்தமுறை அழுவது சஞ்சனா அல்ல, விஜய்…

அவன் நிற்க தரை எதுவும் இல்லை.. ஆனாலும் அந்த இருள்வெளிப் பரப்பில் விஜய் முழங்காலில் நின்றபடி அழுதுகொண்டிருந்தான். அவன் மேலும், கீழும், சுற்றிலும் சூழ்ந்தும் இருளைத்தவிர வேறு எதுவும் இல்லை…அந்த இருள் மண்டலத்துக்கு வெளியே சஞ்சனா நின்று கொண்டிருந்தாள். விஜய்யை அவளால் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அந்த இருள் மண்டலத்துக்கு வெளியே சஞ்சனா நின்று தன்னைப் பார்த்துக்கொண்டிருப்பது விஜய்க்கும் தெரிந்திருந்தது.

ஒரு புதைகுழியில் மூழ்கிக் கொண்டிருப்பவனது கரம் உதவிக்காக ஏக்கத்தோடு நீண்டிருக்குமே அதுபோல அவன் சஞ்சனாவை நோக்கி கை நீட்டி அழுதுகொண்டிருந்தான்.. சஞ்சனாவால் அவனைப் பார்க்க முடிந்ததே தவிர அவள் முற்றிலும் சிறைப்பட்டிருந்தாள். அவளால் வாயை அசைத்து அவனுக்கு ஒரு ஆறுதல் வார்த்தைகூட சொல்ல முடியவில்லை. அவனுக்கு உதவ நினைத்தாலும் எதுவோ ஒன்று அவளைக் கட்டிப்போட்டிருந்தது.

இதயமெல்லாம் உருகி இரத்தமாக வழிந்தோடும்வரை அவன் அழுதுகொண்டே இருந்தான். சஞ்சனா மட்டுமல்ல, வேறு யாருமே அவனுக்கு உதவிக்கு வரவில்லை. ஒரு ஆறுதல் வார்த்தைகூட எங்கிருந்தும் அவனுக்கு அசரீரியாக தொனிக்கவில்லை.

அந்தக் கனவு சஞ்சனாவுக்கு நீண்டுகொண்டே இருந்தது..அதிலிருந்து அவளால் விடுபட முடியவில்லை. நீண்டுகொண்டே சென்ற அக்கனவு முழுவதிலும் விஜய் பரிதாபமாக அழுதான், அழுதான், அழுதுகொண்டே இருந்தான். கடைசியில் அழுவதற்கான பெலனை இழந்து.. இன்னும் அழுதுகொண்டே இருந்தான்.. சத்தம் வரவில்லை… கேட்க எந்த நாதியும் இல்லாமல் கடைசியில் இருளோடு இருளாக கரைந்தே போய்விட்டான்…

****

சஞ்சனாவால் தொடர்ந்து பேச முடியவில்லை…

தியா அவளது தோளைப் பற்றி.. தட்டிக்கொடுத்து, ஆறுதல்படுத்தினாள்…

“மறுநாள் காலைல எந்திரிச்சப்ப ஒரு பாரம் என் மனசை அழுத்த ஆரம்பிச்சிச்சு.. அந்த பாரம் இப்ப வரைக்கும் என் மனச விட்டு நீங்கவே இல்லை. எங்கயாவது போய் கொட்டி தீர்க்கணும்னு நெனைச்சாலும் நான் யாருகிட்ட போய் சொல்லுவேன்.. நீ எங்கிட்ட கதை கேட்டப்ப, உங்கிட்ட கொட்டித் தீர்க்கணும்னு ஆசை, சொல்லலாமா வேணாமான்னு ஒரே மனப்போராட்டம்.. கொட்டி தீர்த்துட்டேன்.. இனியாவது அந்த பாரம் இறங்குதான்னு பார்ப்போம்…”

“இதெல்லாம் எதுவுமே டாடிக்கு தெரியாதா மம்மி? அவர்கிட்ட நீ எதுவுமே ஷேர் பண்ணலையா”

“என் வாழ்க்கையில விஜய்னு ஒரு கேரக்டர் வந்துட்டுப் போனதே உங்கப்பாவுக்கு தெரியாது தியா. அவர் இன்னிக்கு வரைக்கு என்னோட கனவுல வந்த அந்த மனுஷன் தான்தான்னு நெனச்சுக்கிட்டு இருக்காரு…”

“ஏன் மம்மி டாடிகிட்ட இதை மறைச்ச? உன் பக்கம்தான் எந்த தப்புமே இல்லையே!”

“ஒண்ணு தெரிஞ்சுக்க தியா, ஒருவேளை நான் லவ் பண்ண கைலாஷ் ஒரு மோசமான நபராவோ, இல்ல ஒரு சராசரி ஆணாவோ இருந்திருந்தாக்கூட நான் அவனை தூக்கி எறிஞ்சுட்டு விஜய்யை என்னைக்கு மதுரைல பார்த்தேனோ அன்னைக்கே அவன் பின்னாடி போயிருந்திருப்பேன்… ஆனா நான் லவ் பண்ண கைலாஷ் ஒரு வெகுளி, யாருக்குமே தீங்கு நினைக்காத, சூதுவாது அறியாத மனுஷன், என்னை உண்மையா லவ் பண்ணாரு, நான்தான் அவரோட உலகம்னு நெனச்சாரு.. இன்னிக்கு வரைக்கும் எங்களுக்குள்ள இருக்க bond எவ்வளோ ஸ்ட்ராங்கா இருக்குன்னு உனக்கே தெரியும். நான் விஜய்யைப் பார்த்த பிறகும் அவனைப் புறக்கணிச்சிட்டு உங்கப்பாவைத்தான் முழு மனசோட, உண்மையா நேசிச்சேன்னா நாங்க ரெண்டு பேரும் எப்படி லவ் பண்ணிருப்போம்னு நெனச்சுப்பாரு..

ஒருவேளை நான் கல்யாணத்துக்கு முன்னாடியே நான் விஜய் பத்தி சொல்லிருந்தேன்னா, தான் விலகிக்கிட்டு என் சந்தோஷத்துக்காக அவர் என்னை விஜய்கூட சேர்த்து வைக்கத்தான் முயற்சி பண்ணிருப்பாரு.. அதுக்கப்புறம் அவரோட வாழ்க்கை?

தியா அழுதேவிட்டாள், தனக்குப் பிரியமான தன் தந்தை மீதும் தாய் மீதும் அவளுக்கு இருந்த அன்பும் மரியாதையும் பன்மடங்கு உயர்ந்திருந்தது. அவர்களை நினைத்து பெருமைப்பட்டாள், காதலித்தால் இவர்கள் போல காதலிக்க வேண்டும் என்று தன் மனதில் சொல்லிக்கொண்டாள்…

சஞ்சனா அவளை இறுக அணைத்துக்கொள்ள, தியா அம்மாவின் நெற்றியில் முத்தமிட்டாள்…

“உனக்கு ஒண்ணு தெரியுமா தியா, நீயும் உங்க அப்பாவும் மட்டும் இல்லைன்னா நான் இந்நேரம் இந்தியாவுக்கு திரும்பிப் போயிருப்பேன்.. அங்க போயி ஏதாவது ஒரு கோவில்ல சாமியாரினியா தங்கியிருந்திருப்பேன். இந்தியாவுல நிறைய கோவில்கள்ல இலவசமா அன்னதானம் பண்ணுவாங்க. அதை ஒரு வேளை மட்டும் வாங்கி சாப்பிட்டுட்டு, அந்த கோவில்லயே தங்கிட்டா வாழ்க்கை சொர்க்கமா இருக்கும். எந்த கவலையும், துக்கமும், பாரமும் கிடையாது.. எனக்கு அதுதான் ஆசை… அது எனக்குள்ள ஒரு fantasy-யாவே மாறிடுச்சு…”

“என்ன மம்மி சொல்ற, அப்படியெல்லாம் நாங்க உன்னை விட்டுட மாட்டோம்..”

அதற்குள் இரவாகி விட்டிருந்தது.. இவரும் ஒரு இன்ஸ்டண்ட் சிற்றுண்டியை செய்து சாப்பிட்டுவிட்டு, கொஞ்ச நேரம் டிவியில் அவர்களுக்குப் பிடித்த ஒரு சீரியல் பார்த்தார்கள்.

சீரியல் முடிந்தவுடன் தியா கேட்டாள்…

“மம்மி, நான் என் படத்துக்கு என்ன கிளைமாக்ஸ் வைக்கிறது?”

சஞ்சனா, “எது நடந்திச்சோ அதையே வையி…”

“உன் கதையில விஜய் கேரக்ட்டருக்கு நடந்தது பெரிய அநியாயம்… ஒரு கிரியேட்டரா என் மனசு அதை ஒத்துக்க மாட்டீங்குது…”

“அவனும் நல்லா கல்யாணம் பண்ணி, செட்டில் ஆகிட்டதா வையி.. என்னை விட better ஆன பொண்ணு அவனுக்கு மனைவியா கிடைச்சுட்டதா கிளைமாக்ஸ் வையி..”

“அது அநியாயத்துக்கு சப்பக் கட்டு கட்டுற மாதிரி…”

சஞ்சனாவுக்கு சுத்தமாக புரியவில்லை, “நீ என்னதான் சொல்ல வர்ற?, நிஜ வாழ்க்கையில அந்த அனுபவத்தை கடந்து வந்தவ நானு, அவனுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைச்சு அவன் நல்லா இருந்தா அதுவே போதும்னு நானே கன்வின்ஸ் ஆகிட்டேன்...உனக்கு என்ன பிரச்சனை?”

“அது உன்னை நீயே ஏமாத்திக்கிறதுக்கு நீ கண்டுபிடிச்ச டெக்னிக் மம்மி… ஒரு படைப்பாளி அப்படி சிந்திக்கமாட்டான்…”

சஞ்சனா டென்ஷனானாள், “இன்னும் ஃபர்ஸ்ட் இயர் கூட முடிக்கல, அதுக்குள்ள ஹிட்ச்காக் தங்கச்சி ரேஞ்சுக்கு பில்டப் குடுக்குற… இங்க பாரு, உங்க அப்பாவும் நீ எடுக்கப்போற படத்தைப் பார்ப்பாரு அதை மட்டும் மனசுல வச்சுக்க… ஏண்டா உங்கிட்ட என் கதையைச் சொன்னென்னு என்னை ஃபீல் பண்ண வச்சுராத…”

“நிச்சயமா உன்னை அப்படி ஃபீல் பண்ண வைக்கமாட்டேன் மம்மி, ஆனா என் கதையில எல்லா கேரக்ட்டர்களுக்கும் அவங்களுக்கான நியாயம் கண்டிப்பா கிடைச்சிருக்கும். அப்படி செய்யலேன்னா நாம் படம் பண்ணவே லாயக்கு இல்லைன்னுதான் அர்த்தம்… வெயிட் அண்ட் சீ”

அத்தியாயம் 26 - ஆன்மாக்களின் காதல் அழிவற்றது…

“Love is as strong as death, its jealousy unyielding as the grave. It burns like blazing fire, like a mighty flame. Many waters cannot quench love; rivers cannot sweep it away. If one were to give all the wealth of one’s house for love, it would be utterly scorned” -Song of Solomon 8:6,7 (The Holy Bible)

ஜனவரி 2024
Odeon Leicester Square, London

லண்டன் மாநகரத்தின் புகழ்பெற்ற திரையரங்கமாகிய Odeon Leicester Square அன்று கல்லூரி மாணவ மாணவியராலும் பெற்றோராலும் நிறைந்திருந்தது. தியா படிக்கும் லண்டன் ஃபிலிம் இன்ஸ்ட்டியூட் மாணவர்கள் தவிர வேறு பல கல்லூரியிலிருந்தும் மாணவர்கள் வந்து குவிந்திருந்தார்கள். பல திரைப்பட ஆர்வலர்களும் பரிசுபெற்ற குறும்படங்களைக் காண ஆவலாகக் காத்திருந்தார்கள்.

கைலாஷ் ஸ்காட்லாந்துக்கு ஒரு பிசினஸ் விஷயமாகச் சென்றிருந்ததால் தியாவோடு சஞ்சனா மட்டும் வந்திருந்தாள். தியாவுக்கு வெற்றி கிடைக்குமா கிடைக்காதா என்ற டென்ஷன் ஒருபுறம், இன்னொரு பக்கம் தன்னுடைய கதையை அவள் என்ன செய்து வைத்திருக்கிறாளோ, படத்தை எப்படி எடுத்து வைத்திருக்கிறாளோ என்ற பதட்டம் ஒருபக்கம் அவளை வாட்டிக் கொண்டிருந்தது.

மூன்றாவது பரிசுக்கான படமும், இரண்டாவது பரிசுக்கான படமும் அறிவிக்கப்பட்டு அந்தப் படங்கள் அடுத்தடுத்து திரையிடப்பட்டன. இதில் கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரம் ஓடியிருந்தது. இரண்டு குறும்படங்களுமே அற்புதமாக இருந்தன. தாங்கள் இஸ்மாயில் குரேஷியின் மாணாக்கர்கள் என்பதை கடந்த இரண்டு படங்களின் படைப்பாளிகளும் நிரூபித்திருந்தனர்.

முதல் பரிசு அறிவிக்கப்பட்டு, அந்த திரைப்படம் திரையிடப்படுவதற்கு முன் டின்னருக்கான இடைவேளை அறிவிக்கப்பட்டது. தியேட்டரின் வளாகத்தில் போட்டியில் பங்கு கொண்டிருந்த அத்தனை பிள்ளைகளும் அவர்களது பெற்றோர்களும் ஒருவித பரபரப்புடன் காணப்பட்டனர். மூன்றாம், இரண்டாம் பரிசு பெற்ற டீம்களும் அவர்களது பெற்றோரும் வெற்றியைக் கொண்டாடிக்கொண்டு இருந்தனர். அந்த வளாகம் முழுவதும் கொண்டாட்டமும், பரபரப்புமாக இருந்தது.

சஞ்சனா சற்று நம்பிக்கை இழந்திருந்தாள். அனுபவம் மிக்க மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு இணையாக முதல் ஆண்டு படிக்கும் தன் மகளால் சிறப்பாக படத்தை எடுத்திருக்க முடியுமா என்ற அவநம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டிருந்தது. தியா மிகவும் பதட்டத்துடன் இருப்பதைப் பார்த்து அவளுக்கு மேலும் கவலையாக இருந்தது. ஒருவேளை முதல் பரிசை வெல்லாவிட்டால் அவளால் ஏமாற்றத்தைத் தாங்கிக்கொள்ள முடியுமா? “ முதல் பரிசு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் நீ பங்கு கொண்டதே மிகப்பெரிய வெற்றிதான். எனவே ரிசல்ட் எதுவாக இருந்தாலும்

சந்தோஷமாக ஏற்றுக்கொள்…" என்று அவளுக்கு முன்கூட்டியே ஆறுதல் சொல்லத் தொடங்கியிருந்தாள்.

தியேட்டரில் மணிச்சத்தம் கேட்டது.. அனைவரும் உள்ளே அழைக்கப்பட்டனர்…

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு… பலத்த கரவொலிகளுக்கு இடையே இஸ்மாயில் குரேஷி மேடை ஏறினார், மைக் அவரது கையில் கொடுக்கப்பட்டது… அவர் கையில் முதல் பரிசுக்கான அறிவிப்புச் சீட்டு இருந்தது…

“காதல் என்பது ஒரு அற்புத சக்தி, அது வெறும் மூன்று லட்சம் ஆண்டுகளாக பூமியிலிருக்கும் மனித இனத்துக்கு மட்டும் உரியதல்ல, அது விண்மீத்திரள்கள் உருவாவதற்கும், நட்சத்திரங்களின் பிறப்புக்கும், பேரண்டத்தின் தோற்றத்துக்கும் முற்பட்டது. இது நேரம் மற்றும் இடத்தின் எல்லைகளைக் கடந்த ஒரு அண்ட ஆற்றல். காதல் பிறப்புக்கு முன்னும், இறப்புக்குப் பின்னும் இருக்கிறது. அது புரிதலுக்கு அப்பாற்பட்டது, தன்னலமற்றது, நிபந்தனைகளற்றது, எதிர்பார்ப்புகளற்றது, வரம்புகளை நம்பாதது. நீங்கள் "மனித அனுபவத்தில்" முன்னேற காதல் அவசியமானது…

காதல் பல பரிமாணங்களைக் கொண்டது ஒரு அணுவுக்கும் இன்னொரு அணுவுக்கும் ஏற்படும் இணைப்பே காதல்தான். தனிமங்களுக்குள் ஏற்படும் இணைவும் காதலின் ஒரு பரிமாணம்தான். காதலின் உன்னதப் பரிமாணம் அழிவற்ற ஆன்மாக்களிடையே ஏற்படும் காதல்தான். அது மனிதக் காதலைவிட புனிதமானது. அப்படிப்பட்ட ஒரு காதலைச் சொல்லும் காவியம்தான் இன்று முதல் பரிசைத் தட்டிச்செல்லப்போகிறது. இந்தக் குறும்படம் இந்தியாவில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டது. இந்த குறும்படத்தை நான் கொண்டாட ஒரே காரணம் இந்தக் கதையிலும், படமாக்கப்பட்ட விதத்திலும் இருக்கும் ஜீவன். முதல் பரிசைப் பெற அத்தனை தகுதிகளும் உள்ள குறும்படத்தை உங்களுக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்….

தியா ராவ் இயக்கத்தில் உருவான Eternal Echoes of Unrequited Love திரைப்படம் முதல் பரிசை தட்டிச் செல்கிறது…"

அரங்கம் கைதட்டலால் அதிர்ந்தது… தியா தன் இருக்கையின் மேலே ஏறி நின்று குதித்தாள். சஞ்சனா தன்னை மறந்து, தான் இருக்குமிடத்தை மறந்து கத்தினாள்… தியாவின் குழுவினர் எல்லோரும் உடனடியாக ஓடோடி ஒன்றுகூட அனைவரும் கட்டி அணைத்துக்கொண்டு கொண்டாடினர். அதைப் பார்த்து ரசித்தபடி மேடையில் வெற்றிக்கோப்பையைக் கையில் வைத்துக்கொண்டு குழுவினரின் வருகைக்காக காத்திருந்தார் குரேஷி…

வெற்றிக் கோப்பை வழங்கப்பட்டு, வெற்றிக் குழுவினரின் கொண்டாட்டங்கள் முடிந்து, கூட்டம் அமைதியானவுடன் தியா இயக்கிய Eternal Echoes of Unrequited Love திரைப்படம் ஆரம்பமானது…

I seem to have loved you in numberless forms, numberless times, in life after life, in age after age forever - Rabindranath Tagore

என்ற பொன்மொழிகளோடு திரைப்படம் துவங்கியது.. சஞ்சனா திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சிகளோடும் ஒன்றிப்போனாள். தன்னை ஒவ்வொரு ஃப்ரேமிலும் பார்த்தாள்… வெற்றிக் களிப்பையும் தாண்டி தியாவுக்கு தன் அம்மா இந்தப் படத்தை எப்படி எடுத்துக்கொள்ளப்போகிறார் என்ற படபடப்பு இருந்துகொண்டே இருந்தது.

****

திரைப்படம் முடிந்தது. கூட்டம் கலைந்து சென்றபின், குரேஷி முதல் மூன்று இடங்களைப் பெற்ற குழுவினரையும் அவர்களது பெற்றோரையும் சந்தித்தார். தியா தன் அம்மாவை பேராசிரியர் குரேஷிக்கு அறிமுகப்படுத்தினாள். “இந்தக் கதையின் உண்மை நாயகி நீங்கள்தான் என்று எனக்குத் தெரியும். நீங்கள் ஒரு அற்புதமான பெண்மணி, உங்கள் மீது எனக்கு தனி மரியாதை ஏற்பட்டு இருக்கிறது. உங்களைப் பார்க்க மிகவும் ஆவலாய் இருந்தேன்” என்று சொல்லி கைகுலுக்க… தியா தன் அம்மாவைப் பார்த்து பெருமையாய் சிரித்தாள்..

சஞ்சனா மௌனமாகப் புன்னகை பூத்தாள்.

****

தியாவும், சஞ்சனாவும் அரங்கை விட்டு வெளியேரும்போது இரவு 9:30 மணி ஆகியிருந்தது. வெளியே பனி பொழிந்து கொண்டிருந்தது. சஞ்சனா எதுவும் பேசாமல் கார் ஓட்டிக்கொண்டிருந்தாள். தியா முன் சீட்டில் உட்காந்திருந்தாள்.

“என்ன மம்மி ஒண்ணுமே சொல்லாம வர்ற? படம் எப்படி இருந்துச்சி? கிளைமாக்ஸ் நான் இந்த மாதிரி வச்சதுல உனக்கு எதுவும் கோபமா?”

சஞ்சனா, “ச்சேச்சே… ரொம்ப அருமையா இருந்துச்சு.. நீ சொன்ன மாதிரியே எல்லா கேரக்ட்டர்களுக்கும் சரியா நியாயம் செஞ்சு இருந்தே… ஒரு படைப்பாளியா நீ ஜெயிச்சுட்டடி செல்லம்”

அந்த திரைப்படம் சஞ்சனாவின் ஆன்மாவுக்குள் லிட்டர் கணக்கில் தேனை வார்த்தது போல இருந்தது. ஒரு பேரமைதி தன் ஆன்மாவை ஆட்கொள்ளுவது போல உணர்ந்தாள். தியாவைக் கட்டிப்பிடித்து முத்தமழை பொழிய வேண்டும் போல இருந்தது. அந்த இனிய உணர்விலேயே லயித்திருக்க விரும்பினாள். அதனால்தான் தியாவுடன் கூட பேசாமல் காரை ஓட்டிக்கொண்டிருந்தாள்.

தியா சந்தோஷமாகக் கையை உயர்த்தி, சத்தமாக..”ய்யயே!” என்றாள்…

“இது போதும் மம்மி, இப்பத்தான் நான் உண்மையிலேயே அவார்ட் வின் பண்ணதா உணர்றேன்”

****

மறுநாள் சஞ்சனா ஹாலில் உட்காந்து ஜூஸ் போடுவதற்காக ஆப்பிள் நறுக்கிக் கொண்டிருந்தாள். தியா தனக்கு வந்த பாராட்டு செய்திகளுக்கு மொபைலில் நன்றி சொல்லிக்கொண்டிருந்தாள். அவளை பேட்டியெடுக்க இங்கிலாந்தின் இரண்டு முன்னனி மீடியாக்கள் நேரம் கேட்டிருந்தன.

கைலாஷ் ஆரவாரத்தோடு வீட்டுக்குள் நுழைந்தான், “என் தியா செல்லம் கங்கிராஜூலேஷன்ஸ்.. நீ அப்பாவோட பொண்ணுன்னு நிரூபிச்சிட்ட…” என்று கட்டியணைக்க.. தியா அப்பாவைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள்.

“தேங்க்யூ டாடி… நீதான் வராம போயிட்ட.. எனக்கு உன் மேல செம கோபம்”

“சாரிடா கண்ணு.. அப்பா நெலமைதான் உனக்குத் தெரியும்ல.. பிசினஸ்ல அவ்வளோ பிசி.. என்ன பண்றது.. சரி உன் படம் எப்ப யூடியூப்ல வரும்? அப்பா அதுல பாத்துக்கிறேன்..” ஆப்பிள் நறுக்கிக் கொண்டிருந்த சஞ்சனாவை ஆசையாய் அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட்டபடி சொன்னான்.

தியா, “என்னது யூடியூப்லயா? நெட்ஃப்ளிக்ஸ்ல பேசிட்டு இருக்காங்க.. அடுத்த வாரம் வந்திரும்”

கைலாஷ் சந்தோஷத்தில் கத்தினான்..”யம்மாடி.. நெட்ஃப்ளிக்ஸ்லயா? என் பொண்ணு அவ்வளோ பெரிய ஆளாகிட்டாளா…”

தியா அப்பா சந்தோஷப்படுவதைப் பார்த்து மகிழ்ச்சியில் கண் கலங்கினாள்…

கைலாஷ் பெருமையாக, “பாத்தியா எங்க லவ் ஸ்டோரிதான் எல்லா ஸ்டோரியையும் விட பெஸ்ட்.. அதான் first prize வின் பண்ணிருக்கு…”

தியா கிண்டலாக, “ம்க்கும்.. அதெல்லாம் ஒண்ணும் இல்ல.. அம்மாவோட லவ் ஸ்டோரிய அப்படியே சொன்னா ரொம்ப போரிங், அதான் நானே கதையில ஒரு வில்லனை கொண்டு வந்திருக்கேன்.. அப்பத்தானே கதை interesting-ஆ இருக்கும்!”

கைலாஷ் ஆச்சரியமாக, “என்னது எங்க லவ் ஸ்டோரில எனக்கு ஒரு வில்லனா? யாரு அவன்?”

தியா, “உனக்கு வில்லன் இல்ல, வில்லனே நீதான்… நான் கற்பனையா விஜய்னு ஒரு ஹீரோவை அறிமுகப்படுத்திருக்கேன்.. அந்த கேரக்டரைப் பார்த்து impress ஆகித்தான் first prize குடுத்திருக்காங்க…ஆனா கவலைப்படாத கதைய perfect- ஆ முடிச்சிருப்பேன்.”

சஞ்சனா சிரித்துக்கொண்டே, “நீ அந்தப் படத்தை பார்க்காம இருக்கிறதே நல்லது கைலாஷ்.. உன் பொண்ணு என்னன்னவோ எடுத்து வச்சிருக்கா…”

கைலாஷ் பொய் கோபத்துடன், “அடிப்பாவி உனக்கு ஃபீஸ் கட்டி படிக்க வைக்கிறது நானு, கடைசில உங்க அம்மாவோட காதல் கதையில என்னை வில்லன் ஆக்கிட்டியா?”

சஞ்சனா சத்தமிட்டு கலகலவென சிரிக்கிறாள்…

தியாவும் சிரித்துக்கொண்டே, “நீ கிளைமாக்ஸை பார்த்துட்டு அப்புறம் சொல்லு டாடி… நீ என் செல்ல டாடி..உன்னைப்போய் நான் தப்பா காட்டுவேனா?” என்றாள்..

அதற்குள் குரேஷியிடமிருந்து தியாவுக்கு கால் வர, மொபைலை எடுத்துக்கொண்டு வேகமாக அறைக்கு வெளியே ஓடினாள்.

அவள் திரும்பி வருவதற்குள் கைலாஷும், சஞ்சனாவும் கொஞ்சிக் குலவிக்கொண்டிருந்தார்கள். சஞ்சனா ஒரு ஆப்பிள் துண்டை கையில் எடுத்து கைலாஷுக்கு ஊட்டிக்கொண்டிருந்தாள்.

திரும்பி வந்த தியா..”டாடி… நாளைக்கு இந்தியாவுல இருந்து அந்த டைரக்டர் வர்றாராம். அவருக்குத்தான் நான் அஸிஸ்டண்ட்டா செலக்ட் ஆயிருக்கேன். நாளைக்கு மீட்டிங்குக்கு குரேஷி அம்மாவை இன்வைட் பண்ணிருக்கார். நாளைக்கு சண்டேதானே நீயும் வர்றியா?”

கைலாஷ், “ஐயோ சாரிடா செல்லம், நாளைக்கு St. Albans-ல ஒரு எக்ஸ்போ இருக்கு. நம்ம கம்பேனி சார்பா நான் அங்க இருந்தே ஆகணும்.. தப்பா எடுத்துக்காதடா கண்ணு…”

தியா தலையில் அடித்துக்கொண்டு, “ஹைய்யோ நீ எப்பவுமே இப்படித்தான்.. போய் தொல… மம்மி நீயாச்சும் வருவேல?”

சஞ்சனா, “கண்டிப்பா வருவேன்டா”… என்றாள்…

அத்தியாயம் 27 - ஒரு சொல்லப்படாத கதை

"Coincidences are spiritual puns." — G.K. Chesterton

ஜனவரி 2024
42 மில்டன் ஸ்டிரீட், லண்டன்

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் திரைப்படக் கல்லூரியும், குரேஷியின் அலுவலகமும் அமைதியாக இருந்தது. ஒருசில ஊழியர்கள் மட்டும் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். சஞ்சனாவும், தியாவும் குரேஷியின் அறிவுறுத்தல்படி கல்லூரி வளாகத்தில் இருக்கும் ப்ரிவியூ தியேட்டரில் காத்துக்கொண்டு இருந்தார்கள். குரேஷி தன்னுடைய அலுவலக அறையில் அந்த இயக்குனருடன் பேசிக்கொண்டிருந்தார்.

ஒரு 30 நிமிடக் காத்திருப்புக்குப் பிறகு குரேஷி ப்ரிவியூ தியேட்டருக்கு வந்தார். தாமதமாக வந்ததற்காக சஞ்சானாவிடமும், தியாவிடமும் எக்ஸ்கியூஸ் கேட்டுக்கொண்டு அவர்கள் முன் உட்காந்தார்.

“சார் அந்த டைரக்ட்டரோட படத்தை பார்க்க எங்க டீம் மெம்பர்ஸ் எல்லாரும் ரொம்ப ஆசையா இருந்தாங்க..” என்று தியா ஆரம்பிக்க..

குரேஷி இடமறித்து, “அவங்களுக்கு கண்டிப்பா ஒரு ஷோ அரேஞ்ச் பண்றேன். ஆனால் இந்த ஷோவுக்கு நான் ஏன் உங்க ரெண்டு பேரையும் மட்டும் வரச்சொன்னேன் தெரியுமா?...”

சஞ்சனாவும், தியாவும் புரியாமல் விழித்தார்கள்..

குரேஷி, “காதல் அற்புதமானது மட்டுமல்ல, அது அற்புதங்களையும் நிகழ்த்தக்கூடியது. அப்படிப்பட்ட ஒரு அற்புதம்தான் இப்ப நமக்கு நடந்திருக்கு. ஒரு இந்திய இயக்குனரோட ஒரு படத்தை கேன்ஸ் படவிழாவுல பார்த்து ரொம்ப impress ஆகி, அவரை வச்சுத்தான் என்னோட கனவு ப்ராஜக்ட்டை பண்ணனும்னு முடிவு பண்ணேன். அவருக்கு யாரெல்லாம் assistant-ஆ work பண்ணனுங்கிறத முடிவு பண்றதுக்காக ஒரு குறும்பட போட்டியும் அறிவிச்சேன்.

நடந்தது என்னன்னா, நான் கேன்ஸ் படவிழாவுல எந்தப் படத்தைப் பார்த்து ரொம்ப impress ஆனேனோ, அந்தப் படத்தோட மறுபாதிதான் உங்க பொண்ணு தியா எடுத்த Eternal Echoes of Unrequited Love படம்.

தியா அதிர்ச்சியடைகிறாள், சஞ்சனாவும் தியாவும் ஒருவரையொருவர் ஆச்சரியமாகப் பார்த்துக்கொள்கிறார்கள். குரேஷி தொடர்கிறார்…

முதல்ல நான் இதை ஒரு தற்செயல் நிகழ்வுன்னு நெனச்சேன். தியாவோட படத்தை அந்த இந்திய இயக்குனருக்கு அனுப்பி பார்க்கச் சொன்னேன். அந்த இயக்குனர் படத்தைப் பார்த்துட்டு உடனே எனக்கு கால் பண்ணி, சத்தியமா நான் எடுத்த படத்தோட மறுபாதிதான் இது, இந்த படத்துல வர்ற கேரக்டரோட ஒரிஜினல் பேரு சஞ்சனாவான்னு கேட்டாரு…”

சஞ்சனாவுக்கு தூக்கி வாரிப் போட்டது.. அவளது இதயத்துடிப்பு அதிகமானது…

குரேஷி தொடர்கிறார், “நான் ஆமான்னு சொன்னேன், ஏன்னா தியா ஏற்கனவே எங்கிட்ட சொல்லிருந்தா, இது எங்க அம்மாவோட வாழ்க்கையில நடந்த சம்பவம்னு…” அவர்தான் உன்னையும் தியாவையும் சந்திச்சு இந்தப் படத்தை உங்களுக்கு போட்டுக்காட்ட விரும்புனாரு. அதுனாலதான் உங்களை மட்டும் வரச்சொன்னேன்.

சஞ்சனா நடுக்கம் கலந்த குரலில் கேட்டாள், “அந்த டைரக்டர் யாரு சார்?..”

அரங்கத்தின் கதவு தட்டப்பட்டு, “மே ஐ கம் இன்..”

குரேஷி “எஸ்” என்று கத்தியபடியே கதவைத் திறக்கச் செல்ல, அதற்குள் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான் மெல்னி..

சஞ்சனா ஆச்சரியத்தில் கத்தினாள்.. “மெல்னீ…Its unbelievable!”

“ஹவ் ஆர் யூ சஞ்சனா…” என்று சிரித்துக் கொண்டே உள்ளே வந்து அவளுக்கும், தியாவுக்கும் கை கொடுத்தான்,

“என்னால சத்தியமா நம்ப முடியல” மறுபடியும் ஆச்சரியமாக சொன்னாள் சஞ்சனா.. குரேஷி சஞ்சனாவின் ஆச்சரியத்தை இரசித்தபடி புன்னகைத்தார்.

“என்னாலயும்தான்…” என்றான் மெல்னி பதிலுக்கு சிரித்தபடியே..

“உன்னை contact பண்ண எவ்வளவோ try பண்ணோம் சஞ்சனா, ஆனா உன்னை நீ மொத்தமா isolate பண்ணிக்கிட்டே, வனிதாவுக்கு உன் மேல ரொம்ப கோபம்” என்றான் மெல்னி.

சஞ்சனா வருத்தத்துடன், “Extremely sorry மெல்னி…என்னோட சூழ்நிலைகள் அப்படி.. நான் வனிதாகிட்ட பேசணுமே.. எத்தனை வருஷம் ஆச்சு அவளோட பேசி!..” என்றாள்.

மெல்னி, “அவ நம்பர் தர்றேன் பேசு” என்றவன் சில வினாடிகள் மௌனமாக இருந்துவிட்டு, “உனக்கு தெரியுமா சஞ்சனா, நான் டைரக்ட் பண்ணி, நிறைய awards win பண்ண இந்தப் படம் நம்ம விஜய் பத்தினதுதான்..”

சஞ்சனாவின் முகம் மாறியது, “விஜய் எப்படி இருக்கான் மெல்னி… இப்ப எங்க இருக்கான்?” என்று தழுதழுக்கும் குரலில் கேட்டாள்..

மெல்னி இரு நொடிகள் அவள் முகத்தை கூர்ந்து பார்த்துவிட்டு, “மொதல்ல படத்தைப் பாரு, நான் அப்புறம் சொல்றேன்…” என்றான்.

நால்வரும் இருக்கையில் அமர்ந்தார்கள், அரங்கத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டன.

****

கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; **ஆணும் பெண்ணுமாக** அவர்களைப் படைத்தார் (விவிலியம் - தொடக்க நூல் 1:27)

என்ற வசனத்துடன் ஆங்கில subtitle-லோடு அந்த மலையாளத் திரைப்படம் துவங்கியது…

“தமிழ்நாட்டில் நடைபெறுவதாகக் காட்டப்படும் காட்சிகள் பார்வையாளர்களின் புரிதலுக்காக உரையாடல்கள் மலையாளத்தில் மாற்றப்பட்டுள்ளன” என்ற கார்டு காட்டப்படுகிறது.

நன்றி: இலந்தைப்பட்டி கிராம மக்கள், தமிழ்நாடு…

பறையாத ஒரு பிரணய கதா (An untold Love Story)..

1983, இலந்தைப்பட்டி, மதுரை மாவட்டம்
தமிழ்நாடு

கறுப்பு வெள்ளையில் பழைய film format ஸ்டைலில் படம் ஓடத் துவங்கியது. முதல் காட்சியாக இரவு நேரத்தில் ஒரு சிறிய தேவாலயத்தின் வெளிப்புறம் காட்டப்படுகிறது…அது ஒரு நள்ளிரவு நேரம் என்பதை பூச்சிகள் மற்றும் தவளைகளின் சத்தம் சுட்டிக்காட்டியது. கேமரா அந்த தேவாலயத்தை நோக்கிச் செல்ல..

அடுத்த ஷாட்டில் தேவாலயத்தின் உள்ளே பாய் விரித்து அருகருகே ஒரு நடுத்தர வயது ஆணும் ஒரு ஏழு வயது சிறுவனும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நடுத்தர வயது ஆண் ஒரு கைவைத்த பனியனும், லுங்கியும் அணிந்திருந்தார். அந்த சின்னப்பையன் டவுசர் சட்டை அணிந்திருந்தான். இப்போது வெளியே கேட்ட பூச்சிகள் மற்றும் தவளைகளின் சத்தம் சன்னமாய் கேட்க, தேவாலயத்துக்குள் ஓடிக்கொண்டிருந்த பழைய சீலிங் ஃபேனின் கிரீச் கிரீச் சத்தம் அதிகமாகக் கேட்கிறது…

இருவரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்..

திடீரென அந்தப் பையன் பயந்து எழுந்து உட்காருகிறான்.. அவன் முகத்தில் பயம் அப்பியிருக்கிறது.. சுற்றும் முற்றும் பார்க்கிறான்.. பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த அந்த நபரை எழுப்புகிறான்.. உரையாடல்கள் மலையாளத்தில் இருக்கின்றன, கீழே ஆங்கில subtitle காட்டப்படுகிறது…

“ஃபாதர்.. ஃபாதர்…”

அவர் அரைத் தூக்கத்தில் எழுந்து உட்காருகிறார்..” என்ன விஜய்?..”

பையன் முகத்தில் இன்னும் பீதி மாறவில்லை, “யாரோ அழுகுற சத்தம் கேட்குது ஃபாதர்?”

“அழுகுற சத்தமா? எனக்குக் கேட்கலையே..”

“உங்களுக்கு கேட்கலியா? எனக்கு சத்தமா கேக்குதே!”

“ஏதாவது கனவு கண்டிருப்ப ராஜா.. தூங்கு” என்று அவன் நெற்றியில் சிலுவை வரைந்துவிட்டு மீண்டும் படுத்துக்கொண்டார்..

அந்த சிறுவன் இன்னும் உட்காந்திருந்தான்.. சில நிமிடங்கள் கழித்து ஃபாதரை மீண்டும் எழுப்பினான்”

“ஃபாதர்.. ஃபாதர்…”

பாதர் கஷ்டத்தோடு எழுந்து உட்காந்தார்..”என்னடா ராஜா..?”

“இன்னும் அந்த அழுகைச் சத்தம் எனக்குக் கேட்குது ஃபாதர்”

ஃபாதருக்கு ஏதோ தவறென்று புரிய ஆரம்பிக்கிறது.. அவரது தூக்கம் கலைந்தது.. “யார் அழுகிறது? நீ முழிச்சிருக்கும்போதே உனக்குக் கேட்குதா?”

“ஆமா…யாரோ ஒரு பொண்ணு அழுகுற மாதிரி சத்தம் கேட்குது ஃபாதர்”..

“என்னது பொண்ணு அழுகுற சத்தம் கேட்குதா?” என்றபடியே பாதர் டியூப் லைட்டை எரியவிட்டு வந்து விஜய் அருகே அமர, அவன் அவரது மடியில் தலைவைத்துக் கொள்கிறான். ஃபாதர் அவனுக்கு தட்டிக்கொடுத்துக்கொண்டே ஒரு மலையாள கிறிஸ்தவ கீர்த்தனையை தாலாட்டு போல சத்தமாகப் பாடுகிறார்…

வந்தனம் யேஷுபரா நினக்கென்னும்
வந்தனம் யேஷுபரா..
வந்தனம் செய்யுன்னு நின்னடியார் திரு
நாமத்தின்னாதரமாய்…

பாடலைக் கேட்டுக்கொண்டே விஜய் தூங்கிப்போய் விடுகிறான்… காட்சி black out ஆகிறது.

“ஒரு வாரம் கழித்து…” என்ற எழுத்துக்கள் திரையில் மிளிர்கின்றன…

மீண்டும் அதே போல இருவரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். விஜய் திடுக்கென்று மீண்டும் எழுந்து உட்காருகிறான். ஃபாதரை எழுப்புகிறான்… இப்போது அவனும் அழுதுகொண்டிருக்கிறான்.

“ஃபாதர், ஃபாதர்..”

ஃபாதர் எழுந்து, விஜய் அழுவதைப் பார்த்து அதிர்ச்சியாகி..”என்னய்யா என்ன ஆச்சு?”

“இன்னிக்கும் அதே மாதிரி ஒரு பொண்ணு அழுகுற சத்தம் கேட்குது ஃபாதர்..”

ஃபாதர் கவலையோடு அவனைப் பார்க்கிறார். மீண்டும் லைட்டைப் போட்டுவிட்டு வந்து, அவன் அருகே அமர்ந்து, அவன் நெற்றியில் சிலுவை அடையாளத்தை வரைந்துவிட்டு, அவனை

மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு, அவன் தலையை வருடிக் கொடுக்க அவன் தொடர்ந்து அழுது கொண்டே இருக்கிறான்..

“இன்னும் என் காதுல சத்தம் கேட்குது ஃபாதர்…”

ஃபாதர் அவனைத் தட்டிக்கொடுத்து.. “சரிடா சரிடா செல்லம்.. இயேசப்பாகிட்ட சொல்லு.. எல்லாம் சரியாகிரும்”..

விஜய் அழுதுகொண்டே திரும்பத் திரும்பச் சொல்கிறான்..”இயேசப்பா காப்பாத்துங்க…” அவன் சொல்வதைக் கேட்டு ஃபாதரின் கண்கள் கலங்குகின்றன.. அவரும் கண்களை மூடி மௌனமாக ஜெபிக்கிறார். அவர் கண்களை மூடியவுடன் அவர் கண்களிலிருந்து விடுபட்ட கண்ணீர் துளிகள் விஜய்யின் சட்டையில் விழுந்தன…

அத்தியாயம் 28 - பரந்த ஆன்மவெளியில் முதல் சந்திப்பு

"Our souls dance together in the cosmic symphony, feeling every note of joy and every chord of pain, no matter the distance." - Whispered Symphony: A Kaleidoscope of Poetic Reveries

ஷக்தியுண்டு ஷக்தியுண்டு அட்புதஷக்தீ
யேஷுவின் இரத்தத்தில்
ஷக்தியுண்டு ஷக்தியுண்டு அட்புதஷக்தீ
யேஷுகிறிஸ்துவின் இரத்தத்தில்..

சபை மக்கள் சுற்றி நின்று கைதட்டி பாடிக்கொண்டிருக்கிறார்கள். விஜய் நடுவே பயத்தில் அழுதுகொண்டு உட்காந்திருக்கிறான். ஃபாதர் ஐசக் மரியான் விஜய்யின் தலையில் ஒரு மரச்சிலுவையை வைத்து சத்தமாக ஜெபித்துக்கொண்டிருக்கிறார். அவரது இன்னொரு கையில் ஜெபமாலை இருக்கிறது. அதை விரல்களால் உருட்டியபடியே ஜெபிக்கிறார்..

“இந்த குழந்தையை வருத்தப்படுத்துகிற பிசாசே…இயேசுவின் நாமத்தில் வெளியே வா என்று உனக்கு கட்டளையிடுகிறேன்…”

ஃபாதர் மூன்று முறை இதை சத்தமிட்டுச் சொல்லுகிறார்… விஜயிடம் எந்த சலனமுமில்லை, அவன் மேலும் பயந்து தேம்பித் தேம்பி அழ.. ஃபாதர் அவனைக் கட்டியணைத்துக்கொண்டு.. சுற்றிலும் பாடுபவர்களை நிறுத்தச் சொல்லுகிறார்..

“இல்ல, இல்ல.. உள்ளே அசுத்த ஆவி எதுவும் இல்ல.. இருந்திருந்தா இந்நேரத்துக்கு ஆட ஆரம்பிச்சிருக்கும்.. நாம எத்தனை கேஸ் பார்த்திருப்போம் .. என் புள்ளைக்கு ஒண்ணும் இல்ல..” என்று சொல்ல சபை மக்கள் கலைகின்றனர்..

ஃபாதர் விஜய்யிடம் மெதுவாக காதில் சொல்லுகிறார்..“ஒண்ணும் இல்லடா செல்லம், நான்கூட பயந்து போயிட்டேன்.. உனக்குள்ள ஒண்ணும் இல்ல.. நீதான் இயேசப்பா பிள்ளையாச்சே.. உனக்குள்ள எதுவும் போக முடியாது. நான்தான் தப்பா நெனச்சுட்டேன்..” என்று சொல்ல விஜய் அழுகையை நிறுத்தி கொஞ்சம் நிம்மதியாகிறான்.. ஆனால் தேம்பல் மட்டும் நிற்கவில்லை.. ஃபாதர் அவனது தலையை அன்பாக வருடிக்கொடுக்கிறார்.

****
1983, கூடல் நகர், மதுரை..
சகாய அன்னை மனநல மருத்துவமனை

"இந்தப் பிரச்சனைக்குப் பேரு "ஆடிட்டரி ஹாலுசினேஷன் (Auditory Hallucination)". இது ஒரு mental disorder.. இதுக்கு பின்னாடி பேய் பிசாசெல்லாம் ஒண்ணும் இல்ல. யாரோ பேசுற மாதிரியோ, சிரிக்கிற மாதிரியோ அல்லது அழுகுற மாதிரியோ காதுல கேட்கும். இதை அப்படியே விட்டுட்டோம்னா schizophrenia மாதிரி மோசமான கண்டிஷனுக்குப் போய் விட்டுரும்..”

ஃபாதர் ஐசக் மரியானிடம் மதுரையிலிருக்கும் ஒரு பிரபல மனநல மருத்துவர் பேசிக்கொண்டிருந்தார். கவலை மிகுந்த முகத்தோடு ஃபாதர் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார். விஜய் வெளியே ரிஷப்ஷனில் சிலேட்டில் பல்பத்தை வைத்து ரஜினிகாந்த் படம் வரைந்து கொண்டிருந்தான். அவனுக்கு பக்கத்தில் உட்காந்திருந்த ஒரு நபர் அவன் வரைவதை ஆச்சரியமாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.

****

இலந்தைப் பட்டிக்கு திரும்பியதும் விஜய் எப்போதும்போல நன்றாகத்தான் இருந்தான் விளையாடினான், ப்ரேயர் பண்ணினான், படித்தான்.. ஆனால் பத்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் அதே பிரச்சனை.. இப்போது பகலிலேயே பள்ளியில் வகுப்பறையில் உட்காந்து அவனுக்கு விருப்பமான தமிழ் பாடம் கேட்டுக்கொண்டிருக்கும்போது மீண்டும் அவன் காதுகளில் அழுகைச் சத்தம் கேட்க.. அதைக் கேட்டு அவனும் அழத்தொடங்க.. அதிர்ச்சியான தமிழாசிரியர் வகுப்பை நிறுத்திவிட்டு, அவனை தனது சைக்கிளில் ஏற்றிக்கொண்டு தேவாலயத்தில் ஃபாதரிடம் அவனைக் கூட்டிக்கொண்டு வந்து விட்டார்.

ஃபாதர் அப்போது உபவாசத்தில் இருந்தார். விஜய்க்காக மனமுருகி அவர் ஜெபித்துக்கொண்டிருந்தபோது, அதே பிரச்சனை காரணமாக அவனை பள்ளியிலிருந்து ஆசிரியர் அழைத்துக் கொண்டுவந்து விட்டுப்போனது ஃபாதருக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. “ஏன் ஆண்டவரே இப்படிச் செய்தீர்? “ என்று மனதுக்குள் கடவுளோடு போரடிக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு திடீரென்று மனதில் ஏதோ ஒரு சிந்தை உதயமானது.. அவர் விஜய்யைப் பார்த்து…

“விஜய், நீ ஒரு பொண்ணோட அழுகைச் சத்தம் கேட்குறேன்னு சொல்றேல்ல.. அது ஒரே பொண்ணோட குரல்தானா.. அல்லது வேற வேற குரல் கேட்குதா?”

விஜய் சொன்னான், “இல்ல ஃபாதர் அது ஒரே பொண்ணோட குரல்தான்..”

பாதர், “அப்ப நான் ஒண்ணு சொல்றேன், கேட்பியா ராஜா..” என்கிறார்.

“சொல்லுங்க ஃபாதர் நீங்க என்னா சொன்னாலும் கேட்பேன்…”

பாதர், “உனக்கு மொத மொதல்ல இந்தப் பிரச்சனை வந்தப்ப அது அசுத்த ஆவியோட வேலையா இருக்கும்னு நெனச்சேன். ஆனா ஜெபத்துல அது இல்லைன்னு ஆயிடுச்சு. அப்புறம் மனநலக் கோளாறா இருக்கும்னு நெனச்சேன்… எனக்குள்ள இருக்கிற பரிசுத்த ஆவி இது மனநலக் கோளாறு இல்லைன்னு எனக்குள்ள உறுதியா சொல்றாரு.. அப்படின்னா இது வேற ஏதோ ஒண்ணாத்தான் இருக்க முடியும்..”

“வேற ஏதோ ஒண்ணுன்னா என்னா ஃபாதர்?” விஜய்யின் கண்களில் பயம் அப்பியிருந்தது.

“இல்ல ராஜா, ஒண்ணும் பயப்படாத.. அதாவது எங்கேயோ, யாரோ ஒரு பொண்ணு ஏதோ ரொம்பப் பெரிய ஒரு பிரச்சனையில இருக்கு. அதைத்தான் கர்த்தர் உனக்கு காட்டுறாரு. உன் காதுல எப்பவெல்லாம் அந்த அழுகைச் சத்தம் கேட்குதோ அப்பவெல்லாம் நீ அந்தப்

பொண்ணுக்காக உருக்கமா, விசுவாசமா ஜெபம் பண்ண ஆரம்பிச்சிரு. இயேப்பா அந்தப் பொண்ணுக்கு உதவி செய்யுங்கன்னு கேளு…"

விஜய்யின் கண்கள் பிரகாசித்தன..

"இப்ப அந்த அழுகைச் சத்தம் கேட்குதா?"

"ஆமா ஃபாதர் இன்னும் கேட்டுக்கிட்டே இருக்கு"

"போ… அப்ப போய் ஜெபம் பண்ணு போ.."

விஜய் உற்சாகமாக பீடத்தை நோக்கி ஓடினான். பீடத்தின் கீழே ஃபாதர் முழங்காலிடும் தலையணையில் முழங்காலிட்டான். சிலுவையில் தொங்கிய இயேசுவைப் பார்த்து சத்தம் போட்டு கத்தினான்.. அவன் போட்ட சத்தம் அக்கம் பக்கம் எங்கும் தொனித்தது. ஒரு பதினைந்து நிமிடங்கள் ஏதேதோ மழலை மொழியில் சொல்லி ஜெபித்தான்.. திடீரென்று எழுந்து மகிழ்ச்சியோடு "ஃபாதர்.. ஃபாதர்.." என்று கத்திக்கொண்டே திரும்பி ஓடி வந்தான். அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்துகொண்டே இருந்தது…

ஃபாதர், "என்ன விஜய்.. என்ன ஆச்சு?"

"எ எ எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு ஃபாதர்.. இயேசப்பா என் பிரேயர கேட்டுட்டாரு போல..இந்நேரம் அந்தப் பொண்ணுக்கு சரியாகியிருக்கும்.. அழுகைச்சத்தம் நின்னுருச்சு… அப்புறம்.. யா யா யாரோ எதையோ எனக்குள்ள ஊத்துன மாதிரி இருக்கு..ரொம்ப நல்லா இருக்கு" மேலும் கீழும் உற்சாகமாகக் குதித்துக் கொண்டிருந்தான்.

ஃபாதர் சிரித்துக்கொண்டே, "என்ன ஊத்துன மாதிரி இருக்கு?"

விஜய், "அதான், நீங்க சர்ச்சுல ஏதோ சொல்லுவீங்களே.. எனக்கு தெரியல.." என்று சொல்லிக்கொண்டே துள்ளிக் குதித்து வெளியே ஓட, ஃபாதர் ஐசக் மரியான் அவனை சந்தோஷமாகப் பார்த்து, சிரித்துக் கொண்டே கடவுளுக்கு நன்றி சொல்லிக்கொண்டு தன் ஜெபத்தை தொடர்ந்தார்.

அத்தியாயம் 29 - நீ பாதி, நான் பாதி கண்ணே…

"You are a reflection of me, and I am a reflection of you. We are mirrors, endlessly reflecting each other's essence." - Unknown

இரண்டு நாட்கள் அதே சந்தோஷத்தில் இருந்த விஜய் மீண்டும் சில நாட்கள் கழித்து தன் காதில் அதே அமானுஷ்ய அழுகுரலைக் கேட்டான். இப்போது தான் என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. இவன் பிரார்த்தனை செய்ததும் அந்த அழுகுரல் நின்றதும், இவன் மனம் மகிழ்ச்சியால் நிரம்பியதும் மீண்டும் நடந்தது. சில நாட்கள் இடைவெளியில் இது மீண்டும் மீண்டும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

யாரோ முகமறியாத ஒரு பெண்ணுக்கு தாம் உதவி செய்கிறோம் என்ற திருப்தி விஜய்க்கு இருந்தது. விஜய் தனது அனுதின பிரார்த்தனைகளில் அந்த அமானுஷ்யப் பெண்ணுக்காக தொடர்ந்து ஜெபிக்க ஆரம்பித்துவிட்டான். அவள் யார்? எங்கே இருக்கிறாள்? எப்படியிருப்பாள்? அவளுக்கு என்ன பிரச்சனை? இதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் நாளுக்கு நாள் அவனுக்கு அதிகமானது.

****

படம் இன்னும் கறுப்பு வெள்ளையிலேயே தொடர்ந்து கொண்டிருந்தது. இப்போது விஜய்க்கு பதினொறு வயது. ஃபாதர் ஐசக் மரியானை பக்கத்து ஊரில் உள்ள ஒரு தேவாயலத்தில் பிரசங்கிக்க அழைத்திருந்தார்கள். விஜய்யும் ஃபாதரும் அந்த பக்கத்து ஊர் தேவாலயத்தில் பூசை முடித்துவிட்டு சைக்கிளில் இலந்தைப்பட்டிக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஒரு ஆற்றோரம் உள்ள, மரங்கள் அடர்ந்த பாதையிலேயே சைக்கிள் ஓட்டி வரவேண்டும். அந்த இடம் அவ்வளவு பசுமையாக இருந்தது. இனிய காற்று வீசிக்கொண்டிருந்தது.

ஆங்காங்கே ஆற்றில் ஆட்கள் துவைத்துக் கொண்டும் குளித்துக்கொண்டும், மாடுகளைக் குளிப்பாட்டிக் கொண்டும் இருந்தார்கள். சிறுவர்கள் ஆற்றில் குதித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஃபாதர் சைக்கிளை அழுத்த, அவர் வாங்கிக் கொடுத்த குச்சி ஐஸைத் தின்று கொண்டே விஜய் பின்னால் உட்காந்து அவரோடு பேசிக்கொண்டே வந்தான். “ஃபாதர் இப்பல்லாம் அந்த பொண்ணு என்கூட பேச ஆரம்பிச்சிட்டா ஃபாதர்.. நீ எங்க இருந்து வர்றேன்னு கேட்டா.. நான் நம்ம சர்ச்ச காண்பிச்சேன்..” என்றான்.

ஃபாதர், “அப்படியா, அப்ப அவ நம்ம சர்ச்சுக்கு உன்னைத் தேடி வரப்போறான்னு நினைக்கிறேன்” என்றார் சிரித்துக்கொண்டே. “எப்படி அவ உங்கூட பேசுனா? அவ அழுகுறது உன் காதுல கேட்ட மாதிரியே, இப்பவெல்லாம் அவ பேசுறதும் உன் காதுல கேட்குதா?”

விஜய், “இல்ல ஃபாதர் இது என் கனவுல..” என்றான்…

“ஓ கனவுலயா?” என்றார் ஃபாதர்.

“ஏன் ஃபாதர், அவ எங்கேயோ இருக்கா, எங்க இருக்கான்னே தெரியல. நான் இங்க இருக்கேன். இங்க இருந்தே என்னால அவளுக்கு உதவி செய்ய முடியுதுன்னா.. நான் அவ கூடவே இருந்தேன்னா அவளை எப்பவுமே சந்தோஷமா வச்சுக்க முடியும்ல ஃபாதர்” குழந்தைத்தனமாகக் கேட்டான்..

ஃபாதர் கிண்டலாக, “டேய் இப்ப நீ என்ன சொல்ல வர்ற? அந்தப் புள்ளைய கட்டிக்கணும்னு கேட்குறியா... திருட்டுப் பயலே...”

விஜய் வெட்கத்துடன் நெளிந்தான், “ச்சீ போங்க ஃபாதர்”

ஃபாதர் அவன் வெட்கத்தை இரசித்து சிரித்துக் கொண்டார்…

****

விஜய்க்கு இப்போது வயது 20. அழகான இளைஞனாக வளர்ந்திருந்தான். அரும்பு மீசை வளர்ந்திருந்தது. அவன் தனது அமானுஷ்ய இளவரசியை ஆத்மார்த்தமாக நேசிக்கத் தொடங்கியிருந்தான். அவனது மனது முழுவதும் அவளே நிறைந்திருந்தாள். அவள் கறுப்போ, சிவப்போ, நெட்டையோ, குட்டையோ எதுவுமே தெரியாது. அவளைப்பற்றி அவனுக்குத் தெரிந்ததெல்லாம் அந்த உதவியற்ற, ஏக்கமான அழுகுரலும், அவளுக்காக பிரார்த்தித்த பின்னர் அவளுக்கு வெகு அருகாமையில் இருக்கும் அந்த வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத பரவச உணர்வும் மாத்திரமே!

எனக்கு அவளை முன்னரே தெரிந்திருப்பது போல அவளுக்கும் என்னைத் தெரிந்திருக்குமா? . இருவருக்குமே ஒருவரையொருவர் தெரிந்திருந்து, இருவரும் ஒருநாள் நேரில் சந்தித்தால் எப்படியிருக்கும்! இருவரும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்வோமா? என் கண்ணுக்கும், அவள் கண்ணுக்கும் தெரியாவிட்டாலும் இருவரது ஆன்மாக்களும் ஒன்றையொன்று நிச்சயம் அடையாளம் கண்டுகொள்ளும்…

ஏழு கடல், ஏழு மலைகள் தாண்டினாலும் பரவாயில்லை, அவள் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் அவளைத் தேடிக் கண்டுபிடித்தே ஆகவேண்டும். அவளைக் கண்டுபிடித்து, அவளை எனக்கே சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும். அவளது ஆன்மாவுக்கு அருகில் இருக்கும் உணர்வே இவ்வளவு பரவசமாக இருக்குமானால் அவளோடு கூடவே வாழ்ந்தால் அந்த வாழ்க்கை எப்படியிருக்கும்! எனக்கு இந்த உலகின் பேரழகிகள் வேண்டாம், கோடிக்கோடியாக பணம் கொட்டிக் கொடுத்தாலும் வேண்டாம்.. மாடமாளிகை, கூடகோபுரங்கள் வேண்டாம், எனக்கு ஒன்றே ஒன்று வேண்டும்.. அவள் வேண்டும்! எனக்கு அவள் மட்டுமே வேண்டும். அவளுக்காக எதை வேண்டுமானாலும் இழப்பேன்.. ஆனால் எதற்காகவும் அவளை இழக்க மாட்டேன்..

அவள் யார்? எங்கே இருக்கிறாள்? அவளை எப்படிக் கண்டுபிடிப்பது?

விஜய்யின் பேச்சு, மூச்சு, உறவு, உணர்வு, எண்ணம், எழுத்து எல்லாம் அவளாகிப் போனாள்..

அவனை காதல் வியாதி பிடித்து ஆட்டி வைப்பதைக் கண்டுகொண்டார் ஃபாதர். அவனை அழைத்துக் கேட்டபோது அவன் மொத்தமும் ஒப்புக்கொண்டான். அவன் அவளைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மும்மரமாய் இருக்கிறான் என்பதை அறிந்துகொண்டார்.

அவளை வெளிய தேடாத, வெளிய தேடுனா கண்டுபிடிக்க மாட்டே…இந்தப் பரந்த உலகத்துல, இத்தனைகோடிப் பெண்கள் மத்தியில அவளை எப்படி கண்டுபிடிப்ப? அவளை உனக்குள்ள தேடு.. ஏன்னா உன்னோட மறுபாதிதான் அவ.. உன்னில பாதின்னா அவளோட ஒவ்வொரு பதிவுகளும் உனக்குளேயும் இருக்கும் இல்லையா? அதுனால அவளை உனக்குள்ளேயே தேடு.. நீ ஒரு ஓவியன்தானே? உன் ஓவிய திறமைய வச்சு, உனக்குள்ள இருந்து அவளை வெளிய கொண்டு வா!!"

விஜய் ஃபாதரிடம் சொன்னான், "அவளை வரையப் போறேன் ஃபாதர். அவ எப்படியிருப்பான்னு தெரியுறதுக்கு முன்னாடியே அவளை உயிருக்கு உயிரா காதலிக்கிறேன் …அவ அழகா இருப்பாளோ இல்லையாங்கிறதப் பத்தியெல்லாம் எனக்கு கவலையே இல்ல.. எப்படி இருந்தாலும் அவதான் என் மனைவி.. அவதான் என்னோட பாதின்னு தெரிஞ்சிருச்சுல்ல.. அதுனால அவளை அடையுறதுக்காக நான் எந்த எல்லைக்கும் போவேன் ஃபாதர்.."

அடுத்த நாளில் இருந்து விஜய் ஏழு நாட்கள் சாப்பிடாமல், பச்சைத் தண்ணீர்கூட குடிக்காமல் கடும் விரதம் இருக்க ஆரம்பித்தான்.. பைபிள் படிப்பான், ஜெபம் பண்ணுவான்.. இதத் தவிர வேறு எந்த வேலையும் செய்யவில்லை… அவன் மனம் ஒருமுகப்பட்டது…ஏழாவது நாள் தன்னுடைய கண்களை ஒரு கறுப்பு துணியால் கட்டிக்கொண்டு, தனது மனதுக்குள் இருந்து அவளை வரைய ஆரம்பித்தான். அவன் கண்ணுக்கோ, மூளைக்கோ அங்க வேலையே இல்ல.. அவனது ஆழ்மனம் சொல்வது போல அவன் கை வரைந்துகொண்டிருந்தது..

மூன்று மணி நேரம் ஓடியிருக்கும்…

வரைந்து முடித்ததாக திருப்தி ஏற்பட்டதற்குப் பிறகு கட்டை அவிழ்த்து, கண்களைத் திறந்து பார்த்தான்…

……

எத்தனையோ யுகங்களாக அவன் ஆன்மா தேடிக்கிட்டு இருந்த அவனுடைய மறுபாதி அவன் கண்முன்னால் கேன்வாசில் ஓவியமாக சிரித்துக்கொண்டிருந்தது…

அதுவரை கறுப்பு வெள்ளையில் ஓடிக்கொண்டிருந்த அந்த திரைப்படம் முற்றிலும் வண்ணத்துக்கு மாறியது. அந்த நாளில் விஜய்யின் வாழ்க்கையும்கூட….

தன்னை மறந்து சத்தம் போட்டு சிரித்தான், கத்தினான்.. அழுதான்.. குதித்தான்.. உருண்டான்.. சந்தோஷக் கூத்தாடினான்..

சத்தம் கேட்டு ஃபாதர் ஓடிவந்து பார்த்தார்.. அவன் வரைந்த ஓவியத்தைப் பார்த்தார்.. அவனைக் கட்டி அணைத்துக்கொண்டார்.."என் மகனே! நீ அவளைக் கண்டுபிடிச்சிட்டியா, அவளைக் கண்டுபிடிச்சிட்டியா… உன்னில் பாதி உன்னைப்போலவேதான் இருக்கிறாள்"

விஜய்க்கு இதுவரை உலகத்தில் யாருமே சாதித்திராத ஒன்றை தான் சாதித்தது போன்ற உணர்வு இருந்தது. அவன் தன்னுடைய மகிழ்ச்சியைக் கொண்டாடி முடிக்கட்டும் என்று ஃபாதர் காத்திருந்தார். அவருக்கு அவனிடம் சொல்ல வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றிருந்தது.

****

இரண்டு நாட்களுக்குப் பிறகு…

தேவாலயத்தில் பீடத்துக்குக் கீழே பாய் விரிக்கப்பட்டிருந்தது. பாயில் ஒரு பைபிள் வைக்கப்பட்டிருந்தது. ஃபாதர் அழைக்க, விஜய் அவர் முன் வந்து உட்காந்தான்.

“விஜய் உன்னோட ஆன்ம சிநேகிதியைக் கண்டுபிடிச்சிட்ட.. அடுத்து என்ன செய்யப்போற?”

“அவளைத் தேடப் போறேன் ஃபாதர்”

“எங்கே போய் தேடப் போற?”

“அவ இந்த உலகத்தில எந்த மூலையில இருந்தாலும் தேடப்போறேன்”

ஃபாதர் கலகலவென சிரித்தார்…

“அடப் பைத்தியகரா, அப்படித் தேடி உன்னால அவளைக் கண்டுபிடிக்க முடியுமா? அவள் உருவம் வரைக்கும் உனக்குக் காட்டிய கடவுளுக்கு, அவள் இருக்குமிடத்தைக் காட்டுவது அவ்வளோ கடினமான விஷயமா?”

விஜய் அமைதியாக இருந்தான்..

ஃபாதர், “அவசரப்படாத, அமைதியாய் இரு, நிதானமாய் முடிவெடு… தேவைப்பட்டால் அவள் இருக்குமிடத்துக்கு அவரே உன்னைக் கொண்டு போவார், அல்லது அவளை நீ இருக்கும் இடத்துக்கு கொண்டு வருவார்… இப்ப உன்னோட வேலை படிக்கிறது, அதில் மட்டும் உன் கவனத்தை செலுத்து.. நடக்க வேண்டியவைகள் தானாக அதனதன் காலத்தில் நடக்கும்..”

விஜய், “சரிங்க ஃபாதர்” என்று தலையாட்டினான்..

“விஜய் நான் உன்கிட்ட இன்னொரு கேள்வி கேட்கட்டுமா?”

“கேளுங்க ஃபாதர்…”

“கடவுள் அந்தப் பெண்ணுக்கு, அவளோட ஏதோ ஒரு பிரச்சனையிலிருந்து அவளுக்கு விடுதலை தர உன்னை ஒரு அற்புதமான கருவியா பயன்படுத்தினாரு.. ஆனா எப்போதாவது அந்தப் பெண்ணை உனக்கு மனைவியாய் தருவென்னு உனக்கு promise பண்ணாரா?”

விஜய் யோசித்தான், “இல்லை ஃபாதர்… ஆனா என்னோட பாதின்னா என்ன அர்த்தம்? எனக்கு மனைவியாகப் போகிறவள் என்றுதானே அர்த்தம்?”

ஃபாதர் சிரித்தபடி பைபிளைத் திறந்து அவனுக்கு ஆதியாகமம் 1:27 ஐ வாசித்துக் காண்பித்தார். “கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்”

விஜய் அமைதியாக ஃபாதரின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்…

“இந்த வசனத்தின்படி நீ சொன்னது சரிதான். கடவுள் ஒவ்வொரு மனிதனையும் ஆணும் பெண்ணுமா, ஜோடி ஜோடியாதான் படைக்கிறாருன்னு இந்த வசனம் சொல்லுது. உன்னோட பாதியை நீ கண்டுபிடிச்சிட்ட, அவதான் உனக்கு மனைவியாவான்னும் நம்புற.. அப்படின்னா என்னோட பாதி எனக்கு மனைவி ஆகிருக்கணும்ல.. ஆனா இப்ப அவங்க வேற யாருக்கோ மனைவியாகி, எங்கேயோ வாழ்ந்துகிட்டு இருப்பாங்கதானே?”

விஜய், “அது நீங்க எடுத்த சொந்த முடிவு ஃபாதர், கல்யாணம் பண்ணாம கடவுளுக்கு சேவை செய்யணும்னு நீங்க எடுத்த முடிவுதானே அது?”

“ம்ம்ம். அதான் சொல்றேன்.. நான் எடுத்த சொந்த முடிவுதான் அது.. இப்படி சொந்தமா முடிவெடுக்கிற அதிகாரம் ஒவ்வொரு மனுஷனுக்கும், மனுஷிக்கும் இருக்கு. அந்த அதிகாரத்தை கடவுள்தான் மனுஷனுக்குக் கொடுத்தார்னு பைபிள் சொல்லுது. அந்த அதிகாரத்தில கடவுள் தானும் தலையிடமாட்டார்… மற்றவர்கள் தலையிட்டு ஒருத்தரை ஒருத்தர் கட்டுப்படுத்துவதையும் விரும்பமாட்டார். அதுனால நீ நினைக்கிற மாதிரியெல்லாம் இந்த உலகத்தில நடக்குறது இல்ல விஜய்”

விஜய்யின் முகம் வாடியது, ஃபாதர் என்ன சொல்லவருகிறார் என்பது புரிந்தது…

“ரெண்டு கையும் சேர்ந்து தட்டினாத்தான் விஜய் ஓசை வரும்… நீ அந்தப் பெண்ணை விரும்புற மாதிரியே அந்தப் பெண்ணும் உன்னை விரும்பனும், அப்படி விரும்பலைன்னா நீ கண்ணியமா விலகிக்கணும், எந்தக் காரணத்தைக் கொண்டும் அவள் வாழ்க்கையில நீ வலுக்கட்டாயமா குறுக்கிடக்கூடாது.”

விஜய் அமைதியாக இருந்தான்…

“ஒரு அற்புதமான அனுபவம் மூலமா நீ உன்னோட மறுபாதியைக் கண்டுபிடிச்சிட்ட.. உன்னை மாதிரியே அவளும் உன்னைக் கண்டுபிடிச்சிருப்பான்னு என்ன நிச்சயம்? உன்னை அவளுக்கு தெரியாமலேகூட இருக்கலாம் இல்லையா?”

விஜய்யின் முகத்தில் பயமும், துக்கமும் அப்பிக்கொண்டது…“புரியுது ஃபாதர்…”

“நான்தான் அவளோட உருவத்தை நீ கண்டுபிடிக்கிறதுக்கு உனக்கு யோசனை கொடுத்தேன், நீ அவளோட உருவத்தை வரைஞ்ச அந்த நாள்ல இருந்து நீயும் அவளும் வாழ்க்கையில ஒண்ணா சேரணும்னு நான் ராப்பகலா ஜெபிக்கிறேன். நம்முடைய விருப்பங்களை கடவுள்கிட்ட சொல்லி ஜெபிக்கிறதுல தப்பில்ல. அது வேற…ஆனா எல்லாத்துலயுமே இருக்க சாதக பாதகங்களை பேசியாகணும் விஜய். அதான் சொல்றேன் உன் காதலை ஏற்றுக்கொள்ளவும், அதை

நிராகரிக்கவும் அந்தப் பெண்ணுக்கு உரிமை இருக்குங்கிறத நீ புரிஞ்சுக்கணும்... அந்த உரிமைய நீ மதிக்கணும்"

ஃபாதர் சொன்ன விஷயங்களை உதட்டளவில் ஏற்றுக்கொண்டாலும் விஜய்யின் மனதை ஒரு கேள்வி குத்திக் கிழித்துக் கொண்டிருந்தது. "என்னுடைய ஆன்ம இணைக்கு என்னை எப்படி பிடிக்காமல் போகும்? என் காதலை அவள் எப்படி நிராகரிப்பாள்? அப்படி நடக்க வாய்ப்பே இல்லை, என்மீது உள்ள அக்கறையில் அல்லது ஏதேதோ தேவையில்லாத பயத்தின் காரணமாக ஃபாதர் என்னை discourage செய்கிறார்"

தன் மனதின் ஓட்டங்களை முகத்தில் தெரியாதபடி மறைத்துக்கொண்டு ஒரு போலியான கீழ்ப்படிதலுடன் "சரிங்க ஃபாதர்" என்று தலையாட்டினான்.

அத்தியாயம் 30 - மறக்க முடியாத அந்த நாள்…

"A meeting between two beings who complete each other, who are made for each other, borders already, in my opinion, on a miracle." — Arthur Rimbaud

இரண்டு வாரங்கள் கழித்து அப்பகுதியின் பங்குத்தந்தை அந்த வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. அவரைத் தன் இருப்பிடத்துக்கு வரவழைத்து ஃபாதர் விருந்து கொடுத்தார். விஜய் பங்குத்தந்தைக்கு சந்தோஷமாக விருந்து பரிமாறிக்கொண்டிருந்தான்.

ஃபாதர் ஐசக் மரியானுக்கு ஒரு வளர்ப்பு மகன் இருக்கிறான் என்று பங்குத்தந்தைக்கு தெரிந்திருந்தது. ஆனால் இன்றுதான் அவர் அவனை முதல்முறையாகப் பார்க்கிறார். அவனது தாழ்மையும், விருந்தோம்பலும் அவருக்கு மிகவும் பிடித்துப்போகவே அவன் என்ன செய்கிறான் என்று விசாரித்தார்.

விஜய் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பி.ஏ முடித்து ஒரு ஆண்டு ஆகியிருக்கிறது. கம்பியூட்டர் கோர்ஸ் படித்துக்கொண்டிருக்கிறான் என்று தெரிந்ததும் “மதுரை அழகரடி அன்னை ஃபாத்திமா இறையியல் கல்லூரியில எம்.ஏ ஒரு சீட் இருக்கு. அது என்னோட கோட்டாதான்… நீ ஃப்ரீயா படிச்சுக்கலாம், போறியா?” என்று கேட்க விஜய் சரியென்று சந்தோஷமாகத் தலையாட்டினான்.

****

விஜய் அன்னை ஃபாத்திமா இறையியல் கல்லூரியில் எம்.ஏ மதம் மற்றும் தத்துவம் பிரிவில் சேர்ந்து இரண்டு வாரங்கள் ஆகியிருந்தது. சோலைவனம் போன்ற அந்தக் கல்லூரி வளாகம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. நல்ல நண்பர்களும் அங்கு அவனுக்கு அமைந்து போனார்கள்.

1997, ஆகஸ்ட் 27…

விஜய்க்கு மிகவும் பிடித்தமான ஷாருக்கான் நடித்த Pardes படத்தின் ஆடியோ கேசட் சில நாட்களுக்கு முன்புதான் மதுரையில் ரிலீஸ் ஆகியிருந்தது. அன்று மதியத்தோடு வகுப்புகள் முடிந்துவிட்டதால் விஜய் டவுன்ஹால் ரோட்டில் ஆடியோ கடை வைத்திருக்கும் தனது நண்பனை சந்தித்து, அவன் கடையில் Pardes பாடல் கேசட்டை வாங்கிக்கொண்டு, ஹாஸ்டலில் உள்ள நண்பர்களுடன் சேர்ந்து பாடல்களைக் கேட்கலாம் என்று கல்லூரிக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

அப்போது சரியாக மணி மாலை 3:30 இருக்கும்…

விஜய் அன்று கறுப்பு முழுக்கை டி-ஷர்ட், கறுப்பு ஜீன்ஸ் அணிந்திருந்தான். விஜய்யின் வழக்கமான நடையே வேகமாகத்தான் இருக்கும். தன்னுடன் நடக்கும் யாரையும் விரைவாக முந்திச் சென்றுவிடுவான்.

அவனுக்கு சில அடிகளுக்கு முன்னே பேபி பிங்க் சுடிதார் அணிந்து, தனது டார்க் பிரவுன் முடியை வாரி இழுத்து குதிரைவால் சடை போட்டு மெதுவாக நடந்து போய்க்கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கிராஸ் செய்தான்..

விஜய் தன் மீது திடீரென யாரோ இமாச்சல் பனியை அள்ளிக் கொட்டியதுபோல ஆன்மாவில் ஒரு குளிர்ச்சியை உணர்ந்தான். அவனுக்குள்ளிருந்து ஆயிரம் பட்டாம்பூச்சிகள் பறப்பது போல இருந்தது... அந்தப் பெண்ணைக் கடந்தபோது தனக்கு ஏன் அந்த விநோத உணர்வு ஏற்பட்டது என்பது புரியாமல் ஒரு கணம் பின்னால் திரும்பி அவளது முகத்தைப் பார்த்தான்..

அதுவரை சாதாரணமாகச் சென்றுகொண்டிருந்த படம் அந்த நொடியில் சட்டென ஸ்லோ மோஷனுக்கு மாறியது.. ஒரு இனிய தீம் இசை ஒலிக்க ஆரம்பித்தது. விஜய்க்கு தன் கண்களைத் தானே நம்பமுடியவில்லை... இது நிஜம்தானா... இது அவள்தானா?.. அல்லது அவள் சாயலில் இருக்கும் வேறொரு பெண்ணா?

அவளுக்காக பிரார்த்தனை செய்தபின் உணரும் அந்த மகிழ்ச்சியை ஆயிரம் மடங்காக்கி அவனுக்குள் யாரோ கொட்டியதுபோல இருந்தது..

“இல்லை இல்லை என் ஆன்மா சொல்லுகிறது.. இது அவள் அவள் அவளேதான்... “

தீம் இசை மேலும் மேலும் வேகமாகி உச்சத்தைத் தொட...அந்த நொடியில் அவன் அவனாக இல்லை.. பத்தடி சென்றதும் மீண்டும் அவளைத் திரும்பிப் பார்த்தான்..

அவனுக்குள்ளிருந்து அவனது ஆன்மா ஆனந்தக் கூத்தாடியது, “என் தேவதை இங்குதான் இருக்கிறாளா? கடவுளே, அதற்காகத்தான் என்னை இங்கே கொண்டுவந்து சேர்த்தாயா!!!”

****

படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த சஞ்சனாவின் உடல் நடுங்க ஆரம்பித்தது.. தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு “ஐய்யோ” என அலறியபடி தான் அமர்ந்திருந்த சோஃபாவிலிருந்து கீழே விழுந்தாள்.. அவளது அந்த அலறல் இதயம் வெடித்துவிடுவது போல இருந்தது.. தியா ஒருகணம் மிரண்டு போனாள்...

“விஜய்..விஜய்..விஜய்....”

தியா தன் அம்மா அழுது அவள் பல தடவைகள் பார்த்திருக்கிறாள்.. ஆனால் ஒரு குழந்தைபோல இப்படி தரையில் உருண்டு அழுது அவள் பார்த்ததில்லை... மெல்னியும், குரேஷியும் எழுந்து நின்று செய்வதறியாது திகைத்தனர்..

படம் நிறுத்தப்பட்டது...

“விஜய்..விஜய்.. ” அவன் பேரை சத்தமிட்டு திரும்பத் திரும்பச் சொல்லி அழுதுகொண்டே இருந்தாள். இன்னும் இப்படி கொஞ்சநேரம் அழுதால் அவள் இருதயம் நின்றுபோகும் என்ற பயம் எல்லோருக்கும் ஏற்பட்டது. குரேஷி அங்கிருந்த நாற்காலிகளைத் தள்ளிவிட்டு வழியை ஏற்படுத்த தியாவும், மெல்னியும் சஞ்சனாவை தூக்கி அமர வைத்தனர். தியா அம்மாவை இறுக

அணைத்துக்கொண்டு ஆறுதல்படுத்தினாள். யாராலும் அவள் அழுகையை நிறுத்தவே முடியவில்லை… எத்தனையோ ஆண்டுகாலம் உள்ளுக்குள் மறைந்து, உறைந்து கிடந்த வேதனைகள் மொத்தமாக வந்து வெளியே விழுந்தன..

சஞ்சனா ஆசுவாசப்பட்டு அமைதியடைய அரைமணி நேரம் ஆனது…

தியா அவளை ரெஸ்ட் ரூமுக்கு அழைத்துச் சென்று முகம் கழுவ வைத்து, கைத்தாங்கலாக மறுபடி அரங்கத்துக்கு அழைத்து வந்தாள். குரேஷி அவளுக்கு தண்ணீர் எடுத்துவந்து கொடுக்க, சஞ்சனா அதை வாங்கிக் குடித்துவிட்டு, மெல்னியை நோக்கி…

"நான் இப்பவே விஜய் கூடப் பேசணும்.. அவனுக்கு கால் பண்ணிக் குடு.."

மெல்னி சிலை போல நின்றுகொண்டிந்தான்.. அவனால் தன் உதடுகளை அசைக்கக்கூட முடியவில்லை…

"ப்ளீஸ் மெல்னி.. அவனுக்கு கால் பண்ணு.."

மெல்னி தொடர்ந்து பேயறைந்தவன் போல நின்று கொண்டிருக்க.. அவன் நின்ற கோலத்தைப் பார்த்து சஞ்சனாவுக்கு உள்ளூர நடுக்கம் எடுக்க ஆரம்பித்தது..

"என்ன ஆச்சு மெல்னி?"

"சொல்லு மெல்னீ… என்ன ஆச்சு?"

அவன் நடுக்கத்துடன் நா தழுதழுக்க …

" நம்ம விஜய் இறந்து அஞ்சு வருஷம் ஆச்சு சஞ்சனா…"

அத்தியாயம் 31 - உனக்காக மட்டுமே ஒரு வாழ்க்கை...

"Unrequited love is the infinite curse of a lonely heart." - Christina Westover

உயிரற்ற சடலம் போல உட்காந்திருந்தாள் சஞ்சனா.. சற்று முன்னால் தன் காதுகளில் விழுந்த வார்த்தைகள் பொய்யாக இருக்க வேண்டும் என்று அவள் மனம் கடவுளிடம் கெஞ்சிக்கொண்டிருந்தது. அவள் தன் இதயம் வெடித்து இரத்தம் வழிந்துகொண்டிருப்பது போல உணர்ந்தாள்.

ஏற்கனவே சமீபகாலமாக உடல்ரீதியாக சில சவால்களை சந்தித்துக்கொண்டிருந்த தனது அம்மாவை இந்த அதிர்ச்சி மேலும் பாதித்துவிடுமோ என்று தியாவின் மனம் அடித்துக்கொண்டது.

மெல்னி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தான்…

நான் அன்னை ஃபாத்திமா தியாலஜிகல் செமினரில எம்.எஸ்.சி கம்யூனிகேஷன்ஸ் செகண்ட் இயர் படிக்கும்போதுதான் விஜய் எம்.ஏ ஃபர்ஸ்ட் இயர் ஜாயின் பண்ணான். வனிதாவும் நானும் எவ்வளவோ சொல்லியும் தொடர்ந்து அவன் உன்னை ஃபாலோ பண்ணதால எனக்கு அவன் மேல ரொம்ப கோபம். அவன்கூட இருந்த ஃப்ரண்ட்ஷிப்பை கட் பண்ணிட்டேன். அதுக்கப்புறம் அவன்கூட எனக்கு எந்த கம்யூனிகேஷனும் இல்ல. அவனை நேர்ல பார்த்தாக்கூட பேசாம கடந்து போயிடுவேன்.

நான் காலேஜ் முடிச்சுப் போனதுக்கப்புறமும்கூட என்னோட ஜூனியர் ஃபிரண்ட்ஸ்கிட்ட இருந்து எனக்கு அவனைப்பத்தி அப்பப்ப ஏதாவது நியூஸ் வரும். உன்னை அவன் தொடர்ந்து ஃபாலோ பண்ணிட்டு இருந்தது, உனக்காக அவன் பெங்காலி கத்துக்கிட்டது இதெல்லாம் தெரிஞ்சு நான் அவனை ஒரு பைத்தியகாரன்னு நெனச்சேன்.

அதுக்கப்புறம் 2015-ல எங்க கம்யூனிகேஷன் டிப்பார்ட்மெண்ட் Alumni மீட்ல என்னோட ஜூனியர் விஜியை மீட் பண்ணேன். அப்ப விஜய் பத்தி பேச்சு வந்துச்சு. அப்பத்தான் விஜி விஜய் ஏன் உன்னை இவ்வளோ சின்சியரா லவ் பண்ணாங்கிற காரணத்தை எங்கிட்ட சொன்னா. அவன் உன் ஞாபகமாகவே இன்னும் கல்யாணம்கூட பண்ணிக்காம சிங்கிளாவே இருக்கது பத்தி சொன்னா.. அப்பத்தான் என்னோட ஃபர்ஸ்ட் படத்தோட போஸ்ட் ப்ரடக்ஷன்ல இருந்தேன். ச்சே.. ஒரு நல்ல மனுஷனைப் பத்தி தப்பா நெனச்சுட்டோமேன்னு எனக்கு ரொம்ப வருத்தமா இருந்துச்சு. அப்பவே விஜய்யை நேருல சந்திச்சு அவன்கிட்ட மன்னிப்பு கேட்க ஆசைப்பட்டேன், ஆனா நான் பட வேலைகள்ல பிசியா இருந்ததால முடியல.

என்னோட முதல் ரெண்டுபடமும் கிரைம் திரில்லர், மலையாளத்துல ரெண்டுமே நல்லாப் போச்சு. மூணாவது படம் நல்ல ஒரு ரொமாண்ட்டிக் லவ் ஸ்டோரி பண்ணனும்னு நெனச்சேன். அப்பத்தான் விஜய் ஞாபகம் வந்துச்சு. 2017- ஜனவரில தமிழ்நாட்டுல ஜல்லிக்கட்டு போராட்டம் உக்கிரமா நடந்துக்கிட்டு இருந்த நேரம் நான் நேரா விஜய்யோட கிராமத்துக்கே போய் அவனை சந்திச்சேன். அவன்கூடவே ரெண்டு மாசம் தங்கியிருந்தேன்.

கடைசிவரைக்கும் அவனோட உயிர், பேச்சு, மூச்சு எல்லாமே நீதான் சஞ்சனா. அவனை மாதிரி லவ் பண்ண ஒருத்தனை என் வாழ்க்கையில நான் சத்தியமா பார்த்ததே இல்ல. உனக்கும் கைலாஷ்க்கும் கல்யாணம் நடந்திருச்சுங்கிறதை 2003 வரைக்கும் அவன் நம்பவே இல்லையாம். அதுவரைக்கும் நீ இருக்கிற இடத்தை தெரிஞ்சுக்கிறதுக்கும், உன்னை contact பண்றதுக்கும் ரொம்பவே try பண்ணிருக்கான். அதுக்கப்புறம் 2003-ல உங்கூட பேசுனதையும், உன்னை சென்னைல சந்திச்சதையும், அதுக்கப்புறம் நடந்த சம்பவங்களையும் சொன்னான். உனக்கு கல்யாணம் ஆகிடுச்சுங்கிற விஷயம் உறுதியானதுக்கப்புறம் தான் ஒரு நடைப்பிணமா ஆகிட்டதா சொன்னான். நான் பார்க்கும்போது 90கள்ல நாம பார்த்த handsome-ஆன, ஸ்டைலான அந்த விஜய்யா அவன் இல்ல சஞ்சனா.. ரொம்பவே உடைஞ்சு நொறுங்கி, உருக்குலைஞ்சு போயிருந்தான்..

அவன் 2008-க்கப்புறம் ஒரு social activist-ஆ மாறி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திறேங்கிற பேர்ல நிறைய பேரோட எதிர்ப்பை சம்பாதிச்சுக்கிட்டான் சஞ்சனா. மக்களுக்காக போராட்டம் பண்ணி 2019-ல ஒருதடவை மூணு மாசம் ஜெயிலுக்குப் போயிட்டு வந்திருக்கான். அங்க என்ன நடந்துச்சோ தெரியல, அதுக்கப்புறம் அவன் உடல்நிலை ரொம்ப மோசமாகிடுச்சு. தன்னோட வாழ்க்கை சீக்கிரம் முடியப்போகுதுங்கிறது அவனுக்கு ஏற்கனவே தெரிஞ்சிருக்கு. தன்னோட மனக்காயத்துக்கு மருந்து மரணம் மட்டும்தான் அப்படீங்கிற முடிவுக்கு அவனே வந்துட்டமாதிரிதான் தெரிஞ்சது. ஆனா தன்னோட சேவையால தன்னோட ஊரையும் சுற்றி இருந்த கிராமங்களையும் செழிக்க வச்சிட்டான் சஞ்சனா.. நீ கண்டிப்பா அங்க வந்து பார்க்கணும்… உனக்கு அங்க ஒரு பெரிய ஆச்சரியம் காத்திருக்கு…

விஜய் இறக்கப்போறதுக்கு முன்னாடி ஒரு மாசம் நான் அவன் கூடதான் இருந்தேன். 2019 தீபாவளி அன்னிக்கு அவன் உடம்பு ரொம்ப சீரியஸாகி மதுரை ஜி.ஹெச்-ல அட்மிட் பண்ணோம். தீபாவளியைக்கூட கொண்டாடாம அவனோட ஒட்டுமொத்த கிராமமும் மதுரை ஜி.ஹெச் முன்னாடி திரண்டிருச்சு.. கடைசி வரைக்கும் நானும் அவன்கூடவேதான் இருந்தேன். உயிருக்கு ரொம்ப போராட்டிட்டு இருந்தான். நான் அவன் பக்கத்துலயேதான் இருந்தேன். உயிருக்குப் போராடிக்கிட்டு இருந்த அந்த கடைசி நேரத்துலயும் அவன் உன் பேரைத்தான் சொல்லிக்கிட்டே இருந்தான் சஞ்சனா… கரெக்ட்டா தீபாவளிக்கு மறுநாள் காலைல உயிர் பிரிஞ்சிருச்சு..

சஞ்சனாவுக்கு உயிரையே உலுக்கி எடுத்ததுபோல இருந்தது. மெல்னி சொன்னதைக் கேட்டு நெருப்பில் விழுந்த புழுப்போல அவள் மனம் துடித்தது. இந்திய நேரப்படி தீபாவளிக்கு மறுநாள் காலை, ஐரோப்பிய நேரப்படி தீபாவளியன்று இரவு… விஜய் இறந்த அதே நாளில்தான் அவளுக்கு அந்த கடைசி இருள் கனவு வந்திருந்தது. அந்தக் கனவில் காரிருளில் முழந்தாளிட்டபடி ஏக்கத்தோடு சஞ்சனாவிடம் கைகளை நீட்டி விஜய் அழுதுகொண்டே இருந்தான். ஏனென்று கேட்க எந்த நாதியுமின்றி, ஆறுதல் சொல்ல ஆளின்றி கடைசியில் இருளோடு இருளாகக் கரைந்துபோனான்…

அத்தியாயம் 32 - மீண்டும் மதுரை மண்ணில்...

"Who can find a virtuous woman? for her price is far above rubies. The heart of her husband doth safely trust in her, so that he shall have no need of spoil. She will do him good and not evil all the days of her life. Her children arise up, and call her blessed; her husband also, and he praiseth her. Many daughters have done virtuously, but thou excellest them all." - Proverbs 31:10-12,28,29 (The Holy Bible)

மதுரை விமான நிலையத்திலிருந்து ஒரு இன்னோவா கார் இலந்தைப்பட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அந்தக் காரில் சஞ்சனா, கைலாஷ், தியா, மெல்னி மற்றும் வனிதா ஆகியோர் இருந்தார்கள்...

சஞ்சனா மிகவும் பெலவீனப்பட்டு இருந்தாள். மிகவும் களைத்துப்போய் கைலாஷின் தோளில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

கைலாஷ் முற்றிலும் நொறுங்கிப் போயிருந்தான். பல எண்ணங்கள் அவன் மனதில் அலைமோதிக் கொண்டிருந்தன... "என் அன்பு மனைவியின் வாழ்க்கையில் இப்படியொரு சோகம் இருந்ததை நான் எப்படி அறியாமல் போனேன்! தன் ஆன்மாவின் உண்மையான மறுபாதியை அறிந்த பின்னரும் அவனுக்கு மனதிலோ, வாழ்க்கையிலோ இடம் கொடாமல், கொண்ட காதலில் உறுதியாக இருந்து, காதலித்த என்னையே கைப்பிடித்து, கடைசிவரை எனக்கு மட்டுமே உண்மையாக வாழ்ந்து காட்டிய இவள் மனுஷியா அல்லது மனுஷி ரூபத்தில் வந்த கடவுளா? இந்த உலகத்தில் எத்தனை ஆண்களுக்கு இதுபோன்ற துணை கிடைக்கும்.. இது என்ன என் பூர்வ ஜென்ம புண்ணியமா?

25 ஆண்டுகளாய் இப்படியொரு மரண வலியை மனதில் சுமந்து கொண்டிருந்ததை நீ என்னிடம் சொல்லாமலேயே மறைத்த காரணம் என்ன சஞ்சனா? எல்லாவற்றையும் என்னோடு பகிர்ந்துகொண்ட நீ இந்த வலியை மட்டும் ஏன் என்னிடம் பகிரவில்லை? என்னை துக்கப்படுத்த வேண்டாம் என்று நினைத்தாயா? அல்லது உன்னை சந்தேகப்படுவேன் என்று பயந்தாயா? உன்னை சந்தேகிப்பதைவிட நான் செத்துப்போய் மண்ணோடு மண்ணாக மக்கிப்போவது மேல் என் உயிரே!"

****

அதுவரை தனது கணவனின் தோளில் சாய்ந்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த சஞ்சனா திடுக்கிட்டு விழித்தாள். யாரோ அவளை உலுக்கிவிட்டு எழுப்பிவிடுவது போல இருந்தது. விழித்து எழுந்தவுடன் அவள் கண்ணில் பட்டது 'அன்னை ஃபாத்திமா இறையியல் கல்லூரி' என்ற போர்டு.. கார் அவளது ஹாஸ்டலை அப்போதுதான் கடந்தது...

"காரை நிறுத்துங்க..." கத்தினாள் சஞ்சனா... டிரைவர் சுதாரித்துக் கொண்டு காரை ஒரு ஓரத்தில் நிறுத்தினார்.

“எப்படி அயர்ந்து தூங்கினேன்.. இந்த இடம் வந்ததும் எப்படி திடீரென விழிப்பு வந்தது? விஜய் நீ என் அருகில்தான் இருக்கிறாயா? ” சிந்தித்தவாறே காரை விட்டு இறங்கினாள் சஞ்சனா..

அவளது நினைவுகள் பின்னோக்கி சுழன்றன..

முதன் முதலாக விஜய் அவளைக் கடந்து போய் அவளைத் திரும்பிப் பார்த்த அதே இடத்தில் டிரைவர் சரியாக காரை நிறுத்தியிருந்தார்.. 25 ஆண்டுகளில் அந்தப்பகுதியே முற்றிலும் மாறியிருந்தது. எங்கு பார்த்தாலும் வணிக வளாகங்கள் ஆக்கிரமித்திருந்தன. சஞ்சனாவும் பாபியும் டெய்லி நடந்து போய் ஃபிளாஸ்கில் காஃபி வாங்கிக்கொண்டு வரும் குமரன் காஃபி பார் இருந்த இடத்தில் இப்போது ஒரு KFC இருந்தது.

பழைய மதுரையா இது? சஞ்சனா வியந்தாள்.. அந்த இடத்தில் எங்கு திரும்பிப் பார்த்தாலும் விஜய்யின் நினைவுகள் அவள் முன் வந்து நின்றன... தன்னை ஏக்கமாகப் பார்த்தபடி அவன் தன்னைக் கடந்து செல்லும் காட்சிகள் அவள் மனக்கண்முன் தோன்றி மறைந்தன... இந்த இடத்திலேயே மணிக்கணக்காக உட்காந்து பழைய நினைவுகளை அசைபோடலாம் போல அவளுக்குத் தோன்றியது..

“பாபி இப்போது நீ உலகின் எந்த மூலையில் இருக்கிறாய்.. என்ன செய்கிறாய்? உன்னோடு நிறைய நிறைய பேச வேண்டும்.. என் வாழ்க்கையில் என்னென்னவெல்லாம் நடந்துவிட்டது தெரியுமா? கொஞ்ச நேரம் இங்கு வருவாயா? என்னோடு கொஞ்சம் உட்காந்து பேசுவாயா?” சஞ்சனாவின் ஆழ்மனம் அலறியது...

அவள் கொஞ்ச தூரம் நடந்துபோய் இறையியல் கல்லூரி வளாகத்துக்குள் நுழைந்தாள். கல்லூரி மட்டும் அப்படியே மாறாமல் இருந்தது அவளுக்கு சற்று ஆறுதலாக இருந்தது. அன்னை தெரேசா ஹாஸ்டலைப் பார்த்ததும் அந்த இடத்தில் அசையாமல் நின்றுவிட்டாள். அவள் கண்களில் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. செக்போஸ்ட்டைத் தாண்டி உள்ளே நுழைந்தாள்.

மரங்களின் வாசனை அவளை மீண்டும் 90-களுக்கு அழைத்துச் சென்றது.. மனம் ரொம்பவே கனத்தது.. அன்றுமுதல் இன்றுவரை அந்த மரங்களின் வாசனை மாறவே இல்லை…பின்னால் திரும்பிப் பார்த்தாள்.. தியாவும் கைலாஷும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வரும்வரைக் காத்திருந்து அவர்களோடு சேர்ந்து உள்ளே போய் டெலிபோன் பூத் இருந்த இடத்தைக் கடந்து சென்றாள். இப்போது அந்த இடத்தில் ஒரு டீக்கடை இருந்தது.

கைலாஷிடம் இந்த இடத்தில்தான் உன்னோடு போனில் பேசும் பூத் இருந்தது என்று சொன்னாள், தானும் பாபியும் தங்கியிருந்த அறையை தியாவுக்குக் காட்டினாள்… இறையியல் கல்லூரி வளாகத்தை ஒருமுறை சுற்றிவிட்டு கனத்த மனதுடன் வெளியே வந்து காரில் ஏறினாள்…

****

கார் இலந்தைப்பட்டியை நெருங்கியது.. அது இலந்தைப்பட்டிக்கு முன்னே இருந்த மாதம்பட்டி என்றொரு கிராமம்…

பள்ளிக்கூடங்கள், தண்ணீர் தொட்டிகள், குழாய் மேடைகள், நூலகம், படிப்பகங்கள் எல்லாவற்றிலும் மாடலாக சஞ்சனா இருந்தாள்…அதைப் பார்த்த அவள் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன. அவள் காரிலிருந்து இறங்கியதும் அவளை அடையாளம் கண்டுகொண்ட கிராம மக்கள் அவளைச் சூழ்ந்துகொண்டார்கள், ஏதோ உலக அதிசயத்தைப் பார்ப்பதுபோல பார்த்தார்கள்..

“என்ன மெல்னி இதெல்லாம்?..”

ஆச்சரியமாகக் கேட்ட சஞ்சனாவிடம் மெல்னி சொன்னான்... “அதான் நீ விஜய்யோட ஊருக்கு வா.. உனக்குப் பெரிய ஆச்சரியம் காத்திருக்குன்னு சொன்னேனே அதுதான் இது..”

கார் இலந்தைப்பட்டிக்குள் நுழைந்தது. அவர்கள் வருகையைப் பற்றி மெல்னி ஏற்கனவே ஊர் மக்களிடம் சொல்லியிருந்ததால் மாலை மரியாதையோடு மக்கள் காத்திருந்தார்கள். மெல்னி சஞ்சனாவையும் மற்றவர்களையும் முதலாவது ஒரு பள்ளிக்கு அழைத்துச் சென்றான். அது சிறு வயதில் விஜய் படித்த பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பள்ளி.

பள்ளியின் சுவர்களில் வெவ்வேறு உடையில் சஞ்சனா ஓவியமாக நின்று கொண்டிருந்தாள். அத்தனை ஓவியங்களிலும் அவள் கையில் ஒவ்வொரு பலகை இருந்தது. A முதல் Z வரை A for Apple.. B for Bat என தொடங்கி 26 படங்கள் இருந்தன.

பள்ளிக்கு வெளியே ஒரு குழாய் மேடை இருந்தது அதிலும் சஞ்சனா மாடலாக அழகாக சேலைகட்டி நின்று கொண்டிருந்தாள். அவள் கையில் “தண்ணீரை வீணாக்காதீர்கள்” என்ற போர்டு இருந்தது..

ஊரில் எங்கு பார்த்தாலும் சஞ்சனாவின் படமே இருந்தது..

சஞ்சனாவும் மற்றவர்களும் அதை ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மெல்னி, “இதெல்லாமே விஜய்க்கு வந்த funds-ல அவன் இந்த கிராமத்துக்காக பண்ணது. அவன் செய்யுற சேவையைப் பார்த்துட்டு நிறையப்பேர் வெளிநாட்ல இருந்து பணம் அனுப்புனாங்க. அதை அவன் எதையுமே தன்னோட சொந்த செலவுக்காக பயன்படுத்தல. அவன் கடைசிவரைக்கும் அந்த சர்ச்சுலதான் தங்கியிருந்தான். வந்த பணத்தையெல்லாம் மக்களுக்காக செலவு பண்ணான். ஆனா அவன் பண்ண ஒரே ஒரு காரியம் எல்லாத்துலயும் மாடலா உன்னை வரைஞ்சு வச்சிருவான்.

அவனுக்கு எந்தப்பக்கம் திரும்புனாலும் உன்னைப் பார்க்கணும்னு ஆசை சஞ்சனா. உன்னை நேர்ல பார்க்க முடியாட்டாலும், உன்கூட வாழ முடியாட்டாலும் உன்னை இப்படியாவது எப்பவுமே பார்த்துக்கிட்டே இருக்கணும்னு ஆசைப்பட்டான்.. இந்த சுத்து வட்டாரத்துல கிட்டத்தட்ட பத்து ஊர்கள்ல எங்க போனாலும் நீதான் இருப்ப சஞ்சனா..”

அந்த கிராமத்துப் பெண்கள் சஞ்சனாவைச் சூழ்ந்து கொண்டனர். “ உன் நெனப்பாவே கிடந்தான்…அந்தப் புள்ள உசிரோட இருக்கும்போது வராம, இப்ப வந்திருக்கியே தாயீ.. போ.. அதோ..அந்த ஆலமரத்தடில தூங்கிக்கிட்டு இருக்கான் போய் பாரு..”

அவர்கள் சொன்னது சஞ்சனாவுக்கு அரைகுறையாகப் புரிந்தது.. மனதைக் கோடரியைக் கொண்டு பிளந்தது போல இருந்தது.

****

மெல்னி சஞ்சனாவையும் மற்றவர்களையும் விஜய்யின் கல்லறை இருக்குமிடத்துக்கு அழைத்துப் போனான். கிராமமே அவர்கள் பின்னால் திரண்டு போனது…

கல்லறையில் விஜய் 20 வயதுகளில் இருந்த ஒரு போட்டோவை டைல்ஸில் பதித்து வைத்திருந்தார்கள். அதுவரை அமைதியாக இருந்த சஞ்சனா கல்லறை அருகே போய் அவன் படத்தைப் பார்த்ததும் கல்லறையில் விழுந்தாள்.. சத்தம்போட்டு கத்தினாள்..

“விஜய் சஞ்சனா வந்திருக்கேன் விஜய்… சஞ்சனா வந்திருக்கேன் விஜய்..”

“ஐய்யோ உன்னை விட்டு விலகி விலகி ஓடுனேனே… இப்ப நானே உன்னைத் தேடிவந்திருக்கேன் விஜய்… நீ ஏன் இப்படி சீக்கிரமே போயிட்ட…என்ன அவசரம் உனக்கு?”

தியா அவளைத் தூக்க ஓடினாள்.. கைலாஷ் தியாவைப் பிடித்து நிறுத்தினான்.. “அவள் அழுது தீர்க்கட்டும்.. அவளை தடுக்காதே… “ என்றான்..

சஞ்சனா ஏதேதோ தன் மனதில் உள்ளதையெல்லாம் பேசி அரற்றிக் கொண்டிருந்தாள். அவளது தொண்டை முற்றிலும் வற்றி குரல் அடைத்துக்கொண்டது..

“என்னைப் பார் விஜய்.. நான் வந்திருக்கேன் பார் விஜய்..” என்று புலம்பிக்கொண்டே இருந்தாள்..

மெல்னியின் மனைவியும், சஞ்சனாவின் சீனியருமான வனிதா ஓடிப்போய் சஞ்சனாவைத் தூக்கினாள்.. அவளைத் தட்டி, உலுக்கி… “சஞ்சனா, விஜய் இப்பக்கூட உன்னைப் பார்த்துக்கிட்டேதான் இருக்கான் சஞ்சனா..” என்றாள்..

அவள் ஏதோ ஆறுதலுக்காக சொல்கிறாள் என்று சஞ்சனா அதைக் காதில் வாங்காமல் அமர்ந்திருந்தாள்..

“சஞ்சனா, நான் பொய் சொல்லல… நான் சொன்னா உனக்குப் புரியாது.. நீ வா வந்து பாரு” என்று சொல்ல, சஞ்சனா அவளைக் கேள்விக்குறியோடு பார்த்தபடி எழ முயற்சிக்க அவளை வனிதா தூக்கி நிறுத்தினாள். அதற்குள் தியாவும் , கைலாஷும் வந்து அவளை கைத்தாங்கலாக அழைத்து வந்து காரில் ஏற்றினர்.

அத்தியாயம் 33 - பரந்த ஆன்மவெளியில் தனிமை

"Even if we lose each other here, I know there's a meeting place. There's a place where our souls will find each other again." - Rumi

விஜய் வாழ்ந்த தேவாலயத்தில் சஞ்சனா, கைலாஷ் தியா மூவரும் உட்காந்திருந்தார்கள். இப்போது வேறொரு பாதிரியார் அங்கு இறைப்பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தார். மெல்னி தன் காரிலிருந்து தன்னுடைய லேப்டாப்பை எடுத்து வந்தான்.

“இந்த வீடியோ விஜய் இறக்குறதுக்கு நாலு நாளைக்கு முன்னால எடுத்தது சஞ்சனா. உன் கூட அவன் பேசணும்னு விரும்பினான். இந்த வீடியோவை நான்தான் ஷூட் பண்ணேன். இந்த வீடியோவை உனக்கு போட்டுக்காட்டணும்னு உன்னை தேடாத இடமில்ல. ஏதாவது ஒரு சோஷியல் மீடியாவுல இருப்பியா, அல்லது யாராவது ஒரு பழைய ஃப்ரண்டோட contact-ல இருப்பியான்னு தேடோ தேடுன்னு தேடுனோம்.. உன்னை கண்டுபிடிக்கவே முடியல.. கடைசியா குரேஷி சார் எடுத்த முயற்சியின் மூலமா நாம சந்திக்கணும்னு இருந்திருக்கு…

மெல்னி அந்த வீடியோவைப் ப்ளே செய்தான்..

விஜய் அதில் தோன்றினான். விஜய்தானா அது என்று சஞ்சனா அந்த வீடியோவைக் கூர்ந்து பார்த்தாள். அந்த அளவுக்கு அவன் தோற்றம் மாறியிருந்தது… நொறுங்கி, மெலிந்து, உருக்குலைந்து போயிருந்தான். ஒரு சிம்பிளான கட்டம் போட்ட வெள்ளை அரைக்கை சட்டை அணிந்திருந்தான். தாடி, மீசை, முடி அத்தனையும் 70%க்கு மேல் நரைத்திருந்தது. கண்கள் ஒளியிழந்து இருந்தன. முகத்தில் ஒரு 65 வயது நபருக்கு இருக்க வேண்டிய அளவுக்கு சுருக்கங்கள் இருந்தன.

“எப்படி இருக்க சஞ்சனா? இந்த வீடியோவை நீ பார்க்கும்போது நான் உயிரோட இருக்க மாட்டேன். அநேகமா மெல்னியோட படத்தை நீ பார்த்திருப்பன்னு நெனைக்கிறேன். சென்னையில நாம மீட் பண்ணப்ப நீ எதுனால என்னை லவ் பண்ணேன்னு கேட்டியே... மெல்னி எடுத்த படத்தைப் பார்த்ததுக்கப்புறம் அதுக்கான விடை உனக்கு கிடைச்சிருக்கும்னு நம்புறேன்.

உனக்குள்ள இருந்த அதே கேள்வி எனக்கும் இருக்கு… நான் உன்னை சந்திக்கிறதுக்கு முன்னமே எனக்கு உன்னை தெரிஞ்ச மாதிரி.. என்னை பார்க்குறதுக்கு முன்னமே உனக்கும் என்னை தெரியுமாங்கிற கேள்வி இப்ப வரைக்கும் என் மனசை துளைச்சுக்கிட்டே இருக்கு. ஆனா அந்தக் கேள்விக்கு பதில் கிடைக்காமலேயே நான் போறேன்.

உனக்கு கல்யாணம் ஆகிருச்சுங்கிற உண்மையை நான் realise பண்ணவே எனக்கு பல வருஷங்கள் ஆயிருச்சு சஞ்சனா.. நான் உனக்காக காத்துக்கிட்டே இருந்தேன். நீ என்னை avoide பண்றதுக்காகத்தான் உனக்கு கல்யாணம் ஆகிருச்சுன்னு பொய் சொல்றியோன்னு நெனச்சேன். அந்த அளவுக்கு நீ எனக்கு சொந்தமாகிருவங்கிற நம்பிக்கை! அதுனாலதான் நான் உனக்கு அப்படி SMS அனுப்பினேன். உனக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிருச்சுங்கிற

விஷயத்தை confirm பண்ணதுக்கப்புறம் நான் அப்படி SMS அனுப்புனதுக்காக ரொம்ப வருத்தப்பட்டேன் சஞ்சனா. என்னை மன்னிச்சிரு…

நாம சென்னையில சந்திச்சப்ப நான் உனக்குச் சொன்ன விஷயத்தை திரும்ப ஞாபகப்படுத்துறேன் சஞ்சனா.. நீ ஒரு ஆன்மீகவாதி… உன்னோட வாழ்க்கையோட இரண்டாவது பகுதி ரொம்ப ரொம்ப மேன்மையா இருக்கப் போகுது. கோடிக்கணக்கான மக்களுக்கு பல தலைமுறைகளுக்கு நீ ஒரு வழிகாட்டியா இருக்கப்போற… இது எப்படி உனக்குத் தெரியும்னு கேட்குறியா… எனக்குத் தெரியும்!

இந்த ஆன்மீக சேவையை நீ ஒரு சந்நியாசியா இல்ல, உன் குடும்பத்தோட சேர்ந்திருந்து செய்யணும் சஞ்சனா. இனி உன் வாழ்க்கையில எந்த கலக்கமும், துன்பமும் இல்ல. உன் துக்க நாட்களெல்லாம் முடிஞ்சு போச்சு…

இனி என் விஷயத்துக்கு வருவோம்.. நான் என்னதான் என்னைச் சுத்தி சுத்தி உன்னை வரைஞ்சு வச்சிருந்தாலும்.. என் கற்பனையில் உன்கூடவே வாழ்ந்துக்கிட்டு இருந்தாலும்… நிஜ வாழ்க்கையில நீ என்கூட இல்லைங்கிற உண்மைய விட்டு என்னால தப்பிக்க முடியல சஞ்சனா. நீ இல்லாத ஒவ்வொரு நாளும் எனக்கு மேலும் மேலும் கசப்பா மாறிட்டே வருது…

எனக்கு உன்னை நேர்ல பார்க்கணும்னு ஆசையா இருக்கு, போன்ல உன் குரலையாச்சும் கேட்கணும்னு அவ்வளோ ஆசையா இருக்கு. எனக்கு ஏன் இவ்வளோ பெரிய தண்டனையக் குடுத்த சஞ்சனா? ஒரு நண்பனாவாச்சும் என்னை ஏத்துக்கிட்டு எங்கூட பேசிருக்கக்கூடாதா?

என் மொத்த வாழ்க்கையே காத்திருத்தல்ல முடிஞ்சு போச்சு சஞ்சனா, மனசு ரொம்பவே சோர்ந்து போயிடுச்சு. எனக்கு தெரிஞ்ச ஒரே மருந்து மரணம்தான். நீ எனக்கு இல்லைங்கிற விஷயம் எப்ப எனக்குத் தெரிஞ்சுச்சோ அப்பவே நான் மொத்தமா செத்துட்டேன் சஞ்சனா. உன்னைப் பிரிஞ்சதுதான் சஞ்சனா எனக்கு மரணம்.. இந்த உடலைப் பிரியப்போறது இல்ல… நீ இல்லாத இந்த நரக வாழ்க்கையில இருந்து விடுதலை கொடுக்கப்போற இந்த மரணம் எனக்கு ஒரு வரம்தான் சஞ்சனா..

நான் போறேன் சஞ்சனா.. நான் போய் உனக்காக தொடர்ந்து காத்திருப்பேன். நீ அவசரப்பட்டு வந்துராத.. நான் ஏற்கனவே சொன்ன மாதிரி இந்த உலகத்துல உனக்கு பெரிய கடைமை இருக்கு. எந்த மிச்சம் மீதியும் வைக்காம அதை நல்லபடியா முடிச்சிட்டு வா! உன் கணவரையும் குடும்பத்தையும் நல்லா பார்த்துக்கோ!

நான் உன்னை எப்பவுமே காதலிச்சுக்கிட்டே இருப்பேன் சஞ்சனா.. இதுக்கு தொடக்கமும் கிடையாது, முடிவும் கிடையாது… இந்த பூமியில்லாத ஏதோ ஒரு ஆன்ம வெளியில நாம மீண்டும் சந்திப்போம் சஞ்சனா.. அதுவரைக்கும் அங்க உனக்காக காத்திருப்பேன்..

****

விஜய் பேசிய அந்த வீடியோ முடிய.. காட்சி மாறியது… அவன் தன்னுடைய சவப்பெட்டியை முன்னரே வாங்கி வைத்திருந்தான். சவப்பெட்டியின் மூடியின் உள்புறம் சஞ்சானாவை முதன் முதலாகப் பார்த்த அதே தோற்றத்தில் வரைந்து கொண்டிருந்தான். பேபி பிங்க் சுடிதார்,

குதிரைவால் போடப்பட்ட நீளமான தலைமுடி. சின்ன சிவப்புப் பொட்டு உதட்டோரம் அழகான சிரிப்பு…

அடுத்த காட்சியில் சவப்பெட்டியின் மூடியின் உட்புறம் வரைந்து முடிக்கப்பட்ட நிலையில் அந்தப் ஓவியம் சுவற்றில் சாத்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. விஜய் அதன் அருகில் நின்று கொண்டிருந்தான். அவன் உயரத்துக்கு சரியாக அந்த ஓவியம் இருந்தது. அவன் ஒரு வெள்ளை நிறச் சட்டையும், ஊதா நிறத்தில் லுங்கியும் அணிந்திருந்தான்.

****

அடுத்த காட்சியில் விஜய் சடலமாக கிடத்தி வைக்கப்பட்டிருந்தான். சுற்றிலும் அழுகையும், ஒப்பாரி சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. அவன் உடலின் மீது மாலைகள் குவிந்திருந்தது… சில பாதிரியார்கள் அவனது உடல் அருகே நின்று பாட்டுப்பாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பாதிரியார் திறந்திருந்த அவன் கண்களை மூட முயல.. அருகே நின்ற மெல்னியும், அவனது மற்ற நண்பர்களும் அவரைத் தடுத்தார்கள். கண்கள் திறந்தபடியே இருக்கட்டும் என்றார்கள். அடுத்து அவன் உடல் அடக்கத்துக்குத் தயாரானது. அவனது உடலிலிருந்த மாலைகள் அகற்றப்பட்டன. பாதிரியார் இறுதி ஜெபத்தை ஏறெடுத்தவுடன் சஞ்சனாவின் ஓவியம் வரையப்பட்ட அந்த சவப்பெட்டியின் மூடி கொண்டுவரப்பட்டது.

திறந்திருந்த விஜய்யின் கண்களும், ஓவியமாக வரையப்பட்டிருந்த சஞ்சனாவின் கண்களும் நேருக்கு நேராக ஒன்றையொன்று பார்த்துக்கொள்வது போல வைக்கப்பட்டு பெட்டி மூடப்பட்டு சுற்றிலும் ஆணிகள் அடிக்கப்பட்டன..

உயிரற்ற பிண்டம்போல அந்த வீடியோவைப் பார்த்துக்கொண்டிருந்த சஞ்சனாவின் காதுகளில் விஜய் சொன்ன இறுதி வார்த்தைகள் மீண்டும் மீண்டும் தொனித்துக் கொண்டேயிருந்தன…

இந்த பூமியில்லாத ஏதோ ஒரு ஆன்ம வெளியில நாம மீண்டும் சந்திப்போம் சஞ்சனா..
அதுவரைக்கும் அங்கே உனக்காக காத்திருப்பேன்..

****